2919

T.N.L.A. Debates

Official Report

Vol. 20 No. 3

3rd April 1986

D
V211,31 N86
N86:20.3
136465

வெளியீடு 16-10-1986 Issued 16-10-1986

2919

885/87

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 3, 1986-தொகுதி 20 எண். 3
Thursday the April 3, 1986-Volume 20 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

136465
சென்னை-600 008
D
V211,31 N86
N86.20.3

## உள்ளடக்கம்

**3-4-1985.**


| | பக்கங்கள் |
|---|---|
| **வினாக்கள்—விடைகள்:** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 443—484 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 484—507 |
| **தகவல் கோரல்:** | |
| (அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாநகராட்சிகளில் அளிக்கப்பட வேண்டிய மரியாதை, வசதிகள் குறித்து | 507—510 |
| (ஆ) அரசு விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுவதும் அவர்கள் பெயர்கள் அழைப்பிதழில் அச்சடிக்கப்படுவதும் குறித்து | 510—514 |
| 3. **கவன ஈர்ப்புகள்:** | |
| (அ) திருச்சி பொது மருத்துவமனை அறுவை சிகிச்சைக் கூடம் மூடப்பட்டிருந்ததால் ஏற்பட்ட பாதிப்பு | 514—516 |
| (ஆ) குமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைகள் இயங்காததால் தொழிலாளர்கள் பாதிப்பு | 516—521 |
| 4. **வரவு—செலவுத்திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)** | |
| கோரிக்கை எண் 33—வீட்டுவசதி | |
| கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி | |
| மாண்புமிகு திரு என். நல்லுசாமி | 522—530 |
| | 590—607 |
| திரு. ஜி. கே. ஜே. பாரதி | 522—530 |
| திரு. அ. செல்வராசன் | 530—546 |
| திருமதி. பா. வளர்மதி | 546—553 |
| திரு. வி. பி. சிந்தன் | 553—561 |
| திரு. சைதை சா. துரைசாமி | 561—567 |
| திரு சி. பழனிமுத்து | 567—573 |
| டாக்டர் கே. சமரசம் | 573—577 |
| திரு. வேனுகோபால் | 577—579 |
| திரு. பொ. உத்திராபதி | 580—582 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் | 582—588 |
| திரு. மா. சின்னராசு | 588—590 |
| 5. **பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்:** | |

2919

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1986ஆ ஏப்ரல் 3ஆ வியாழக்கிழமை**

**பங்குனி 20, குரோதன-திருவள்ளுவர் ஆண்டு 2017.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.''

அவைக் களத்திற்கு அஞ்சி தாம் கற்றவைகளைக் கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்ல முடியாதவர், உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவர்க்கு ஒப்பாவர்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**பணியிலிருக்கும்போது இறந்த மின்துறைப் பணியாளர்கள்.**

*354—(*வினா எண். 2821)*—**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-ஆம் ஆண்டு டிசம்பர் முடிய மின்துறையில் பணியில் எத்தனை பேர் இறந்துள்ளார்கள்?

(ஆ) விபத்துக்களைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்;** (அ) 1984 டிசம்பர் வரை பணியில் இறந்தோர் 58 பேர்.

(ஆ) ஒவ்வொரு விபத்துக்களின் காரணங்களை ஆராய்ந்து அவ்விபத்துக்கள் மறுபடியும் நிகழாவண்ணம் தேவையான தடுப்பு நடவடிக்கை எடுக்கும்படி அவ்வப்போது மின்வாரியத்தால் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மின் கம்பிகளிலும் மின் சாதனங்களிலும் வேலை செய்யும்பொழுது எடுக்கப்பட வேண்டிய முன் எச்சரிக்கைகளைப் பற்றியும் பாதுகாப்பு சாதனங்களை உபயோகிக்கும் முறை பற்றியும் மின் களப் பணியாளர்களுக்கு அவ்வப்போது பாதுகாப்பு வகுப்புகள் மூலமாக தகுந்த அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மின் களப் பணி தொழிலாளர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் தேவைகளைப் பற்றி வலியுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய களப் பணியாளர்கள் வேலை செய்யும் போது அவர்களுக்குப் போதிய பாதுகாப்புச் சாதனங்கள், போதிய பயிற்சி இன்மையினால் விபத்துக்கள் நேரிடுவதாகக் கூறுகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டிருக்கிறது? மேலும், அப்படி விபத்துக்களிலே சிக்கி ஊனம் உற்றவர்கள் மற்றும் இறந்தவர்களுக்கு எந்த அடிப் படையிலே என்ன என்ன உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்களைத் தடுப்பதற்குக் களப் பணி யாளர்களுக்குப் பயிற்சியும் தேவை, கையாள்வதற்குப் பாதுகாப்புச் சாதனங்களும் தேவை, அந்தப் பாதுகாப்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் களப்பணியாளர்களுக்கு அக்கறையும் தேவை, அவையிருந்தால் தான் விபத்துக்களை நாம் ஓரளவுக்குத் தவிர்க்க முடியும். விபத்துக்களிலே உயிர் இழந்தவர்களுக்கு, உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கு அதற்குரிய நட்ட ஈடு ஓர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்டின்படி வழங்கப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்த 58 ஊழியர்களில் எத்தனை பணியாளர் களுக்குக் கடந்த ஆண்டு அந்த சட்டத்தின்படி இழப்பூதியம் கொடுக்கப்பட்டிருக்கிறது? அப்படிக் கொடுக்கும்போது இறந்து விட்டவர் குடும்பங்களின் வாரிசுதாரர்களுக்குக் கல்வி, வயது வரம்பு ஆகியவற்றில் விதிவிலக்கு அளித்து வேலைகள் கொடுக்கப் படலாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அது அந்தத் தொழிலாளர்களின் விஷயத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணைப்படி விபத்துக்களில் இறந்த வர்களின் வாரிசுதாரர்களுக்கு உரிய வேலைவாய்ப்பு தருகிற போது தகுதியின் அடிப்படையில் வேலைகள் தரப்படுகின்றன. எத்தனை பேர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்திலே பணிபுரிகிற ஊழியர்கள் பணிக் காலத்திலே இறந்துவிடுகிறபோது அவர்களுடைய நேரடி வாரிசு களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும், அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் ஆட் குறைப்பு என்ற அடிப்படையில் அந்த வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாமல் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்குக் கட்டாயமாக



வேலைவாய்ப்புத் தரவேண்டுமென்ற முறையிலே தகுந்த ஆணை களை மின்வாரியத்திற்குப் பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்று, மின் வாரியத்தில் வேலைவாய்ப்பு இருக்க வேண்டும். இரண்டாவதாக, வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு இறந்தோர்களின் வாரிசுக்குத் தகுதி இருக்க வேண்டும். இந்த இரண்டினாலும், சில நேரங்களில் அந்த வேலைவாய்ப்பை எல்லோருக்கும் கொடுப்பது என்பது முடியாத காரியம். இறந்தோருக்கு இழப்பீடு தரப்படுகிறது. வாரிசுகளுக்கு வேலை என்பது கருணை, முன்னுரிமை ஆகிய வற்றின் அடிப்படையில் தரப்படும் ஒன்று. எல்லோருக்கும் தரப்பட வேண்டுமென்று விரும்பினால் மின் வாரியம் தாங்காது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் வாரியத்தில் வேலை செய்யும் பணியாளர் களின் வாரிசுகளுக்கு, நிர்வாகத்தில் இடங்கள் இருந்தால்தான் வேலை கிடைக்கும் என்று சொல்கிறார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, அப்படி வேலைவாய்ப்பு கிடைக்காத சூழ்நிலையில், அந்தக் குடும்பத் தலைவர் இறந்துவிட்டால், அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக, உயர்ந்தபட்சம் எவ்வளவு ரூபாய் நஷ்டயீடாக அல்லது உதவித் தொகையாகக் கொடுக்கப்படும் என்ற வரைமுறை இருக்கிறது. அதைப்போல, பொதுமக்களைப் பொறுத்தவரையில், கம்பி அறுந்து இறந்து விட்டாலோ அல்லது மின்சாரக் கம்பம் விழுந்து இறந்து விட்டாலோ அந்தப் பொதுமக்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் வரையறை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல ஓர்க்மென்ஸ் காம்பன் சேஷன் ஆக்டின்படி அவர்களுக்கு இழப்பீடு உண்டு; 22,000 ரூபாய் அதிகபட்சம் தர வாய்ப்பிருக்கிறது. பொதுமக்களுக்குத் தரக்கூடிய வாய்ப்பிருக்கிறதா என்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

### தலைமைச் செயலகத்துக்கு தனி அச்சகம்

355—(*வினா எண் 2883) திரு. செ. செம்மலை, திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்திற்கென்று ஒரு "Printing Press" அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது துவக்கப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் தற்போதைக்குப் பரிசீலனையில் இல்லை என்று சொன்னாலும்கூட, தலைமைச் செயலகத்திற்கு என்று ஒரு அச்சகம் அவசியம் என்ற நிலைமையை அமைச்சரவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவசரத் தேவைக்கு அச்சடிக்க வேண்டுமென்றாலும்கூட மாவட்டத் தலைநகரங்களிலே உள்ள அரசு அச்சகங்களைத் தலைமைச் செயலகம் நம்ப வேண்டி இருக்கிறது. இதனால் வீண் கால தாமதம் ஆகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவைச் செயலகங்களை எடுத்துக்கொண்டால் சட்டமன்ற நடவடிக்கைகளைப் பிரிண்ட் செய்வதற்குக்கூட ஒரு வருஷ காலம் தாமதம் ஆகிறது. நாமும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு ஆண்டுக் காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். இன்னும் "Who is Who" புத்தகம்கூட கிடைக்கப்பெறவில்லை. இப்படிப்பட்ட வீண் கால தாமதத்தைத் தவிர்க்கும் முறையில், எப்படி நாடாளுமன்றத்தில் அதனுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அச்சகம் இருக்கிறதோ, எப்படி உயர்நீதி மன்றத்திற்கும் அங்கே உள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தனி அச்சகம் இருக்கிறதோ அதைப்போல இங்கே ஒரு கன்வென்ஷனல் பிரஸ் என்று பெரிய அளவில் இல்லை என்றாலும், மாடர்ன் மெக்கானிசத்தோடு கூடிய கோல்டு (Cold type) பிரஸ் என்று ஒரு பிரிவை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் காலத்தில் முயற்சிகளை மேற்கொள்ளுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சென்னையிலே உள்ள அச்சகமே, செயலகம், அரசுப் பணிகள் ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்ட அச்சகம் தான். ஆகவே கால தாமதத்தைத் தவிர்க்க உற்பத்தித் திறனைப் பெருக்குவதும், அங்கே உள்ள இயந்திரங்களை ஒழுங்காகப் பராமரித்து வேலை செய்யும் வகையில் இயங்க வைப்பதும்தான் உடனடித் தேவையே தவிர, அதற்காக இன்னொரு அச்சகத்தை உருவாக்குவது என்பது சரியாக இராது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, தலைமைச் செயலகத்திற்கென்ற ஒரு பிரிண்டிங் பிரஸ் ஆரம்பிக்காததற்குக் காரணம், அங்கே வேலை பார்க்கின்ற ஊழியர்கள் ஸ்டிரைக் அடிக்கடி வரும் என்று கருதிதான் அரசு தலைமைச் செயலகத்திற்கென்று ஒரு பிரிண்டிங் பிரஸை அமைக்காமல் இருக்கிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அது மட்டும் காரணம் அல்ல, மூக்கு என்றால் சளி பிடிக்கத்தான் செய்யும்,



## கிராமப் பகுதிகளில் கூடுதல் மின் விளக்குகள்

356—(*வினா எண் 5042) திரு. சோ. சுலிதீர்த்தான்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப் பகுதிகளில் தெருக்களுக்குக் கூடுதலாக மின் விளக்கு போட்டு விரிவுபடுத்தும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தெருக்களுக்குக் கூடுதலாக மின்விளக்கு போடும் பணி விரைவில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) கிராமப் பகுதிகளில் தெருக்களுக்குகூடுதலாக மின் விளக்குக் போடுவதற்குத் தடை ஏதும் தற்சமயம் இல்லை. ஆனால் எந்த ஒரு பஞ்சாயத்தும் மின்சார வாரியத்துக்கு சேரவேண்டிய மின் கட்டணத் தொகையைச் செலுத்தாமல் நிலுவையில் வைத்து இருந்தால், அந்த பஞ்சாயத்துக்கு உட்பட்ட கிராமங்களில் கூடுதல் விளக்குகள் போடுவதற்கு அனுமதி கொடுப்பதில்லை, நிலுவையில் உள்ள மின் கட்டணத் தொகையைச் செலுத்திய பிறகு கூடுதல் விளக்குகளுக்கான வேலைகள் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படுகின்றன.

(முற்பகல் 9-10)

திரு. தி. அன்பழன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக தெரு விளக்கு போடுவதில் தாமதம் ஏற்படுவதைப் போலவே, போடப்பட்டிருக்கிற கம்பங்களுக்குப், பல்பு போடுவதிலும் தாமதம் ஏற்படுகிறது. காரணம், பல்பு கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். அதேபோல், பல்புகள் தருவதிலும், பழைய கம்பங்களில் உள்ள பல்புகளை மாற்ற 90 சதவீதமும், புதிதாக மாற்ற 10 சதவீதமும் என்று பிரித்துத் தருகிற காரணத்தால், பல்பு கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. இந்த முறையை மாற்றி, புதிதாக போடப்படுகிற கம்பங்களில் உடனடியாக பல்புகள் போட ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்தக் குறைபாடு நிவர்த்திக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே இருக்கிற தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை. இன்னும் சொல்லப் போனால் பல்பு பழுதடைந்து போனால், புதிய பல்பு போடுவதிலே பல மாதங்கள் காலதாமதமாவதால், என்னைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் கிராமங்களுக்குச் செல்கின்ற நேரத்திலே, இந்தக் குறைகளைக் கேட்டு. மின் வாரியத்திற்கு எழுதினால் நாட்கள் பலவாகின்ற காரணத்தாலே, மீண்டும் அந்த கிராமங்களுக்குப்

போகும்போது அந்த பல்புகள் எரியாத காரணத்தாலே, இந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்புகள் போடுகின்ற, பராமரிக்கின்ற வேலைகளை, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் 81 இலட்சம் தெருவிளக்குகள் உள்ளன. அவற்றைப் பாரமரிப்பதில் மிகப் பெரிய சிரமம் உள்ளது. ஏற்கனவே ஒரு முறை மின்வாரியம் பராமரித்தது; குறைபாடு இருந்தது. பின்னர் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரப்பட்டது; அங்கும் குறைபாடு இருந்தது. மீண்டும் மின் வாரியத்திற்கு அனுப்பப்பட்டது. மின் வாரியத்திலே இப்பொழுதும் அந்தக் குறைபாடுகள் இருப்பதாகத் தான் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் ஊராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் வந்திருக்கிற காரணத்தாலே, குறைந்தபட்சம் மக்களுக்காவது பதில் சொல்ல வேண்டுமென்கிற அக்கறை இருக்கிற காரணத்தினால், அரசு மீண்டும் ஊராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்தத் தெரு விளக்குகளைப் பராமரிக்கும் அதிகாரத்தை வழங்கலாமா என்பதைப்பற்றி ஆய்ந்து வருகிறது.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே தெரு விளக்குகள் அதிகம் எரியாமல் இருக்கின்றன. இப்பொழுது மின்சாரத் துறை விவசாயிகளுக்குக் கூட இலவச மின்சாரம் வழங்குகிறது. அதே போன்று குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்குகிறது. எனவே, தனியாருக்கு மின்சாரத்தை இலவசமாக வழங்குகிற காலகட்டத்திலே, பொது முக்கியத்துவம் வாய்ந்த தெரு விளக்குகளுக்கும் அரசின் சார்பிலே, துறையின் சார்பிலே இலவசமாக மின்சாரம் வழங்குகின்ற ஒரு முறையை ஏற்படுத்தினால், இந்தத் தெரு விளக்குகள் கிராமப் பகுதிகளிலே அதிகம் எரிவதற்கும், தொடர்ந்து இந்த மாதிரி வரவு செலவிலே சிக்கல் இல்லாமல் இருப்பதற்கும் வழிவகை இருக்குமே, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த இலவசம் என்பதை எல்லை கடந்து நாம் கொண்டு போவோமானால் மின்சார வாரியமே அதற்குப் பிறகு இருக்கிற இடம் தெரியாமல் போய் விடும். ஆகையினால், இலவசத்தை ஒரு வரையறைக்குள் நாம் கொண்டு வரவேண்டும். மின் வாரியத்தைப் பொறுத்தவரையிலும் சுமார் 91 சதவீதம் தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதாகத்தான் எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் மின் பாக்கி காரணத்தைக் காட்டி, புதிய தெரு விளக்கு அமைக்க அனுமதி இல்லையென்று மின்



வாரிய சேர்மன் மூலமாக தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது. அதனால், நகரப் பகுதிகளில் இருக்கிற குடிசைப் பகுதிகளுக்குக் கூட பல ஆண்டுகளாக மின் விளக்குகள் வைக்க முடியவில்லை. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட விளக்குகளுக்குக் கூட அனுமதி மறுக்கப்படுகிறது. இந்த நிலையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரு விளக்குகள் அமைக்க, நகராட்சிகளுக்கு அனுமதி அளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குறிப்பாக, நகரப் பகுதிகளில் புதிதாக ஏற்பட்டிருக்கிற குடிசைகளில் வாழ்கிற மக்களுக்கு அந்தப் பெரும் குறை இருக்கிறது. ஆனால், பிரச்னை என்னவென்றால், ஏற்கனவே போட்ட விளக்குகளுக்கே மின் கட்டணம் கட்டாத நகராட்சியோ அல்லது பேரூராட்சியோ, மீண்டும் அதிகமாக விளக்குகள் கேட்கும் போது அவர்களால் கட்டமுடியுமா என்ற பிரச்னைதான் மின் வாரியத்திற்கு எழுகிறது. அந்த நிலுவையைச் செலுத்தி விடுவார்களானால் இந்தப் பிரச்னை நிச்சயமாக எழாது. அதைப் பற்றி நாங்கள் உள்ளாட்சித் துறையிடம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசியிருக்கிறோம். இருந்தாலும் மின்சாரத்தைப் பொறுத்தமட்டில், அதற்குரிய கட்டணத்தை, எந்தப் பேரூராட்சிகளானாலும் உள்ளாட்சிகளானாலும் செலுத்தித்தான் ஆக வேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, கிராமப் புறங்களில் எரிகிற மின்சார விளக்குகளில் ஏற்கெனவே பொருத்தப்பட்டிருந்த குண்டு பல்புகள் காற்றில் அசைந்தாலே சேதம் அடைந்து, எரியாமல் இருந்தது என்று குற்றச்சாட்டு சொல்லப் பட்டு, இப்போது பெரும்பாலான இடங்களில் குழல் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் குழல் விளக்குகளும் எரியாமல் பழுதடைவதற்குக் காரணம் அவற்றின் தரம் குறைவாக இருக்கிறது என்று ஏற்கெனவே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுதான் என்பது உண்மையா? ரேட் கான்ட்ராக்ட் மூலம் சப்ளை செய்வதால்தான் இந்த மாதிரி தரக்குறைவாகக் கொடுக்கிறார்கள்; ஆகவே, பாதிப்பு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் அதைத் தவிர்த்து, நல்ல தரமான குழல் விளக்குகளை சப்ளை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, குண்டு பல்புகளை மாற்றி, குழல் விளக்குகளைப் போட்டால் தான் நன்றாக எரியும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் குழல் விளக்குகள் போடப்பட்டுள்ளன. அவை தரக் குறைவாக இருந்தால் மின்சார வாரியம் உரிய நடவடிக்கை எடுத்து சரிசெய்யும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சிகளுடைய நிலுவை காரணமாக தெரு விளக்குகளுக்கு மின்சார சப்ளை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக ஏற்கெனவே அமைச்சரவர்கள் சொன்னார்கள். அத்தகைய நிலுவை இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளிடமிருந்து 1 பிளஸ் 1 என்ற வகையிலே மின்சாரக் கட்டணத்தை வசூலிக்கின்ற முறையில் சலுகை அளித்து, புதிய தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத்தகைய சலுகை ஏற்கெனவே அமலில் இருப்பதாக எனக்கு நினைவு இருக்கிறது.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, மின்சார விநியோகம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதால் பல இடங்களில் பராமரிப்பில் ஏற்படுகின்ற குறைபாட்டினால் விளக்குகள் எரியாமல் இருப்பதுபோன்ற பல குறைபாடுகள் இருப்பதாக ஏற்கெனவே ஒருமுறை அமைச்சரவர்கள் கருத்து தெரிவித்தார்கள். இந்தக் குறைபாட்டைப் போக்க ரீஜினல் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம் என்ற முறையில் மின்சார விநியோகப் பணியை பல பகுதிகளாகப் பிரித்தால் அதன் பிறகு எளிதாக பராமரிப்புப் பணியைச் செய்ய வாய்ப்பு ஏற்படும் என்றும் கருத்து தெரிவித்தார்கள். அதை நடைமுறைப்படுத்தும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதை நிறைவேற்றுவதற்கேற்ற நல்ல நேரம் இன்னும் வரவில்லை.

திரு. அ. பாலுசாமி : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளில் தெரு விளக்குகளுக்குக் கூடுதலாக மின்சாரம் சப்ளை செய்வதில் எந்தவிதமான தடையும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் கூடுதலாக மின் விளக்குகள் போட பரிந்துரை செய்யப்பட்டால் உடனடியாக அந்த விளக்குகளுக்கு மின்சாரம் விநியோகம் செய்ய அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிலுவை இல்லாத ஊராட்சி மன்றங்களுக்கு நிச்சயமாக உரிய நடவடிக்கை விரைவுபடுத்தப்படும்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவரவர்களே, நிலுவை இல்லாத நகர சபைகளுக்கு அல்லது பகுதிகளுக்கு தெரு விளக்குகள் எரிவதற்கான ஏற்பாடு உண்டு என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற வில்லிவாக்கம் தொகுதியில் அம்பத்தூர் நகரியம் இருக்கிறது. அதற்கு



எந்தவிதமான நிலுவையும் கிடையாது. இருந்தாலும் விளக்குகள் எரியவில்லை. எரியாத விளக்குகளுக்கும் சேர்த்து கணக்கு எடுக்கும் முறை இருக்கிறது. விளக்கு எரிகிறதா இல்லையா என்பதைப் பார்க்க மீட்டர் சில இடங்களில் பொருத்தப் பட்டிருக்கிறது. அந்த மீட்டர்களும் வேலை செய்யவில்லை. அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது எந்தவகையிலும் நியாயம் அல்ல. இதற்கு ஏதேனும் ஒரு தீர்வு காண அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதைப் போன்ற ஒரு நகரியத்தைப் பெற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் ஒரு அதிர்ஷ்டக்காரர் என்று கருதுகிறேன். நிச்சயமாக அவர் சொன்ன குறைபாடு நீக்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலே புதியதாகத் தெருவிளக்குகளுக்கு அனுமதி அளிக்கா விட்டாலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே புதிதாக அரிசன காலனிகள் நிறைய ஏற்படுகின்றன; அந்த அரிசன காலனிகளிலே தெரு விளக்குகள் போட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தந்த ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றி, அதற்குரிய நடவடிக்கை எடுத்தால் மின்சார வாரியம் ஒத்துழைக்கும்.

(முற்பகல் 9.20)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கிராமப்புறங்களில் வயல் வெளிகளில் மின்சார மோட்டார் பம்ப் செட் வைத்து இருந்தால் அவ்வாறு வைக்கப்படுகிற இடத்தில் ஒரு மின்சார விளக்கு இலவசமாகப் போட்டுக் கொடுக்கிற வசதியை அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. அதேபோன்று கிராமங்களில் வரிசையாக வீடுகளை வைத்திருக்கின்றவர்கள் தங்கள் வீடுகளுக்கு மேலே தெருவைப் பார்த்தாற்போலே ஒவ்வொரு விளக்கைப் போடுகிற வகையில் ஒப்பந்தம் செய்து கொண்டால் அரசு அதற்கு இலவசமாக மின்சாரக் கட்டணம் அளிக்க முன்வருமா ? இன்னும் அதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

வரிசையாகக் கட்டடங்கள் இருக்கிற இடத்தில் அந்தத் தெருவில் இருக்கக்கூடியவர்கள் கூடி எங்கள் வீடுகளில் தெரு விளக்கிற்குச் சமமாக ஒவ்வொரு விளக்குகளைப் போட்டுக் கொள்கிறோம்; அப்படிப் போட்டுக்கொள்கிற போது அதற்கு மின்சாரம் இலவசமாகத் தரப்படுமா ? அல்லது மின்சாரக்

கட்டணச் சலுகை தரப்படுமா என்று கேட்கிற அளவில் அங்கே ஒரு திட்டத்தைக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

(அவையின் மின் விளக்குகள் அணைந்து எரிந்தன.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் எவ்வளவு அஞ்சுகிறது என்பதை இப்போது நாம் பார்த்தோம் (சிரிப்பு). வீட்டுக்குப் போடுகிற விளக்குகளை வீதிக்குப் போடுகிற விளக்காக மின்வாரியம் கருத இயலாது.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி மன்றத்தின் மூலமாகப் பணம் கட்டினால்தான் போட்டுத் தரப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியான திருவந்திபுரம் பஞ்சாயத்தில் தெரு விளக்குகள் போடுவதற்காக எஸ்டிமேட் போடப்பட்டு அதற்குரிய தொகையும் அனுப்பப்பட்டு ஓராண்டுக் காலம் ஆகிவிட்டது. இதுவரையில் அங்கே தெரு விளக்குகள் என்ன காரணத்தால் போடப்படவில்லை என்று தெரியவில்லை. எனவே அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு மின்வாரியம் வற்புறுத்தப்படும்.

பெண் தொழிலாளர் நலத் திட்டங்கள்.

357—(*வினா எண். 3010) திரு. க. சோலைராசு, திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்த தனிப் பணியாளர்களை நியமிக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், திருச்சி மாவட்டத்தில் எத்தனை பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பெண் தொழிலாளர் நலத் திட்டங்களைச் செயல்படுத்த சிவகாசியிலும், கோயம்புத்தூரிலும் முறையே ஒரு பெண் தொழிலாளர் ஆய்வாளரை அவர்களுக்கான துணைப் பணியாளர்களுடன் நியமிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அத்தகைய ஆய்வாளர்கள் நியமிக்கப்படவில்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் தொழிலாளர்களுக்காக என்னென்ன நலத் திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன என்பதையும் எத்தனை பெண் தொழிலாளர்கள் பயன்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. இரத்தினவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கக்கூடிய திருச்சி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. எனவே அங்கே இருக்கக்கூடிய பெண் தொழிலாளர்களின் நலத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுடைய முன்னேற்றத் திற்காக, அதாவது பெண் தொழிலாளர்களுக்கென்று தனியாக பணியாளர்களை நியமிக்கக்கூடிய எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் அடுத்த கட்டத்தில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

358—(*வினா எண். 5202) திரு. வி. பி. சிந்தன், திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் உள்ள பல தொழிற்சாலைகளில் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள், குடிதண்ணீர் வசதி, காற்றும் வெளிச்சமும் கிடைக்கும் முறையில் உள்ள அமைப்புகள் எதுவுமில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து 1984-ம் ஆண்டில் எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) வழங்கப்பட்ட தண்டனைகள் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தொழிலாளர் களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளாகிய குடிதண்ணீர், காற்று, வெளிச்சம் ஆகியவை பொதுவாக சென்னை நகரில் உள்ள தொழிற்சாலைகளில் உள்ளன. பாதுகாப்பு முறையில் குறைபாடுகள் காணப்படின் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) 1984-ம் ஆண்டில் பாதுகாப்பு முறைகளை மீறியதற்காக 89 வழக்குகளும், நல வசதிகள் (welfare amenities) குறைபாடுகளுக்காக 69 வழக்குகளும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

(இ) 121 வழக்குகளில், நீதிமன்றம் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்துள்ளது. அபராதத் தொகையாக ரூ. 17,110 தொழிற்சாலை நிர்வாகத்தினரால் கட்டப்பட்டுள்ளது.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெருவாரியான தொழிற்சாலைகளில் இந்தச் சட்டங்களில் குறிப்பிடுகிற அளவுக்கு எந்த வசதியும் செய்து கொடுப்பதில்லை. காலாகாலத்தில் அதைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்கும், உரிய நடவடிக்கையை அவ்வப்போது நடத்தி வைப்பதற்காகவும் அதிகாரிகளிடத்தில் முறையிட்டாலும் கூட அதிகாரிகள் பரிசீலனைக்கு வருவதில்லை. இங்கே நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்படுவதைப் பொறுத்தவரையில் — இந்த நடவடிக்கைகளால் மட்டும் இந்தத் தவறுகள் திருத்தப்படும் என்று கருதுவதற்கில்லை. எனவே மீண்டும் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும் பரவலாக 1984–ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகள் மீறப்பட்டதற்காக 3,160 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அதில் 3,018 வழக்குகளில் அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. இதன் மூலம் அரசாங்கத்திற்கு ரூ. 7,61,380 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக அண்மையில் சென்னை நகரத்திற்கு அருகிலே இருக்கிற மணலியில் கோத்தாரி நிறுவனம் என்ற நிறுவனம் இருக்கிறது. அந்த கோத்தாரி நிறுவனம் காஸ்டிக் சோடா என்ற ஒரு பொருளை உற்பத்தி செய்கிறது. அந்தத் தொழிற்சாலையில் தொழிற்சாலை முறை சட்டங்கள் மீறப்படுவதாகவும் அடிக்கடி விபத்துக்கள் நடப்பதாகவும் மேலவை உறுப்பினர் மாண்புமிகு திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் எனக்கு ஒரு தகவலை அளித்திருந்தார்கள்: அந்தத் தகவலின் அடிப்படையில் தக்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டு என்னென்ன குறைகள் கோத்தாரி நிறுவனத்தில், அந்த காஸ்டிக் சோடா என்ற பொருளைத் தயாரிக்கிற அந்த மணலி தொழிற்சாலையில் இருக்கின்றன என்று கண்டறிந்து வருவதற்கு ஆணையிட்டபிறகு அங்கே பல குறைகள் நடைபெற்றிருக்கின்றன, சில விபத்துக்களும் நடைபெற்றிருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு தக்க நடவடிக்கைகள் இன்று எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலையில் 1985–ம் ஆண்டில் மட்டும் ஏழு விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. 1986 சனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய இந்த மூன்று மாதங்களுக்காக நான்கு விபத்துக்கள் நடைபெற்



றிருக்கின்றன. இந்த அதிகாரிகள் சென்று பார்த்த வகையில் 13 வயலேஷன்ஸ், 13 சட்ட மீறல்கள் நடந்து இருக்கின்றன என்ற விவரம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு ஷோ காஸ் நோட்டீஸ் அளிக்கப்பட்டு இன்றைக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுபோன்று மற்ற தொழிற்சாலைகளிலும் மீறப்படுகிற செயல்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில முதலாளிகளால் தொழிற்சாலைச் சட்டப்படி அதாவது பாக்டரீஸ் ஆக்ட்படி என்னென்ன சேப்டி மெஷேர்ஸ் ஏற்படுத்தப் பட வேண்டுமோ அவை ஏற்படுத்தப்படாமல் நீதிமன்றங்களில் போடக்கூடிய அபராதங்களை மட்டும் கட்டிவிட்டு மீண்டும் அதே செயல் தொடர்ந்து நடந்து வருகிறது. அந்த நிறுவனங்களை அரசாங்கமே எடுத்து அரசாங்கத்தினுடைய பொறுப்பில் நடத்தக்கூடிய முறையில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்வதில் நான் உடன்படுகிறேன். அந்தச் சட்டத்தில் இருக்கிற பலகீனங்களை வைத்துக் கொண்டு சந்துபொந்துகளை வைத்துக் கொண்டு சில நிர்வாகங்கள் அப்படிப்பட்ட தவறுகளைச் செய்து கொண்டு வருகின்றன. அபராதம் மட்டும் அல்ல, இன்னும் சட்டபூர்வமான கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தொழிற்சாலைகளை எடுப்பது போன்ற அவ்வளவு கடுமையான நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு விரும்பவில்லை.

திரு. ஆர். ரெங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் மாதாமாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்கள் போகிறார்கள். பார்வையிடுகிறார்கள். அம்மாதிரி பார்வையிடும்போது நிர்வாகத்தைக் கலந்து கொள்கிறார்களே தவிர தொழிற்சங்கங்களைக் கலந்து கொள்வதில்லை. ஆகவே தொழிற்சங்கங்களையும் கலந்து கொள்ளும்படி உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே என்னிடம் தகவல் சொல்லியிருக்கிறார்கள். உரிய அதிகாரிகளிடம் சொல்லி தொழிற்சாலைகளுக்குச் செல்லும் போது நிர்வாகத்திற்கும் தகவல் அளிக்க வேண்டும், தொழிற்

[1986 ஏப்ரல் 3

சங்கங்களுக்கும்—அங்கு எத்தனை தொழிற்சங்கங்கள் இருக்கின்றனவோ அத்தனை தொழிற்சங்கங்களுக்கும் சொல்லி அங்கே அந்தக் காரியத்தைச் செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிற சலுகைகளை தொழிலாளர்கள் அனுபவிக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்புள்ள அதிகாரிகள் இருக்கும் போது அதைத் தொழிலாளர்கள் அனுபவிக்க முடியவில்லை. அது தமிழ்நாட்டின் நிலை. எனவே அறிவிக்கப்பட்ட சலுகைகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிற நிர்வாகத்தையும், நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை மேற்பார்வையிடுகிற பொறுப்புள்ள அதிகாரிகளையும் தண்டிக்கும் முறையில் சட்டத் திருத்தங்கள் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தவறுசெய்கிற அதிகாரிகள்மீதும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. என்னிடத்திலே அந்த விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டு, எத்தனை அதிகாரிகள் தவறு செய்கிறார்கள், எவ்வளவு பேர்கள் தங்கள் கடமைகளைச் செய்யவில்லை, அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற விவரங்கள் குறித்து தனிக்கேள்வி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போடுவார்களானால் அதற்குரிய தகவல்கள் சேகரித்து அளிக்கப்படும்.

## மருதமலை திருக்கோயிலுக்கு இழுவை இரயில்.

359—(*வினா எண். 2088) திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருதமலை திருக்கோயிலுக்கு இழுவை இரயில்பாதை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது கூடும் பொழுது தெய்வ பக்தியும் கூடிக்கொண்டே போகிறது. பெரியவர்கள் மலையடிவாரத்தில் நின்று



1986 ஏப்ரல் 3]

கொண்டு, ஆண்டவனே உன்னைத் தரிசிக்க அருகே வர முடியவில்லையே என்று ஏங்குகிறார்கள். அதை உத்தேசித்தாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மலைவாழ் திருக்கோயில்களிலும் சிறிய அளவிலாவது இழுவை இரயில் பாதை விடுவதற்கு பரிசீலனை செய்வார்களா என்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மருதமலைத் திருக்கோயிலைப் பற்றியது. மருதமலையில் படிகளும் இருக்கின்றன. இளைப்பாறுவதற்கு ஆங்காங்கே நிழல் தரும் இடங்களும் இருக்கின்றன. அதைத் தவிர அங்கே 2.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை போடப்பட்டு, வாகனங்கள் செல்லுகின்றன. ஆலயத்தின் சார்பாக மினி பஸ்ஸும் விடப்படுகின்றது. எனவே, வயது முதிர்ந்தவர்கள் போவதற்கு வசதி இருக்கிறது. எனவே, அங்கே இழுவை ரயில் பாதை போடும் திட்டம் இல்லை என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற மலைத் தலங்களைப் பொறுத்த வரை, பல இடங்களிலே அத்தகைய ஆலயங்களுக்குச் செல்லுவதற்கு இப்போது சாலைகள் போடப்பட்டு வருகின்றன. இந்த பதில் இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலம் இந்த அவைக்கு இந்தத் தகவலைத் தருவது நன்மையென்பதால் தெரிவிக்கிறேன். திருச்செங்கோடு மலைக்கு சுமார் 60 இலட்சம் ரூபாய் செலவில் இப்போது மலைப்பாதை போடப்பட்டு வருகிறது. அதைப் போல் சோளிங்கர் மலைக்குப் பாதை போடும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தொடங்கப்படவிருக்கிறது. இப்படி பல மலைத் தலங்களுக்குப் பாதைகள் போட்டு, அதன்மூலம் போக்குவரத்து வசதிக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சில கருத்துக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. சில ஆலயங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

## அரங்கநாதர் கோயில் திருப்பணி.

360—(*வினா எண். 4035) திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருவரங்கத்தில் உள்ள அரங்கநாதர் கோயில் திருப்பணிக்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், திருவரங்கம் அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் பொருட்டு ரூ. 1,00 000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருவரங்கம் அரங்கநாத சுவாமி ஆலயத் திருப்பணிக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கல்கத்தாவைச் சார்ந்த ஒரு பெரும் தனவந்தரால் சுமார் 3 இலட்சம் செலவில் திருப்பணி தொடங்கப்பட்டு, இந்த 3 இலட்சம் ருபாய் செலவில் அவரால் சுற்றுப்புற மதிலைக் கட்ட முடிந்தது. இன்னும் அந்த ஆலயத்தினுடைய விமானம், கோபுரம், கற்பக்கிரகம், உள் மண்டபம் ஆகியவைகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அதைச் செய்வதற்கு இந்த ஒரு இலட்சம் ரூபாய் போதாது. ஆகவே, இந்தப் பகுதிகளைச் செப்பனிடுவதற்கு அமைச்சர் அவர்கள் கூடுதலான தொகையை ஒதுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆலயத்தின் ஆண்டு வருமானம் ரூ. 11,772 என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த ஆலைய வருமானத்திலிருந்து இந்தத் திருப்பணியைச் செய்ய முடியாது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. இப்போது 21 பேர்கள் கொண்ட திருப்பணி குழு அமைக்கப் பெற்று, இந்தப் பணிகளை கவனித்துக் கொண்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டு, இந்தத் திருப்பணிக் குழுவிற்கு உதவி செய்ய பொதுமக்களிடத்திலே நிதி வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்தால், முன் கை நீண்டால் முழங்கை நீளும் என்ற பழமொழிக்கேற்ப, பொதுமக்களுடைய முயற்சியான முன் கை நீண்டால். அரசு அறநிலையத் துறை உதவி என்கின்ற முழங்கையை நீட்டி உதவும். திருப்பணியைச் செய்ய அரசு உதவியை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அது சரியும் அல்ல. பொதுமக்கள் முன்வர வேண்டும். பொது மக்களுடைய பிரதிநிதியாகிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள் இதிலே தீவிர அக்கறை செலுத்த வேண்டும்.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்.

206—(*வினா எண். 1880) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆண்டிற்கு எவ்வளவு கருப்புக்கல்லை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்றது? இதனால் அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகின்றது?

(ஆ) தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் கருப்புக்கல் வெட்டி எடுக்கப்படுகின்றது? இதில் எத்தனை தொழிலாளர்கள் ஈடுபடுகின்றார்கள்?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் தற்போது ஆண்டொன்றுக்கு சுமார் 3,200 கனமீட்டர் கரும்பாறைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இதனால் அந்நிறுவனத்திற்கு ரூ. 225 லட்சம் வருவாய் கிடைக்கிறது.

(ஆ) தமிழ்நாட்டில் பின்வரும் இடங்களில் தமிழ்நாடு கனிம நிறுவனம் கரும்பாறைகளை வெட்டியெடுத்து வருகிறது:—

| மாவட்டம். | வட்டம் | கிராமம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| செங்கற்பட்டு | திருக்கழுக்குன்றம் | புலிக்குன்றம் |
| தென்ஆற்காடு | வானூர் | குன்னம் (4 இடங்கள்)<br>வி. பரங்கினி<br>திருவக்கரை |
| சேலம் | ஆத்தூர் | பைத்தூர்<br>சீலியம்பட்டி<br>மல்லிக்கரை<br>வளையமாதேவி<br>ஆலமரத்துப்பட்டி<br>யேத்தாபூர் |
| | சேலம்/<br>மேட்டூர் | வெள்ளாளகுண்டம்<br>சாம்பள்ளி |
| பெரியார் | பவானி | நெரிஞ்சிப்பட்டு<br>எல்லிக்கரடு |
| தர்மபுரி | பென்னகரம் | பெவனூர்<br>ஏ. பள்ளிப்பட்டு<br>கீரிப்பட்டி—புதூர் |
| | தர்மபுரி | நாலஹள்ளி<br>மூக்கனூர் |

மேற்கண்ட இடங்களில் கரும்பாறைகள் வெட்டியெடுப்பதில் சுமார் 1,200 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிம நிறுவனம் வெட்டி எடுக்கின்ற இடங்கள் அரசுக்குச் சொந்தமானவையா அல்லது தனியாருக்குச் சொந்தமான நிலங்களா? ஏனெனில் பல தனியார்கள் கூட அதை வெட்டி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த அடிப்படையில் அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமானவை புறம்போக்கு என்றாலும் அது அரசுக்குச் சொந்தமானவைதாம். தனியார் துறைகளிலே பட்டா

வைத்திருப்பவர்கள் சில பேருக்கு உரிமம் இருக்கிறது. பட்டா நிலத்திலே அந்தக் கற்களை எடுக்க அவர்களுக்கு உரிமம் இருக்கிறது. அந்த வகையிலே சில இடங்களில் பணிகள் நடை பெற்று வருகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தனியார்களுக்கு அதனுடைய லீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறதா? ஏற்கெனவே பெற்றவர்கள் நீதிமன்றத் தடை ஆணையைப் பெற்று, குறிப்பிட்ட பகுதியில் வெட்டாமல், வேறு பல இடங்களில் திருட்டுத்தனமாக வெட்டி எடுப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? விவரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 உரிமங்களை அரசு வழங்கியிருக்கிற நிலையில் கரும்பாறைகள் வெட்டி எடுக்கப்படுகின்றன. அதற்கு தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு நம்முடைய அரசு உரிமை அளித்திருக்கிறது. 10 இடங்களில் நீதிமன்றத் தடை போன்றவைகள், சந்தைக் கடை போன்றவை இருப்பதால் அவைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். புதியதாக உரிமங்கள் யாருக்கும் வழங்கப்படவில்லை.

திரு. டி. என். முருகானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கனிம நிறுவனம் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற சீவரேஜ் ஃபீஸ் வருமானம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, சீவரேஜ் ஃபீஸ் கனிம நிறுவனத்திற்கு வருவது இல்லை. சுரங்க இலாகாவிற்கு போகிறது. இந்த ஆண்டு வரையில் கரும்பாறைகளால் அரசுக்கு வருமானம்— சுமார் 4,239 கன மீட்டர் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அதன்மூலம் 324.94 இலட்சம் வருவாய் வந்திருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்திலே 4,239 கன மீட்டர் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்திலே யிருந்து வெட்டி எடுக்கப்படும் இடங்களைப் பற்றி அறிவிக்கும் போது 4 கிராமங்களிலே இருந்து வெட்டி எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். தேவர் மலை என்ற மலையிலே சுமார் 200 மீட்டர் முதல் 300 மீட்டர் வரையில் வெட்டி எடுத்து வெளி நாட்டுக்கு அனுப்புகிறார்கள். அதை நிறுத்தி வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 5 இடங்களிலே தர்மபுரி மாவட்டத்திலே கரும்பாறைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தற்போது யார் வெட்டுகிறார்கள் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. அந்தத் தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்தார்களேயானால், தவறான நபர்கள் எடுக்கிறார்கள் என்று தெரிந்தால் அதற்கான நடவடிக்கையை எடுக்க இந்த அரசு தயங்காது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் 25 ஆம் தேதி மணலியில் கரும் பாறை கட்டிங் & பாலிஷிங் தொழிற்சாலையை ஆரம்பித்து மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நிறுவனத்தில் தயாரிக்கப்படுகின்ற பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக, கனிம நிறுவனத்தின் மூலம் தற்போது முழு கற்களாக அனுப்பப்படுவதை நிறுத்த உத்தேசமா? அல்லது உற்பத்தி செய்யப்பட்ட கற்கள் மூலமாக தயாரிக்கப்படுகின்ற டெய்ல்ஸ் போன்றவற்றை மட்டும் அனுப்ப உத்தேசமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மணலியில் 6 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஒரு பெரிய தொழிற்சாலையை உருவாக்கியிருக்கிறது. அதிலே ஜெர்மென் நாட்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்களை எல்லாம் பத்திரிகைகளின் மூலமாக அறிந்திருப்பீர்கள். அதில் 100 விழுக்காடு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற பொருள்களாக தயாரிக்கப்படும். அங்கே தயாரிக்கப்படுகின்ற கற்கள் வெளிநாட்டுக்கு சென்ற உடனேயே அப்படியே பயன்படுத்துகின்ற கற்களாகத்தான் அவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வெளிநாட்டினுடைய தரத்திற்கு ஏற்ற வகையில் அது உருவாக்கப்படுகிறது. ஆகவே இனிமேல் சாதாரண கற்கள் அனுப்புவது அநேகமாக நிறுத்தப்படுகிற எண்ணத்தில் அரசு இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, கருப்புக்கல் ஏற்றுமதியில் பெரிய அளவிற்கு இலாபம் கிடைக்கிறது. ஆகவே தனியாரிடத்திலுள்ள கருப்புக்கல்லை கனிம நிறுவனமே வெட்டி எடுப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கருப்புக்கல் ஏற்றுமதியில் ஒருசில கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டு நாம் காரியங்களை ஆற்ற வேண்டியுள்ளது. பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அதுபற்றி

சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கல்லை வெட்டியெடுத்து அனுப்பிவிட்டால் திரும்ப அது நெல் மாதிரி, கோதுமை மாதிரி விளையாது என்பதால் அந்தக் கல் போனது போனதுதான். ஆகவே அதற்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். வெளி நாட்டிலே மார்க்கெட் எவ்வளவு இருக்கிறதென்பதைப் பார்த்து, நல்ல விலை கிடைக்கிற வகையில் ஏற்பாடு செய்து தான் அந்தக் கனிம வளங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அளவோடு தமிழ்நாடு கனிம நிறுவனம் பணியாற்றிக் கொண்டு வருகிறது.

207— (*வினா எண் 3370) மாண்புமிகு வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் கனிமவள ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்ட சிறப்பு நிறுவனத்தின் (United Nations Development Programme Committee) உதவி கோரப்பட்டு கனிமவள ஆராய்ச்சி (Minerals) நடந்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) 1967ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் வரை நடந்த இக்கனிம ஆய்வுகளில் வான் புகைப் படமெடுத்தல், வானிலிருந்து புவி பௌதீக ஆய்வு, புவி இரசாயன ஆய்வுகள், மின்காந்த ஆய்வு ஆகியவைகள் மேற்கொள்ளப் பட்டன.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, இப்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்தப் பகுதிகளில் தங்கத் தாதுக்கள் இருக்கின்றன என்ற விவரங்களை அந்த ஆய்வுக்குழு கண்டுபிடித்திருக்கிறார்களா? இந்த மாநிலத்தில் தங்கத்தாது இருக்கிற இடங்கள் கண்டுபிடிக்கிறபோது அது பொருளாதார ரீதியில் பயனுள்ளதாக இல்லையென்று கைவிடப்படுகிற நிலையை நாம் பார்க்கிறோம். பல இடங்களில் தங்கத்தாது கிடைக்கிற வாய்ப்பினை இந்த ஆய்வு சொல்லியிருக்குமானால் அவைகளையெல்லாம் ஒரே இடத்தில் கொண்டு வந்து சேர்த்து அதனை உருவாக்குவதற்கு துறை எதாவது நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தங்கம் இப்போது இருக்கிற இடமாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பதில் நீலகிரி மாவட்டத்திலிருக்கிற கூடலூர் வட்டத்தில் தங்கம் எடுப்





பதற்கான புவி இரசாயன ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வில் தங்கத்தின் விழுக்காடு மிகக் குறைந்த அளவேயிருப்பதால் அது பொருளாதார ரீதியில் முக்கியமற்றதாகக் கருதப்பட்டு, தங்கம் எடுப்பது கைவிடப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பல இடங்களில் தங்கம் இருக்கிறது. இராசிபுரம் பக்கத்தில் தங்கம் இருக்கிறது. அதைப்போல கிருஷ்ணகிரி பக்கத்தில் தங்கம் இருக்கிறது. ஆனால் அங்கேயெல்லாம் தங்க ரேகை ஓடுகிறதே தவிர தங்கத்தை எடுப்பதென்றால் அப்படி எடுக்கிற செலவு அதிகமாகும். அதிலேயிருக்கிற தங்கம் குறைவு. ஆகவே குண்டுமணித் தங்கத்திற்காக லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்வது இயலாத காரியம். தங்கம் விளைவதற்கு பல ஆண்டுகள் ஆகக்கூடும். அப்படி விளைந்தால் அதனை எடுக்கிற முயற்சியை எதிர்காலத்தில் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, இருக்கிற கனிமங்களைப்பயன்படுத்துவதற்குத்தான் அந்த ஆய்வுகள்மேற்கொள்ளப் பட்டன. ஏராளமான அளவிலே மாநிலத்தில் அதுவும் குறிப்பாக வேடசந்தூர், பாளையம் பகுதிகளில் சிமென்டின் மூலப்பொருளான சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றனவென்று ஆய்விலே சொல்லியிருக்கிறார்கள். 1982–ம் ஆண்டு அளவிலே தமிழ்நாடு டான்செம் நிறுவனம் 40 கோடி செலவிலே ஒரு சிமென்ட் ஆலை நிறுவுவதற்கு விண்ணப்பம் அனுப்பி அது இன்னும் முடிவுறாமல் இருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு கூட ஐந்து லட்சம் டன் சிமென்ட்டை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்திருக்கிற சூழ்நிலையில், இந்தச் சிமென்ட் தட்டுப்பாட்டைப் போக்குகிற வகையில் ஐந்து ஆண்டுகளாக கால தாமதம் ஏற்பட்டிருக்கிற பாளையம் சிமென்ட் ஆலையை நிறுவுகிற பணி எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதில் செய்யப்பட்ட ஆய்வு

"Aerial photography and air–borne geographical survey" ஆகவே இரண்டு புவி இராசாயன ஆய்வுகள் செய்யப்பட்டன. இந்தச் சுண்ணாம்புக்கல்லைக் கண்டுபிடிக்க எந்த ஆய்வும் தேவையில்லை. அது மேலாகவே இருக்கிறது. சுண்ணாம்புக் கல் வேடசந்தூர் பகுதியில் நிறைய இருக்கிறது. அங்கே ஒரு சிமென்ட் ஆலை நிறுவ வேண்டுமென்பது நீண்டகாலமாக அரசின் ஆய்வில் இருக்கிறது. இந்த ஆண்டு கூட சிமென்ட் இறக்குமதி செய்வதாக நான் அறிகிறேன். ஆகவே அந்த இடத்தில் சிமென்ட் ஆலை நிறுவுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதைப்பற்றி அரசு ஆராய்ச்சி செய்யும்.

## ஓமலூரில் பீங்கான் தொழிற்பேட்டை

208—(*வினா எண். 4725) திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூரில் தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தால் பீங்கான் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு க. இராசாராம் : ஆம்.

## மதுரை அரசு மருத்துவமனை

361—*(வினா எண். 3934) திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "Whole Body Scanner" மருத்துவக் கருவி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மொத்த செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) ரூ. 80, 38,488.60

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்கேனர் வசதியை இலவசமாகப் பெறுவதற்கு, நோயாளிகளுக்கு வருமான வரம்பு ஏதேனும் விதிக்கப்பட்டு இருக்கிறதா? இந்த ஸ்கேனர் கருவியை உபயோகிப்பதற்கு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் அவர்கள் எங்கு பயிற்சி பெற்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்கேனரைப் பொறுத்தவரையிலும், இது முழு பாடி ஸ்கேனராக இருக்கிறது. இதிலே ஹெட் ஸ்கேன், தலைக்கு மட்டும், அந்தப் பகுதிக்கு மட்டும் Scale of pay Rs. 300-500 உள்ளவர்களிடத்தில் 160 ரூபாய் சார்ஜ் செய்யப்படும். Scale of pay Rs 501-1000 charges levied is 250 rupees. Scale of pay Rs. 1001-1,500, charges levied is 500 rupees. Above Rs. 1,501, charges levled is 750 rupees. எக்ஸ்ட்ரா ஒரு காப்பி வேண்டும் என்றால் 450 ரூபாய் அதற்காகக் கொடுக்கவேண்டும். இதற்காக பயிற்சி பெற்றவர், ஒரு டெக்னீசியன் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டு பயிற்சி பெற்றிருக்கிறார். மற்ற மருத்துவர்கள் எல்லாம் ஏற்கனவே பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.



திரு. மு. மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்கேனருக்குத் தேவைப்படுகின்ற உதிரி பாகங்கள் கிடைப்பதிலே மிகவும் சிரமமான நிலைமை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதை மாற்றுவதற்கு, அல்லது நிவர்த்தி செய்வதற்கு உதிரி பாகங்கள் உடனடியாகப் பெறுவதற்கு அரசு என்ன நிலையை, முயற்சியை மேற்கொண்டு உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு வாரண்டி பீரியட் என்று ஒரு ஆண்டு கொடுத்திருக்கிறார்கள். இந்தக் காலத்திற்குள்ளே ஏதாவது உதிரி பாகங்கள் தேவையென்றால், அல்லது சரி செய்யவேண்டும் என்றால் அதைப் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இது சம்பந்தமாக அந்தக் கம்பெனியோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே சென்னையில் உள்ள அந்த ஸ்கேனர் அனுபவத்தை வைத்துப் பார்த்தால், நமக்கு உடனடியாகக் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாடி ஸ்கேனரை தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் அமைக்கின்ற திட்டத்தை அரசு கொண்டு வருமா? வழக்கம் போல நிதிப்பற்றாக்குறை இதற்கும் ஏற்படலாம். எனவே அப்படிப்பட்ட நிலைமையில் தனியார் மருத்துவமனைகளில் இப்போது இந்த பாடி ஸ்கேனர் இருக்கிறது. எனவே தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இந்த ஸ்கேனரைப் பொருத்துகின்ற வரையிலும், அரசுக்கு ஆகின்ற செலவில் எவ்வளவு கட்டணங்களை வசூலிக்கின்றோமோ, அதே கட்டணத்தைத்தனியார் ஸ்கேனர்களுக்குக் கொடுத்து நம்முடைய மக்கள் அதன் பயனைப் பெருகின்ற வாய்ப்பை அரசு கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகளில் ஸ்கேனர்கள் இருக்கின்றன ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் இப்போது 3 இடங்களில் இந்த ஸ்கேனர்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. தஞ்சை மருத்துவக் கல்லூரியிலும் ஹெட் ஸ்கேனர் இருக்கிறது. மதுரை மருத்துவமனைக் கல்லூரியில் ஹோல் பாடி ஸ்கேனர் இருக்கின்றது. நம்முடைய சென்னை பொது மருத்துவமனையில் ஹெட் ஸ்கேனர் இருக்கிறது. இன்னும் இந்த ஆண்டு கோயம்புத்தூர், மற்றும் திருநெல்வேலி போன்ற மற்ற மருத்துவக் கல்லூரிகளிலேயும் இந்த ஸ்கேனரைக் கொண்டு வருவதற்காகத் திட்டமிட்டு இருக்கிறோம். இங்கே கூட அதைப் பற்றி அறிவித்து இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் இன் ஏ பேஸ்டு புரோகிராம், பெரிய பெரிய மாவட்ட மருத்துவமனைக் கல்லூரிகளிலே முதல் கட்டமாக இந்த ஹெட் ஸ்கேனர் கொண்டு வந்து, ஆக்சிடென்ட்

கம்-எமர்ஜென்சி சர்வீஸ் என்ற அந்த ஒரு திட்டத்தினுடைய எல்லைக்குள்ளே இதைக் கொண்டு வந்து, அவர்களுக்கு நன்மை செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே படிப்படியாக முதல் கட்டமாக எல்லாக் கல்லூரி களிலேயும் கொண்டு வந்து, அடுத்த கட்டமாக மாவட்ட மருத்துவமனைகளிலேயும் கொண்டு வரப்படும்.

### ஆரம்ப சுகாதார நிலையம், வேதாரண்யம்

*362-(*வினா எண். 6315)* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேதாரண்யம் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக உயர்த்த அரசு திட்டம் ஏதும் வைத்துள்ளதா?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: *(அ மற்றும் ஆ) அரசு ஆணை எண் 1769, சுகாதாரம், நாள் 19.9.81-ல் வேதாரண்யம் ஆரம்ப சுகரதார நிலையம் 24 கூடுதல் படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.*

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது படுக்கை வசதிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இதை அரசு மருத்துவமனையாக ஆக்கத் தேவை யில்லை என்று சொல்கிறார் என்று கருதுகிறேன். அங்கே இரண்டு லட்சம் மக்கள் இருக்கிறார்கள். வேதாரண்யம் தாலுக்கா தலை நகரத்தில் அரசு மருத்துவமனை இல்லாததால், மருந்து பற்றாக் குறையால் இன்னும் பல வசதிகள் இல்லாததால் மக்கள் அவதிக்கு ஆட்பட்டு இருக்கிறார்கள். எனவே இந்த மருத்துவமனையை, அரசு மருத்துவமனையாக ஆக்கி, இதே தாலுக்காவைச் சேர்ந்த கரியாப்பட்டினம் கிராமத்திலே இந்த பிரதம சுகாதார நிலை யத்தை வைக்கவேண்டும் என்று அரசு 8, 9 ஆண்டுகளுக்கு முன்னாலே இடம் கேட்டு, கட்டிடம் கேட்டு அந்த ஊர் பொது மக்களால், இடம் வாங்கிக் கொடுக்கப்பட்டு, சுமார் 20 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டிடமும் கட்டப்பட்டு உள்ளது. வேதாரண்யத்தில் உள்ளதை அரசு மருத்துவமனையாக ஆக்கி இந்தச்சுகாதார நிலையத்தை கரியப்பட்டினம் கிராமத்திற்கு மாற்ற ஏதாவது குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 9-50)*

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டு வார் என்று கருதிக் கொண்டிருந்தேன். ஏனென்றால், மேம்படுத்த



பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, விரிவாக்கப்பட்ட ஒரு தாலுக்கா மருத்துவமனையாகும். அது 24 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக 19-1-81-லிருந்து செயல்பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசாங்கத்தினுடைய மருத்துவ மனையாக மாற்றவேண்டுமென்று சொல்கிறார்கள். மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்த வரையில் அரசாங்க மருத்துவ மனைகளிலே உள்ள வசதிகளை விட இதில் கூடுதலான வசதிகள் கிடைக்கும். ஏனென்றால், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் என்பது Preventive and promotive என்ற வசதி கூடுதலாக உள்ளது. சாதாரணமான அரசாங்க மருத்துவமனையில் இப்படி இருப்பதற்கு நியாயம் இல்லை. இங்கே கூடுதலாக படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவமனையில் என்ன வசதிகள் இருந்ததோ அத்தனை வசதி களும் அதுமட்டுமல்ல Prevention and promotion என்ற அந்த வசதி யையும் இங்கே ஏற்படுத்தி இருக்கிறோம். மாண்புமிகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி இதைச் செய்ய வேண்டும் என்று மிகவும் வற்புறுத்தி யதற்குப்பிறகு அங்கே போய் பார்த்து நல்ல சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை அறிந்து அதற்குப்பிறகு இந்த Preventive and promotive ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வசதிகள் செய்து தந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், நான் பாராட்டுகிறேன். இருந்தாலும் அங்கே தினம் இரண்டாயிரத்திலிருந்து மூன்றாயிரம் வரை மக்கள் வைத்தியத்திற்குச் செல்கிறபோது எந்தவிதமான நல்ல மருந்துகளும் கிடைப்பதில்லை. குறிப்பிட்ட அளவு தான் அரசு அந்த மருத்துவமனைக்கு பணம் ஒதுக்குகிறது. அந்த அளவிற்கு மருந்துகள் போதாத காரணத்தினால் அரசு மருத்துவ மனையாக ஆக்கினால் மக்களும் பயன்படமுடியும். அதோடு அந்த மருத்துவமனையில் வேறு அரசு மருத்துவ மனைகளில் உள்ள படுக்கை வசதிகள் மட்டும்தான் இருக்கிறதே தவிர மற்ற வசதிகளான, ஆப்பரேசன் தியேட்டர், எக்ஸ்ரே போன்ற கருவி கள் இல்லை. ஆகையினால், அரசு மருத்துவமனையாக இருந் தால் நோயாளிகளுக்கு மருத்துவ வசதி கிடைக்கும் என்ற மக்களுடைய கோரிக்கையை இங்கே சொல்கிறேன். அதை அரசு மீண்டும் பரிசீலிக்க உத்தேசம் உண்டா? நான் முன்பு சொன்னது போல கரியாப்பட்டினம் கிராமத்திலே கட்டிடமும், நிலமும் அரசுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஏதாவது பிரைமரி ஹெல்த் சென்டராவது ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியாப்பட்டினத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழு குறிப்புகளையும் கொடுத்

தார்களேயானால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். அடுத்தபடியாக இந்த மருத்துவமனைக்கு எவ்வளவு மருந்து வேண்டுமானாலும் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. இன்னும் வசதிகள் அந்த மருத்துவ மனைக்கு வேண்டுமென்றாலும் அத்தனையும் செய்யத் தயாராக இருக்கிறது. எவ்வளவு நோயாளிகள் வருகிறார்கள், எவ்வளவு மருந்து இருக்கிறது என்கிற அந்த விஷயத்தை உடனடியாக அறிய அதற்கு ஒரு உத்தரவு போட்டு தெரிந்துகொண்டு இன்னும் கூடுதலாக மருந்து தேவையென்றால் நிச்சயமாக அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்யுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### கணபதிபுரம் மருத்துவமனை

363—(* வினா எண் 6693) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் கணபதிபுரம் அரசு மருத்துவமனையை சீர்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை

(ஆ) வினா எழாது

### கார்வாய்புதூர் பஞ்சாயத்துப் பகுதியில் நியாய விலைக்கடை

214—(* வினா எண். 3973) திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சார்வாய் ரெவின்யூ கிராமத்திலுள்ள கார்வாய்புதூர் பஞ்சாயத்திற்கு தனியாக ஒரு நியாயவிலைக் கடையை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் கார்வாய்புதூர் கிராமத்தில் 26-12-1985 முதல் நியாய விலைக்கடைதிறக்கப்பட்டு நடைபெறறு வருகிறது.

திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்வாய்புதூர் ரெவின்யூ கிராமத்தில் நியாய விலைக் கடை திறந்ததற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு நியாய விலைக்கடை ஆயிரம் கார்டுகளுக்கு மேல் உள்ள இடங்களுக்கு பிரித்து ஒரு கடை கொடுப்பதாக அரசு அறிவித்து அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதோடு மலைப் பகுதியிலே 300 கார்டுகள் இருந்தாலே, ஏனென்று சொன்னால் பச்சை மலைப்பகுதியில் உள்ளவர்கள் நீண்ட நெடுந்தூரம் பிரயாணம் செய்து மக்கள் உணவுப் பண்டங்களை வாங்க



வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், மேல் பகுதியில் 300 கார்டுகள் உள்ள இடங்களுக்கும் கீழ்பகுதியில் மிகவும் தூரத்தில் உள்ள ஊர்களுக்கு 500 கார்டுகளுக்கும் கடை திறக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பு இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருந்த இடத்தில் கடை திறக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது பொதுவாக ஆலோசனையைச் சொன்னார்கள், நான் நேற்றைக்குச் சொன்னது போல் தமிழ்நாட்டில் சுமார் 20,700-க்கு மேற்பட்ட நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. அதில் ஆயிரம் அட்டைக்கு ஒரு கடை என்ற வீதத்தில் அதை அமைத்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்றாலும் கூட சராசரியாக பார்க்கிறபோது 575 குடும்ப அட்டைக்கு ஒரு கடை தான் இன்றைக்கு இருக்கிறது: அதிலே சுமார் 9 ஆயிரம் நியாயவிலைக் கடைகளில் ஒவ்வொரு கடைக்கும் 500 அட்டைகள் வீதம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது ஒரு ரெவின்யு வில்லேஜுக்கும் அடுத்து கடை இருக்கிற இடத்திற்கும் இடைவெளி 3,4 கிலோ மீட்டர் இருக்கிறது என்றும் அதனால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். அப்படி தள்ளி இருந்தால் அப்படிப்பட்ட கிராமங்களில் அல்லது தனித் தனியாக குடியிருப்பு வாரியாக அதாவது சமுதாயத்தின் சூழ்நிலை காரணமாக அந்தக் கடையில் போய் நாங்கள் வாங்க மாட்டோம் எங்கள் ஊருக்கு கடை வேண்டும் என்று சொல்கிறபோது அந்த சமுதாய ரீதியாக பார்ட் டைம் கடைகளும் திறக்கப்பட்டு இருக்கின்றன. இவை எல்லாம் சேர்த்து தான் சுமார் 20 ஆயிரத்து 700 கடைகள் இப்போது இருக்கின்றன. அப்படி ஏதாவது தனிப்பட்ட இடங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் தேவை என்று அவர்கள் சொன்னால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சை மலையில் நீண்ட நாட்களாக லேண்டு சொசைட்டி ஒன்று வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அதை அரசு பரிசீலனைச் செய்து உடனே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் ஆயிரம் அட்டைக்கு மேல் ஒரு கடையில இருந்தால் அதைப் பிரித்து ஆயிரம் அட்டைக்கு ஒரு கடை என்று திறக்கப்பட்டு இருந்தாலும் கூட நகரங்களில் வேண்டுமானால் 500 அட்டைகள், 1,000 அட்டைகள் என்று இருக்கலாம். கிராமங்களில் 100, 200 அட்டைகள் உள்ள இடங்களில் உள்ளவர்கள் மற்ற இடங்களுக்கு 3, 4 கிலோமீட்டர் தூரத்திற்குச் சென்று ரேஷன் வாங்கிக்கொண்டு இருப்பதால் அதை மாற்ற பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு என்னுடைய தொகுதியில் ரெவின்யு கிராமங்களைப் பிரிக்கும்போது

காட்டுக்கோட்டையை காலுங்கா பாளையம் என்ற ஊரோடு சேர்த்துவிட்டார்கள். காட்டுக்கோட்டைக்கும் காலுங்கா பாளையத்திற்கும் இடைவெளி 12 கிலோ மீட்டர் இருக்கிறது. ரெவின்யு கிராமம் என்று படத்தை வைத்துக்கொண்டு முடிவு எடுக்கிற காரணத்தால் அந்த மக்களுக்கு கடைக்குச் சென்று பொருட்களை வாங்குவது சிரமமாக இருக்கிறது. ஆகவே அதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகள் திறக்கப்படும் போது படத்தை வைத்து முடிவு செய்வது இல்லை. இருக்கிற ரெவின்யு கிராமங்களைப் பார்த்து, தொலை தூரங்களைக் கணக்கில் கொண்டு, வாழ்கிற மக்கள் தொகையை கணக்கில் கொண்டு கடைகள் திறக்கப்படுகின்றன. ஏறத்தாழ 17 ஆயிரம் ரெவின்யு கிராமங்கள் தமிழகம் முழுவதும் இருக்கின்றன. ஆனால் திறக்கப்பட்டு இருக்கின்ற கடைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 21 ஆயிரம். எனவே ஒரு ரெவின்யு கிராமத்திற்கு தேவையான அளவுக்கு சில கிராமங்களில் 2 கடைகள் கூட இருக்கின்றன. நான் நேற்றைக்குச் சொன்னது போல் இந்தியாவில் இது போன்று எல்லா கிராமங்களுக்கும் பொது வினியோக முறையிலே அரசு துறை நிறுவனத்தாலே இணைக்கப்பட்ட ஒரே மாநிலமாக இன்றைக்கு தமிழகம் இருந்து கொண்டு இருக்கிறது.

எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இங்கே குறிப்பிட்டு இருக்கிற கடைக்கும் பக்கத்தில் உள்ள கிராமத்திற்கும் 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்கிறது, அவ்வளவு தூரம் சென்று பொருட்கள் வாங்கக்கூடிய பிரச்சினை இருக்கிறது என்று சொன்னார்கள். அது குறித்து மீண்டும் அதிகாரிகளை அனுப்பி பார்க்கச்சொல்லி தேவையிருப்பின் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அத்தியாவசியமான இடங்களில் ரேஷன் கடைகள் திறப்பதற்கு விதிகளை தளர்த்தி திறக்கப்படும் என்று சொன்னார்கள். எனது தொகுதியில் உள்ள ஈச்சம்பாடி என்ற ஒரு பஞ்சாயத்து அதில் பாதி கிராமங்கள் தென் பெண்ணை ஆற்றின் வலது கரையிலும், பாதி கிராமங்கள் தென் பெண்ணை ஆற்றின் இடது கரையிலும் இருக்கின்றன. அதிலே மழை காலங்களில் வெள்ளம் வந்தால் அந்த கிராமத்தார்கள் 8 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் சென்று தான் அங்கே ரேஷன் வாங்க வேண்டியிருக்கிறது. அது சம்பந்தமாக பெரிய அதிகாரிகளை அணுகிக் கேட்டால் மேற்கொண்டு கணக்கு எடுப்பதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும் அரசு தான் அதைச் செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே அரசுக்கு எனது கோரிக்கையாக இதை விடுத்து அந்தப் பஞ்சாயத்தில் இன்னொரு கடை திறப்பதற்கு தகுந்த ஆணையை அரசு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்





**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனேகமாக இப்படிப் போனால்நேற்றைக்கு பேசிய எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் சரி, இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் சரி தங்கள் தொகுதியில் இருக்கிற கடைகளின் எண்ணிக்கையை விரிவாக்கம் செய்ய வேண்டும், எல்லா இடங்களிலும் கடையை ஆரம்பிக்கவேண்டும் இருக்கிற எல்லா குக் கிராமங்களிலும் ஆரம்பிக்கவேண்டும் என்ற உணர்வில், ஆசையில் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது 8 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே பேசியதையே கணக்கில் எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தான் அவற்றை எல்லாம் பார்த்து அரசுக்கு பரிந்துரை செய்கிறார். திறக்கக்கூடாது என்று எங்கும் தடை (Ban) கிடையாது. நியாயத்தின் அடிப்படையில், தேவையின் அடிப்படையில், அப்போதைக்கு அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்தால் அரசு அங்கே கடையை திறக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதை கணக்கில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை பார்க்கச் சொல்லி அது அரசுக்கு வந்தால் உண்மையில் அவ்வளவு தூரம் இடைவெளி இருந்தால், மக்கள் தொகை ஆகியவற்றை எல்லாம் அடிப்படையாக வைத்து தேவை இருப்பின் கடை திறக்கப்படும்.

### திருமயம் தொகுதியில் நவீன அரிசி ஆலை

215—(* வினா எண். 5024) **திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதியில் அரசு மூலம் நவீன அரிசி ஆலை அமைக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### சிறப்புக் கூட்டுத் திட்டத்தின் கீழ் நூற்பு ஆலைகள்

304—(* வினா எண். 4738) **திரு .க. பாரமலை :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் அச்சங்குளத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையைப் போல ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய நூற்பு ஆலைகளை Special Component Plan என்ற திட்டத்தின் கீழ் துவங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : சிறப்புக் கூட்டுத் திட்டத்தின் கீழ் (Special Component Plan) ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கூட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வேண்டிய நூற்பாலைகள் துவங்குகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது ஏற்கனவே முன்னாள் ஆதிதிராவிடர் நல அமைச்சராக மாண்புமிகு திரு விஜயசாரதி அவர்கள் இருந்தபோது ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் பேசி இந்த சிறப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஒதுக்குகின்ற மாநில அரசு ஒதுக்குகின்ற நிதிகளை செம்மைப்படுத்தி பயன்படுத்த வேண்டுமென்று ஒருகூட்டத்தை கூட்டி அதிலே முடிவெடுத்தார்கள். அந்த முடிவின்படி அச்சங்குளத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலையும், ராணிப்பேட்டையில் தோல் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையும் ஏற்படுத்தப்பட்டன என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அது போல் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ........(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும். இதையெல்லாம் மானியத்தில் பேச வேண்டும்.

திரு. க. பாரமலை ; தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு வகைகளில், தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்காக நிதி ஒதுக்கினாலும் கூட, அது உறுப்படியாக அவர்களுக்குப் போய் சேருவதில்லை. இப்படிப்பட்ட நூற்பாலைகளில் ஏற்கனவே 300, 400 குடும்பங்கள் நிரந்தரமாக வேலைவாய்ப்பு பெற்று, அவர்களுடைய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். அதைப் போல் வருகின்ற ஆண்டிலாவது தாழ்த்தப்பட்ட பகுதிகளுக்கு நிதியை ஒதுக்கி, எங்கெங்கு முடிகிறதோ, அங்கெல்லாம் கூட்டுறவு நூற்பாலைகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகளைத் துவக்க வேண்டுமென்றால், மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அப்படி வழங்குகின்ற உத்தேசம் இல்லை



என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. உலகிலேயே அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளை விட அதிகமாக உற்பத்தி பண்ணுவது இந்தியாவாகும். உண்மையிலேயே இது போன்ற ஸ்பெஷல் காம்பொனென்ட் திட்டத்தில் ஆலைகளைத் துவக்குவதற்கு அனுமதியளித்தால் தொழிலாளர்கள் நன்மையடைவார்கள். ஆக மத்திய அரசு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கொள்கையைத் தளர்த்தினால், இதுபற்றி மறுபரிசீலனை செய்யலாம்.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் தனியார் துறையிலே நூற்பாலைகளைத் துவக்குகிறார்கள். மாவட்டங்களில் கூட்டுறவு ஆலைகளை அமைக்கின்ற கொள்கை அரசுக்கு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் அச்சங்குளமும், தொழிற்துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. எனவே, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு ஆலையை துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், சென்னை, நீலகிரி, கோவை, பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய மாவட்டங்களைத் தவிர, எல்லா மாவட்டங்களிலும் நூற்பாலைகள் இருக்கின்றன. நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், தற்போது தனியார் துறையிலும் விஸ்தரிப்பதற்கு அனுமதி கேட்டால்கூட, மத்திய அரசு கொள்கை மாற்றம் இல்லை என்று சொல்கிறார்கள். மத்திய அரசுக் கொள்கையில் மாற்றம் செய்தால், நிச்சயமாக மறுபரிசீலனை செய்யப்படும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளியவர்களுக்கு மலிவான விலையில் துணிகளைக் கொடுக்க வேண்டுமென்ற வகையில், பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களால் உருவாக்கப்பட்ட 'நியூ டெக்ஸ்டைல் பாலிசியில்' பாலியெஸ்டர் துணிகளுக்கு, புதிய நூற்பாலைகளைத் துவங்குவதற்கான உரிமங்கள் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டில் எத்தனை நூற்பாலைகளுக்கான உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன ? அதிலே தனியார் கூட்டுறவு நூற்பாலைகளுக்காக எத்தனை உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன ? செஞ்சி சாரர் ஸ்பின்னிங் மில்லுக்கு அந்த உரிமம் வழங்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரமான பதில் தரப்படும்.

[1986 ஏப்ரல் 3

குச்சிக் கிழங்கிலிருந்து எரி சாராயம்.

305—(* வினா எண். 5647) திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குச்சிக் கிழங்கிலிருந்து எரி சாராயம் தயாரிக்கப் படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் தயாரிக்கப்படுகின்றன?

(இ) குச்சிக் கிழங்கின் விலையை அரசு நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட வடிசாலைகளில் குச்சிக்கிழங்கு மாவிலிருந்து சாராவி தயாரிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது :

(1) கோயம்புத்தூர் ஆல்கஹால் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், சின்னபுலியூர், பெரியார் மாவட்டம்.

(2) சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக்கூடல், பெரியார் மாவட்டம்.

(3) ஓரியன் கெமிக்கல்ஸ் & டிஸ்டிலரிஸ் லிமிடெட், செங்கல்பட்டு மாவட்டம்.

(4) ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், நெல்லிக் குப்பம், தென்னாற்காடு மாவட்டம்.

(5) திருச்சி டிஸ்டிலரிஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(இ) இது, மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி :- மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, குச்சிக் கிழங்கிலிருந்து 'ரெக்டிஃபைட் ஸ்பிரிட்' என்று சொல்கிற எரிசாராயமும், 'சைலன்ட் ஸ்பிரிட்' என்று சொல்கிற வீரியமற்ற சாராவியும் தயாரிக்கின்ற திட்டம் நம்முடைய கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம், செங்கை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம் போன்றவைகளில் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் பெருந்தகையார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த குச்சிக் கிழங்குகள் அதிகமாக விளைகின்ற தென்னாற்காடு மாவட்டம், செங்கை மாவட்டம், சேலம் மாவட்டம், கோவை மாவட்டம் போன்றவைகளில், இந்தக் கிழங்கினுடைய விலையை நிர்ணயிக்கிற பணியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



1986 ஏப்ரல் 3]

செய்வார்களா? மேலும், எரி சாராயத்திலே கன்னல் சாரியினுடைய கசண்டு கிட்டத்தட்ட 2 இலட்சம் அளவுக்கு கிடைக்காத காரணத்தினால், நடுவண் அரசை எதிர்நோக்கி இருக்கின்ற நாம் இந்தத் திட்டத்தின் மூலம் கசண்டு தயாரிக்கிற வாய்ப்பினை குச்சிக் கிழங்கின் மூலம் பெற முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே குச்சிக் கிழங்கிலிருந்து சாராவி தயாரிக்கின்ற பரிசோதனை திட்டம், தமிழ்நாட்டில்தான் நடத்தப்பட்டு, வெற்றிகரமாக இயங்கி வருகிறது. 1-1-1987 முதல் மதுவிலக்கு அமல்படுத்தி, கள், சாராயக் கடைகள் நீக்கப்படுவதனால், இதுமாதிரி திட்டம் தேவைப்படுமா என்பதை ஆய்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. மேலும், குச்சிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படுகிற சாராவி அதிக விலை உள்ளதாக இருக்கிறது. குச்சிக் கிழங்கினுடைய விலையை நிர்ணயிக்கிற உத்தேசம் தற்போது இல்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையினுடைய தலைநாயகர் அவர்களே, குச்சிக் கிழங்கினுடைய விலையை நிர்ணயிக்கிற திட்டம் இல்லை என்று சொன்னாலும், நம்முடைய தமிழக அரசு சாராயக் கடைகளை அகற்றுகிற நல்ல பணியைச் செய்யும் நேரத்தில் இந்தக் கேள்வியைத் தொடுக்கலாமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினவுகின்ற முறையில் இந்தக் கேள்வி இருந்தாலும், நமது வருவாயை ஈட்டுகின்ற துறையாக, மருத்துவத்திற்குப் பயன்படுகிற, வார்னிஷ், பிரெஞ்ச் பாலிஷ் போன்றவற்றிற்குப் பயன்படுகிற ரெக்டிபைட் ஸ்பிரிட் உருவாக்குகின்ற குச்சிக் கிழங்கு சாராவியை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்து, அதனால் நமக்குப் பொருளாதாரம் ஈட்டுகின்ற அளவுக்கு, கிட்டத்தட்ட ரூ. 70 கோடி அளவுக்கு ஜனவரி மாதத்தில் இருந்து வருவாயை இழக்கப் போகின்ற நம்முடைய அரசு, அதற்காக நடுவண் அரசிடம் கேட்பதை விட, ரெக்டிபைட் ஸ்பிரிட் மூலம் வருவாய் அதிகமாவதற்கு, இன்னும் பல்வேறு ஆலைகளை, தொழிற்சாலை இல்லாத பகுதிகளில் திறக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக் கிழங்கிலிருந்து இந்தச் சாராவியைத் தயாரிக்கிற நுட்பம் பிரேசில் நாட்டில் தான் இருக்கிறது. இதுபற்றி ஆராய்ந்து, எப்படி மலிவு விலையில் தயாரிக்கலாம் என்பதைப் பற்றி தமிழக அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. கோயம்புத்தூரிலுள்ள அந்த நிறுவனத்தில் தற்காலிகமாக பைலட் பிராஜக்ட் தான் போடப்பட்டது. அச்சாலை சோதனை மூலம் 230.125 மெட்ரிக் டன் மரவள்ளிக் கிழங்கிலிருந்து உபயோகப்படுத்தக்கூடிய 90,477 லிட்டர் சாராவி தயாரித்து இருக்கிறார்கள். நுட்பங்களை எல்லாம் ஆராய்ந்து, அது கமர்ஷியல் வழியில் பயன்படும் அளவுக்கு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக்கிழங்கிலிருந்து எரி சாராயம் தயாரிப்பதில் அதிக லாபம் கிடைக்குமா அல்லது மாவுப் பொருளாக அதை ஆக்குவதில் அதிக லாபம் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குக்சிக் கிழங்கிலிருந்து சாராயம் தயாரிப்பதோடு, வைத்தியத்திற்குத் தேவையான சில பொருள்களைக் கூட தயாரித்து இருக்கிறார்கள். அது தற்போது தயாரிக்கிற சாராயத்தினுடைய விலையை விட அதிகம் ஆகி, இந்தியாவில் தயாரிக்கப்படுகிற அயல் நாட்டு மதுபான வகைகளைத் தயாரிக்கத்தான் வாங்கும்படியான நிலைமை இருக்கிறது. மேலும் இதுபற்றி ஆராய்ச்சி நடத்தப்படவேண்டும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக் கிழங்கிற்கு அரசு விலை நிர்ணயிக்குமா என்று ஒரு துணைக் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, அதற்கு விளக்கமான பதில் இல்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் கரும்புக்கு விலையை நிர்ணயம் செய்து கொடுக்கிறார்கள். இன்றைக்கு கிழங்கிலேயிருந்து மாவைத் தயாரித்து வருகின்ற வியாபாரிகளுக்கு ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் கிழங்கை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குச் சரியான விலை போய்ச்சேருவதில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்களுக்குச் சரியானவிலை போய்ச் சேருவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களை, கீழே கிழங்கு உற்பத்தியாளர்களுகு உருவாக்கும் நோக்கம் அரசிடம் இருக்கிறதா? அதற்கு க்உரிய ஆணையை அமைச்சரவர்கள் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குச்சிக் கிழங்கை அத்தியாவசியப் பொருளாகப் பாவிக்க வேண்டுமென்ற ஒரு யோசனை கூறப்பட்டது. ஆனால் கலால் இலாக்கா மாத்திரமே அதை முடிவு செய்ய முடியாது. உணவுத் துறை, வேளாண்மைத் துறையெல்லாம் சேர்ந்து அதைப் பற்றி ஆராய வேண்டும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக் கிழங்கு குறிப்பிட்ட மாவட்டங்களிலே மட்டும் குறிப்பாக சேலம், தர்மபுரி, தென்னாற்காடு இன்னும் பாண்டிச்



சேரி போன்ற பகுதிகளில் தான் அதிகமாக விளைகிறது. தமிழ் நாட்டிலே சேலம், தர்மபுரி மாவட்டத்திலே குச்சிக்கிழங்கு சாகுபடியும், பல உப பொருள்களைத் தயாரிக்கும் ஆலைகளும் இருக்கின்றன. ஆனால் அதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் போதுமான விலை உத்தரவாதம் இல்லை. சென்ற ஆண்டு 75 கே.ஜி. கொண்ட ஒரு மூட்டையின் விலை 15 ரூபாய்; இந்த ஆண்டு 75 கே. ஜி. கொண்ட ஒரு மூட்டையின் விலை 75 ரூபாய். இப்படி ஏற்றத்தாழ்வுகள் வருவதன் காரணமாக, நிரந்தரமான ஒரு நிலை இல்லாததால் விவசாயிகள் அவதிக்குள்ளாகிறார்கள். குச்சிக் கிழங்கு கமர்ஷியலாகவும் இருக்கிறது; ஃபுட்கிரெயினாகவும் இருக்கிறது. இப்படி வர்த்தப் பொருளாகவும், உணவுப் பொருளாகவும் பயன்படுத்துகின்ற பொருளாக இருப்பதால், விவசாயிகளின் நிரந்தரப் பாதுகாப்புக்காக ஒரு உத்தரவாதமான விலை கிடைக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு, கோதுமை, நெல் போன்று இதற்கும் ஒரு உத்தரவாத விலையை நிர்ணயிக்க முடியுமா என்று மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக்கிழங்கிலிருந்து எரிசாராயம் தயாரிக்கப்படுவதாகச் சொன்னார்கள்; அதிகச் செலவாகும் என்றும் சொன்னார்கள். குச்சிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் சாராயத்தின் ருசியையும், மற்றபடி தயாரிக்கின்ற சாராயத்தின் ருசியையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது எது நன்றாக இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, அதைச் சாப்பிடுகின்றவர்களுக்குத்தான் அது தெரியும். குச்சிக்கிழங்கை, நேரடியாகச் சாராயம் தயாரிக்க உபயோகப்படுத்துவது இல்லை. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் மது பான வகைகளில்தான் உபயோகப்படுத்தப்படுகிறது.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குச்சிக்கிழங்கைப் பயன்படுத்தி, ரெக்டிபைட் ஸ்பிரிட், இன்டஸ்டிரியல் ஆல்ககால் ஆகியவைகள் தயாரிக்கின்ற சிறுதொழிலாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே துவக்குவதன் மூலம், தொழில்களில் சிறுதொழில்களாக அமைக்க வாய்ப்பு இருப்பதாலும், இன்டஸ்டிரியல் ஆல்கஹாலுக்கும், ரெக்டிபைட் ஸ்பிரிட்க்கும், சாராயக் கடைகளை மூடுவதற்கும் சம்பந்தம் இல்லை என்கின்ற நிலை இருப்பதாலும், அதிகமாகக் கிடைக்கின்ற மொலசெஸிலிருந்து இந்த ரெக்டிபைட் ஸ்பிரிட், இன்டஸ்டிரியல் ஆல்ககால் ஆகியவற்றிலிருந்தும் இந்தக் குச்சிக்கிழங்கி

லிருந்து கிடைக்கின்ற உப பொருட்கள் ஆகிவற்றிலிருந்தும் தொழிற் சாலையைத் துவங்குவதற்கான திட்டம் தங்களிடம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அரசாங்கத்திடம் திட்டம் ஏதுமில்லை. அதுபோல் உற்பத்தி செய்ய ஆலைகள் முன்வந்தால் அரசு அனுமதி வழங்க யோசனை செய்யும்.

எட்டையபுரத்தில் தொழிற்பேட்டை.

364 (*வினா எண். 4100) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டையபுரத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர்.ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எட்டையபுரம் பகுதி விவசாய மக்கள் வாழுகின்ற பகுதி. இப்பொழுது கிடைக்கின்ற விலை அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியாக இல்லை. எனவே, அங்கே ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் சுமார் 0.478 ஏக்கர் நிலப்பரப்பை தொழிற்பேட்டை அமைப்பதற்காக எடுக்கப்பட்டு, 4812 ரூபாய் அதற்காகச் செலவிடப்பட்டது. 1979-இல் பத்து டைனி ஷெட்டுகள் அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. இன்றுவரை அந்த பத்து தொழிற்கூடங்களும் காலியாகவே இருக்கின்றன. ஆகவே, மேற்கொண்டு எதையும் செய்ய உத்தேசமில்லை.

மருந்துகள் உற்பத்தித் தொழிற்பேட்டை.

365— (*வினா எண்.5297) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்து தொழிற்சாலைகளுக்காக தனி தொழிற்பேட்டையைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) ஆம்.

(ஆ) மருந்து தொழிற்சாலைகளுக்காகத் தனித் தொழிற்பேட்டையைத் தொடங்க அரசு ஆணை எண் 631 தொழிற்துறை நாள் 12-5-81—ல் அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி, அத்தொழிற்பேட்டை சென்னை—மாமல்லபுரம் சாலையில் 46-வது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆலந்தூரில் அமைக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து தொழிற்சாலைகளுக்கென தனி தொழிற்பேட்டை சென்னையில் மட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் துவக்குவதற்கு முன்வந்தால் அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்பொழுதுதான் முதன் முதலாக மருந்து தொழிற்சாலைகளுக்கென தனி தொழிற்பேட்டையை நாம் தொடங்கியிருக்கிறோம், ஆலத்தூரில் ஏறக்குறைய 139 ஏக்கரை புறம்போக்கிலும், 10.9 ஏக்கர் பட்டா நிலத்தையும் கையகப்படுத்தி, 35 தொழிற்கூடங்கள் கட்டுவதற்கும் 40 மேம்படுத்திய மனைகளை ஒதுக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் ஏறக்குறைய 11 தொழிற்கூடங்களை இன்றைக்குக் கட்டி முடித்திருக்கிறோம். ஏறக்குறைய 2 ஆண்டு காலமாக அதற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்று, அதை எல்லாம் பரிசீலனை செய்து, 10 தொழிற்கூடங்களை ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், 3—க்குத்தான் பணம் செலுத்தப்பட்டு, 1 இயங்கி வருகிறது; 2 ஏறக்குறைய முடிகின்ற தருவாயில் இருக்கின்றது. மற்ற பல பேர்கள் பணம் கட்டாத காரணத்தாலே ஒதுக்கப்பட்டதுகூட தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகையினாலே, தற்போதைக்கு வேறு இடங்களிலே அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மருந்து தொழிற்சாலைகளுக்கென துவங்கவிருக்கிற தொழிற்பேட்டைகளில் உயிர் காக்கும் மருந்துகள் தயாரிக்கப்படுமா? நமது மாநிலத்தில் அமைக்க இருப்பது மாதிரி, மற்ற மாநிலங்களிலும் இப்படி மருந்துதயாரிக்கும் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன என்பது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, சில மாநிலங்களிலே அப்படிப்பட்ட தொழிற்பேட்டைகள் உள்ளன. அதே போலத்தான் தமிழகத்திலே இருக்க

வேண்டுமென்று, உயிர் காக்கும் மருந்துகள் தனியாக ஓரிடத்தில் தயாரிப்பதற்கான எல்லாவிதமான வசதிகளும் செய்யப்பட வேண்டுமென்ற நோக்கோடுதான் அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அந்த ஏற்பாட்டை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, பிறகு வேறிடங்களில் செய்வதற்கு உத்தேசிக்கலாம்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்காகத் தனியாக ஆரம்பிக்கப்படும் அந்தத் தொழிற்பேட்டையில், தொழிற்சாலை ஆரம்பிக்க வருகின்றவர்களுக்கு ஏதாவது ஊக்கம் அளிக்கின்ற வகையில் வசதி செய்து கொடுக்கப்படுகிறதா? அது மட்டுமல்லாமல், நல்ல சூழ்நிலையில், வேறு எந்தவிதமான காற்று, வேறு நோய், நொடி தோன்றாத சூழ்நிலையை ஏற்படுத்தி, பாதுகாப்பான சூழ்நிலையிலே மருந்து உற்பத்தி செய்வதற்கான ஏற்பாட்டை அரசு அங்கே செய்ய இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு.கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற இடங்களிலே தொழிற்பேட்டைகளிலே உள்ள தொழிற்கூடங்களில் எல்லாம் சாதாரணமான ஷெட்டு களைப் போட்டு, அவர்களுக்கு வழங்குகிறோம். ஆனால் அங்கே மருந்துகள் தயாரிப்பதற்கான சிறப்பான திட்டம் தயாரித்து, ஒவ்வொரு தொழிற்கூடமும் ரூ.9 இலட்சம், ரூ.7.56 இலட்சம், ரூ. 5.56 இலட்சம் என்ற தரத்தில் 3 தரங்களாகப் பிரித்து, யார், யாருக்கு எப்படிப்பட்ட தேவை இருக்கிறதோ, அந்தத் தேவைக் கேற்ப ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம், தேவையானவர்களுக்கு ஏ. சி. செய்யப்பட்டு, அதற்கு வேண்டிய தண்ணீர், மின்சாரம், போன்ற அத்தனை சௌகரியங்களும் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர் களே, இங்கே அமைச்சர் அவர்கள் புதிதாக ஆரம்பிக்க இருக்கிற தொழிற்பேட்டைகளைப் பற்றியெல்லாம் கூறினார்கள். ஏற் கனவே, ஆரம்பிக்கப்பட்ட தொழிற்பேட்டைகளில் எத்தனை தொழிற்பேட்டைகள் மூடப்பட்டிருக்கின்றன? உதாரணமாக. திருப்பூரிலே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்பேட்டை மூடப்பட்டு, ஆண்டுகள் பலவாகின்றன. அதை மீண்டும் திறப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் விரைவாக பல காரியங் களை செய்யவேண்டும், தமிழகம் பூராவிலும் தொழிற்பேட்டை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தமிழகத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் தொழிற்பேட்டைகளை உருவாக்கி தொழிற் கூடங்களை கட்டித்தந்துள்ளது. ஆனால் பல இடங்களிலே தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டிருந்தும் கூட, அந்தத் தொழிற்பேட்டைகளில் உள்ள தொழிற்கூடங்களைப் பயன் படுத்திக் கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. அப்படிப்



பட்ட தொழிற்பேட்டைகளை எல்லாம் முழுமையாகப் பயன்படுத் திக்கொள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுந்த முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐயாறு சிறப்புச் சிற்றங்காடி.

366—(* வினா எண். 2988) திரு. [illegible] இராசாராமன்: மாண்புமி கூட்டுறவுத்துறை அமைச்சர் கீ[illegible]ண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு நகரில் உள்ள 'ஐயாறு சிறப்புச் சிற்றங் காடி' சிப்பந்திகள் பல இலட்சம் ரூபாய் கையாடல் செய்துள் ளனர் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) திருவையாறு நகரில் உள்ள, 'ஐயாறு சிறப்புச் சிற்றங் காடியில் ரூ. 2,02,766-67—க்கு, கையாடல் நடைபெற்றது கண்டு பிடிக்கப்பட்டது. கையாடல் குறித்து, வணிகவியல் குற்றப்பிரிவு புலனாய்வுத் துறையினரிடம் புகார் தாக்கல் செய்யப்பட்டது. 22-12-83—ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலனாய்வில் இருந்து வருகிறது. சம்பந்தப்பட்ட பணியாளர்களின் சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளன. ஒரு குற்றவாளியிடமிருந்து, ரூ.17,784.77 வசூல் செய்யப்பட்டு உள்ளது. பண்டகசாலையின் நிர்வாகக்குழு கலைக்கப்பட்டு, தனி அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது. துறை அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,

(முற்பகல் 10-20)

திரு. துரை.கோவிந்தராசன்: தலைவரவர்களே, இந்த வரலாற்று சிறப்புமிக்க திருவையாறு நகரிலுள்ள ஐயாறு சிறப்புச் சிற்றங் காடியில் நடைபெற்ற கையாடலை அரசு கண்டுபிடித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அமைக்கப்பட்டிருக்கிற அந்த போர்டு இந்தத் தவறைக் கண்டு பிடித்ததா அல்லது இந்த போர்டு கலைக்கப்பட்ட பின்னால் அதிகாரிகள் கண்டுபிடித்தார்களா என்பதை அறிய விருப்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, போர்டு இதைக் கண்டுபிடித்து சொல்லவில்லை. டி. ஆர். ஆபீசில் இருக்கிற சி, எஸ். ஆர். (ஸ்டோர்ஸ்) அவர்கள் 65—வது பிரிவின்கீழ் என்குயரி நடத்தி, இந்தத் தவறைக் கண்டு பிடித்தார்கள்.

திரு. கோ. இரகுபதி: தலைவரவர்களே, இதைப்போற ஊழல்களைத் தவிர்க்கின்ற வகையில் உரிய நடவடிக்கை எடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்

கிறேன். இதைப்போன்று வடாற்காடு மாவட்டத்தில் மொத்த விற்பனை நுகர்பொருள் கழகத்தில் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னால் அதனுடைய தலைவரும், அதற்குண்டான அதிகாரிகளும் கையாடல் செய்தார்கள். ஏதோ சில நடவடிக்கைகள் எல்லாம் எடுத்தார்கள். அவர்களுக்கு சொத்துகள் இருந்தும்கூட கையாடல் செய்த பணத்தை வசூல் செய்ய ஜப்தி நடவடிக்கை எடுக்கவில்லை; வேறு வகையிலும் பணம் வசூல் செய்யப்படவில்லை. நீண்டகாலமாக இந்த வழக்கு தாமதமாக இருக்கிறது. அரசு இதை அறியுமா? விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல அங்கே தவறு நடைபெற்றிருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் இன்ன ஆண்டு இந்தமாதிரியான தவறு நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்க உடனடியாக அரசாங்கத்திலிருந்து நேரடியாகவேகூட உத்தரவு போடலாம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் நடக்கின்ற தவறுகளுக்கு போடப்படுகின்ற வழக்குகள் சீக்கிரம் முடிவடைவதில்லை பட்டுக்கோட்டையில்கூட. கூட்டுறவு வங்கியில் நடந்த தவறுகளுக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு, 1979 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்கு, கூட்டுறவுத்துறை அலுவலர்கள் நீதிமன்றத்திற்கு வராத காரணத்தால் இன்னும் முடிவடையாமல் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இந்த நிலைமை இருக்கின்ற காரணத்தால் இந்த வழக்குகளை விரைவாக நடத்தி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா? வழக்குகள் முடியாத காரணத்தால் பல நிரபராதிகள்கூட இதிலே சிக்குண்டு அவர்களுடைய வாழ்நாள் முழுவதும், சர்வீஸ் முழுவதும் வீணாகி விடுகிறது. அதைக் கருத்திற்கொண்டு இந்த வழக்குகளை துரிதமாக நடத்திமுடிக்க சுற்றறிக்கைகள் அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல கருத்தை ஏற்று, சுற்றறிக்கைகள் அனுப்பி, இருக்கிற வழக்குகளை வேகமாக முடிவுக்கு கொண்டுவர தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: தலைவரவர்களே, இந்த திருவையாறு நகரிலுள்ள ஐயாறு சிறப்புச் சிற்றங்காடியில் 1983 ஆம் ஆண்டில் கையாடல் செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் இன்னும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படாததற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. 363/83 முதல் 402/83 வரையிலான பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி: தலைவரவர்களே, நிர்வாகக் குழு இருந்தால் தவறு நடக்காது என்று நேற்றைக்கு இந்த மன்றத்தில் பேசப்பட்டது. ஆனால் நிர்வாகக் குழு இருக்கும்போது நடந்த தவறுக்கு என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நிர்வாகக்குழு இருந்தாலும் தவறு நடக்கும்; தனி அதிகாரிகள் இருந்தாலும் தவறுகள் நடக்கும். தவறு நடக்காமல் இருக்க வேண்டுமென்றால் தவறு செய்யக்கூடாது என்ற மனோபாவம் வளரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரவலாகக் கூட்டுறவுச் சங்கங்களில் சில இடங்களில் இதுபோன்ற நடவடிக்கைகள் நாள்தோறும் வளர்ந்து வருவதைத் தடுப்பதற்கு அரசு ஏதேனும் சிறப்புக் குழுக்களை அமைத்து, அல்லது ஏதேனும் விழிப்புக் குழுக்களை அமைத்து திருட்டுத்தனத்தைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தவறு நடக்காமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். விழிப்புக் குழு அல்லது வேறு குழுக்கள் அமைக்கிற கருத்து அரசாங்கத்தில் இல்லை. அப்படி அமைப்பது சரியாக இருந்தால் அரசாங்கத்தில் அது குறித்து பரிசீலிக்கலாம்.

திரு. ம. ஆபிரகாம்: பேரவைத் தலைவர் அவர்களே, திரிசூலம் கிராமத்தில் அண்ணா அரிசனங்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் இருக்கிறது. அதிலே பல இலட்சம் ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்து அதாவது சட்ட விரோதமாக மருந்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது என்பது மட்டுமல்லாமல் வெடி குண்டுகளையும் தயார் செய்தார் அந்த கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்று புகார் கொடுத்தும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த நிர்வாகக் குழுவின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

**அரிச்சந்திரா நதியின் தென்கரையிலுள்ள சாலையை பேருந்து சாலையாக்குதல்.**

1 —

**வினா 133**—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் பொன்னிரை ரயில்வே கேட்டிலிருந்து ஆலிவலம், நந்தமான்குடி, ஆலத்தூர் வரையில் அரிச்சந்திரா நதி ஆற்றின் தென்கரையில் உள்ள சாலையை பேருந்து செல்லக்கூடிய சாலையாக அமைக்க தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத் தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

(அ) வினாவில் குறிப்பிடும் பணிபற்றிய தீர்மானம் ஏதும் தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திடம் இருந்து இதுவரை பெறப்படவில்லை.

(ஆ) எனினும் இப்பணியின் தன்மையை நோக்கின், அரிச்சந்திரா நதியின் உயரமான ஆற்றுக்கரையில் செல்லும் இச்சாலையை மண் வேலை செய்து அகலப்படுத்தி 3.75 மீட்டர் நீள தார்ச் சாலையாக அமைக்க சுமார் ரூ. 40·00 இலட்சம் தேவைப்படும். இச்சாலையில் பேருந்து போக்குவரத்து நடைபெறாததாலும், போதிய முக்கியத்துவம் இல்லாத காரணத்தாலும் இப்பணியை உடனடியாக மேற்கொள்ள இயலாது. எனினும் அரசின் நிதிநிலை, பணியின் முன்னுரிமை மற்றும் முக்கியத்துவத்தைப் பொறுத்து இனிவரும் ஆண்டுகளில் இது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும்.

**மதுரை பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடி.**

2—

**வினா 1197**—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பாண்டியன் சூப்பர் மார்க்கெட்டில் மருந்து விற்பனை பிரிவில் கையாடல் நடந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை—**

(அ) ஆம்.



(ஆ) மதுரை பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடியின் மருந்துப் பிரிவில் 1981 ஆம் ஆண்டில் ரூ· 5,11,563,48 சரக்கு இருப்புக் குறைவு கண்டுபிடிக்கப்பட்டது. சரக்கு இருப்புக் குறைவு சம்பந்தமாக நடந்த விசாரணை அறிக்கையின் பேரில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது 1985 ஜனவரியில் குற்றவியல் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

**கீவளூர் அரசு மருத்துவமனைக் கட்டிடம்.**

3—

**வினா 1458**—திரு·எம். செல்லமுத்து, திரு. கோ· வீரய்யன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீவளூர் ஊராட்சி ஒன்றியம்,கீவளூர் அரசு மருத்துவமனை கட்டிட வேலை எப்போது முடியும்?

(ஆ) அதன் மொத்தச் செலவு எவ்வளவு?

**விடை—**

(அ) கீவளூர் அரசு மருத்துவமனை கட்டிட வேலை பொதுப் பணித்துறையால் முழுமையாக முடிக்கப்பட்டு 6–3–1985-ல் இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு 19–4–1985-ல் திறக்கப்பட்டு அன்று முதல் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ· 1.56 இலட்சம் ஆகும்.

**வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல்.**

4—

**வினா 1549**—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி கிராமம், கருத்தலிங்கபுரம், அருணாசலபுரம், கோபால் சமுத்திரம், முனைசேகரன் குடியிருப்பு வார்டு எண் 12, மயிலப்பபுரம், வடமலைப்பட்டி மற்றும் நெல்லையப்பபுரம் ஆகிய பகுதிகளில் வாழும் பொது மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடையம் ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடாம்பட்டி கிராமம், நெல்லையப்பபுரத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி மற்றும் 29

நபர்கள் வீட்டு மனைப் பட்டா கேட்டு மனுக் கொடுத்துள்ளனர். மேற்படி மனுக்கள் மீது அம்பாசமுத்திரம் வட்ட ஆட்சியர் அறிக்கை அனுப்பி சேரன்மகாதேவி உதவி ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடவடிக்கையில் உள்ளது. கோபாலசமுத்திரம் கிராமம் நத்தம் சர்வே எண் 414—ல் திரு. நாராயணன் செட்டியார் மற்றும் 13 நபர்களுக்கு தலா 0·02 சென்ட் வீதம் வீட்டு மனைப் பட்டா அம்பாசமுத்திரம் வட்டம் வீட்டு மனை எண் 7/94, நாள் 30—5—1985-ன் படி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர மற்ற கிராமங்களான கருத்தலிங்கபுரம், அருணாசலபுரம், முனைசேகரன் குடியிருப்பு வார்டு எண் 12, மயிலப்பபுரம், வடமலைப்பட்டி ஆகிய பகுதிகளில் வாழும் பொது மக்களிடமிருந்து வீட்டு மனைப் பட்டா கேட்டு மனுக்கள் ஏதும் வரவில்லை.

### வலசுப்பட்டி—வல்லம்பட்டி பேருந்துப் பணி.

5—

வினா 1665—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், வலசுப்பட்டியிலிருந்து வல்லம்பட்டி வரை பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

திண்டுக்கல்லிலிருந்து குரும்பப்பட்டி வரை நகரப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. குரும்பப்பட்டியிலிருந்து வல்லம்பட்டி 0·8 கி·மீ· தூரத்தில் செங்குறிச்சி கணவாய்ப்பட்டி சாலையில் உள்ளது.

வல்லம்பட்டியிலிருந்து வலசுப்பட்டி செல்லும் ஒரு கி. மீ. நீள சாலை, பேருந்துகள் செல்ல இயலாத சாலையாக உள்ளது. எனவே வல்லம்பட்டியிலிருந்து வலசுப்பட்டி வரை தற்போது பேருந்து வசதி செய்ய இயலாது.

### குருவிக்கொண்டாம்பட்டியில் கிராம அங்காடி ஆரம்பிக்கும் திட்டம்.

6—

வினா 2150—திரு. த. புஷ்பராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா குருவிக்கொண்டாம்பட்டியில் கிராம அங்காடி ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

(அ) ஆம்.

(ஆ) குருவிகொண்டாம்பட்டி புதுக்கோட்டை மாவட்டம் ராங்கியம் வருவாய் கிராமத்தில் உள்ளது. ராங்கியத்தில் ஏற்கனவே 1,045 குடும்ப அட்டைகள் உள்ளன. ஒவ்வொரு வருவாய் கிராமத்துக்கும் ஒரு அங்காடி என்ற திட்டத்தின்படி ஒரு கிராம அங்காடி செயல்படுகிறது. ராங்கியம், குருவிக்கொண்டாம்பட்டி கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதால் குருவிக்கொண்டாம்பட்டியிலுள்ள 333 குடும்ப அட்டைகளுடன் குருவிகொண்டாம்பட்டியில் புதிதாக ஒரு நியாய விலை கடை திறப்பதற்கு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### பென்னாகரம் பேருந்து நிலையம்.

7—

வினா 2233—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் பேருந்து நிலையத்தை நவீன முறையில் மாற்றியமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) அங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மாநில ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 7—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சியில் ரூ. 20 லட்சத்தில் நவீன முறையில் பேருந்து நிலையம், கடைகள் கட்ட, நகர், ஊரமைப்புத் திட்டக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திட்டம் தயார் செய்ய, சேலம் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். கடைகள் கட்டும் இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லையென்றும் பேருந்து நிலையம் முன்புறம் நெடுஞ்சாலையை ஒட்டி ஆக்கிரமிப்புகள் உள்ளதென்றும், இவைகளை சர்வே செய்து பேரூராட்சிக்கு சேர்ந்த இடத்தின் அளவுகளை தெரிந்த பின்னர், மேற்படி பேருந்து நிலையத்திலிருந்து முன்புறம் நெடுஞ்சாலையை ஒட்டி உள்ள ஆக்கிரமிப்புகளை, உடனடியாக அகற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பென்னாகரம் வட்டாட்சியர் மற்றும் உதவி கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) ஆகியோரைப் பணித்துள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளாரென பேரூராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

[1986 ஏப்ரல் 3

தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கழிப்பிடங்கள் கட்டுதல்.

8—

வினா 2451—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் பொது மக்களுக்கான கழிப்பிடங்கள் கட்டித்தர அரசு கருத்து ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டில் மைய அரசு நிறுவியுள்ள தொழிற்சாலைகள்.

9—

வினா 2501—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1970 முதல் 1984 வரை மைய அரசு நிறுவிய தொழிற்சாலைகள் எத்தனை?

விடை—

தமிழ்நாட்டில் 1970 முதல் 1984 வரை மைய அரசு கீழ்க்கண்ட இரு தொழிற்சாலைகள் நிறுவியுள்ளது:—

| வருடம். (1) | தொழிற்சாலையின் பெயர். (2) | முதலீடு. (3) (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1977 | இரும்பு உருட்டாலை சேலம்.. | 167.00 |
| 1980 | பாரத கனரக மின் நிறுவனத்தின் கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை, இராணிப்பேட்டை .. .. | 32.80 |

மேலும், 1984-ல் ரூ. 70 கோடி மூலதனத்தில் திருச்சியில் கனரக உலோகக் கலவை ஊடுருவல் தொழிற்சாலை நிறுவ மைய அரசால் அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான நிலம் கையகப் படுத்தப்பட்டு வருகிறது.



1986 ஏப்ரல் 3]

மேற்படி 1985-ல் மைய அரசு கீழ் குறிப்பிட்டுள்ள இரு விரிவாக்கத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு நிறை வேற்றப்பட இருக்கின்றன:

| வருடம். (1) | தொழிற்சாலையின் பெயர். (2) | முதலீடு. (3) (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1985 | இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தின் காந்த நாடா தொழிற்சாலை, உதகமண்டலம்... | 10.00 |
| 1985 | பாரத மின்னணுவியல் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம், சென்னை... | 30.00 |

திருவில்லிப்புத்தூர் பேருந்து நிலையம்.

10—

வினா 2550—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் பேருந்து நிலையத்தில் மாடிக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருவில்லிப்புத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வும், அங்கு புதிதாக கடைகள் கட்டுவதற்குமான பிரேரணைகள் மாவட்டாட்சியருக்கும், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநருக்கும் திருவில்லிப்புத்தூர் நகராட்சி ஆணையரால் 21—6—1985-ல் அனுப்பப்பட்டுள்ளது. நகர் ஊர் அமைப்புத் துணை இயக்குநரும் அரசுக்கு பரிந்துரை செய்ய, குறிப்பிட்டுள்ள இடங்களை 25—8—1985-ல் நேரில் பார்வையிட்டுள்ளார்.

செம்பனார் கோவிலில் புதிய மகளிர் உயர்நிலைப் பள்ளி.

11—

வினா 2933—(பி) திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செம்பனார் கோவிலில் மகளிர் உயர்நிலைப்பள்ளி துவங்க இரு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பாடு செய்யப்பட்டு மக்கள் பங்குத் தொகை ரூ. 10,000மும் செலுத்தப்பட்ட திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளதா?

விடை—

1985-86 ஆம் கல்வியாண்டில் செம்பனார் கோவிலில் ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி துவக்கக் கோரும் திட்டம் எதுவும் பெறப்படவில்லை.

ஆற்றோரங்களில் காடு வளர்க்கும் திட்டம்.

12—

வினா 3036—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்றோரங்களில் காடு வளர்க்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1974-75 முதல் 1984-85 முடிய 10,143 எக்டேர் பரப்பில் ஆற்றோரங்களில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியம் கிராம பஞ்சாயத்துக்களிலுள்ள வானொலிப் பெட்டிகள்.

13—

வினா 3089—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியம் கிராம பஞ்சாயத்துக்களில் ரேடியோக்கள் சரிவர செயல்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) புதிதாக ரேடியோ வாங்கிக் கொடுக்க அரசு முடிவு எடுத்துள்ளதா?

விடை—

(அ) சமுதாய வானொலிப் பெட்டிகள் சரிவர இயங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, அவை ஏற்கெனவே நடைமுறையில் உள்ளன.

(ஆ) தற்போது 47,355 சமுதாய வானொலிப் பெட்டிகள் இயங்கி வருகின்றன. இவைகளில் பழுதடைந்த வானொலிப் பெட்டிகளுக்குப் பதிலாக புதிய வானொலிப் பெட்டிகள் நிறுவ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.



14—

1983—84 ஆம் ஆண்டில் நெல் கொள்முதல்.

வினா 3189—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1983-84 ஆம் ஆண்டில் தமிழகத்தில் நெல் கொள்முதல் எவ்வளவு? மாவட்ட வாரியாக?

விடை—

தமிழகத்தில் 1983-84 ஆம் ஆண்டில் மொத்தம் 11,15,130 டன்கள் நெல் அதாவது 7,35,986 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது.

மாவட்ட வாரியாக விவரம் கீழ்வருமாறு:—

| மாவட்டங்களின் பெயர், | வருடம் 1983, அரிசி டன்கள். | |
|---|---|---|
| | குருவை | சம்பா |
| தஞ்சாவூர் .. .. .. | 82,790 | 3,08,066 |
| தென்னாற்காடு .. .. .. | 2,377 | 1,05,277 |
| மதுரை .. .. .. | 1,608 | 3,539 |
| திருநெல்வேலி .. .. .. | 2,188 | 5,235 |
| புதுக்கோட்டை .. .. .. | 596 | 37,346 |
| தர்மபுரி .. .. .. | 33 | 120 |
| வடஆற்காடு .. .. .. | .. | 1,09,849 |
| சேலம் .. .. .. | 12 | 283 |
| கோயம்புத்தூர் .. .. .. | .. | 836 |
| பெரியார் .. .. .. | 30 | 3,370 |
| திருச்சிராப்பள்ளி.. .. .. | 6,085 | 22,324 |
| கன்னியாகுமரி .. .. .. | 2 | 25 |
| செங்கற்பட்டு .. .. .. | 43 | 31,912 |
| இராமநாதபுரம் .. .. | 78 | 11,957 |
| | 95,847 | 6,40,139 |

15—

[1986 ஏப்ரல் 3

வட ஆற்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்களின் கோரிக்கைகள்.

வினா 3216—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த 4-3-1985 அன்று வட ஆற்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் சார்பாக வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்ட 11 அம்சக் கோரிக்கை மனு மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

வட ஆற்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் சார்பாக அவ்வாறு மனு எதுவும் வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பெறப்படவில்லை.

16—

அரிகேசவநல்லூர் பகுதியில் கன்னடியான் கால்வாய் மீது பாலம்.

வினா 3287—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அம்பை தாலுக்கா, அரிகேசவநல்லூர் பகுதியில் அமைந்துள்ள கன்னடியான் கால்வாய் மீது பாலம் அமைக்கும் வேலை எப்பொழுது துவங்கும்?

விடை—

இத்திட்டம் குறித்து பாலம் அமைக்கும் வேலை எதுவும் இத்துறையில் இல்லை.

17—

ராச குற்றாலபேரியில் கன்னடியன் கால்வாய் பாலம் சீரமைப்புப் பணி.

வினா 3288—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அம்பை தாலுக்கா, அத்தாளநல்லூர் கிராமம் ராச குற்றாலபேரியில் கன்னடியன் கால்வாயில் குறுக்கே இருக்கும் பாலத்தின் சீரமைப்பு வேலை எப்போது துவங்கும்?

விடை—

இத்திட்டம் குறித்து சீரமைக்கும் வேலை பொதுப்பணித் துறையில் இல்லை.

18—

புத்தூர் கண்மாயில் நீர்த்தேக்கம் அமைத்தல்.

வினா 3303—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1986 ஏப்ரல் 3]

(அ) வேடசந்தூர் தொகுதி வடமதுரை பகுதியில் உள்ள புத்தூர் கண்மாயில் நீர்த்தேக்கமொன்று அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் பற்றிய சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. ஆய்வு செய்தபின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு அங்கீகாரத்திற்கு அனுப்பப்படும் என்று தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

19—

மாங்கோம்பை ஆற்றின் கரைகளை சீரமைக்கும் பணி.

வினா 3312—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், வடமதுரை ஒன்றியத்தில் ஆண்டு தோறும் உடைப்பு ஏற்படும் "மாங்கோம்பை" ஆற்றின் கரைகளை சீரமைக்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டும் பணி தொடங்குவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

(ஆ) அப்பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) மாங்கோம்பை ஆற்றின் கரைகளை சீரமைக்க 23 இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட வேண்டும். இதற்கு தோராயமாக ரூ. 34.20 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் பணி தொடங்கப்படவில்லை.

(ஆ) போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட உடன் பணி தொடங்கப்படும்.

20—

தமிழ்நாட்டிலுள்ள விதைப் பண்ணைகள்.

வினா 3503—திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விதைப்பண்ணைகள் எத்தனை?

(ஆ) சத்தியமங்கலம் தொகுதியில் புதிய விதைப்பண்ணை துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) அரசு நடத்தும் விதைப்பண்ணைகள் இலாபத்தில் இயங்குகிறதா?

விடை—

(அ) 47 அரசினர் விதைப்பண்ணைகள் உள்ளன.

(ஆ) சத்தியமங்கலத்தில் ஏற்கனவே அரசு விதைப் பண்ணை ஒன்று செயல்பட்டு வருகிறது. இது தவிர சத்தியமங்கலம் தொகுதியில் மேலும் ஒரு அரசு விதைப் பண்ணை பவானிசாகரில் செயல்பட்டு வருகிறது. ஒரு புதிய விதைப்பண்ணை சத்தியமங்கலம் தொகுதியில் துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) அரசு நடத்தும் விதைப் பண்ணைகள் ஒட்டு மொத்தத்தில் லாபகரமாக இயங்கி இருகின்றன. அவைகளில் 9 விதைப் பண்ணைகள் தவிர மற்ற அனைத்துப் பண்ணைகளும் 1983-84ல் லாபத்தில் இயங்கி ரூ. 17,40,883.40 லாபம் ஈட்டின.

21—

### செட்டிவயல் பாசன நிலங்களுக்கு பாசன வசதி.

வினா 3708—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஒன்றியம் கே. செட்டிப்பட்டியில் பாம்பாற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணைக்கட்டின் உயரத்தை அதிகப்படுத்தி செட்டிவயல் பாசனத்தில் உள்ள 100 ஏக்கர் நிலங்களுக்கு பாசனவசதி அளிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேற்படி அணைக்கட்டு கட்டும் பணியில் முக்கிய பணிகள் முடிவடைந்துவிட்டன. தற்போது இடது புறமுள்ள நேரடி பாசன பரப்பான 40 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாயவில்லை என்பதால் அதற்கான வழிவகை செய்யும் பொருட்டு மேற்படி அணைக்கட்டினை உயர்த்த புதிதாக மட்ட அளவு எடுத்து செயற்குறிப்பு பொதுப்பணித்துறையின் ஆய்வில் உள்ளது இதற்கான ஆய்வு வேலைகள் முடிந்து உரிய ஒப்புதல் பெற்றவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.



22—

### கூடலூர் ஆற்றில் பாலம் கட்டும் திட்டம்.

வினா 3712—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா மேலப்பனையூர் கூடலூர் சாலையில் கூடலூர் ஆற்றில் பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் பெருமாநாடு கொன்னையூர் சாலை கி.மீ. 16/0—ல் பிரிந்து கூடலூர் செல்லும் சாலையில் கி.மீ. 3/4-ல் கட்டப்படவேண்டும். இவ்விடத்தில் 100 மீட்டர் நீளத்திற்கு ஒரு தாம்போகி கட்ட வேண்டும். அதற்கு உத்தேசமாக ரூ. 15.00 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நிலை காரணமாக இப்பணி இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனினும் இனிவரும் ஆண்டுகளில் நிதி நிலை மற்றும் பணியின் முதன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 'இதர சாலைகள்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளுவது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்.

23—

### தமிழ்நாடு கூட்டுறவு நியாயவிலைக் கடை விற்பனையாளர்களின் கோரிக்கைகள்.

வினா 3723— திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் அரசிடம் சம்பள உயர்வு, பணி நிரந்தரம் உட்பட பல்வேறு கோரிக்கை கொண்ட மனுவைத் தந்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசின் முடிவு என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கிராம நியாய விலைக் கடை விற்பனையாளர்களின் ஊதியத்தை ரூ. 150 லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. வேலையை நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும், மாதா மாதம் சம்பளம் வழங்க வேண்டுமென்றும், மூட்டை சரக்குகளை எடையிட்டு வழங்க வேண்டுமென்றும்

கமிஷன், சேதாரம் வழங்கவேண்டுமென்றும், அனைவருக்கும் போனஸ் வழங்கவேண்டும் என்றும், விற்பனையாளர்கள் மீது அத்தியாவசிய கடும் சட்டங்கள் மூலம் வழக்கு போடுவதையும், பழிவாங்குவதையும், தடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ள கோரிக்கைகளின்மீது கூட்டுறவு சங்கப் பதிவாளரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

24—

**வீரசோழன் ஆற்று சாலையின் கரையைப் பலப்படுத்துதல்.**

வினா 3822—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடியில் இருந்து ஆடுதுறை வரை போக்குவரத்துச் சாலையாக உள்ள வீரசோழன் ஆற்றுக்கரையை சறுக்குச் சுவர் கட்டி, சாலையாக உள்ள கரையைப் பலப்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் வீரசோழன் ஆற்றுக்கரைக்குச் சறுக்குச் சுவர் கட்டி, சாலையாக உள்ள கரையைப் பலப்படுத்த வேண்டுமாயின் தற்போது 3.66 மீட்டர் அகலம் கொண்ட தார்ச் சாலையை 7.00 மீட்டர் அளவுக்கு அகலப்படுத்தி, 24 கி.மீ. நீளத்திற்கு சறுக்கைக் கட்டவேண்டும். இப்பணிகளுக்கு சுமார் ரூ. 147.00 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி பற்றாக்குறை காரணமாக இவ்வளவு பெரிய தொகையில் இதனை உடனடியாக மேற்கொள்ள இயலாது இருப்பினும் அரசின் நிதிவளம் இடம் தரும்பேது இப்பணியினை மேற்கொள்ளுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

25—

**மதுரை மாநகராட்சி சாலைகளை புதுப்பிக்கும் திட்டம்.**

வினா 3939—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சி சாலைகள் முழுவதும் புதுப்பிக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகள் அனைத்தும், தேவைக்கும், அவசியத்திற்கும் ஏற்ப அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது.



26—

**திருக்கோயிலூர் நகரத்தில் புதிய பேருந்து நிலையம்.**

வினா 4032—திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோயிலூர் நகரத்தில் புதிதாக ஒரு பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திருக்கோயிலூர் பேரூராட்சியில புதியதாக நவீன பேருந்து நிலையம் ரூ. 20 லட்சத்தில் அமைக்க நகர் வளர்ச்சித் திட்டக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

27—

**ஏலகிரி மலையில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம்.**

வினா 4055—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாவட்ட உலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அங்கு இளைஞர் விடுதி கட்டும் திட்டம் உள்ளது.

28—

**விக்கிரமசிங்கபுரம் ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸ் வழங்கும் செயற்குறிப்பு.**

வினா 4087—திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரத்திலுள்ள ஈ. எஸ். ஐ. மருத்துவமனைக்கென ஆம்புலன்ஸ் வழங்கும் செயற்குறிப்பு [illegible] உள்ளதா ?

விடை—

ஆம்.

29—

திருச்செந்தூர் பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டப் பணி.

வினா 4145—திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டப்பணி குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

திருச்செந்தூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 10 இலட்சம் கடன் வழங்க நகர் வளர்ச்சித் திட்டக்குழு அங்கீகாரம் வழங்கி, தொகை விடுவிக்கப்பட்டு, வேலை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. வேலைகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், வேலைகள் அனைத்தும் 31-3-1986-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

30—

பெருந்துறை தொகுதியிலுள்ள நியாய விலைக் கடைகள்.

வினா 4181—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறைத் தொகுதியில் எத்தனை நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன?

விடை—

பெருந்துறை தொகுதியில் 124 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன.

31—

பெருந்துறை தொகுதியிலுள்ள சத்துணவு மையங்கள்.

வினா 4182—டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதியில் எத்தனை சத்துணவு மையங்கள் உள்ளன?

(ஆ) எத்தனை இடங்களில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன?



விடை—

| | | |
|---|---|---|
| (அ) குழந்தைகள் நல நிலையங்கள் | .. .. | 106 |
| பள்ளிச் சத்துணவு நிலையங்கள் | .. .. | 168 |
| மொத்தம் | .. | 274 |

(ஆ) 37 குழந்தை நல மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு சொந்த கட்டிடங்களில் இயங்குகின்றன. மற்ற 37 மையங்கள் வாடகை கட்டிடங்களில் இயங்குகின்றன. மீதியுள்ள 32 மையங்கள் தாய்-சேய் நல விடுதி, ஊராட்சி கட்டிடம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. பள்ளி சத்துணவு மையங்கள் பள்ளிக் கட்டிடங்களில் இயங்குவதால் தனியே கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

32—

திருவொற்றியூர் தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் மாணவ-மாணவியர் இல்லங்கள்.

வினா 4205—திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கும் ஆதி திராவிட மாணவ மாணவியர் இல்லங்கள் எத்தனை?

விடை—

திருவொற்றியூர் தொகுதியில், ஆதி திராவிட நலத்துறையின் கீழ், 40 மாணவர்கள் கொண்ட, ஒரு ஆதி திராவிட மாணவர் விடுதி மட்டும் இயங்கி வருகிறது.

33—

மணலி, சின்ன சேக்காடு பேரூராட்சிகளை நகரியமாக்கும் திட்டம்.

வினா 4209—திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மணலி, சின்னசேக்காடு பேரூராட்சிகளை நகரியமாக்கும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

விடை—

ஊரக வளர்ச்சித் துறை 25-7-1985 தேதியிட்ட அரசு ஆணை நிலை எண். 587-ல் புழல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மணலி பேரூராட்சி, சின்ன சேக்காடு பேரூராட்சி, சடயன்குப்பம் ஊராட்சி, இளந்தன்சேரி உட்பட கடப்பாக்கம் ஊராட்சி ஆகியவை

உள்ளடக்கிய, மணலி நகரியம் ஏற்படுத்த ஆணையிடப்பட்டது. அரசு ஆணை எண் 682, ஊரக வளர்ச்சி, நாள் 4–9–1985-ல் இந்நகரியத்திற்கான அரசு அலுவல் சார்புள்ள உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையில், மணலி நகரியம் ஏற்படுத்தியதை எதிர்த்து ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு மேற்படி ரிட் மனு நீதிமன்றத்தால் தள்ளுபடியும் செய்யப் பட்டது. பின்னர், ரிட் அப்பீல் எண் 830 (W.A 830) ஒன்று உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்மீது உயர்நீதிமன்றம் மணலி நகரியம் ஏற்படுத்திய அரசு ஆணையினை நடைமுறைப்படுத்துவதை தடைசெய்து ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கூறிய ரிட் அப்பீல் தற்போது உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

34—

ரகுநாதபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம்.

வினா 4289—திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடித் தொகுதி, ரகுநாதபுரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் வணிகவியல், அறிவியல், வரலாறு போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆசிரியர்கள் நியமிக்கப் படுவார்கள்?

விடை—

(அ) இம்மேனிலைப் பள்ளியில் வணிகவியல், அறிவியல், வரலாறு போன்ற பாட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பணியில் இருக்கிறார்கள்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

35—

கோத்தகிரியில் புதிதாக கட்டப்படும் பேருந்து நிலையம்.

வினா 4477—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில்—புதிதாகக் கட்டப் படும் பேருந்து நிலையத்தின் மதிப்பீடு தொகை என்ன?

(ஆ) அப்பணி எப்போது முடிக்கப்படும்?



விடை—

(அ) கடைகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க மதிப்பீடு தொகை ரூ. 14.00 இலட்சமாகும்.

(ஆ) அனைத்துப் பணிகளும், 28–2–1986 ஆம் தேதிக்குள்ளாக முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

36—

எக்கோணி தட்டனேரி பகுதிகளுக்குப் புதிய பேருந்துப் பணி.

வினா 4482—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை வட்டம், எக்கோணி—தட்டனேரி ஆகிய பகுதிகளுக்குப் புதிய பேருந்து விடக்கோரி கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) எக்கோணி, தட்டனேரி பொதுமக்களிடமிருந்து பேருந்து வசதி கோரி வந்த மனுவின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக, சேரன் போக்குவரத்துக் கழகம் உதகை—தட்டனேரி (வழி), எக்கோணி வழித்தடத்தை ஆய்வு செய்த போது கீழே குறிப்பிட்ட குறைபாடுகளினால் அவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது என்பது தெரிய வந்துள்ளது.

எக்கோணி பிரிவு தட்டனேரி சாலை மண் சாலையாகவும், நன்கு செப்பனிடப்படாததாகவும் கப்பியிடப்படாததாகவும் உள்ளது. மேலும் இச்சாலை மிகுந்த ஏற்றம் நிறைந்ததாகவும் மரப்பாலங்கள் அமைந்ததாகவும் குறுகிய வளைவுகளைக் கொண்டதாகவும் உள்ளது.

மேற்சொன்ன குறைபாடுகளை நிவர்த்தி செய்த உடன் சேரன் போக்குவரத்துக் கழகம் எக்கோணி, தட்டனேரி ஆகிய பகுதிகளுக்கு பேருந்து வசதி செய்யும்.

37—

வடகாடு விவசாயிகள் சேவை கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டிட வசதி.

வினா 4603—திரு. த. புஷ்பராகு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

136465

[1986 ஏப்ரல் 3

(அ) புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு விவசாயிகள் சேவை கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

38—

வடலூர் சேஷசாயி மில் தொழிலாளர்களுக்கு ஈ. எஸ். ஐ. மருத்துவ மனை

வினா 4749—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வடலூர் சேஷசாயி மில் தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைக்கு புதிய கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

தென்னாற்காடு மாவட்டம், வடலூரில் சேஷசாயி மில் தொழிலாளர்களுக்கு என தனியாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் கட்டும் திட்டம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

39—

தெள்ளார் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

வினா 4855—திரு. இரா. அரிக்குமார்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பெரணமல்லூர் தொகுதி தெள்ளார் ஒன்றியத்தை இரண்டாக பிரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும்?

விடை—

(அ) பெரணமல்லூர் தொகுதி தெள்ளார் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பது பற்றி அரசிடம் திட்டம் வந்துள்ளது.



1986 ஏப்ரல் 3]

(ஆ) ஊராட்சித் தேர்தலுக்குப் பிறகு இது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

40—

திண்டுக்கல்லில் தானியங்கி போக்குவரத்து விளக்குமுறை.

வினா 4867—திரு ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகருக்கு 'தானியங்கி டிராபிக் விளக்குமுறை' (Automatic traffic Lights) ஏற்படுத்த அரசு திட்டம் உள்ளதா?

விடை—

திண்டுக்கல் நகரில் 'தானியங்கி போக்குவரத்து விளக்குமுறை' ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது காவல் துறையில் இல்லை.

41—

விருத்தாசலம் முன்சீப் கோர்ட்டுக்குப் புதிய கட்டிடம்.

வினா 4908—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் முன்சீப் கோர்ட்டுக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

விருத்தாசலம் முன்சீப் நீதிமன்றம் உள்பட விருத்தாசலத்திலுள்ள எல்லா நீதிமன்றங்களும் ஒரே கட்டிடத்தில் இயங்குவதற்கு புதியதாகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

42—

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்வு பெற்ற பயிற்சியாளர்கள்.

வினா 4951—திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மறு வாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் தொழிற் பயிற்சி நிலையங்களில் 1979-80, 1980-81, 1981-82, 1982-83 ஆண்டுகளில் படித்து முடித்து வெளிவந்துள்ள மொத்த பயிற்சியாளர்கள் எத்தனை பேர்?

[1986 ஏப்ரல் 3

(ஆ) அனைவருக்கும் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

விடை—

(அ) அரசின் தொழிற்பயிற்சி நிலையங்களில் படித்து முடித்து வெளிவந்துள்ள பயிற்சியாளர்களின் கல்வி ஆண்டு வாரியான விவரங்கள்:—

| | | |
|---|---|---|
| 1979–80 | .. | 7,139 |
| 1980–81 | .. | 6,843 |
| 1981–82 | .. | 6,729 |
| 1982–83 | .. | 7,043 |

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளவர்கள்:—

| ஆண்டு. (1) | நபர்கள். (2) |
|---|---|
| 1980 | 1,231 |
| 1981 | 1,111 |
| 1982 | 1,021 |
| 1983 | 1,166 |

பயிற்சி பெற்ற அனைவருக்குமே அரசு வேலை வாய்ப்பு அளிப்பது இயலாது.

43—

புதுக்கோட்டையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பணிமனை

வினா 5021—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் புதியதாக கட்டப்பட்டுள்ள மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

புதுக்கோட்டையில் பேருந்து நிலையத்திற்கு அருகில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை 21–8–1985 முதல் செயல்பட்டு வருகிறது.



1986 ஏப்ரல் 3]

44—

சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான நிரந்தர சிகிச்சை மையங்கள்.

வினா 5396—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளிக்க அமைக்கப்பட்டுள்ள நிரந்தர சிகிச்சை மையங்கள் எத்தனை?

விடை—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 19 புற நோயாளி மருந்தகங்கள் (Out-patient Dispensaries), தலைமையகம், பணிமனைகள், தொழிற்கூடங்கள் ஆகிய இடங்களில் பணியாளர்கள், மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் மருத்துவ வசதிக்காக செயலாற்றி வருகின்றன. இவற்றில் தண்டையார்பேட்டையிலுள்ள சிறிய தொழிற்கூடம் மற்றும் தண்டையார்பேட்டை இரண்டாவது பணிமனை ஆகிய இடங்களில் இடவசதிக் குறைவினால், மருந்தகங்கள் தனியாக செயல்பட முடியவில்லை. ஆகவே, மேற்படி தொழிற்கூடம் பணிமனை ஆகியவற்றைச் சார்ந்தவர்களுக்கு தண்டையார்பேட்டை 1 பணிமனையிலேயே மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

45—

தந்தங்கள் முளைக்காத ஆண் யானைகள்.

வினா 5634—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யானை இனத்தில் தந்தமே முளைக்காத ஆண் யானை இனம் உற்பத்தியாகி வருவது உண்மையா?

(ஆ) இது பற்றி அரசு ஆய்வு நடத்தியுள்ளதா?

(இ) ஆய்வின் விவரமென்ன?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ)—ஆசிய யானைகளில் ஆண் யானைகளுக்குப் பொதுவாக தந்தங்கள் உண்டு. ஆனால், சில ஆண் யானைகளுக்கு இயற்கையாகவே தந்தங்கள் இருப்பதில்லை. அத்தகைய யானைகள் ''மோழை'' அல்லது ''மக்னா'' என்று அழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் ''மோழை'' யானைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. இங்கு 5 முதல் 10 சதவீதம் ''மோழை'' யானைகள் இருக்கலாம் என மதிப்பிடப்படுகின்றது. தந்தமே முளைக்காத ஆண் யானை இனம் உற்பத்தியாகி வருவது என்பது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை; இது பற்றி அரசு ஆய்வு ஏதும் நடத்தவில்லை.

46—

சென்னை சட்டக்கல்லூரி மாணவர்களுக்குத் தனி விடுதி.

வினா 5706—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு தனியாக விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

47—

பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா 5758—திருமதி பா. வளாமதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சென்னையில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஆம். பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு "உங்களுக்கு ஒரு சொந்த வீடு என்ற திட்டத்தின்" (own your own housing Scheme) அடிப்படையில் வீடு கட்டுவதற்கான நிலங்களை விலைக்கு வாங்கி, அவற்றை வீடு கட்டுவதற்குத் தேவையானபடி அங்கீகரிக்கப்பட்ட மனைகளாக்கி வீடு கட்டி முடிக்கப்பட்ட பின்னர், பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

48—

திருப்பூர் பெண்கள் ஐ.டி.ஐ. பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா 5861—திரு. சு. சுப்பராயன் : மாண்புமிகு மறு வாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் பெண்கள் ஐ. டி. ஐ. பள்ளிக்கக் கட்டிடம் கட்ட இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

விடை—

இல்லை.



49—

மருங்காபுரி அருள்மிகு திருநீலியம்மன் ஆலயத் திருப்பணி.

வினா 5951—திரு. க. சோலைராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதியில் உள்ள அருள்மிகு திருநீலியம்மன் ஆலய திருப்பணிக்கு அரசு நிதி உதவி செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதியில் உள்ள அருள்மிகு நீலியம்மன் ஆலய திருப்பணிக்கு அரசு மான்யமாகவோ அல்லது ஆணையர் பொது நல நிதியிலிருந்தோ நிதி உதவி ஏதும் வழங்கப்படவில்லை.

50—

வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கும் உதவித்தொகை.

வினா 6156—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாநிலத்தில் வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) உதவித் தொகை உயர்த்தும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) வறுமையில் வாடும் தலைசிறந்த வயது முதிர்ந்த வீரர்/வீராங்கனைகளுக்கு ஒய்வு ஊதியமாக மாதம் ரூ. 75 (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்) வழங்கும் திட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

(இ) இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறிஇடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாநகராட்சிகளில் அளிக்கப்பட வேண்டிய மரியாதை வசதிகள் குறித்து.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த அவையின் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் சொன்ன சில தகவல்களின் பேரில் சில விளக்கங்களை நான் கூற விரும்புகிறேன். உள்ளாட்சிகளில் அதாவது நகராட்சி மன்றங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள உரிமைகளைப் பற்றி அவர்கள் விளக்கினார்கள். அதே போல் மாநகராட்சியைப் பொறுத்தவரையிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள உரிமைகளைப் பற்றி விளக்குவார்களா? மாநகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று அறை ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைமானியம் வரும்போது இதைப்பற்றி விவாதித்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பொறுத்தவரையில் நானும் பத்திரிக்கையில் பார்த்தேன். பொதுவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்றைக்கு எம்.எல்.ஏ. என்று ஆகிவிட்டமோ அன்றைக்கே அந்த உள்ளாட்சி நிறுவனங்களிடத்திலே சென்று உரிய உரிமைகளை எடுத்துக் கொள்ளலாம். It is an inherent power. The moment you are elected as M.L.A. you will be provided with a seat and provided with every thing அது பற்றிக் கேட்பது கூட ஏதோ சலுகை கேட்பது போல் இருக்கிறது. எனவே அவ்வாறு கேட்கவேண்டியதில்லை. உங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. எனவே அதிலே க்ளாரிஃபிக்கேஷன் கேட்க வேண்டிய அவசியமே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முனிசிப்பாலிட்டியாக இருந்தாலும் கார்ப்பரேஷனாக இருந்தாலும் நீங்கள் அரசாங்கத்தினுடைய அனுமதியோடு போய்த்தான் அறை கொடுங்கள் என்று கேட்க வேண்டியதில்லை. You will be provided with that, You will be accommodated.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினரோ, அல்லது நாடாளுமன்ற உறுப்பினரோ ஒரு இடத்திற்குச் சென்று இருக்கிற போது அவர்களுக்கு மரியாதை கொடுப்பார்கள். நாற்காலி கொடுத்து உட்கார சொல்வார்கள் என்பது வேறு. ஆனால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைச் சொல்லவில்லை, உள்ளாட்சி மன்றங்களுக்குச் சென்று எங்களுக்கு அறை ஒதுக்க வெண்டும் என்று உறுப்பினர்கள் கேட்பதைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். அப்படிக் கேட்கவேண்டிய அவசியமே இல்லை. அது அவர்களுடைய உரிமை என்பதைத்தான் நான் சொன்னேன்.



திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் மரியாதையைக் காப்பாற்றுவதைப் பொறுத்தவரையில் நான் வரவேற்கிறேன். ஆனால் தனி அறை வேண்டும் என்று எம்.எல்.ஏ. சொல்கிற போது தனி அறை கொடுக்கின்ற வகையில் உள்ளாட்சி மன்றங்களில் இடங்கள் இல்லை. பல இடங்களில் சரியான அறைகள் இல்லை. எனவே எம்.எல்.ஏக்கள் சென்று தனி அறை கொடுக்கவேண்டும் என்று கேட்பதில் ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஒரு வேளை தனி அறை என்பது எந்த மாதிரி கொடுப்பார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் தனி அறை கொடுக்கக்கூடிய அளவுக்கு பல இடங்களில் இல்லை. பஞ்சாயத்து தலைவர்களுக்கே போதிய இடம் இல்லை. ஆகவே பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலைமையில் வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் உரிமை கொண்டாடுவது என்பது பொருத்தமாக இருக்கலாம். ஒரு வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அங்கே இருக்கும் போது, சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே சென்று உரிமைகளைக் கோரினால், இரண்டு பேர்களுமே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில், அவர்களுடைய உரிமையில் இவர்கள் தலையிட நேரிட்டால் அதனால் சட்ட சிக்கல்கள் உருவாகும்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் பதில் சொல்லியபோது ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களிலும், உள்ளாட்சி கூட்டங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும்போது அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும், அந்த கூட்டத்தில் கலந்து பேச உரிமை வேண்டும், கூடும் இடமும் பெரிதாக வேண்டும் என்று சொன்னார்கள். அத்தோடு முன்பெல்லாம் தனி அறை கொடுக்கப்பட்டதே இப்போது இல்லையே என்று கேட்கிறார்கள். அது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது, ஒரு மீட்டிங் ஹாலையே தந்துவிடலாமா என்று கூட அரசு ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது. உள்ளாட்சி மன்ற மானியம் வரும்போது அதைப்பற்றி விளக்கிச் சொல்கிறேன் என்று சொன்னேன். இப்போதும் அதே முறையிலே கேட்கிறார்கள். தனி அறை வேண்டும் என்று. உள்ளாட்சி மன்ற மானியம் வரும்போது அதுபற்றி விளக்கமாக பதில் சொல்கிறேன், இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்தபிறகு சொல்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராசன் உட்கார வெண்டும். நான் சொன்ன அர்த்தம் வேறு. நேற்று பத்திரிக்கையில் படித்துப் பார்த்தபோது எனக்கு அப்படிப்பட்டது. அதனால் தான் எம்.எல்.ஏக்கள் போய்

கேட்கவே வேண்டாம். எம்.எல்.ஏ. என்று தெரிந்தாலே போதும் தேவையான உரிமைகளைக் கொடுத்து மரியாதை செலுத்து வார்கள் என்று சொன்னேன்.

(ஆ) அரசு விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப் பெறுவதும் அவர்கள் பெயர்கள் அழைப்பிதழில் அச்சடிக்கப்படுவதும் குறித்து.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினருடைய உரிமையைப் பாதுகாக்கின்ற விதத்திலே பேரவைத் தலைவர் அவர்கள், எந்த அரசு விழாவாக இருந்தாலும் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பெயரைப் போட வேண்டும் போட்டுத்தான் விழா நடத்தப்பட வேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவிடுகிறேன் என்று சொன்னார்கள். அது ''தினமலரிலே'' வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் கீழேயே அரசாங்கத்தினுடைய விளம்பரம் ஒன்று வந்திருக்கிறது. தமிழகத்தின் பால் வளத் துறையின் மூலமாக பால்வழங்கு நிலையங்கள் 9 இடங்களில் திறக்கப்படப்போவ தாகக் குறிப்பிட்டு, விழா நடத்தப்படுவதில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயரே இல்லை. அதிகாரிகள் தங்களுடைய ஆணையை மதிக்கிறார்களா இல்லையா? அல்லது பேரவைத் தலைவருக்கு உத்தரவிட உரிமை இல்லையா என்று அறிய விரும்புகிறேன். (கரவொலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே அதுபற்றி சொல்லியாகிவிட்டது. இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த தொகுதியில் விழா நடக்கும்போது அழைக்கப்பட வேண்டும். அவர்களுடைய பெயரும் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அப்படிப் போடாமல இருந்திருந்தால் அதிகாரிகள் தவறு செய்திருப்பார்கள். I am directing the Government to see that the members are invited for such functions in future (கூச்சல்) என்னால் ஆன அளவிற்கு இன்ஸ்டிரக்ஷன் கொடுத்து விட்டேன். உரிமைப் பிரச்னையாக கொண்டுவர விரும்பினால் கொண்டு வரலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளுடைய பெயர்களை, பதவிகளை விளக்கமாக, விவரமாகப் போட்டுக் கொள்கிறார்கள். வரிசையாக போடுகிறார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயரைப் போடுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குக் காரணம் நாம் தான். அதிகாரிகளைப் பற்றி நாம் இங்கே பேசுவதில்லை. நம்மைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நான் சில நாட்களாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும், இங்கே இருக்கிற



5,6 கட்சிகளைப் பற்றி மட்டும் தான் பேசிக் கொண்டிருக் கிறார்கள். அவர்களைப்பற்றியும் பேசினால், அவர்களுக்கும் உணர்வு ஏற்படும். இந்த விவகாரமும் நடக்காது. (குறுக்கீடு). பொதுவாக விதிக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே அதை அவையில் பிரச்னையாக கொண்டுவந்தால் நாம் மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற நிகழ்ச்சி இந்த மன்றத்தில் பலமுறை பல கட்சி உறுப்பினர்களும் எழுப்பிய சமயத்தில், அவை முன்னவர் அவர்கள் அப்படி மீண்டும் நடக்காது என்று உறுதி மொழிதந்து இருக்கிறார்கள். அவர் அளித்த உறுதி மொழி என்னவாயிற்று? அதற்கும் அஷ்யூரன்ஸ் கமிட்டியிலேதான் போய் கேட்க வேண்டுமா? இங்கே அவையிலே அவை முன்னவர் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை என்றால், மற்றவைகளை எப்படித்தான காப்பது? இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்னை எழாமல் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே இதுபற்றி சொல்லிவிட்டேன். இதுமாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று திரும்பவும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு நடத்துகிற விழாக்களுக்கு இந்த அரசின் சார்பிலே சம்பந்தப் பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களை அழைப்பது என்பதை இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே ஏற்படுகிற சிக்கல் என்னவென்றால் தனித்தனி நிறுவனங்கள் சில இருக்கின்றன. நாளைக்கு ஊராட்சி மன்றம் ஒரு நிகழ்ச்சி நடத்துகிறது என்றால் ஊராட்சி மன்றத்தை நாம் இன்னாரைத் தான் அழைக்க வேண்டுமென்று வற்புறுத்தப் போகிறோமா? அதேபோல ஆங்காங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் அவர்களாகப் பார்த்து யார் யாரை அழைக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களை அழைக்கிற உரிமை அவர்களுக்கு உண்டா, இல்லையா? சான்றாக, இப்போது நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்தில் ஒரு பிரிவை துவக்குவதற்கு மத்திய சர்க்கார் அமைச்சரை நிறுவனத்தார் அழைத்திருக் கிறார்கள். என்னையும் அழைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினரை இதுவரையில் அழைத்த தாகத் தெரியவில்லை. ஆகவே அத்தகைய தனித்தனி அமைப்புகள் அவர்கள் யார் யாரை அழைக்கிறார்களோ அது வேறு. அரசு அவர்களைப் போய் கட்டுப்படுத்த முடியுமா? அது அரசினுடைய அதிகார வரையறைக்கு உட்பட்டிருக்க வில்லை. ஆகவே அரசு நடத்துகிற விழாக்களில் அதாவது இந்தச் சட்டமன்றம் மானியத்தில் நிதியளித்து, அந்த நிதியை

வைத்து நிர்வகிக்கப்படுகிற துறைகள் நடத்துகிற விழாக்களில் ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை தான் அரசு அழைத்து நிகழ்ச்சிகளை நடத்த முடியுமே தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட தனித்தனி நிறுவனங்கள் அல்லது பொது நிறுவனங்கள் அவர்கள் காரியம் ஆற்றுகிறபோது அதை எப்படி நாம் அவர்களிடத்தில் வற்புறுத்துவது என்பது சிக்கல் தான். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எடுக்கப்பட்டது பால் வள நிறுவனம். இது நம்முடைய அரசு நிறுவனம். அதில் அப்படிப்பட்ட தவறு நடந்துவிட வேண்டாம்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது சில நிறுவனங்களை நாம் கட்டுப்படுத்த முடியாது என்ற முறையிலே அர்த்தம் வருகிற அளவில் சொன்னார்கள். இந்த நிறுவனங்கள் இந்த அரசுக்கு கட்டுப்பட்டதா அல்லது அவர்களுக்கு சுயாட்சி வழங்கி இந்த அரசுக்கே கட்டுப்படாத நிலையில் அவர்கள் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெய்வேலி நிறுவனம் இப்போது எந்த சுயாட்சியில் இயங்குகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்த ஸ்தாபனம் மரியாதை வழங்கத் தவறினாலும் அது தவறு தான் என்பதை கொஞ்சம் கூட தயக்கம் இல்லாமல் ஒப்புக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிந்த அந்த நியாயம் மத்திய சர்க்காருக்குத் தெரியவில்லை என்பது தான் எனக்கிருக்கிற மனக்குறை. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் எழுந்து பேச முயன்றால் என்ன செய்வது? (குறுக்கீடு). நான் அமைச்சர் அவர்கள் பேசும் போது கூட ஒன்றை கவனித்தேன். யூனியனைப் பற்றி பேசினார்கள். யூனியனில் எம்.எல்.ஏ.க்களை கூப்பிடாமல் இருக்க முடியாது. அவர்களைக் கூப்பிடுவது தான் முறையாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. நாம் அனைவரும் சேர்ந்து ஒரு சமாதானத்திற்கு வருவோம், பேரவைத் தலைவர் அவர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கிற வகையில் நான் சொல்கிறேன். தமிழ் நாட்டில் மத்திய அரசு மூலமாகவும், மத்திய அரசு நடத்துகிற பொதுத் துறை.



நிறுவனங்கள் மூலமாகவும், மாநில அரசு மூலமாகவும், மாநில அரசு நடத்துகிற பொதுத்துறை நிறுவனங்கள் மூலமாகவும், உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் மூலமாகவும் நிகழ்ச்சிகள் நடைபெறுகிற போது சம்பந்தப்பட்ட சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டும் என்பதைத் தான் தாங்கள் உத்தரவாக அளிக்கிறீர்கள். அப்படித்தான் நாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய உத்தரவு பொதுவானதுதான். (குறுக்கீடு) உத்தரவும் வருகிறது, உத்தரவாதமும் வருகிறது. அது மத்திய அரசு பொது நிறுவனமாக இருந்தாலும், இந்த மாநிலத்தில் உள்ள எந்த அரசு நிறுவனமாக இருந்தாலும் நிகழ்ச்சிகள் நடத்தினால் நம்முடைய உறுப்பினர்களை அழைக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. சோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் மூலமாக திறக்கப்படுகிற கட்டடங்களுக்கு, அந்த விழாக்களுக்கு அவர்கள் யாரையும் அழைப்பதில்லை. அதனையும் தங்களின் உத்தரவு கட்டுப்படுத்துமா?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஒரு மணி நேர விவாதம் வைத்துக்கொண்டால் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It is all giving and taking of respect. சாதாரணமாக நீதிமன்றத்தில் எப்படி நடக்கிறது என்றால், ஒரு நீதிபதி தலைமை வகிப்பார், மாண்புமிகு அமைச்சர் ஒருவர் திறப்பார். It is all done by adjustment. There is no hard and fast rule. It all depends upon the individual.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 2 லட்சம் மக்களுக்கு பிரதிநிதியாக அங்கம் வகிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 10 லட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாக அங்கம் வகிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இப்படிப்பட்ட அரசு நிகழ்ச்சிகளில் கொடுக்கப்பட வேண்டிய மரியாதையை அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஒரு உரிமை என்ற அளவில்தான் கேட்கிறோமே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், யூனியன் சேர்மன், முனிசிபல் சேர்மன் ஆகிய இவர்களுக்குள் ஒரு கோ-ஆர்டினேசன் இருந்தால், இப்படிப்பட்ட பிரச்சனைகள் வராது. சாதாரணமாக என்னுடைய தொகுதியில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் பஞ்சாயத்து பிரசிடென்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள்

வரையில் எல்லோரும் பங்கு பெறுகிறார்கள். எனவே இப்படி இருந்தால் நல்லது. (குறுக்கீடு). நான் தான் எல்லோருக்கும் உத்தரவாதம் கொடுத்து இருக்கிறேன். அதற்குப் பிறகு இம் மாதிரி நடக்காது. அப்படி நடந்தால் அதற்கு என்ன வழி என்பதைச் சொல்லுங்கள், அதை நான் கண்டிப்பாக அமல் படுத்துகிறேன்.

### 3. கவன ஈர்ப்புகள்.

#### (அ) திருச்சி அரசு பொது மருத்துவமனை அறுவைச் சிகிச்சைக் கூடம் மூடப்பட்டிருந்ததால் ஏற்பட்ட பாதிப்பு.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி அரசு பொது மருத்துவமனையிலுள்ள அறுவை சிகிச்சைக் கூடம் மூடிக்கிடப்பதன் காரணமாக அறுவை சிகிச்சை செய்ய இயலாமல் நோயாளிகள் படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருச்சி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் உள்ள பிரதான அறுவை சிகிச்சையரங்கில் அறுவை சிகிச்சை செய்யப் பட்ட நோயாளி ஒருவருக்கு ''இரண ஜன்னி'' உண்டானதால் 17-7-1985 அன்று தற்காலிகமாக மூடப்பட்டது. பின்னர், அவ்வறுவை அரங்கத்தில் ''ஸ்டெரிலைஸ்'' செய்து சுகாதாரக் கட்டுப்பாட்டு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு நோய்க்கிருமிகள் இல்லை எனப் பரிசோதனைக்குப்பின் முடிவு செய்து, 29-1-86 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. பிரதான அறுவை அரங்கம் மூடப்பட்டிருந்த இடைப்பட்ட காலத்தில் அவ்வறுவை அரங்கில் நடைபெற வேண்டிய அறுவை சிகிச்சைகள் நிறுத்தப் படவில்லை. அவைகள் இம் மருத்துவமனையில் உள்ள மற்ற அரங்குகளில் அதாவது விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைப் பிரிவிற்கான அறுவை சிகிச்சை அரங்கிலும், மகப்பேறு பிரிவிற்கான அறுவை சிகிச்சை அரங்கிலும் தடையின்றி மேற் கொள்ளப்பட்டது.

2. மேற்கூறிய காரணங்களால், திருச்சி மாவட்டத் தலைமை மருத்துவமனையிலுள்ள பிரதான அறுவை அரங்கம் மூடப் பட்டிருந்த காலத்திலும் அவ்வறுவை அரங்கத்தில் அறுவை சிகிச்சைப் பெற வேண்டிய நோயாளிகளுக்கு அம்மருத்துவமனை யிலுள்ள ஏனைய இரு அறுவை சிகிச்சை அரங்குகளில் உரிய நேரத்தில் அறுவை சிகிச்சையளிக்கப்பட்டதால் எந்த நோயாளி களுக்கும் எவ்வித இன்னலும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.



**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் திருச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள பிரதான அறுவை சிகிச்சை நிலையம் 17-7-1985 லிருந்து 29-1-1986 வரையில் மூடப்பட்டு இருந்ததாகச் சொல்கிறார் கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் இருக் கிறார்கள். அவர்களுக்கும் தெரியும். இந்த ஒரு தடவை மட்டும் அந்த பிரதான அறுவை சிகிச்சை நினலயம் மூடப்பட வில்லை. 4 முறைகள் மூடப்பட்டு இருக்கின்றது. அங்கே வேலை பார்க்கக்கூடிய ஊழியர்கள் அந்த அறுவை அரங்கத்தைப் பற்றி சரியாக ஸ்டடி செய்து, அங்கே நோய்க் கிருமிகள் இருக் கின்றனவா என்று சரியான முறையில் அதைப் பரிசோதனை செய்வது கிடையாது. எனவே தான் இந்த பிரதான அறுவைச் சிகிச்சை நிலையம் செயல்படவில்லை. என்று அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் சொல்லுகிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்களுடைய உயிருக்கு ஆபத்தாக இருக்கிற காரணத்தால், இந்த பிரதான அறுவைச் சிகிச்சை நிலையத்தை சரியான முறையில் பரிசோதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்த மருத்துமனையில் அதிக மாக இடம் இருக்கிற காரணத்தால் புதிய ஒரு பிரதான அறுவைச் சிகிச்சை நிலையம் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 17-7-1985 அன்று அங்கே டெட்டனஸ் நோய் கண்டுப்பிடிக்கப்பட்ட காரணத்தால், இந்த அறுவை அரங்கம் மூடப்பட்டது. அதற்குப் பிறகு மீண்டும் 29-1-1986 அன்று துவக்கப்பட்டது. அது மட்டுமில்லாமல், அங்கே இன்னும் இரண்டு அறுவை அரங்கங்கள் இருக்கின்றன. ஆகவே அந்த இடங்களிலே ஆப்பரேசன்கள் நடைபெற்றுக் கொண்டு இருக் கின்றன. சாதாரணமாக டெட்டனஸ் ஸ்வாப் டெஸ்டிங் அடிக்கடி செய்ததற்குப் பிறகு, அங்கே டெட்டனஸ் அறிகுறி இருக்குமானால், அந்த அறுவை அரங்கம் மூடப்படும். இதை மூடாமல் அறுவைச் சிகிச்சை செய்தால் ஆபத்து ஏற்படும். ஆகவே வாடிக்கையாக ஒவ்வொரு ஆப்பரேசன் தியேட்டருக்கும் நாம் இதைச் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. அந்த வகையில் மூடப்பட்டு, இப்போது அது நல்ல வகையில், டிஸ்-இன்பெக்ட் செய்யப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டு இருக்கிறது. இந்த அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையிலும், மற்ற இரண்டு அரங்கங்களில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த டெட்டனசை அறவே ஒழிப்பதற்கு ஏதேனும் பரிசோதனை செய்யப்பட்டு உள்ளதா? அது மட்டுமல்லாமல் திருச்சி நகரத்தில் மக்கள் அதிகமாக இருக்கக் கூடிய காரணத்தால் அந்தத் தலைமை மருத்துவமனைக்கு நோயாளிகள் வருகிற காரணத்தால் அதைப் பயன்படுத்தி, அங்கே மேல் பட்டப்படிப்பு சென்டர் அதாவது ஹவுஸ் சர்ஜன் சென்டர் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹவுஸ் சர்ஜன்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலே ஹவுஸ் சர்ஜன்கள் பயிற்சி பெற விரும்பினால் அதற்கு எல்லா வாய்ப்புகளும் கொடுக்கப்படுகின்றன. அந்த வகையிலே, திருச்சி மாவட்டத்திலே உள்ள மருத்துவமனை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

### (ஆ) குமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைகள் இயங்காததால் தொழிலாளர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன் மற்றும் வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''குமரி மாவட்டத்திலுள்ள நூற்றுக் கணக்கான முந்திரி ஆலைகளில் வேலை நடத்தாமையினால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

தமிழ்நாட்டில் தற்சமயம் சுமார் 177 முந்திரிப் பருப்பு தயாரிக்கும் ஆலைகள் இருக்கின்றன. இவைகளில் 81 ஆலைகள் மட்டுமே சிறு தொழிலாக தொழில் வணிக இயக்குநரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாலைகள் இறக்குமதி மூலமாக கிடைக்கும் கச்சா முந்திரியையும் தமிழகம், கேரளம், மற்றும் இதர மாநிலங்களில் பயிராகும் கச்சா முந்திரியையும் கொண்டு



வருடம் முழுவதும் இயங்கிக் கொண்டிருந்தன. கச்சா முந்திரி கிழக்கு ஆப்பிரிக்கா நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இது மட்டுமின்றி தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்தும், கச்சா முந்திரி சிறிய அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. 1984—85-ல் கச்சா முந்திரியின் மொத்த இறக்குமதி 33,215 டன்களாகும். இந்திய முந்திரி கார்ப்பரேஷன் மூலமாகத்தான் முந்திரி இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்பதாலும், கேரள மாநில அரசு அயல் மாநிலங்கள் முந்திரி வாங்குவதையும் விநியோகத்தையும் தடை செய்து இருப்பதாலும் தமிழகத்து முந்திரி ஆலைகளுக்கு விநியோகிக்கப்படும் கச்சா முந்திரி வரத்து தடைப்பட்டதால் தமிழகத்திலுள்ள பல முந்திரி ஆலைகள் இயங்கவில்லை. இதனால், ஏராளமான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் உள்ளனர்.

2. தமிழகத்தில் முந்திரி விளையும் நிலப்பரப்பு சுமார் 95,000 ஹெக்டர்கள், இதில் 23,000 ஹெக்டர் வனத்தோட்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது. 95,000 ஹெக்டேர் நிலத்தில் உற்பத்தியாகும் முந்திரியின் அளவு ஆண்டுக்கு 10,000 டன்கள் ஆகும். இதில் வனத்தோட்ட நிறுவனம் உற்பத்தி செய்வது 1,500 டன்கள். இது மொத்த உற்பத்தியில் 17 சதவீதம் ஆகும். இக்குறையைத் தவிர அண்மைக் காலங்களில் முந்திரி இறக்குமதி அளவும் குறைந்துள்ளது. மேற்கூறிய 177 ஆலைகளில் 150 ஆலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன. இவ்வாலைகளின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1,24,000 டன்கள். ஆனால் தமிழகத்தில் தயாராகும் முந்திரியின் அளவு 10,000 டன்கள் மட்டுமே, இறக்குமதி மூலம் கிடைப்பது 4,000 டன்கள். ஆக மொத்தம் 14,000 டன்கள் முந்திரி மட்டுமே கிடைக்கிறது. 1,10,000 டன்கள் ஒவ்வொரு ஆண்டும் மூலப் பொருள் கட்டுப்பாடு ஏற்படுகிறது.

3. இக்குறைபாடுகளை களையும் பொருட்டு மைய அரசு இம்மாநிலத்திற்கு இறக்குமதி செய்யும் முந்திரியின் ஒதுக்கீடு அளவை அதிகரிக்கவும், கேரள மாநிலம் விதித்துள்ள தடையை அகற்ற தக்க ஏற்பாடு செய்யுமாறும் கோருவதன் மூலம் தமிழக ஆலைகளுக்கு முந்திரி வரத்தை அதிகரிக்கும்படி தக்க நடவடிக்கை எடுக்குமாறு மைய அரசை இவ்வரசு வலியுறுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் அதிகமான முந்திரி ஆலைகள் உள்ளதால், எர்ணாகுளத்தில் அமைந்துள்ள இந்திய முந்திரி நிறுவனத்தில் தமிழ்நாட்டை ஒரு பிரதிநிதியாக சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் மைய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

4. இதற்கு மைய அரசு அதன் 14-3-1986 நாளிட்ட கடிதத்தில் கச்சா முந்திரி இறக்குமதி ''திறந்த பொது உரிமத்தின்'' (Open General Licence) கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால், உண்மையிலேயே, கச்சா முந்திரியை பயன்படுத்தும் இம்

மாநிலத்திலுள்ள முந்திரிப் பருப்பு தயாரிக்கும் ஆலைகளுக்கு கொள்கை அளவில் இடையூறு எதுவும் இல்லை என்றும், சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இறக்குமதி செய்யப்படும் கச்சா முந்திரி விநியோகத்தை சீர்படுத்தும் முகமையாக (Agency) இருந்து வந்த இந்திய முந்திரி கார்ப்பரேஷன் கச்சா முந்திரி இறக்குமதியில் அதிக கவனத்துடன் ஈடுபடவில்லை என்றும் இந்திய முந்திரி கார்ப்பரேஷனில் தமிழ்நாட்டை ஒரு பிரதிநிதியாக சேர்க்கும் கோரிக்கையை அதன் இயக்குநர் குழுமத்தை மாற்றியமைக்கும்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

5. கச்சா முந்திரி தற்சமயம் இந்திய முந்திரி கார்ப்பரேஷன் (Cashew Corporation Of India) என்னும் நிறுவனத்தினால் ''திறந்த பொது உரிமத்தின்'' (Open General Licence) மூலமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு முந்திரி தொழிற்சாலைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இது 1982–83 ஆம் ஆண்டிலிருந்து அமுலில் இருந்து வருகிறது. இந்த நடைமுறையினை பின்பற்றுவதால் முந்திரி தொழிற்சாலைகள் இறக்குமதி உரிமத்திற்கு மனு செய்த பிறகு நேரடியாக தருவிப்பதை தவிர்த்து இந்திய முந்திரி கார்ப்பரேஷன் (Cashew Corporation of India) மூலம் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் பயன் பெறுகின்றன. ஆனால், சில நெறிமுறைகளின் காரணமாக தமிழகத்திலே இருக்கின்ற முந்திரி தொழிற்சாலைகளுக்கு தங்களுக்குத் தேவையான அளவுக்கு இறக்குமதி கச்சா முந்திரி கிடைப்பதில்லை. இந்திய முந்திரி கார்ப்பரேஷன் இயக்குநர் குழுமம் எப்பொழுது மாற்றியமைக்கப்படும் என்ற விவரத்தை அந்நிறுவனத்திற்கு எழுதி விவரம் கிடைக்கப்பெற்றவுடன் தமிழ்நாட்டை ஒரு பிரதிநிதியாக இந்திய முந்திரி கார்ப்பரேஷனில் சேர்ப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

6. தற்சமயம் வனத்தோட்ட நிறுவனத்தின் கீழ் தென்னாற்காடு, திருச்சி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 23,985 ஹெக்டர் நிலப்பரப்பில் கச்சா முந்திரி பயிரிடப்படுகிறது. 7–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உலக வங்கி உதவியோடு இந்நிறுவனம் மிகப் பெரிய அளவிலேயே முந்திரி பயிரிட திட்டமிட்டு இருக்கின்றது. வனத்தோட்டத் துறை 7–வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் சுமார் 97 இலட்சம் ரூபாய் (தொண்ணூற்று ஏழு இலட்ச ரூபாய்) செலவில் சுமார் 6,000 ஹெக்டரில் தற்போது இருக்கின்ற பயிர்களுக்கு பதிலாக வீரிய வகை பயிர்களை நடவு செய்கின்ற பணியினை செய்து முடிக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது. இம்முயற்சிகளின் பயனாக வருகின்ற ஆண்டுகளிலேயே தமிழகத்தில் கச்சா முந்திரி உற்பத்தி கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே அதாவது மைய அரசு



14-3-86 அன்று ஒரு பதில் அனுப்பி இருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் ஓபன் ஜெனரல் லைசன்ஸ் கீழே உண்மையிலேயே கச்சா முந்திரியைப் பயன்படுத்தும் இம்மாநிலத்திலுள்ள முந்திரி பருப்பு தயாரிக்கும் ஆலைகளுக்கு கொள்கை அளவில் இடையூறு இல்லையென்றும் ஆனால் அதே நேரத்திலே ஐந்தாவது பேரகிராப்பிலே சிறு நெறிமுறையின் காரணமாக தமிழகத்திலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு, தங்களுக்குத் தேவையான அளவுக்கு இறக்குமதி கச்சா முந்திரி கிடைப்பதில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக ஏற்பட்டிருக்கிற பிரச்சனை என்று ஏற்கனவே இந்த அவையிலே எழுப்பப்பட்டிருக்கிறது. 13–3–85 அன்று இதே பிரச்சனை சம்பந்தமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு சென்ற இரண்டு ஆண்டுகளாக மூடிக்கிடக்கக்கூடிய இந்த ஆலைகளிலே, 150–க்கும் அதிகமான ஆலைகளிலே வேலை செய்த 75 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் இன்று பட்டினியால் வாடுகின்ற காரணத்தினாலே அவர்களுக்கு அன்எம்ப்ளாய்மெண்ட் ரிலீஃப் என்ற முறையில் ஏதாவது உதவி செய்வதற்கும் அல்லது இந்த ஆலைகளிலே வேலை செய்திருக்கிற தொழிலாளர்களுக்கு ஃபிரீ ரேசன் கொடுப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கப்பட்டது. அதற்கு அமைச்சர் அவர்கள், அதைப் பரிசீலனை செய்து நல்ல முடிவு எடுப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறதா? இல்லையென்றால் உடனடியாக அதைப் பரிசீலனை செய்து அன் எம்ப்ளாய்மெண்ட் ரிலீஃப் கொடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை அரசின் சார்பாக எடுக்கப்படுமா அல்லது இந்த ஆலைகளை அரசு ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 16–3–86-ல் மத்திய அரசினுடைய கடிதம் வரப்பெற்றிருக்கிறது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் விளக்கமாகவும், விரிவாகவும் இல்லை என்பதோடு வெறும் குழப்பமாகவும் இருக்கிறதென்ற காரணந்தால் மீண்டும் தமிழக அரசு பரிசீலனை செய்து சில தினங்களில் மீண்டும் அவர்களிடமிருந்து விளக்கம் கேட்க முனைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டிலே கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளைச் சொன்னார்கள். சென்ற ஆண்டு 15–3–85–லே இதே கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்போது மிகத் தெளிவாகச் சொன்னேன். இன்றைக்கு தமிழகத்திற்குத்தேவைப்படுகின்ற அளவு ஏறக்குறைய 177 ஆலைகளுக்குமாகச் சேர்த்து ஒரு லட்சத்து 24 ஆயிரம் டன்கள் ஆகும். ஆனால் அதிலே தமிழ்நாட்டிலே உற்பத்திச் செய்து 10 ஆயிரம் டன் இறக்குமதி செய்து கொண்டிருப்பது 4 ஆயிரம் டன். 14 ஆயிரம் டன் போக ஒரு லட்சத்து 10 ஆயிரம் டன் மேலும் நமக்குத்

தேவைப்படுகிறது. ஆனால் இறக்குமதி பூராவும் சேர்த்தாலும் கூட இந்தியாவின் இறக்குமதி 33,215 டன் தான். இதில் ஏராளமான அளவுக்கு நேரடியாக நிரம்ப ஆலைகள் இருக்கின்ற கேரளாவுக்கு அனுப்பப்படுகின்றது. அதன் காரணமாக மேலும் இறக்குமதி செய்து தரவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். தகுந்த ஏற்பாட்டை தொடர்ந்து அரசாங்கம் செய்து வருகிறது.

(முற்பகல் 10-50)

*திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள ஏறத்தாழ 75 ஆயிரம் முந்திரித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய ஒரு ஸ்கீம் தேவை. கேரளாவில் ஒரு முந்திரி கார்ப்பரேஷன் உண்டு. ஆகவே முந்திரி இறக்குமதியில் பெரும் பகுதி அவர்களுக்குக் கிடைக்கிறது கார்ப்பரேஷன் உண்டு என்ற காரணத்தால். தமிழகத்தில் அப்படி ஒரு வாரியத்தை அமைத்து தேவையான இறக்குமதியைச் செய்வதற்கு உண்டான நடவடிக்கையை அரசு எடுக்குமா? அதற்கு மத்திய அரசின் இணக்கத்தைப் பெறுவதற்கு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் முந்திரி கார்ப்பரேஷன் கேரளாவில் உள்ள எர்ணாகுளத்தில் தலைமை இடமாக வைத்து நடந்து வருகிறது. அதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்டால் அனைத்து முந்திரியும் அங்கே தான் கொண்டு செல்லப்படுகிறது. அதிலே ஓரளவுக்கு 4 ஆயிரம் டன் தான் நமக்கு வழங்குகிறார்கள். அதை கூடுதலாக வழங்க வேண்டும் என்பதற்காக வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். அது மட்டும் அல்ல, தமிழகத்தை ஒரு பிரதிநிதியாக அந்த கார்ப்பரேஷனில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நாம் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டு வருகிறோம். மத்திய அரசு அந்த கார்ப்பரேஷனுடைய பணிக் காலம் எந்த அளவுக்கு என்பதை தெரியப்படுத்தவும், அந்த புது நியமனக் குழுவை போடும்போது நம்மையும் அதில் ஒரு பிரதிநிதியாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அதற்கான ஏற்பாட்டை தொர்டர்ந்து செய்வதால் விரைவில் நல்ல பதில் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அது மட்டும் அல்ல, கேரள அரசுக்கு இங்கே இருக்கிற நிலைமையை சுட்டிக்காட்டி, இவ்வளவு பேர் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள், இத்தனை ஆலை மூடப்பட்டு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி ஓரளவுக்கு அங்கே இருக்கிற தடையை நீக்கி கேரளாவில் இருந்து முந்திரியை தமிழகத்திற்கு கொண்டுவர முயற்சியை மேற்கொண்டு வருகிறோம்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்பது கேரளாவில் மூடப்பட்ட ஆலைகள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. அமைச்சர் இப்படித் தான் பதில் சொல்லவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் எழுப்பிய கேள்வி பற்றி அரசு பரிசீலிக்கும்.

4. வரவு–செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 33–வீட்டுவசதி

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 33–வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 31, 91,74,000-க்கு மேற்படாத 'தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டி கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,91,74,000–ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,91,74,000–ல் ரூ.100 குறைக்கவேண்டும்''.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேத்துப்பட்டு குடிசைப் பகுதி, கல்யாண மேஸ்திரி தோட்டம் குடிசைப்பகுதி, வீட்டு வசதிக்கு சொந்தமான இடங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,91,74,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பில் கீழ் ரூ. 40, 02,82,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பெரு நகரங்களில் அனுமதி பெறாமல் வீடுகள் கட்டுவதை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 40,02,82,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை *நான் படித்ததாக குறிப்பேட்டில் ஏற்றிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களைச் சொல்லிய பிறகு என்னுடைய பதிலுரையை கடைசியிலே சொல்ல இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களை பேசுகின்ற வாய்ப்பினை தந்தமைக்காக உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன்றையதினம் ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள் சென்னை நகரில் வாழ்கின்றார்கள். அதைச் சுற்றியுள்ள நகர்களிலும் வாழ்கிறார்கள். ஏன் தமிழகம் முழுவதும் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வளமான, நிரந்தரமான வீடுகள், சிறப்பாக அமைவதற்கு, அந்த, சிறப்பான திட்டத்தினை உருவாக்குவதற்கு, ஒரு எழிலூட்டுகின்ற நகரை உருவாக்குகின்ற பெருமையை நம்முடைய மாண்புமிகு

---

*167-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



அமைச்சர் பெருந்தகை அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். அப்படி உருவாக்கி வருகின்ற அந்தப் பெருந்தகைக்கு என்னுடைய நன்றியை சிறப்பாக செலுத்திக் கொள்கிறேன். நாட்டிலே நடைபெறுகின்ற திட்டங்களைப் பற்றியும், நம்மையெல்லாம், நம்முடைய அரசையெல்லாம் பெருமைப்படுத்துகின்ற பத்திரிகையாளர்களுக்கு, பத்திரிகை நிருபர்களுக்கு எல்லாம் நிதியுதவியை வழங்கி, நல்ல வீடுகளைக் கட்டித் தருகின்ற வாய்ப்புகளை நடுவன் அரசைச் சார்ந்திருக்கின்ற, குறிப்பாக டில்லி மாநகரிலும், பம்பாயிலும், அஸ்ஸாமிலும், ஒரிஸ்ஸாவிலும், அண்டை மாநிலமான கேரளத்திலும் நல்ல விதமான வீடுகளைக் கட்டித் தருவது போன்று நம்முடைய தமிழக அரசும் செய்ய வேண்டும். ஏனென்றால் இந்த அரசு நிருபர்கள் மீதும், பத்திரிகை மீதும் மிகவும் கனிவான பாசத்தை வைத்திருக்கிறார்கள். சென்னை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கமும், நிருபர்கள் சங்கமும் சேர்ந்து சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்கின்ற முயற்சிகளைச் செய்து, ஒரு திட்டத்தினை தமிழக அரசிற்கு வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்காக நம்முடைய தமிழக அரசு, 5 செண்ட் என்ற அளவில் ஒரு கிரவுண்ட் 2400 சதுர அடி உள்ள இடத்தை அவர்களுக்கு ஒதுக்கி, நிதியுதவியை செய்து கொடுத்து, வீடுகளைக் கட்டிக் கொள்ள அனுமதி தரவேண்டும் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல் என்.ஜி.ஓக்கள் வீடுகட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் கட்டி வாழ்கின்ற வீடுகள், அந்தப் பகுதிகள் சிறப்பாக இருந்தாலும், சில பகுதிகள் எப்படியிருக்கின்றன என்பதை நம்முடைய அமைச்சர் பெருந்தகை அறிந்திருப்பார்கள். அவர்களுடைய ஊதியத்தின் ஒரு பகுதியை வீட்டு வாடகையாக செலுத்திவிடுகிறார்கள். அப்படி செலுத்தப்படுகின்ற வீட்டு வாடகைத் தொகையை அதிகரிக்காமல், ஒரு விலை நிர்ணயம் செய்யும்போது, மிகக் குறைவாகச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். என்.ஜி.ஓ. சார்பாகப் பேசுவதாக நீங்கள் நினைக்க வேண்டாம், அவர்களில் பெரும்பாலும் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, குறைந்த வாடகையை அடிப்படையாக வைத்து, ஒரு வீட்டினை உருவாக்கித் தர வேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் ஆண்டிற்கு 10 லட்சம் வீடுகள் கட்டப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். இது ஏழைஎளிய மக்களுக்கு எல்லாம் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒரு பெரிய பாராட்டினைத் தந்தாலும், அந்த வீடுகளைக் கட்டுவதற்காக இங்கே நிதியாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையான ரூ. 26 கோடி போதுமா என்பதை அனுபவப் பூர்வமாக, பட்டறிந்த உண்மையாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் வள்ளுவக் கோட்ட விழாவில் பேசுகிறபோது 10 லட்சம் வீடுகள் கட்ட கிட்டதட்ட 18 ஆயிரம் கோடி தேவைப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது இந்த நிலையிலே ரூ. 26 கோடியிருந்தாலும், இந்த முயற்சி சிறப்புடைய முயற்சி. அந்த முயற்சி வெற்றிகரமாக பீடு நடை போடு மானால், மிகப் பெரிய எழுச்சியாக இருக்கக்கூடிய சிறப்பினைப் பெற முடியும்.

மாண்புமிகு மரியாதைக்குரிய அருமைத் தலைவி இந்திரா காந்தி அவர்களின் பெயரால், கிட்ட தட்ட 2 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு நடுவன் அரசினுடைய, இந்தியப் பேரரசினுடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கூட, இந்த நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். இந்தத் திட்டத்தின் அடிப் படையிலே, இந்தத் திட்டம் மேலும் மேலும் வளர, வளர்ச்சி பெற அமைச்சர் பெருந்தகை ஊக்கமாக செயல்படுவார்கள் என்று நம்பி, மேலும் குடிசைப் பகுதிகள் மாற்று வாரியத்தில் கட்டப்படுகின்ற அந்த வீடுகள் எல்லாம் எப்படிக் கிடக்கின்றன என்று எண்ணிப்பார்க்கின்றபோது, அங்கேயுள்ள பால்கனிகள் உடைந்து கீழே விழுந்து கிடக்கின்றன. சிமெண்டு கட்டிடங்கள் உடைந்து கீழே விழுகின்றன. பல இடங்களில் கதவுகள் கூட இல்லை. சில இடங்களில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. 2 வீதிகளுக்கு அப்பால் 3 வீதிகளுக்கு அப்பால் போடப்பட்டுள்ள குழாய்களிலிருந்து தண்ணீர் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தக் குழாய் களின் மூலமாக உடனடியாக தண்ணீரைப் பெற முடியாத சூழ் நிலையில், அடிதடி சண்டைகள் ஏற்படுகின்றன. ஆகவே நம்முடைய அமைச்சர் பெருந்தகை குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்படுகின்ற இல்லங்களில் தனியாக் கழிவறைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். குளியலறை தனியாக இருக்கிறது. எனவே, தனியாகக் குழாய்களையும் அமைத்துத் தந்தால் ஏழை மக்கள் சிறப்பாகக் குளித்து, குடித்து செம்மையாக இருக்க முடியும்.

(முற்பகல் 11-00)

இடிபாடுகள் ஏற்பட்டுள்ள கட்டிடங்களைச் செம்மைப்படுத்த வேண்டும். என்னுடைய நண்பர் சொன்ன செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். திரு. தி. சு. கிள்ளிவளவன் அவர்களை நீங்க ளெல்லாம் அறிந்திருப்பீர்கள்; பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நெருங்கிய நண்பர். அவர்களுடைய மனைவியார் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு பட்டினப்பாக்கம் இல்லத்தில் இருந்தபொழுது அவர்களுடைய தலையிலே, ஒரு பகுதி விழுந்து அவரும், அவருடைய குழந்தையும் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். நான் இதைக் குறை சொல்ல வேண்டு மென்பதற்காகச் சொல்லவில்லை. நான் கேட்டுக்கொள்வ



தெல்லாம் அங்கே கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் விரிசல்கள் ஏதேனும் ஏற்பட்டால் அதை கவனிக்க வேண்டும். இதுபற்றி அவர்கள் உடனடியாகத் தெரிவித்திருக்கிறார்கள். பலமுறை தெரிவித்தும்கூட நம்முடைய அதிகார வர்க்கத்திலே இருக்கின்ற பெருந்தகையாளர்கள் கருணை காட்டும் போக்கில் இல்லை. ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று பலமுறை கேட்டும் அது பயனுடையதாக இல்லை. எனவே குறிப்பிட்ட குறைபாடுகள் பற்றி தகவல் வந்தால், அது சுட்டிக்காட்டப்பட்டால் அதிகாரிகள் உடனடியாகச் செயல்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இவைகளைச் சொல்கிறேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகளில் வெள்ளை அடிக்கின்ற நிலைமை இல்லை. பல்வேறு நகரங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளில் இப்படிப்பட்ட சீரழிந்து கிடக்கின்ற நிலையைப் போக்கி, அந்த மக்களுக்கு நலமான வாழ்வை உருவாக்க வேண்டுமென்று மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகளில் இருக்கின்ற சில அப்பாவி மக்கள் தங்கள் வீடுகளை இரண்டாயிரம், மூன்றாயிரம் ரூபாய்க்கு மற்றவர்களிடம் விற்று விட்டுச் சென்று விடுகிறார்கள். இது மிகப் பெரிய தவறுதான். இருந்தாலும் அதை வாங்கிய அப்பாவி மக்கள், ஏமாளிகளாக இருந்து விட்டால், அவர்கள் அதிகாரிகளிடம் போகிறார்கள். இப்படி அந்த வீட்டை வாங்கி விட்டோம் என்று அதிகாரிகளிடம் அந்த நபர் சொல்கிறார். குடிசை மாற்று வாரிய அதிகாரிகள், இப்படி வீட்டை வாங்கியது முறை அல்ல, சரி அல்ல என்று சொல்கிறார்கள். அங்கே கையூட்டு ஊட்டுகின்ற அளவிற்கு ஒரு சிந்தனை, ஒரு உணர்வு ஏற்படுகிறது, இப்படிப்பட்ட ஒரு தவறான உணர்வு ஏற்படு கிறது. இந்த நிலைமை களையப்பட வேண்டும். அந்த நபர் அறியாமல் வாங்கி விட்டாலும்கூட, ஓரளவிற்குச் சிறு தண்டனையை மட்டும் கொடுத்து அந்த வீட்டை அவர்களுக்கே தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எப்படியும் யாராவது ஒருவருக்கு அந்த வீட்டைத் தந்துதான் ஆகவேண்டும், அந்த ஒருவர் இந்த ஏழையாக இருக்கக்கூடாதா? எனவே, அந்த வீட்டை அந்த ஏழைக்குத் தந்தால் குடி முழுகிப் போய்விடாது. எனவே, அந்த வழி முறைகளைப் பற்றி சீரிய முறையிலே சிந்திக்க வேண்டுமென்று அமைச்சர் பெருந்தகை அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் குறிப்பிட்ட படிவங்களில், வீடுகளைப் பெறுகின்ற வர்களின் போட்டோக்கள் ஒட்டப்பட வேண்டுமென்ற சீரிய திட்டத்தினை அமைச்சர் பெருந்தகை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அது பாராட்டத்தக்க திட்டம்தான். ஆனால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் போட்டோவினை

எங்கேயாவது விட்டு விட்டால், நீங்கள் அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்தானா என்ற வினாவினைத் தொடுத்து, அவர் மீது பாய்ந்து, அந்த உரிமையைப் பெறுகின்ற அந்தத் தகுதியை அவர் பெற்றிருந்தாலும் சில நேரங்களில் நீதி வழங்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, ரேஷன் கார்டு—உணவு அட்டை வைத்திருந்தால் நம்முடைய இந்தியப் பேரரசின் சார்பில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்கூடக் கடன் உதவி அளிக்கின்றன. அப்படிப்பட்ட சீரிய திட்டத்தினை அன்னை இந்திரா காந்தி அவர்கள் உருவாக்கிச் சென்றிருக்கிறார்கள். அதைப்போல நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற இந்தச் சீரிய திட்டத்தைப் பொறுத்தவரையிலேயும்கூட, ரேஷன் அட்டை வைத்திருந்தால், அவர்கள் யார் என்று தெரிந்து அவர்களுக்கு வீட்டினை வழங்குவதற்கான வாய்ப்பினை மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். நாங்கள்கூட சான்றளித்தால்' உண்மையிலேயே இவர் ஏழைதான், இவருக்கு வீடு வழங்க வேண்டுமென்று நாங்கள் குறிப்பிட்டால் அதையும் நீங்கள் பரிந்துரையாக ஏற்று செயல்படலாம். அப்படிப்பட்ட சிறந்த வாய்ப்பினை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு வாடகை வசூல் செய்து அதன்மூலமாக அந்த வீடுகளை அவர்களுக்கே உரிமையாக்குகின்ற சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறார்கள். இதுவொரு சிறப்பான திட்டம். ஆனால் அந்தத் திட்டத்தைப்பற்றி நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மொத்த தொகைக்கும் ஒரு காம்பவுண்ட இன்டரஸ்டைப் போடுவதாகச் சொல்கிறார்கள். அந்த காம்பவுண்ட் இன்டரஸ்டை அதிகமாகப் போடாமல் அந்த ஏழை மக்களுக்கு அந்த வட்டியைத் தள்ளுபடி செய்து சிறப்பான முறையில் அந்த வீட்டை உரிமையாக்குகின்ற திட்டத்தை வழங்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு எம்.ஐ.ஜி.என்று மிடில் இன்கம் குரூப் என்று கட்டப்பட்ட வீடுகள்தான் தற்பொழுது எச்.ஐ.ஜி. என்று கட்டியிருக்கிறார்கள் என்று பல நண்பர்கள், அறிஞர் பெருமக்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பழைய எல்.ஐ.ஜி. என்பதுதான் இப்பொழுது எம்.ஐ.ஜி. என்று மாற்றப்பட்டிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இது ஏன் என்பதை மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் மிகச் சிறப்பான முறையில் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கேட்டுக்கொள்வது, அந்தக் கட்டிடத்தின் விரிவாக்கத்தை அதிகமாக ஆக்க வேண்டும்.



அடுத்து, வீடுகள் கட்டுகின்றபொழுது ஏதோ, ஏழை மக்கள் தானே என்று புறா கூண்டுகளாகக் கட்டிவிட்டு, அருமை மழலை செல்வங்கள் அங்குமிங்கும் பாடி, அழகு தமிழிலே அன்னையை அழைக்கின்ற நிலையை அந்தப் பிஞ்சு உள்ளங்களிலே, ஓட விடுகின்ற சூழ்நிலை இல்லாமல் அரண்மனைத்தான் கட்டித் தர வேண்டுமா என்று அமைச்சர் அவர்கள் எண்ண வேண்டாம் கட்டுகின்ற அளவைச் சற்றுப் பெரிதாக்கி, அப்படிப் பெரிதாக்கப்படுகின்ற அந்த வளமான வீடுகளிலே, மழலைச் செல்வங்கள் மணம் வீசுகின்ற தமிழைப் பேசுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும் அப்படி உருவாக்குகின்ற உணர்வுக்கு நமது அமைச்சர் பெருமகன் எண்ணுவார்கள்; காரணம் நிதிப் பற்றாக்குறை, என்ன செய்வது? இருந்தாலும் கட்டுகின்ற வீட்டை, நல்ல தின்மையோடு, வலிமையோடு, நல்ல எழிலோடு, கட்டி, அந்த ஏழை மக்கள், இதயத்தை எப்பொழுதும் பாச உணர்வோடு, கருணை உணர்வோடு, உள்ளத்தோடு அணுக வேண்டுமென்று, கேட்டு, அந்த வீடுகளை செம்மையாக, வளம் பொருந்திய வீடுகளாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகருக்குப் பக்கத்திலே ஏராளமான நிலங்கள் உள்ளன. இன்று, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழு எல்லைக்குள் ஏராளமான இடங்கள் இருக்கின்றன. அவற்றின் ஏரிப் புறம்போக்கு, களர் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு இவை அத்தனையும் தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, பல்வேறு பிளாட் போட்டு விற்று விடுகிறார்கள். அவர்கள் ஒரு நகரையே அமைத்து விடுகிறார்கள். ஒரு மிகப்பெரிய பெருமகனுடைய பெயரை வைத்துவிட்டு, ஆட்சிக் கட்சியின் பெயரையோ, அல்லது நடுவன் ஆட்சிக் கட்சியினுடைய பெயரையோ வைத்து, பிளாட் போட்டு, இடையில் கொள்ளை இலாபம் அடிக்கிறார்களே, அது நம்முடைய சென்னைப் பெருநகர்த் திட்டத்தினுடைய அதிகாரப் பெருமக்களுக்குத் தெரியவில்லையா? அப்படிப்பட்ட இடங்கள் எங்கே இருக்கின்றன என்று முன்பே ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே அந்த அதிகாரிகள் அங்கே சென்று, அந்த இடத்தை ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது? அப்படி எடுத்துக் கொண்டு, இந்த இடம் எம்.எம்.டி.ஏ. வைச் சேர்ந்தது, இந்த இடம், ஹவுசிங் போர்டை சேர்ந்தது, இந்த இடம் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தது, என்ற உணர்வோடு அங்கே ஒரு கரும்பலகையை வைத்து விடுவார்களானால், அங்கே ஆக்கிரமிக்கின்ற ஆட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அது அரசுக்குச் சொந்தமானது என்று அல்லலுறுகின்ற நிலை ஏற்படும். ஆகவே, அந்த உணர்வை உண்டாக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலிருக்கிற அதிகாரப் பெருமக்கள் ஒரு நல்ல உணர்வோடு செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஹவுசிங் போர்டுக்குச் சொந்தமான இடம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, சென்னைப்

பெருநகர் திட்டத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஸ்ரீபெரும்புதூர் தொகுதியைச் சேர்ந்த, குன்றத்தூர், நடுவாரப்பட்டி ஆகிய பெரும் பகுதிகளிலே இருக்கின்ற அந்த இடங்களைத் தனியார்கள் ஆக்கிரமித்துக் கொண்டு, பிளாட் போட்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமோ, தெரியாதோ? ஆனால், அப்படி நடந்திருக்கிறது. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்.

நம்முடைய அரசினுடைய திட்டம் குடிசைகள் வராமல் இருக்க வேண்டுமென்பதுதான். ஆயிரம் குடிசைகளை மாற்றி, அழகான ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருகிறோம். கட்டித் தருகின்ற வீடுகளில் ஏழைகள் உள்ளே நுழைந்த பிறகு, மீண்டும், ஆயிரம் குடிசைகள் தோன்றுகின்றனவே, அதற்குக் காரணம் யார்? எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஏன், என்னுடைய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அது தவறு? குடிசைகளை ஒழிக்க வேணடுமென்ற அரிய திட்டத்தின்கீழ் குடிசைகள் ஒழிக்கப்படவில்லை. பல்வேறு குடிசைகள் முளைக்கின்றன. முளைக்கின்ற காரணத்தை அறிய வேண்டும். இங்கே குடிசைகள் ஒழிய வேண்டுமென்பதிலே நான் ஆதங்கப்படவில்லை, ஆவேசப்படவும் இல்லை. அழகு நகர் சென்னை செம்மையாக்கப்படுகிறது, நலம் பெறுகிறது, எழில் பெறுகிறது என்பது உண்மை. ஆனால், அந்தக் குடிசைகள் உண்டாக்குகின்ற உணர்வை நாம் பார்க்க வேண்டும். அந்த உணர்வுக்குக் காரணமாக சிந்தனையை, பல்வேறு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் குடிசைகள் ஒழிந்து, செம்மையான நிலை பெறவேண்டும் குடில்கள் உயர்வோடு இருக்கவேண்டுமென்பதை இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய குடிசை மாற்று வாரியத்தினுடைய உணர்வுகள் மூலமாக. நம்முடைய தமிழக அரசு, வீடு கட்ட முன்பணம் குடும்ப நல நிதியிலிருந்து முன்பெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். பெற்றவர் இடையிலே இயற்கை எய்திவிட்டால், அந்த நிதியைத் தள்ளுபடி செய்கிற சீரிய திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வருகிறது. அதை நான் உளமார, மனமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு, அந்த உணர்வினுடைய செயலை மிகவும் சிறப்பாகச் செய்தாலும், நம்முடைய உடனடி பிரச்னை தவணை முறை கொடுப்பது போன்றவற்றில் கோளாறுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் கோளாறுகள் களைந்தெறியப்பட வேண்டும். யார் முன்னால் தருகின்றார்களோ அவர்களுக்கு முன்னுரிமை தந்து, அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் நண்பர்களாக இருந்தாலும் சரி, எதிரியாக இருந்தாலும் சரி, கவன உணர்வோடு, நடுநிலை தவறாத உணர்வோடு, வீடு கொடுப்பதில் முன்னுரிமை தருகின்ற நிலையை உருவாக்கித்தரவேண்டுமென்று கேட்டு...... (குறுக்கீடு)



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறு செய்தால் சுட்டிக் காட்டுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்வார்கள் என்பதை நான் அறிவேன். தவறுகளைச் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும். இருந்தாலும் இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.10)

பத்து இலட்சம் வீடுகளைக் கட்டித் தருகின்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நல்ல திட்டம்; வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றி சிறப்பு செய்யவிருக்கிறார்கள். இருந்தாலும் இது போதாது, ஏனென்றால் தமிழக மக்கள் வீட்டுத் தேவையில் யானைப் பசியாக இருக்கிறார்கள். ''யானைப் பசிக்கு சோளப் பொரி போடுவது'' போல இந்த அறிவிப்பு இருக்கிறது. யானைப்பசி போன்று ஆவேசம் கொண்டிருக்கிற ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும், அந்த வளத்தை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எறும்புகள் கூட நல்லமுறையில் வளை அமைத்து வசிக்கின்றன. பறவைகள் அழகாக கூடு கட்டி வசிக்கின்றன, விலங்குகள் கூட அழகான கிடங்குகள் கட்டி வாழ்கின்றன. அதே நேரத்தில் மனிதன் மட்டும் வீடு கட்டி வாழ வழியில்லை: அல்லல்பட்டு அலைகிறான். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் வறுமைத் துன்பத்திலே உழன்றுகொண்டிருக்கிறார்கள். வீடுகள் இல்லாமல் திறந்த வெளியிலே வாழ்கிறார்கள். வானத்தையே பார்த்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இத்தகைய மக்களுடைய துயரத்தைப் போக்க இப்படிப்பட்ட திட்டங்களை மேலும் மேலும் கூட்டுங்கள், கொட்டுங்கள், கொட்டிக் குவியுங்கள்.

பத்து இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு நிதிப்பற்றாக்குறை இடையிலே ஏற்படலாம். இந்த நிதிப்பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நடுவண் அரசிடம் பொறுமையோடு கேட்க முன்வந்தால் நாங்களும் உங்களோடு சேர்ந்து முயற்சி செய்கிறோம். அந்த வாய்ப்பினைப் பெற்றிருக்கிற இந்த வாரியத்தின் பொறுப்பிலே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் தகுந்த வாய்ப்பினை ஏற்படுத்தி, சிறப்பாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். தமிழகத்தில் 43 நகரங்களை உருவாக்கியிருக்கின்றீர்கள். திருவொற்றியூர் பகுதி மீனவர்கள் நிறைந்திருக்கிற ஒரு அழகான பகுதி. குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஏற்கெனவே வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கென்று மீனவர்கள் வாரியம்

இருக்கிறதே, அங்கே ஏன் போகக்கூடாது என்று சொல்லலாம். இருந்தாலும் நீங்கள் உரிய முயற்சி செய்ய வேண்டும். கடற்கரையில் அரிப்பு ஏற்படுகிறது. வங்கக்கடல் தாய் சுரண்டல் செய்துகொண்டிருக்கிறாள், ஏற்கெனவே கபளீகரம் செய்து விட்டாள். அந்த மக்களுக்கு நீங்கள் நிறைய வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று புழல் ஒன்றிய பகுதி இருக்கிறது. ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டு, ஹவுசிங் போர்டு, எம்,எம்.டி.ஏ. போன்ற அமைப்புகள் மூலம் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் இருந்தாலும் என்னுடைய திருவெற்றியூர் பகுதி புகழ்வாய்ந்த தொகுதி. நமக்கு வெற்றி தருகிற பகுதி. பட்டினத்தார் வாழ்ந்த பழம்பெரும் பகுதி. அந்த பெருமைமிக்க பகுதியில் நிறைய வீடுகளைக் கட்டித்தாருங்கள் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல பல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். இடையிலே 'டிஸ்கிரிஷனரி கோட்டா' பற்றி குறிப்பிட்டார்கள். அதை விளக்கிவிட வேண்டுமென்று கருதுகிறேன். இப்போது இருக்கிற முறையில் நல்லமுறையில் நடைபெற வழிவகை இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு இடத்தில் 100 வீடுகள் ஒதுக்கீடு செய்கிறோம் என்றால் அதிலே 90 வீடுகள் குலுக்கல் மூலமாகத்தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதியிருக்கிற 10 வீடுகள் ஏற்கெனவே யார் மனு செய்து, உறுப்பினராக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான், உறுப்பினர்களாக இருந்தால்தான் அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இதில் வேறு எந்த வாய்ப்புக்கும் இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வீட்டுவசதி பற்றிய மானியக் கோரிக்கை எண் 33, நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கை எண் 34 ஆகியவற்றின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களையும் அதிலே இருக்கிற கோளாறுகளையும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மூன்று விதமாகப் பிரித்திருக்கிறார்கள். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் என்று இப்படி மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். கட்டப்படுகின்ற வீடுகளையும் எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி., எச்.ஐ.ஜி. என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த வகையிலே இந்தத் திட்டம் நடைபெற்றுவருகிறது. ஆனால் இந்தத்திட்டத்தின் சில கோளாறுகளை



இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய தலையாய கடமை என்று நான் கருதுகிறேன். எச்.ஐ.ஜி. பிரிவில் இராமகிருஷ்ணன் என்கிற ஐ.ஐ.எஸ். அதிகாரிக்கு ஒரு பிளாட் அசோக்நகர், சிவன் கோவில் தெருவில் எச். 13/1 என்ற பிளாட் ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த இடத்தைப் பெற்றுக்கொண்டு, பெருந்தன்மையோடு அந்த பெரிய அதிகாரி தன்னுடைய தந்தையாருக்கு மாற்றித் தந்திருக்கிறார். நான் குறிப்பிடுகின்ற இந்த விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவருக்கு இந்தத் திட்டத்திலே தருகின்ற பிளாட்டை மாற்றிக் கொடுப்பதற்கு இந்தத் துறைக்கு அதிகாரம் இல்லை என்று கருதுகிறேன். இருந்தாலும் பெரிய ஐ.ஏ.எஸ். அதிகாரி, டைரக்டர் ஆஃப் டவுன் பிளானிங் என்ற எண்ணத்தில் அதை அவருடைய தந்தையாருக்கு மாற்றித் தந்திருக்கிறார்கள். **இப்படி ஒதுக்கியிருப்பதைக் கூட நான் ஒரு குறையாகச் சொல்லமாட்டேன். ஆரம்பத்திலே இந்த இடம் எதற்காக ஒதுக்கப்பட்டது என்பதுதான் இங்கே முக்கியமான பிரச்சினை,

சில திட்டங்களைத் தீட்டுகிறபோது சில இடங்களை, பப்ளிக் அமெனிட்டீஸ் என்ற வகையில் பொது நலனுக்குப் பயன்படுகிற வகையில், அந்த இடங்களை ஒதுக்குகிறார்கள். இப்படி அவர்களுக்கு மட்டுமல்ல, இன்னும் நான்கைந்துபேர்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த இடத்தைப் பொறுத்தவரையில் ஒரு கம்யூனிட்டி சென்டர் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடமாகும். அதுதான் முக்கியமான விஷயம். அப்படிப்பட்ட இடத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த இடத்திலே எல்லாம் திருமணக் கூடம் கட்டியிருந்தால் அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் என்று குறைந்த வாடகையாக வைத்துக்கொண்டாலும் மாதத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் வந்து, வருஷத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைத்திருக்கும். இதையெல்லாம் அங்கே இருக்கிற அதிகாரிகள் அவருக்கு இணங்கச் செய்திருக்கிறார்கள்.

** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏதேனும் குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் முதலிலேயே எழுதிக்கொடுத்து தலைவரின் அனுமதியைப் பெற்று பின் பேசவேண்டும் என்று பலமுறை சொல்லியாகிவிட்டது. முதலிலேயே எழுதிக்கொடுத்தால் அதனை சம்பந்தப்பட்டவருக்கு அனுப்பி, அவர்கள் உரிய பதிலைச் சொல்வதற்கு உதவியாக இருக்கும். திடீரென்று இப்படி குற்றச்சாட்டு எழுப்பினால் எப்படி பதில் சொல்ல முடியும்? எனவே அந்தக் குற்றச்சாட்டுகளை நீக்கிவிடவேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. செல்வராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

** ** **

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இந்தப் பிரச்சினையைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். பேரவை விதி 93–ன் கீழ் ஏதேனும் குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் முதலிலேயே எழுதிக்கொடுத்துவிட்டு அனுமதியைப் பெற்று எழுப்பலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக சம்பந்தமாகத்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிர்வாக சம்பந்தமாக இப்போது பேசப்படவில்லை; குற்றச்சாட்டாகத்தான் சொல்லப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னு ரங்கம் அவர்கள் நிர்வாகத் தவறு என்று சொல்கிறார்கள். நிர்ாவகத்திலே ஏதாவது பிரச்சினை இருந்தால்தான் தவறு. ஆனால் டிஸ்கிரிஷனரி கோட்டா என்பது அமைச்சருடைய தனிப்பட்ட விருப்பத்தை உள்ளடக்கியதாகும். I can give it to anybody else. ஆனால் அதிலே ஒரே ஒரு பாயின்டைக் கவனிக்க வேண்டும். இராமசாமிக்கு 60,000 ரூபாய்க்குக் கொடுத்து, பொன்னுசாமிக்கு 30 ஆயிரம் ரூபாய்க்கு, சின்னசாமிக்கு 35 ஆயிரம் ரூபாய்க்கு என்று கொடுத்தால்தான் நிர்வாகத்தில் கோளாறு என்று சொலலாம். ஆனால் லாட்டிலே விழுந்தும் லாயக்கு இல்லாத இடங்கள் என்று ஏற்றுக்கொள்ளாமல் திரும்ப ஒப்படைக்கப்பட்ட இடங்களைப் பொறுத்தவரையில் அவற்றை தனிப்பட்ட வகையில் யாருக்கும் கொடுக்க அமைச்சர்களுக்கு முழு அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தனிப்பட்டவரை மட்டும் பார்க்க முடியாது. எல்லோருடைய பிரஸ்டீஜையும் பாதுகாக்க வேண்டும். எல்லோருடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும். அதற்காகத்தான் இதைக் கிளப்ப வேண்டாம் என்று சொன்னேன். இதிலே வேறு ஒன்றும் பிரச்னை இல்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. அ. செல்வராசன்: தலைவர் அவர்கள், அமைச்சர் அவர்கள் ஏதோ உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது என்ற கருத்திலே சொன்னார்கள். நான் சொல்வது, அந்த இடத்தையே மாற்றி இருக்கிறார்கள். அது ஒதுக்கப்பட்ட இடம். அதை ஏன் மாற்றினார்கள் அதுதான் என்னுடைய கேள்வி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவகாரம் இப்படியே போனால் முடியவே முடியாது....

திரு. அ. செல்வராசன்: தலைவர் அவர்களே, நான் பல்வேறு கோளாறுகளையும் சொன்னேன். இடத்தை அது போன்று மாற்றலாமா என்று கேட்டேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே பதில் சொல்லியாகி விட்டது. எப்போதும் நம்முடைய விதிகளின்படி என்னவென்றால், அமைச்சர் ஸ்டேட்மெண்ட் கொடுத்துவிட்டால் அதை அக்செப்ட் செய்துகொள்ளவேண்டும். அதற்குப் பிறகு அதை காண்டிரடிக்ட் பண்ணுவது சரியல்ல.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, நாங்கள் தவறு களைச் சொன்னோம், நாங்கள் சொன்னது தவறு என்று அவர் சொல்லட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி எல்லாம் பேசுவதால் நாம் ஏதோ பெரியதாக பேசியது போல், ஏதோ குற்றம் நடந்தது போல், அமைச்சர் ஏதோ தப்பு செய்துவிட்டதுபோல் செய்திகள் வந்து விடுகின்றன. இதிலே ஒரு தப்பும் அவர் செய்யவில்லை. பணத்தைக் கொடுத்தவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இனாமாக, ஓசியிலே கொடுத்துவிடவில்லை. (குறுக்கீடுகள்)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு உட்பட்ட இடத்திலே ஒருவருக்கு சொந்த மாக வீடு இருக்குமேயானால், அவர் மேற்கொண்டு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அவருடைய குடும்பத்திற்கு வீடு வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. ** ** என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதைத் தயவுசெய்து குறிப்பேட்டில் பதிவு செய்துக்கொள்ள வேண்டும். அதை நிரூபிப்பதற்கு உறுப்பினரோ அல்லது உறுப்பினர் சார்ந்திருக்கிற கட்சியினுடைய முதலமைச்சரோ பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். பொறுப்பு ஏற்றுக் கொண்டு அப்படி நிரூபிக்கப்படா விட்டால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். (மணியடிக் கப் பெற்றது) பேசவிடுங்கள். பேசி முடித்துவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப் பெற்றது.

ஏற்கெனவே இதுபோன்ற சில பிரச்னைகள் இந்த அவையிலே பேசப்பட்டு நிரூபிக்கப்படாததனால், அவர்கள் மன்னிப்புக் கேட்காமல், அதற்காக வெட்கப்படாமல், இன்னும் சொல்லப் போனால் ஓடிப்போய் விட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படக் கூடாது என்றுதான் கேட்கிறேன். எனக்கு ஒரு வீடு இருக்கிறது என்பது உண்மை. அந்த வீடு மாநகராட்சியின் மூலமாக 1958–59 ஆம் ஆண்டில் நான் வாங்கியது. அது தவிர வேறு வீடு வாங்கவில்லை. அப்படி வாங்கியிருந்தால்.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்காகத்தான் நான் பேச வேண்டாம் என்று சொன்னேன். உறுப்பினர்கள் மீதோ, அமைச்சர்கள் மீதோ குற்றச்சாட்டுகளை முன் அறிவிப்பு இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொன்னதற்குப் பிறகு சொல்லக்கூடாது என்று சொன்னேன் என்று சொல்வது நான் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்ன பிறகுதான் தெரிகிறது. என்ன பேசுவார் என்று எனக்கு எப்படி தெரியும்? பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்தார். (குறுக்கீடுகள்) இந்த அவையிலே இப்படி சொல்வதுதான் இப்போது வழக்கமாகப் போய்விட்டது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்கள் எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் ஒரே மாதிரியாக கருதுகிற மனப்பான்மைக்கு ஆளாகக்கூடாது. அரசாங்கத்தின் மீது சொல்கிறபோது நிர்வாகப் பொறுப்பு இருக்கிறதால் சொல்கிறோம். இப்போது ஆளும் கட்சி உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டு ஏற்கனவே நான் பொறுப்பிலே இருந்து அப்படியொரு தவறு செய்ததாக இந்த அவைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர் பொறுப்பேற்றுக்கொண்டு நிரூபிக்க வேண்டும். நிரூபிக்காவிட்டால் தகுதியுள்ளவர்கள், உணர்வு உள்ளவர்கள் இந்த அவையில் உறுப்பினர் பொறுப்பை இழந்துவிட தயாராக இருக்க வேண்டும். நிரூபிக்கப்பட்டால் நான் இந்தப் பொறுப்பை இராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்று சவால்கள் வேண்டாம். அப்படி சவால் விடுகிற வழக்கமே கிடையாது. (குறுக்கீடுகள்) என்னுடைய கடமை உங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும், உங்களுடைய பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். அதேபோல இந்தப் பக்கத்திலே இருப்பவர்கள்....



திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அது வேறு இது வேறு. இங்கே இந்த அவையிலே நான் பாதிக்கப்பட்டிருக்கிறேன். என்னுடைய உரிமைக்காகக் கேட்கிறேன். சொன்ன குற்றச்சாட்டை நிரூபிக்க ஆதாரம் இந்த அவையிலே உள்ள ஆளும்கட்சித் தலைவர்கள் தரட்டும். யார் வேண்டுமானாலும் தரட்டும். அதற்கு ஆதாரம் இல்லையென்று சொன்னால் அவர் மீது என்ன நடவடிக்கை என்பதை சபாநாயகர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேசியிருக்க வேண்டும். அப்படி அனுமதி பெறாமல் பேசியது அவைக் குறிப்பில் இருக்காது. (கூச்சல், குழப்பம்) என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கப் போகிறார் என்பது எனக்கு எப்படி தெரியும்?

திரு. சு. பாலன்: நீங்கள்தான் பேச வைத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து கேட்டார். நான் அனுமதித்தேன். வேறு என்ன செய்ய முடியும்?

திரு. க. அன்பழகன். தலைவர் அவர்களே, இந்த அவையிலே எழுப்பப்பட்ட ஒரு பிரச்னைக்கு நான் அது சம்பந்தமாக பதில் சொல்லக் கடமைப்பட்டவன். பதில் சொல்லியிருக்கிறேன். எழுப்பப்பட்ட பிரச்னையை இனி நீக்கி விடுவதாகச் சொல்வதில் அர்த்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி இரண்டு பக்கமும் குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் நம்மைப் பற்றிய பப்ளிக் கான்பிடன்சே போய்விடும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அப்படி யென்றால் இஷ்டத்திற்கு குற்றச்சாட்டு சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதி பெறாமல் சொன்னார். (குறுக்கீடுகள்)

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே இடம்பெற்ற ஒரு குற்றச்சாட்டு, இந்தச் சபையிலே இருக்கிற ஒரு உறுப்பினரைப் பற்றியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டார். (குறுக்கீடுகள்) நான் நியாயத்தைச் சொல்கிறேன். If you want you can take it.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் இருக்கிற வீட்டைத் தவிர என்னுடைய மகன் பெயரில் நான் ஆட்சியில் இருந்த காலத்தில் எந்த வீடு வாங்கியிருந்தாலும், அதற்காக நிலம் வாங்கியிருந்தாலும் அந்தக் குற்றத்தை நான்

ஏற்றுக் கொள்கிறேன். அப்படி வாங்கியிருந்தாலும் குற்றமில்லை என்பதற்கு வாதம் இருக்கிறது. அது வேறு. நான் சொல்வது ஆதாரம் இருந்தால் என் மகன் பெயரிலே வாங்கியிருந்தாலோ, இன்னும் சொல்லப்போனால் என்னுடைய மகள் பெயரிலே வாங்கியிருந்தாலோ அந்தக் குற்றச்சாட்டை நான் ஏற்றுக் கொள்கிறேன். அப்படி வாங்கியதாக எந்த ஆதாரத்தையும் காட்ட முடியாத நிலைமை இருக்குமானால் அப்போது அந்தக் குற்றச்சாட்டை இந்த அவையிலே பேசியவரோ, அவருடைய கட்சியோ என்ன பொறுப்பேற்றுக் கொள்கிறது என்று தான் தங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விசாரிக்க வேண்டுமானால் சொல்லுங்கள், விசாரிக்கலாம். புரூப் பண்ணவில்லையென்றால் என்ன செய்வது என்று கேட்டால் அது வேறு மாதிரி வரும். முதலில் ஜட்ஜ்மெண்ட் கேட்டால் சார்ஜஸ் வராது. இதை நான் சட்டப்படி சொல்கிறேன். விசாரிப்பது என்றால் விசாரிக்கலாம். நிரூபிக்கவில்லையென்றால் என்ன செய்வது என்று என்னிடம் கேட்டால் என்ன செய்வது? இப்போது பேராசிரியர் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்) குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) ரகுமான்கான் இது வேண்டாம். முறையல்ல.

(முற்பகல் 11-30)

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் திசை திரும்பி எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறது. நீங்கள் அடிக்கடி அவை உறுப்பினர்களைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ, குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்றால், உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் சொல்லவேண்டும் என்று அறிவுரை கூறி வந்து இருக்கிறீர்கள். அதை மீறி பல காரியங்கள் செய்கின்றபோதுதான் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. இப்போது பேராசிரியர் அவர்கள் தன் பெயரில் சொன்ன குற்றச்சாட்டு தவறு, அதை நிரூபித்தால், அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் ராமலிங்கம் அவர்கள், நான் நிரூபிக்க முடியும் என்று அவர்கள் பேசும்போது சொன்னார்கள். ஆகவே இதை மேலும் வளரவிடாமல், இதை எப்படி நீங்கள் எடுத்து முடிவு செய்கிறீர்களோ, அதாவது இது மாதிரி அவர் சொல்லியது தவறாக இருந்தாலோ, அல்லது இவருடைய மறுப்பு தவறாக இருந்தாலோ இதுமாதிரி குற்றச்சாட்டுக்கள் மீண்டும் தொடர்ந்து நடைபெறாமல் நம்முடைய கண்ணியமிக்க உறுப்பினர்கள் மீது அவதூறாக பேசுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன செய்யலாம் என்பதை யோசித்து, இது மேலும் கூடேறாமல் இதற்கு ஒரு முடிவு காண்பதற்கு நீங்கள் விசாரணை செய்து, இதற்கு நல்ல



தகுந்த நடவடிக்கை எடுத்தால் அது ஒரு முன்மாதிரியாக இருக்கும். ஏன் என்றால் பேராசிரியர் அவர்களைக் காப்பாற்றுவதற்கு நான் வரவேண்டிய அவசியம் இல்லை. எந்த உறுப்பினர்கள்மீது யார் குற்றம் சாட்டினாலும், அவர்கள் இந்த அவையினுடைய உறுப்பினர் என்ற முறையில், அவர்களுடைய மரியாதையைக் காப்பாற்றுவதற்கு உங்களுக்கு பொறுப்பிருக்கிறது. நமக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆகவே இதை மேலும் வளரவிடாமல் நல்ல முறையில் விசாரித்து எப்படிச் செய்ய முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அதற்கு ஒரு வழியை நீங்கள் கண்டுபிடித்து சுமுகமான முறையிலே முடிவு எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாரும் இதைப்பற்றி மேலும் பேச வேண்டாம். இத்தோடு இதை விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள். அதைச் செய்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல், குற்றச்சாட்டை தங்கள் மூலமாக நிரூபிக்கட்டும். தவறினால் என்ன என்பதை, உள்ளபடியே குற்றச்சாட்டை சாட்டியவர்கள், தான் இப்படியெல்லாம் குற்றம் சாட்டியதற்கு பொறுப்பேற்றுக் கொள்வதாக இருந்தால் என்ன செய்வதாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் தெரிவிக்கட்டும். இல்லையானால், அதற்கு பதிலாக எப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டிவரும் என்பதும் எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மாதிரி குற்றச்சாட்டை சாட்டியவர்களிடமே போய் தண்டனை கேட்கக்கூடாது. அது முறையல்ல. (குறுக்கீடு). இதை விசாரித்துப் பார்த்துவிட்டு சொல்கிறேன். ஏதாவது இருந்தால் நீங்கள் கொடுங்கள்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து இப்போது நான் ஆதாரங்களை அளிக்கிறேன். அதன் பின்னால் தாங்கள் சொல்லலாம்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்படி குற்றம் சாட்டி, அதற்கு ஆதாரம் தருவதற்கு சொல்கிறபோது, ஆதாரம் தருவதாகச் சொல்கிறவர்கள், தங்களுடைய நாணயத்தை, தங்களுடைய நேர்மையை, தலைவருக்கு உறுதிப்படுத்துவதற்காக, அப்படி நிரூபிக்கப்படாவிட்டால் என்ன செய்யத் தயார் என்று சொல்வது, * * * மரபு. எனவே அந்த மரபின்படி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். இது வேண்டாம். (குறுக்கீடு) நாம் இதைப் பற்றி பேசிக்கொள்ளலாம்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே' பிரச்சனை வந்ததே, மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் பேசுகின்றபோது. ** என்று சொன்னார்கள். நான் உங்களிடத்திலே இருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, அமைச்சராக இருப்பவர்களுடைய மகனுக்கோ, மருமகனுக்கோ, அல்லது சொந்தக்காரர்களுக்கோ, சட்டப்படி கொடுப்பது குற்றமா? இது சட்டவிரோதமா? அதிகார துஷ்பிரயோகமா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்மைப்பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். வேறு யார் யாரோ எதை எல்லாமோ செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு). எல்லா அலாட்மென்ட் ஆர்டரையும் கொண்டு வாருங்கள், நான் காட்டுகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற அவ்வளவு அலாட்மென்டையும் பார்த்தால், அது எங்கெங்கேயோ போயிருக்கிறது. (குறுக்கீடு). நான் சொல்வதைக் கேளுங்கள். ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டு சொல்வதை விட்டுவிடுங்கள். நான் அண்ணா நகரிலே காலையிலே வாக்கிங் போய் வரும்போது பெரிய பெரிய பங்களாக்கள் எல்லாம் இருக்கின்றன. அதைப்பற்றி பேச்சே கிடையாது.

All officials have got plots.

அவர்கள் எல்லாம் எப்படி வீடு வாங்கினார்கள்? யார் நிலம் கொடுத்தார்கள்? யார் பிளாட்ஸ் வாங்குகிறார்கள் என்று யார் பார்க்கிறார்கள்? நான் டெய்லி வாக்கிங் காலையிலே போகும்போது கூட பார்த்துவிட்டு வருகிறேன் (குறுக்கீடு) அது பற்றிய சிந்தனை கிடையாது; அதுபற்றிய பேச்சு கிடையாது. நாங்கள் உங்களிடம் பேசுவதுகூட பத்திரிகையில் ஒரு வார்த்தையில் வருகிறது. என்னுடைய ப்ரண்ட்ஸ் எல்லாம் சொல்கிறவர்கள், உனக்கு என்ன வந்தது, நாடு எப்படிப்போனால் உனக்கு என்னவென்று; நாம் பொது விவாதங்களைப் பேசுகிறோம் என்று நினைக்காமல் பேசுகின்றோம், அதனால் நானே பிரச்சனைக்கு ஆளாகிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனை தொடங்கியது இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற செல்வராஜ் அவர்கள் பேசுகிறபோது சொன்ன கருத்து என்றார்கள். அதற்கு இருக்கிற அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள், Discretionary power என்ற முறையில் அமைச்சருக்கு உள்ள உரிமையின் காரணமாக நான் வழங்கி இருக்கிறேன் என்றார். பொதுமக்களுக்கு முன்னால் குற்றம் ஆக்கப்படுவது சட்டமன்ற முறைப்படி, சட்டத்தின்படி குற்றமாக இல்லாமல் இருக்கலாம். அதை அமைச்சர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



விளக்கலாம். ஆனால் என்னைப்பற்றிப் பேசப்பட்ட பேச்சு நான் அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்து ஒதுக்கிக் கொள்கிற அந்த இடத்தில் இருந்தவனும் அல்ல, இன்னொருவர் மூலமாகவும் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒதுக்கினாலும் தப்பில்லை. காசு கொடுத்துத்தானே வாங்கினீர்கள். You have got right. You are also a citizen of India. ஆகவே சும்மா எடுத்துக்கொண்டால்தான் தப்பு. பேரவையினுடைய உறுப்பினர்களின் பிள்ளைகள் மெடிக்கல் காலேஜில், என்ஜினியரிங் காலேஜில் படிக்கக்கூடாது, ப்ளாட் வாங்கக்கூடாது என்றால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இங்கு வந்துவிட வேண்டியதுதான். ஒரு நிமிஷம் இருங்கள் நான் மனதில் படுவதைச் சொல்கிறேன். We are unnecessarily exposing ourselves. ஆக நாம் மட்டும்தான் நாட்டிலே மோசமாக இருக்கிறோம். மற்ற எல்லாத் துறையிலும் இருப்பவர்கள் நல்லவர்கள்—எல்லாத் துறையிலும் எனக்கு ஒரு மணி நேரம் பேச டைம் கொடுத்தால் நான் எல்லாத் துறைகளிலும் இருப்பவர்களைப் பற்றிச் சொல்வேன். அப்போது நாம்தான் யோக்கியர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் சபாநாயகராக இருப்பதைவிட ஒரு உறுப்பினராக இருந்தால் இந்த அவைக்கு அதிக பயன் ஏற்படும். (சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்மையிலே நான் அதைத் தான் ரொம்பப் பிரியப்படுகிறேன். ஒவ்வொரு நேரமும் நான் அதை நினைத்து நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நியாயத்துக்கு வாதாடக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். இருந்தாலும்கூட நான் சொல்லிக்கொள்ள விரும்புவது அமைச்சர்களுக்கு இருக்கின்ற உரிமை என்ற அடிப்படையில் செய்யப்பட்ட காரியங்களை எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், இன்னும் சொல்லப் போனால் சில நேரத்திலே ஆளும் கட்சியிலே உள்ளவர்களேகூட குற்றம் சாட்டுவார்கள். அது குற்றம் அல்ல என்பதற்கு அமைச்சர் விளக்கம் சொல்வது அவர்களுடைய கடமை, அது நிர்வாக முறையிலே நடைபெறுகிற ஒரு காரியம். இங்கே என்னைப்பற்றிப் பேசப்பட்ட கருத்து நான் செய்த ஒரு காரியம் அல்ல; ஆனால் எப்படியோ நான் அந்தச் சலுகையைப் பெற்றுவிட்டதாக ஒரு குற்றச்சாட்டு—அப்படி ஒரு சலுகையை நான் பெற்று இருப்பேனேயானால் அது நியாயம் என்பதற்காக என்னாலே வாதாட முடியும்; வாதாட முடியாதவனல்ல நான். இன்னும் சொல்லப்போனால் திரு. இராமலிங்கம் படிக்க வந்ததிலிருந்து எனக்குத் தெரியும். ஆகவே அப்படி என்னால் வாதாட முடியும். அந்த ஒரு பழியைச் சுமத்த வேண்டுமென்று

ஏதோ ஒரு நோக்கத்திலே சுமத்துகிறபோது எந்தச் சலுகையும் பெறாத நான் அந்தப் பழியைச் சுமத்துகிறவர் தவறை உணருகிற அளவுக்கு, இந்தப் பிரச்சனையை நீங்கள் முழு அளவுக்கு விசாரித்து எனக்கும், இந்த மன்றத்திற்கும் நியாயம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் விசாரிக்கிறேன். இவ்வளவு (குறுக்கீடு) நான் பேசிய பிறகும் இது வேண்டுமா? நான் சொல்வதைக் கேளுங்கள். இதை விசாரிக்க வேண்டுமென்றால் 50 ஆயிரம் பேர்களையாவது விசாரிக்க வேண்டியிருக்கிறது. இதில் ஒன்றும் இல்லை. ஒரு குற்றச்சாட்டு வருகிறபோது தாங்குகின்ற சக்தி இல்லாத காரணத்தினால் இந்த மாதிரி பிரச்சனை வருகிறது. ஆகவே பர்சனல் அட்டாக்கை விட்டுவிட்டால் இந்தப் பிரச்சனையே வராது. அதைத் தவிர்ப்பது நல்லது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொன்னால், என்னுடைய அரசியல் வாழ்வே என்னுடைய நாணயத்தின் மீது கட்டப்பட்டது. நான் எவரைப்பற்றியும் பொருட்படுத்தாமல் என்னுடைய அரசியலை நடத்துவதற்கு முக்கியமான காரணம் என்னை எவரும் அசைக்க முடியாது என்பது. எனவே என்னை அசைக்க நினைக்கிறவர்கள் தங்களுடைய தகுதியை எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டைத் தவிர மற்றவையெல்லாம் இந்த அவைக்குறிப்பில் இருக்கட்டும். ஏனென்றால் அவையெல்லாம் நாட்டுக்குத் தேவை. நான் பேசியவைகளும் இருக்கட்டும். நான் பேசியது எல்லாமும் நாட்டுக்கு வேண்டும்.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவது நம்முடைய அமைச்சர் சொல்வதைப் போல அவருக்கு அதிகாரம் இல்லையென்று சொல்லவில்லை. ஒரு இடத்தை மாற்றித் தந்திருக்கிறார்கள், அதைத்தான் முதலிலேயே சொன்னேன்—நெ 1 அடுத்து டவுன் பிளானிங் சேர்மேனாக இருக்கிறார்.....

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: தலைவர் அவர்களே, இது நீண்ட நேரப் பிரச்சனையாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் சொன்ன கருத்துக்கு நான் இப்போதே பதிலைச் சொல்லிவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அங்கே இந்திரா நகரைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கான இடத்தை மாற்றி மற்றவர்களுக்குத் தந்து இருப்பதாகவும் அமைச்சரின் தனிப்பட்ட உரிமையைப் பொறுத்தவரையில் எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை என்றுதான் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூட சொன்னார்கள். அப்படியே யாருக்காவது கொடுத்தால்கூட தவறு இல்லை என்பதற்கு சரியான வாதங்களை வைத்தார்கள். அந்த வாதங்களை நானும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் சொன்னதைப் பொறுத்தவரையில் அதே இடத்தில் இன்னொரு மண்டபம் இருக்கிறது. கல்யாண மண்டபத்தை ஒட்டி இருக்கின்ற இடம். அப்படிப்பட்ட இடத்திற்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் தரவேண்டிய அவசியம் இல்லை என்று எம்.எம்.டி.ஏ. முடிவு எடுத்தபிறகு அது வீட்டு மனையாகப் பிரிக்கப்பட்டு இப்போது அளிக்கப்பட்டு இருக்கிறதே ஒழிய அந்த இடத்தை இப்போது கூட யார் வேண்டுமானாலும் போய்ப் பார்த்துக் கொள்ளலாம். அங்கே இருக்கின்ற கம்யூனிட்டி ஹாலுக்குப் பக்கத்தில் இருக்கின்ற இடம் தான் பல பேருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 11-40)

திரு. அ. செல்வராசன்: துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் அது கம்யூனிட்டி ஹாலுக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்பது தான் என்னுடைய வாதம். அது உண்மையா இல்லையா என்று சொன்னால் நான் அதற்குப் பின்னால் பேசவில்லை.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: துணைத் தலைவர் அவர்களே, இங்கே சென்னை மாநகரத்திலே துணை மேயராக இருந்து இருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். ஒரே இடத்தில் 2 கம்யூனிட்டி ஹால் நாட்டுக்குத் தேவையா? இந்தப் பக்கத்தில் ஒரு கம்யூனிட்டி ஹால் இருக்கிறது. அந்தப் பக்கத்தில் ஒரு கம்யூனிட்டி ஹால் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதற்காக அரசு நிதியை ஒதுக்கி அங்கே ஒரு திருமணக் கூடத்தைக் கட்டினால் பிறகு அதற்குக் கிராக்கி இல்லையென்றால் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே சொல்வார்கள் ஒரே இடத்தில் 2 மண்டபம் இந்த நாட்டுக்குத் தேவையா? இந்த முறையில் மாண்புமிகு அமைச்சர் முடிவு எடுத்து இருப்பது நாட்டுக்கு நல்லது அல்ல என்று மீண்டும் பேசுவார்கள்.

திரு. அ. செல்வராசன்: துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன், 2 தேவையா இல்லையா என்பது இங்கே வாதம் இல்லை. முதலிலே இந்த இடம் திருமணக்

கூடம் கட்டுவதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடமா இல்லையா? அதைத்தான் இப்போது மாற்றியிருக்கிறார்கள்,** என்ற குறையைச் சொல்லுகிறேன். அங்கே இருக்கிற அதிகாரிகள் இப்படி செய்து மாற்றியிருக்கிறார்கள், எனக்கு நன்றாகத் தெரியும். ஆதாரம் இல்லாமல் எதையும் இந்த சபையில் பேசமாட்டேன். முதலில் அது திருமண கூடத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம், ஆகவே தான் இதைப் பேசினேனே தவிர மற்றபடி வேறு ஒன்றும் இல்லை, நான் பேசினால் இன்னும் பெரிய பெரிய ஆட்கள் பெயரை எல்லாம் சொல்ல வேண்டி வரும், அது பெரிய வம்பாக வரும் என்பதால் சொல்லவில்லை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முன்பு அந்தப் பிரச்சனையைப்பற்றி சொல்லும்போது மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே இருக்கவே அதை மறுக்க முடிந்தது. இப்போது நீங்கள்** என்று பேசினால் எப்படி? அதற்கு எல்லாம் முன் அனுமதியை இங்கிருந்து பெற வேண்டும். ஆகவே நீங்கள் அப்படி பேசியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன், உங்களைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை, அதை முதலிலேயே எங்களிடம் காட்டிவிட்டால் நன்றாக இருக்கும்,

திரு. அ. செல்வராசன்: துணைத் தலைவர் அவர்களே, இப்படி அவசரமாக காரியத்தை மாற்றி செய்பவர்கள் இங்கே இருக்கின்ற பத்திரிகை நிருபர்கள் வீடுகள் கேட்டார்களே அவர்களுக்கு வீடு கொடுத்தீர்களா? இதுவரை கொடுக்க வில்லை.

மாண்புமிகு அமைச்சர் கக்கன் அவர்களுடைய துணைவியார் இப்போது வாடகை வீட்டில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். பல முறை இந்த அரசுக்கு மனு செய்து இதுவரை கொடுக்க வில்லை. இப்போது அவர்கள் ஜனாதிபதிக்கு எழுதி அங்கிருந்து ரெக்கமன்டேஷன் வந்து இப்போது கொடுக்கப் போவதாக அறிகிறேன். நாங்கள் எல்லாம் இங்கே பேசுகிறோம் என்றால் எங்கெங்கே என்ன என்ன குறைகள் நடக்கிறதோ அவைகளை எல்லாம் நியாயமான முறையில் எடுத்துச் சொல்கிறோம், ஆகவே அதை தனிப்பட்ட யார்மீதும் சொல்வதாக தயவு செய்து நீங்கள் கருதக்கூடாது. தனிப்பட்டவர்கள் மேல் சொல்வதில் எனக்கு என்ன அக்கறை? எனக்கு என்ன கிரீடமா கட்டப் போகிறார்கள், அப்படி எதுவும் இல்லை. அதிகாரிகள் இப்படி இப்படி எல்லாம் சட்டத்தை வளைத்து காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கமும் மகாபலிபுரம் போயிருந்தோம், திருக்கழுக்குன்றம் தேர்தலுக்காக. அங்கே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட 8 குப்பங்களில் மீனவர்கள் வீடுகள் இருக்கின்றன. 2 ஆயிரம் 3 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிக் கட்டியிருக்கிறார்கள் போல் இருக்கிறது. இந்த வீடுகளை தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போய்ப் பார்க்க வேண்டும். சதுரங்கப் பட்டினம் குப்பம் மற்றும் உள்ள 7 குப்பங்களை போய் தயவு செய்து பாருங்கள், இவைகளில் உள்ள மக்களை எல்லாம் நாங்கள் போய்ப் பார்த்தோம். அவர்கள் எல்லாம் அழுகிறார்கள். அதனால்தான் கதைகூட லெயிடங்களில் மாறியிருக்கின்றது. நான் கதைக்கு உள்ளே போகவில்லை. மாண்புமிகு அமைச்சர் திரு நல்லுசாமி அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர். அவர்கள் இதை எல்லாம் பார்த்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கட்டிக் கொடுங்கள் என்று எத்தனையோ முறை நாங்கள் கேட்டு இருக்கிறோம், ஒரு அதிகாரி என்றால் சட்ட திட்டங்கள் எல்லாம் வளைந்து கொடுக்கிறது என்பதற்காக நான் சொல்ல விரும்புகிறேன்,

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி நான் பேச விரும்புகிறேன். நேரம் அதிகமாகிவிட்டது.

அடுத்து, ''லிங்க்'' ரோடை நீங்கள் ஒழுங்காக நடைமுறைப் படுத்துவது இல்லை, அதனால் பெரிய பாதிப்புகள் எல்லாம் ஏற்படுகின்றன. அதையெல்லாம் நீங்கள் நன்றாகப் பார்த்து அதைப் பற்றி சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து நம்முடைய மாண்புமிகு டிரான்ஸ்போர்ட் அமைச்சர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார். என் தொகுதியிலே ஒரு திறப்பு விழாவில் சந்தித்துப் பேசியபோது ஒரு பஸ் ஸ்டாண்ட் கட்டித்தர கேட்டபோது கட்டித் தருவதாக வாக்கு அளித்தார்கள். ஆனால், அது இன்னும் கட்டித் தந்தபாடில்லை. அதை நிச்சயமாக கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இது மாநகராட்சி சம்பந்தப்பட்ட பஸ் ஸ்டாண்டாக இருப்பதால் அவர்கள் தான் செய்ய வேண்டும். ஏற்கனவே நான் கூட சொன்னேன். நான் பார்த்து பரிந்துரை செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். மாநகராட்சி சம்பந்தப்பட்டு இருப்பதால் அவர்களிடம் பேசுவது நல்லது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நகராட்சி வளர்ச்சி—வீட்டு வசதி சம்பந்தமாகப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் இரண்டு பேரும் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டது உண்மை, அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று என்னிடம் கேட்டது உண்மை. நாங்கள்தான் செய்ய வேண்டுமென்றுஅவர்கள் நிச்சயமாக நினைக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். காரணம் அது போக்குவரத்திற்குச் சொந்தமான இடமல்ல. சொந்தமான பேருந்து நிலையமும் அல்ல. நாங்கள் அங்கே பேருந்துகளை நிறுத்திக் கொள்வதற்கு உரிமை படைத்தவர்கள். அதற்குண்டான கட்டணத்தைக் கட்டி அந்தப் பேருந்துகளை நிறுத்திக் கொண்டிருக்கிறோம். அது மாநகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம். நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ, அதுமாதிரி அது சரிசெய்யப்பட வேண்டுமென்ற உணர்வு எங்களுக்கும் இருக்கிறது. நாங்கள் பரிந்துரை செய்யலாம் என்று நான் ஏற்கனவே சொன்னேன். அதன்படி நாங்கள் பல முறை கேட்டிருக்கிறோம். தனியாக போக்குவரத்தினுடைய சார்பாக ஒரு பஸ் ஸ்டாண்ட் காப்பரேஷன் கூட உருவாக்க வேண்டுமென்ற முயற்சிகளை நாங்கள் எடுத்திருந்தோம். அதிலே சில சிக்கல்கள் ஏற்பட்டு கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது. எனவே அது சரி செய்யப்பட வேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அந்தத் துறை என்னுடையது சம்பந்தப்பட்டது அல்ல. அது நம்முடைய கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்டது என்ற காரணத்தால் அவர்கள்தான் செய்ய வேண்டும். எனவே அவர்களிடத்திலே முறையாக சொல்லும் போது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று கருதுகிறேன்.

திரு. அ. செல்வராசன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் நாங்கள் ஒன்றாகக் கலந்து கொண்டது உண்மை என்று சொன்னார்கள். நிச்சயமாக நானே எடுத்துச் செய்வேன் என்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைச் செய்து ஆக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பேராசிரியர் தொகுதியான யானைகௌனியில் ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டிலே வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அங்கே போக முடியாத நிலை. தயவு செய்து அமைச்சர் தான் போய்ப் பார்க்க வேண்டும். ½ அடிச் சேர், சாக்கடைத் தண்ணீர். இப்படி மிக மோசமாக இருக்கிறது. அதையும் நீங்கள் சென்று பார்க்க வேண்டும்.

அடுத்து இந்த வீட்டு வசதி வாரியம். குடிசை மாற்று வாரியத்தில் வேலை செய்கின்ற பணி ஆட்கள் என். எம். ஆர். என்ற பெயர் வைத்திருக்கிறார்கள். அவர்கள் 7 வருஷம், 9 வருஷம், 10 வருஷம், 12 வருஷம் என்று தொடர்ந்து வேலை செய்து வருகிறார்கள். இதுவரை அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





குடிசைப் பகுதி மாற்று வாரியம். இது கவனிக்கப்பட வேண்டிய விஷயம் இங்கே வள்ளுவன் நகரம் என்று ஒன்று இருக்கிறது. இப்போது பிரகாசம் சாலை என்று அழைக்கப்படுகிறது. சுமார் 200 வீடுகள் அங்கே இருக்கின்றன. அதைப் பற்றி எட்டு ஆண்டுக் காலமாக தொடர்ந்து பேசுகிறேன். இது வரை யாராவது ஒரு அமைச்சர் பார்த்திருக்கிறாரா என்றால் நிச்சயமாக இல்லை. 2, 3 இடங்களில் தீ விபத்து ஏற்பட்டது. ஜனங்கள் எல்லாம் எப்படி ஓடுவது என்று தவிக்கிறார்கள். அமைச்சரவர்கள் நேரில் பார்த்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து செக்ரடேரியட்டிற்கு சமீபத்தில் காமராசர் சாலை, பீச் ரோடு. இவற்றுக்கு எதிரில் 3 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற வாக்காளர்களின் எண்ணிக்கை 1600 பேர். எக்சிபிஷனுக்கு எதிரில் இரண்டு பகுதிகளிலும், ரிசர்வ் பாங்க் எதிரில் ஒரு பகுதியிலும் இவைகள் இருக்கின்றன. இவைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தாலும் கூட, அது நன்றாக இருக்காது. நிச்சயமாக இது கவனிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள் என்று ஒரு பெரிய குழு முதலமைச்சர் தலைமையில் கூடி சென்னை நகர மேம்பாட்டுக் குழு என்று பெயர் வைத்தார்கள்.

(முற்பகல் 11-50)

ஒரு குழுவைப் போட்டு அதன் மேலே ஒரு கல்லைத் தூக்கிப் போடு என்பார்கள். அம்மாதிரி அந்தக் குழு எத்தனை முறை கூடியது? அதுபற்றிய விவரங்கள் அமைச்சரிடம் இருந்தால் பதில் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். எத்தனை முறை கூடியது, என்னென்ன காரியங்களைச் செய்தது? ஒன்றும் செய்யவில்லை. இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். இப்பொழுது நான் இந்த மசோதாவில் பேசும்பொழுது, சென்னையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதை எதைச் செய்வேன், இந்த நகர மக்களுக்கு என்னென்ன வசதி கிடைக்கும், எந்தெந்தக் குழுக்களிலே இருக்கிறார்கள், இருக்கப் போகிறார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதை நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஹார்பர் டெனமெண்ட்ஸைப் பொறுத்தவரையில் பார்த்தால், ஹார்பரில் 184 குடியிருப்புக்கள் இருக்கின்றன— மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கின்றன. அது என்றைக்கு விழப்போகிறதோ, எத்தனை பேர் சாகப் போகிறார்களோ தெரியவில்லை. நான் பத்து தடவைகள் சொல்லியாகி விட்டது. சொன்னால், அரசாங்கத்தின் மேல் வழக்குப் போட வேண்டுமென்று சொல்லுவார்கள், அவர்களுக்கு வேறு வழி

யில்லை என்றுதான் நினைக்கிறேன். அவைகளைப்பற்றி யாரும் சிந்திப்பதில்லை. அதைப் பார்த்து சரி செய்ய வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறிமுடிக்கிறேன், வணக்கம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர வர்களால் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக் கைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் என்னுடைய அன்பிற்குரிய அண்ணன் திரு. செல்வராசன் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஆரம்பிக்கின்றபொழுதே மாணிக்கக் கோரிக்கை என்றுதான் — அவர் தவறிச் சொன்னாரோ அல்லது மனதில் பட்டதை, உள்ளதை உள்ளபடியே சொன்னாரோ எனக்குத் தெரியவில்லை. மாணிக்கக் கோரிக்கை என்று சொன் னார்கள். அந்த மாணிக்கக் கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக்கு ஏறத்தாழ 71 கோடி மான்யம் வேண்டுமென்று வைக்கப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு 41 கோடிக்கு மான்யம் வேண்டப்பட்ட இந்த மானியம் இன்றைக்கு 71 கோடி யாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால், உண்மையிலேயே குடிசைகள் கோபுரங்கள் ஆக வேண்டுமென்ற புரட்சித்தலைவரின் புரட்சித் திட்டத்தை எடுத்துக் காட்டும் வகையில் வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தை இன்றைக்கு இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்தாலே எந்த அளவிற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நல்ல பல திட்டங்கள் நாட்டு மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று புரிந்து கொள்ள முடிகிறது.

''ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆகிவிட வேண்டும் !'' என்ற பாவேந்தரின் கனவுப்படி சமத்துவ சமதர்ம சமுதாயத்தை உருவாக்கி வரும் புரட்சித் தலைவரின் அரசு, ஏழை எளிய மக்களின் துயர் போக்கத் தீட்டி வரும் திட்டங்களில் வீட்டு வசதித் திட்டமும் ஒரு நல்ல திட்டம் என்பதை இன்றைக்கு நாட்டு மக்கள் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஐக்கிய நாடுகள் மாமன்றம் 1987-ம் ஆண்டில், வீடு இல்லாதவர்களுக்கு வீடு தரும் திட்டத்தைச் செயல்படுத்த இருப்பதை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டு, அதன்படி கி. பி. 2000 ஆண்டிற்குள்ளாக வீடு இல்லாதவர்களுக்கு வீடு கிடைக்க



வேண்டும் என்ற ஒரு மாபெரும் திட்டத்தை எல்லா நாடுகளும் செயல்படுத்த முன் வந்துள்ளது என்பதை இன்றைக்குச் செய்தி யாகப் படித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், செய்திகளைச் செயலிலே காட்டிவரும் புரட்சித் தலைவரின் அரசு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாகவும், பல்வேறு துறைகளின் மூலமாகவும், ஏழைகளுக்கு வீட்டு மனைகள் வழங்குவது, வீட்டுக் கடன் வழங்குவது, இரண்டிற்கும் முதலிடம் அளித்து, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் அனைவருக்கும் வீடுகள் தருவதற்கு இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்களின் அரசு முயற்சியை எடுத்துக் கொண்டு வருவதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதனைக் கருத்திற்கொண்டே புரட்சித் தலைவரவர்களின் அரசு மாதச் சம்பளம் வாங்குகின்ற அரசு ஊழியர்களானாலும் சரி, இல்லையென்றால் பொதுமக்களானாலும் சரி, எளிய தவணை முறைகளில் வீடுகளை உரிமையாக்கிக் கொள்கின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதனை நான் இந்தச் சந்தர்ப் பத்திலே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்களின் அரசு சத்துணவுத் திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கே முன்னோடியாக, வழிகாட்டி யாக அமைந்திருக்கிறது. உணவுக்கு அடுத்தபடியாக இன்றைக்கு நமக்கு வேண்டுவது இருக்க இடம்தான். ஆளுக்கொரு வீடு என்ற புதிய தத்துவத்தை அறிவித்துள்ள புரட்சித் தலைவர் அரசு, வரும் ஆண்டு முதல் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அனைத்து மக்களும் சொந்தமாக வீடுகளைப் பெறக்கூடிய திட்டங்களை வகுத்துள்ளதை நல்ல மனம் கொண்டவர்கள் இன்றைக்குப் பாராட்டுகிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில் வீட்டு வசதிக்கெனத் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி இன்றைக்குப் புரட்சித் தலைவரவர் களின் அரசு நல்ல முறையிலே ஆட்சி நடத்திக்கொண்டு வருகிறது.

1976-க்கு முன்னால், வீட்டு வசதி வாரியத்திற்கென்று ரூ 1 கோடி மட்டும்தான் ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால், புரட்சித் தலைவர் அரசு பொறுப்புக்குவந்ததற்குப்பின்னால், இப்போது ரூ. 70 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுமக்களுக்குச் சேவை செய்கின்ற அரசு இல்லையா என்பதை எண்ணிப் பார்க்குமாறு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, வீட்டு வசதியைப் பொறுத்தவரை, அரசின் இலக்குகளைக் காட்டிலும் சாதனைக் குறியீடுகள் இன்றைக்கு அதிகமாக உள்ளதை மனப்பூர்வமாக நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே இருக்கிற நகர்ப்புறங்களில் வாழும் மொத்த மக்கள் தொகையில் 45 % சென்னையிலே இருக்கிறது. இன்னும் மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களில் வாழக் கூடிய மக்கள் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள் என்கிற புள்ளி விவரம் இன்றைக்கு நம்மை அதிர்ச்சி அடையச் செய்திருக்கிறது. இவ்வாறு பெரு நகரங்களில் வாழக்கூடிய மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், சிறிய, மற்றும் நடுத்தர நகரங்களை வளர்ச்சி பெறச் செய்வது மிக இன்றியமையாத ஒன்றாகும்.

தற்போது கிராமப்புறங்களை வளர்ச்சி அடையச் செய்கின்ற விதத்திலே, வீடுகள் கட்டுவதற்காக ரூ. 6,000 வழங்கக் கூடிய ஒரு திட்டம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் மெத்தப் பணிவோடு தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, ரூ. 6,000 என்பது பழைய வீட்டுக்கு, வண்ணம் அடிப்பதற்குத்தான் போதுமே தவிர, புதிதாக ஒரு வீட்டைக் கட்டுவதற்கு நிச்சயமாகப் போதாது. ஆகவே, அதை மாற்றி, ரூ. 10,000 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை நகரைப் பொறுத்தவரை, நகரம் முழுவதும் மின் கம்பி இணைப்பினை மாற்றியமைப்பது குறித்து, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் சாலை விளக்குகள் சரியாக எரியாத நிலைக்கு இனியாவது ஒரு முடிவு ஏற்படக்கூடிய நிலைமை வரும் என்று இந்தக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அரசு அலுவலர்களுக்காக வாடகை வீட்டு வசதித் திட்டம், சென்னையில் மட்டுமின்றி, மற்ற நகரங்களிலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினையை இங்கே பேசினார்கள். நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். பட்டினப்பாக்கம், மைலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட இடம். அங்கே அரசு அலுவலர்கள் பலதரப்பினர் வசிக்கிறார்கள். அந்தக் கட்டிடம் இடிந்துவிழக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஒழுகுகின்றகூரை, மரணத்திற்கு அழைத்துவிடக்கூடிய மாடிப் படிக்கட்டுகள் எல்லரம் இன்றைக்குப் பட்டினப்பாக்கத்தினுடைய குடியிருப்பிலே காணப்படுகின்றன. அந்தக் குடியிருப்புகளை சரி பார்க்கவேண்டுமென்று, மாண்புமிகுவீட்டு வசதிவாரியத்தினுடைய தலைவரும் அரசு அதிகாரிகளும் சென்று பார்வையிட்டு அதைச்



சரிப்படுத்துவதற்கு ரூ. 12 லட்சம் செலவாகும் என்ற ஒரு குறிப்பை அரசுக்கு அனுப்பி வைத்திருப்பதாக நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் குறிப்பின் மீது, தயவு செய்து, அங்கே இருக்கிற தாய்மார்களின் துயரைப் போக்குகின்ற விதத்திலாவது, ஒன்று இடித்து கட்டித்தாருங்கள். இல்லையென்றால், பழுதுபார்க்கிற பணியை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

இன்னொன்று, அரசுக்குச் சொந்தமான பல இடங்கள் என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலே இருக்கின்றன. அகில இந்திய பத்திரியையாளர், தமிழகத்தினுடைய கிளையும், சென்னை நிருபர்கள் சங்கமும் சேர்ந்து, வீட்டு வசதி வாரிய அமைச்சருக்குப் பல கோரிக்கைகளைத்தந்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் மட்டுமல்லாமல், பல மாநிலங்களில் பத்திரிகையாளர்கள் குடியிருப்பு என்கிற ஒரு பகுதியே உள்ளது; பத்திரிகையாளர்கள் காலனி என்கிற ஒரு அமைப்பே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதைப் போல மாண்புமிகு முதல் அமைச்சரைச் சந்தித்தும் கொடுக்கப்பட்டிருக்கிற மனுவின் மீது, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களோடு கலந்து,—என்னுடைய தொகுதியிலே கூட பல இடங்களை நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்—அந்த இடங்களைத் தயவு செய்து பரிசீலனை செய்து, மற்ற மாநிலங்களைப் போல, அவர்களுக்கு வீடு கட்டித்தாருங்கள்; அப்படி வீடுகள் இல்லையென்றால் இலவச நிலம் தாருங்கள்; இலவச நிலம் இல்லையென்றாலும், வீடு கட்டுவதற்குத் தவணை முறையிலே திரும்பிப்பெறும் கடன் உதவியினைத் தரவேண்டு மென்று நான் இந்தச் சந்தர்பபத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள் மீது புரட்சித் தலைவர் வைத்திருக்கின்ற அன்பு, இன்றைக்குத் தெளிவாகத் தெரிந்த ஒன்று. அந்த அன்பை உறுதிப்படுத்துகின்ற விதத்திலே, அந்த அன்பை நிலைநாட்டு கின்ற விதத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக பதில் உரை கூறுகின்றபொழுது அதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயே, குறிப்பாக, சென்னை மாநகரத்திலே, குடிசைப்பகுதிகள் அதிகமாக இருக்கிற இடம் என்னுடைய மைலாப்பூர் தொகுதிதான்.

(நண்பகல் 12-00)

குடிசை மாற்று வாரியக் கட்டிடங்கள் அதிகமாக இருப்பதும் என்னுடைய தொகுதியில்தான். மழைக்காலங்களில், வெள்ளம் வருகிறபோது அது மாநகராட்சி அதிகாரியாக இருந்தாலும் சரி, அல்லது குடிசை மாற்று வாரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் மாறி, மாறி நிவாரணம் தந்துகொண்டேதான்

இருக்கிறார்கள். இது 15 ஆண்டுகாலங்களாக தொன்று தொட்டு நடந்து வருகிற பிரச்சினை ஆகும். நிவாரணமாக, மழைக் காலத்தில், அரிசி தருகிறார்கள், சாப்பாடு தருகிறார்கள், துணி தருகிறார்கள். ஒரு வருஷம் அப்படித் தந்து, அடுத்தவருஷம், சரி செய்து அவர்களுக்கு வீடு கட்டித் தரவேண்டிய முயற்சியே இதுவரை இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இனிமேல் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதத்தில், மழை பெய்தால் பெரிதும் பாதிக்கப்படக் கூடிய இடங்களாக இருக்கிற என்னுடைய தொகுதியிலே இருக்கிற மல்லிகைப்பூ நகர், கக்கன் காலனி, பரமேஸ்வரி நகர், கோவிந்தசாமி நகர், ராஜாமுத்தையாபுரம், சண்முகபுரம், சௌகார் தோட்டம்-ராபர்ட்சன்பேட்டை, சின்னகாரக்குட்டை, குருபுரம், மார்வாடித் தோட்டம், பச்சையம்மன் கோவில் குடிசைப்பகுதி, லாலா தோட்டம், பூந்தோடம், சுந்தர கிராமணித் தோட்டம், மீனாம்பாள்புரம், திடீர் நகர், கைலாசபுரம், இன்னும் பல பகுதிகள், என்னுடைய கவனத்திற்கு வந்தவைகளை மட்டும் நான் குறிப்பிட்டு இருக்கிறேன். இதைப்போன்ற பலபகுதிகள்—சாதாரண ஒரு சிறியமழை வந்தால் கூட அந்தப்பகுதிகளிலே வாழக்கூடிய மக்கள் பெரிதும் அவதிப்படக்கூடிய சூழ்நிலை என்னுடைய தொகுதியிலே ஏற்பட்டிருக்கிறது.

அதுவும் மழை என்று சொன்னால் அந்தப் பகுதிக்கு சட்ட மன்ற உறுப்பினர் போகவேண்டிய அவசியம் இல்லை. அதிகாரிகள் தாங்களாகவே வந்து இதுதான் மழை பெய்தால் பாதிக்கின்ற இடம் என்று அவர்களே முடிவு செய்து நிவாரணம் தந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது தயவு செய்து, நிவாரணத்திற்காக மட்டும் என்னுடைய தொகுதியைத் தேடி வராதீர்கள்.

நிவாரணத்திற்கு முன்னால் தயவு செய்து அதைச் சரிப்படுத்தி மாடி வீடு கட்டித் தரக்கூடிய திட்டங்களாக, அல்லது பள்ளமாக இருக்கிற பகுதிகளை உயர்த்திக் கட்டக் கூடிய விதத்தில் தயவு செய்து என்னுடைய தொகுதியை உண்டாக்கித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, என்னுடைய தொகுதியிலே கோவிந்தசாமி நகர் என்ற பகுதி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அது தெரியும் என்று கருதுகிறேன். அந்த கோவிந்தசாமி நகரில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, சுவர் இடிந்து 5 பேர் மரணம் அடைந்தார்கள். அமைச்சர் அவர்கள் கூட அங்கே வந்து பார்த்தார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கூட வந்து பார்த்தார். 5 பேர் மரணம் அடைந்திருக்கக்கூடிய அளவுக்கு அது மிகவும் தாழ்வான பகுதி. ஏனென்றால், எப்போது என்ன நிலை ஏற்படுமோ என்கிற அவலநிலை கோவிந்தசாமி



நகரில், என்னுடைய தொகுதியில், இருக்கிறது. உடனடியாக அங்கே துரித ரயில் வருவதாகச் சொல்லி, அந்தப் பகுதியை இன்னமும் உயர்த்தாமலேயே வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒன்று அங்கே வசிப்பவர்களுக்கு வேறு இடத்தை மாற்றித் தாருங்கள், இல்லையெனில் அவர்களுக்கு மாடி வீடு கட்டித் தருவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மரணத்தின் எல்லையிலேஉட்கார்ந்து இருக்கிறஅவர்களுக்கு ஏதாவதுஒரு வழி கிடைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னொன்று குடிசை மாற்று வாரியத்திலே இன்றைக்கு ஒன்று வைத்திருக்கிறார்கள். 30-6-1977-க்கு முன்னால் இருக்கிற குடிசைப் பகுதிகளை எல்லாம் குடிசைப் பகுதிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு வீடுகள் கட்டித் தந்து இருக்கிறார்கள். ஆனால், சமீபத்திலே உலக வங்கித் திட்டம் வந்ததற்குப் பிறகு 30-6-1984-க்கு முன்னாலே இருக்கிற பகுதிகளை உலக வங்கித் திட்டம் எடுத்துக்கொண்டு இன்றைக்கு அவர்களுக்கு வேண்டிய குடிசைப் பகுதியாக அறிவித்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஒரு விதி வைத்து இருக்கிறார்கள்.

நான் பணிவோடு இந்தச் சந்தர்ப்பத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, 30-6-1984-க்கு முன்னால் எந்தெந்தப் பகுதிகள் குடிசைப் பகுதிகளாக இருந்தனவோ, அந்தந்தப் பகுதிகளை எல்லாம் தயவுசெய்து, உலக வங்கித் திட்டத்தின் கீழாவது குடிசைப்பகுதிகளாக ஏற்றுக்கொண்டு தயவுசெய்து அவர்களுக்கு ஒன்று பட்டா தாருங்கள், இல்லையெனில் அவர்களுக்கு மாடி வீடுகளைக் கட்டித் தர முயற்சி செய்யுங்கள் என்று நான் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

இன்னொன்று, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்கள் பேசுவதே குறைவு. ஆண்கள் பேசுகிற போது அதிகமான நேரம் ஒதுக்கித் தருகிறீர்கள். ஆனால் பெண்கள் பேசும்போது மட்டும் உடனடியாக மணியை அடித்து விடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படிப் பார்க்க முடியாது. உறுப்பினர்களைத் தான் பார்க்க முடியும். அந்த மாதிரி டிஸ்கிரிமினேஷன் இங்கே இல்லை. எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரே மாதிரிதான் டைம் கொடுக்க முடியும்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் உரிமையைப் பற்றி வெளியிலே பேசுவது நல்லதல்ல. நாம் பெண் உரிமையைப் பற்றிப் பேசுவதற்காகத் தான் இங்கே நின்று கொண்டிருக்கிறோம்.

என்னுடைய தொகுதியிலே மீனவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே தேர்தல் நடக்கின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக கழகம் ஒரு பொய்யான கருத்தைச் சொல்லி, வாக்குகள் சேகரிக்க முயற்சி செய்து, அந்த மக்களை திசை திருப்பி விட்டார்கள். அதாவது குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டித்தந்த வீடுகளுக்கு நாங்கள் வாடகை வசூல் செய்ய மாட்டோம் என்று சொல்லி, அந்த மக்களை திசை திருப்பிவிட்டார்கள். நான் இதை குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை; தயவுசெய்து யாரும் கையைக் தூக்கி, குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக நான் யாரையும் குறைசொல்லவில்லை.

மீனவர் குடியிருப்பில் இருக்கின்ற மீனவர்கள் எல்லாம் நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில்தான் மீன்பிடிக்கச் செல்கிறார்கள். அதனால் அவர்களால் வாடகை கட்ட இயலவில்லை, அதனால் அந்த மீனவ மக்கள் அல்லல்படுகிறார்கள். ஆசியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு அமைப்பு இருக்கிறது. அதைப்போலவே ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு சங்கம், அமைப்பு இருக்கிறது. மீனவர்களுக்கும் சில சங்கங்கள் வைத்திருக்கிறார்களே தவிர அவை பலமானவையாக இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீனவர்கள் நலன் கருதி நிறைய வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில்தான் அதிகமாக மீனவர்கள் இருக்கிறார்கள். அதைப்போன்று சென்னை மாநகரின் பல பகுதிகளிலும் இருக்கிறார்கள். அங்கே எல்லாம் மீனளத் துறையின் சார்பில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் நொச்சிக்குப்பம், டொம்மிங் குப்பம், ஓடை நகர், நம்பிக்கை நகர், சீனிவாச நகர் போன்ற இப்படிப்பட்ட இடங்களில் மீனவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தந்திருக்கிறார்கள். சென்னை மாநகரில் இருக்கிற மீனவர்கள் வாழக் கூடிய இடங்களில் இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு வாடகை வசூல் செய்யாமல் இருக்கமுடியாதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அவர்களுக்கு இந்த சலுகையை அளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பெருநகர் வளர்ச்சித் திட்டம், வீட்டுவசதி வாரியம் நிறைவேற்றி வருகின்ற தன்னிறைவுத் திட்டங்களின் கீழ் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் போன்ற இடங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுவதைப்போன்று வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டு, அவர்களுடைய வீட்டு பிரச்சனைக்கு தீர்வு காணுகின்ற முயற்சியாக சென்னை மாநகரின் பிற இடங்களிலும் வீடுகள் கட்டிக்கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்னொரு முக்கியமான பிரச்சனை என்னவென்றால் எம்.எம்.டி.ஏ. அப்ரூவல், எம்.எம்.டி.ஏ. அப்ரூவல் என்று போட்டு, தினந்தோறும் பத்திரிகைகளில் செய்தி வெளிவருவதைப் பார்க்கிறோம். பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தவுடனே நமக்கு தெரிகின்ற செய்தி இதுதான். அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பொதுமக்களை ஏமாற்றுகின்ற விளம்பரங்கள் நிறைய வந்துகொண்டிருக்கின்றன. செங்கற்பட்டுக்கு அருகில் ஒரு கிரவுண்ட் 6,000 ரூபாய், திருவொற்றியூருக்கு பக்கத்தில் 3,000 ரூபாய் என்று செய்தி போட்டு, அப்பாவி மக்களை திசை திருப்பி வருவதை நாம் பார்த்துவருகிறோம். தயவுசெய்து இந்த நிலையை மாற்ற வேண்டும். தேவைப்பட்டால் இதற்கு ஒரு சட்டத்தையாவது போட்டு ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் ஏமாற்றப்படுவதை தடுத்து, அவர்கள் பயன்படக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் நிறைய இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கன்னிகோவில் தோட்டம், லாடம்தோட்டம் போன்ற இடங்களில் ஆலயங்களுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களை பரம்பரை தர்மகர்த்தா என்ற முறையில் ஒரு கிரவுண்டுக்கு 60 ரூபாய், 30 ரூபாய் வாடகையாகக் கொடுத்து வளைத்துப்போட்டுக்கொண்டு, ஒரு கிரவுண்டிலே 30 குடித்தனத்தை வைத்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களை ஆலயத்துறை நிர்வாகிகளோடு பேசி, குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கையகப்படுத்திக்கொண்டு, அங்கே குடியிருக்கின்ற மக்களுக்கு பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் மாற்றியமைத்து, அந்த இடங்களில் நல்ல வீடுகளைக்கட்டித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலேயே குடிசைகள் அதிகமாக இருக்கிற பகுதி என்னுடைய தொகுதிதான். எனவே, நான் இங்கே எடுத்துச் சொன்ன குறைபாடுகளை நிவர்த்தி செய்து, பிரச்சனைகளில் நல்லமுறையிலே கவனம் செலுத்தி, என்னுடைய தொகுதி மக்களுக்கு நன்மைகள் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. வி. பி. சிந்தன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி மானியக் கொள்கை விளக்கக் குறிப்புபற்றி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப்பார்க்கும் போது மிகவும் கவர்ச்சியாக இருக்கிறது; அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டு. நடுத்தர மற்றும் உயர் வருவாய்

[திரு. வி. பி. சிந்தன்] [1986 ஏப்ரல் 3

தொகுதியினருக்கு தன்னிறைவு வீட்டுமனைகள், குறைந்த வருவாய் தொகுதியினருக்கு நில ஆர்ஜிதம், சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், சென்னை துரித இரயில் திட்டம் இப்படி பல்வேறு கவர்ச்சித் திட்டங்களை உள்ளிட்ட இந்த கொள்கை விளக்கக் குறிப்பைப் படிப்பதற்கு கவர்ச்சியாக இருக்கிறது, அழகாக இருக்கிறது. ஆனால் நடைமுறைகளைப் பார்க்கிறபோது இந்தத் துறையிலும், இந்தப் பக்கத்திலும் ஏற்படுகிற குறைபாடுகள், ஏற்படுகிற சிக்கல்கள், அதனால் இந்தப் பகுதி மக்களுக்கு வரக்கூடிய இன்னல்களைப் பற்றி குறிப்பிடுவதற்குத் தான் அதிகமாக நேரத்தை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

மத்திய அரசு மேலும், மேலும் வருவாய்த் துறையை எல்லாம் தன்னுடைய பிடிப்பிலே வைத்துக்கொண்டு இருக்கிறபோது மாநில அரசுக்கு இத்தகைய நல்ல திட்டங்களை உருவாக்குவதற்கு எவ்வளவு சிக்கல் ஏற்படும் என்பதைப் பற்றி மூன்று மாநிலங்களிலே ஆட்சி நடத்திய அனுபவத்தைக் கொண்ட என்னுடைய கட்சி உணர்ந்திருக்கிறது. அப்படி உணர்ந்த வகையில்தான் இதுபற்றிப் பேசப்படுகிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேநேரத்தில் மாநிலஅரசுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை வைத்து இத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய வகையில் செய்யவேண்டிய வேலைகளை உரிய நேரத்தில் அரசு செய்கிறதா, அது பூராவும் தமிழகத்தில் முறையாக நடத்தப்படுகிறதா என்று பரிசீலனை செய்வது மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்.

நில ஆர்ஜிதத்தை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். முதல் பிரச்சினையாக அதை நான் வலியுறுத்திச்சொல்ல விரும்புகிறேன். பல நல்ல திட்டங்களை இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆனால் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக அரசுக்கு ஒரு நல்ல கொள்கை, முரணற்ற கொள்கை, செயல் உள்ள கொள்கை இருக்கிறதா என்பது சந்தேகத்திற்குரியது. ரியல் எஸ்டேட் என்று சொல்லி, யார் யாரோ விளம்பரம் போட்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விற்பனை செய்கிறார்கள். ஒரு வீடு கட்டவேண்டும் என்ற எண்ணத்தின் காரணத்தால் சாதாரண ஏழை எளிய மக்கள் எப்படியாவது கொஞ்சம் பணத்தைத் திரட்டி அந்த நிலத்தைப் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் அந்த நிலம் ஏற்கெனவே எம்.எம்.டி.ஏ.—ஆலோ அல்லது வீட்டுவசதி வாரியத்தாலோ அல்லது மற்ற அமைப்புக்களாலோ ஆர்ஜிதம் செய்யப்பட்டதாக பத்திரிகையிலே எங்கோ ஒரு மூலையிலே விளம்பரமாக வந்திருக்கும். இவர்கள் அதைப் பார்த்திருக்க மாட்டார்கள். எனவே அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கும்போது அப்படிப்பட்டரியல் எஸ்டேட் காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு என்றைக்காவது முயற்சி எடுத்தது உண்டா? இந்த ரியல் எஸ்டேட்காரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அரசுக்கும் ஏதோ ஒரு இன்விசிபிள் லிங்க் அதாவது கண்ணுக்குத் தெரியாத, என்னைப் போன்ற சாதாரணமானவர்களுக்குத் தெரியாத ஒரு உறவு இருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலத்தை வாங்கியதற்குப் பிறகு அவரவர்கள் வீடுகளைக் கட்டுகிறார்கள். ஒரு இலட்சம், இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று ரூபாய்களைச் செலவு செய்து வீடுகளைக் கட்டியதற்குப் பிறகு ஒரு அக்விசிஷன் தாசில்தார் வந்து, இது எங்களுடைய நிலம் இதிலே வீடு கட்டியது தவறு, எனவே இதை உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும் என்கிறார்கள்.



1986 ஏப்ரல் 3] [திரு. வி. பி. சிந்தன்]

இங்கே அரசினுடைய அறிக்கையிலே ஒரு இடத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதாவது உயர்நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள்; திட்டத்தை நிறைவேற்றுவதற்கு குறுக்கே நிற்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. உயர்நீதிமன்றத்திற்குச் செல்லாமல் என்ன செய்ய முடியும்? உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமல்ல, உச்சநீதிமன்றத்திற்கும் தேவையானால் அவர்கள் செல்வார்கள். அவர்கள் அவ்வாறு செல்லவேண்டும் என்று கூட நானும் ஊக்கம் அளிப்பேன். அந்த ரியல் எஸ்டேட் காரர்கள் விளம்பரப்படுத்துகிற நேரத்தில் நீங்கள் ஏன் அது பற்றித் நடவடிக்கை எடுக்க மறுக்கிறீர்கள். எல்லாம் முடிந்து விட்டதற்குப் பிறகு அரசு வந்து......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரியல் எஸ்டேட்காரர்கள் விற்கிறபோது அரசாங்கத்திற்குச் சொல்லிவிட்டு விற்பது இல்லை. எனவே ரியல் எஸ்டேட்காரர்களுக்கும் அரசுக்கும் தொடர்பு இருப்பதாகச் சொல்வது முற்றிலும் உண்மைக்கு புறம்பான ஒன்று என்று தெரிந்தே அப்படி சொல்வதாக இருக்கிறது. ரியல் எஸ்டேட் காரர்கள் புறம்போக்கு நிலத்தை விற்கிறார்களா அல்லது பட்டா நிலத்தை விற்கிறார்களா என்பது தெரியாது. எனவே தொடர்பும் கிடையாது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படித் தொடர்பு இல்லாத நிலைமையில் அதுபற்றிச் சொன்னால் பரவாயில்லை; உரிய நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நான் இன்விசிபிள் லிங் என்று சொன்னேன். இல்லை என்றால் விசிபிள் லிங்க் என்று நான் சொல்லியிருப்பேன். அங்கே ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தை, அல்லது ஆர்ஜிதம் செய்வதற்காக நோட்டிஃபிக்கேஷன் கொடுக்கப்பட்ட நிலத்தை ரியல் எஸ்டேட்காரர்கள் விற்பதாக பத்திரிகையிலே அறிக்கை விடுகிறார்கள். அப்போதே அரசாங்க

அதிகாரிகள் அதைக் கண்காணித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இது ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்; எனவே இதை இப்படிச் செய்வது தவறு என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள். உங்களுக்கு நான் ஏராளமான தகவல்கள், விவரங்களை கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதுமட்டுமல்ல. ஏரிப்புறம்போக்கு என்று சொல்லியிருக்கிற பகுதியிலே வீடு கட்டுவோம் என்று சொல்கிறார்கள். ஏரிப்புறம்போக்கிலே மருத்துவக்கல்லூரி அமைக்கத் தடை செய்வதில்லை. எம்.எம்.டி.ஏ. ஸ்லம் க்ளியரன்ஸ் போர்ட். போன்ற அமைப்புக்களைப் பொறுத்தவரையில், அதாவது நில ஆர்ஜிதம் என்பதைப் பொறுத்த வரையில், உங்களுடைய அடிப்படையான கொள்கை தவறானது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் நான் இந்த உதாரணத்தைச் சொல்கிறேன்.

ஆகவே, ஹைகோர்ட்டுக்கு போவதோ, சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்லுவதையோ தடுத்து அந்தத் திட்டங்கள் முறையாக செயல்படவேண்டுமானால், நிலங்களை ஆர்ஜிதம் செய்வதிலே ஒரு உறுதியான கொள்கையை நீங்கள் கடைபிடிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். கட்டப்பட்ட வீடுகளிலே ஏற்படுகிற குறைபாடுகளைப் பற்றி நான் அதிகமாக விளக்கிச் சொல்ல விரும்பவில்லை, ஸ்டேண்டர்ட் முறைப்படி மெட்டீரியல்ஸ் உபயோகப்படுத்துவது இல்லை. சிமெண்ட் கலவையானாலும் சரி, கல்லானாலும் சரி, செங்கற்கள் ஆனாலும் சரி, மணலானாலும் சரி சரியான விகிதாசாரத்தில் இல்லாததால் அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான முறைகளிலே தவறுகள் ஏற்பட்டு ரூஃப்களிலே லீக்கேஜும், விரிசலும் ஏற்பட்டுவிடுவதைப் பார்க்கிறோம்.

நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்பினால் இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழுவாக, அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து ஒரு டெலிகேஷன் என்ற முறையிலே இந்த வீடுகளை, ஹவுசிங் போர்டு கட்டிய வீடுகளானாலும் சரி, ஸ்லம் போர்டு கட்டிய வீடுகளானாலும் சரி, சென்று பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தால், அந்த வீடுகள் எப்படி இருக்கின்றன என்று தெரியும். அந்த வீடுகள் எவ்வளவு சப்-ஸ்டேண்டர்ட்டாக இருக்கின்றன என்பதையும் அறியமுடியும், அதே நேரத்திலே பிரைவேட்டிலே கட்டப்படுகிற வீடுகளில் ரூஃப்களிலே விரிசல் ஏற்படுவதில்லை, லீக்கேஜும் ஏற்படுவதில்லை.

அது மட்டும் அல்ல. சாயில் டெஸ்ட் என்பது முறையாக நடைபெறுகிறதா? வீடுகளைக் கட்டுவதற்கு முன்னால் அந்த இடத்தில் சாயில் டெஸ்ட் செய்தாக வேண்டும். ஆனால் சாயில் டெஸ்ட் செய்யப்படுவதே இல்லை. அந்த அதிகாரிகள் ஏனோ தானோ என்று செயல்படுகிறார்கள். அதை எல்லாம் அமைச்சகம் முறையாக கண்காணிக்கத் தவறி இருக்கிறது.



அது மட்டும் அல்ல, இந்தக் கட்டிடங்கள் எழுப்பப்பட்டதற்கு பிறகு அங்கு எந்தவித வசதிகளும் செய்து தருவது கிடையாது. நான் ஸ்லம் போர்டையும், கூட்டுறவு இலாகாவினுடைய கட்டிடங்கள் எழுப்புகின்ற அமைப்பையும், ஹவுசிங் போர்டையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். கட்டிடங்களை கட்டி விடுகிறார்களே தவிர அங்கு குடிதண்ணீர் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் கிடையாது.

என்னுடைய தொகுதியிலே எம்.எம்.டி.ஏ. உலக வங்கியின் உதவியுடன் 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகட்டும் ஒரு பெரிய திட்டம் இருக்கிறது. (சிட்கோ குடியிருப்புத் திட்டம்) இப்போது கூட என்னுடைய தொகுதியிலே முகப்பேர் என்ற இடத்திலே இன்னொரு பெரிய திட்டம் அமலாக்கப்படுகிறது. அங்கு மட்டும் அல்ல, பல இடங்களிலும் வீடுகளை வரிசையாக அடுக்காக கட்டி முடித்துவிடுகிறார்களே தவிர அந்த கட்டிடங்களில் வசிப்பவர்களுக்கு குடிதண்ணீர் வழங்க ஹவுசிங் போர்டு அல்லது ஸ்லம் போர்டு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா என்றால் இல்லை. ஒரு கிணற்றை தோண்டி வைத்துவிடுகிறார்கள். பிறகு உங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்போகிறோம். அபிவிருத்தி வரி கொடுங்கள் என்று சொல்லி அந்த வீட்டுக்காரர்களிடம் பணம் வசூல் செய்து விடுகிறார்கள், ஆனால் குடிதண்ணீர் வழங்குவதற்கு மெட்ரோ என்ற தனியான அமைப்பு உண்டு. ஆகவே வீடுகளைக் கட்டியதற்குப் பிறகு அந்த குடியிருப்புகளுக்கு தண்ணீர் வழங்கும் பொறுப்பை அந்த மெட்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டியதுதானே? அதைச் செய்வதற்கு என்ன கஷ்டம். அதோடு, அந்த வீடுகளின் டிரையினேஜ் நிலைமை என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அது குறித்து நான் பலமுறை பேசியிருக்கிறேன். இப்போது சொல்கிறேன், அந்த வீடுகளுக்குச் சென்றால் அந்த கக்கூஸினுடைய கதவுகளை திறந்து உள்ளே போக முடியாத நிலை. ஏனென்றால் டிரையினேஜ் சிஸ்டமே அங்கே வேலை செய்வதில்லை. அத்தோடு குப்பை கூளங்களும் அதிகம்.

அது மட்டும் அல்ல, ரோடு வசதியே சரியாகக் கிடையாது. அதற்குக் காரணம் ரோடு போடுவதற்கான அமைப்பு ஹவுசிங் போர்டுக்கு கிடையாது. கார்ப்பொரேஷனிடம் உண்டு, மெட்ரோவிடம் உண்டு. ஆனால் மெட்ரோ நிறுவனமோ, கார்ப்பொரேஷனோ கட்டப்பட்ட அந்த குடியிருப்புகளுக்கான ரோடுகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், அவர்கள் சொல்கிறார்கள், அது எங்களுடைய ஸ்டேண்டர்டுக்கு இல்லை என்கிறார்கள். எங்களுடைய ஸ்டேண்டர்டுக்கு கால்வாய் நீட்டிப்பு இல்லை, எங்களுடைய ஸ்டேண்டர்டுக்கு டிரையினேஜ் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நான் இதுகுறித்து பல கடிதங்கள் எழுதியிருக்கிறேன். கார்ப்பொரேஷன் கமிஷனருக்கு எழுதிய அந்தக் கடிதங்கள் வேண்டுமானால் உங்களுடைய பார்வைக்கு தருகிறேன். கார்ப்பொரேஷன் அதிகாரிகள் சொல்லக்

கூடிய குற்றங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாங்கள் அதனை எடுக்க முடியாது. அந்த டிரையினேஜ் பிராப்பராக கட்டப்படவில்லை. ரோடுகள் சரியான முறைப்படி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். வீட்டுவசதி வாரியம் அந்த வீடுகளைக் கட்டுவதற்கு முன்னால், ரோடுகளைப் போடுவதற்கும் டிரையினேஜ் கட்டுவதற்கும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களையே ஏன் பயன்படுத்தக் கூடாது? அப்படி அவர்களை கலந்து ஆலோசிக்காமல் கட்டிடங்களை கட்டி முடித்ததற்குப் பிறகு, அங்கே குடிதண்ணீர் இருக்காது, டிரையினேஜ் சரியாக வேலை செய்யாது. அது மட்டும் அல்ல, அதன் ஒரு மூலையிலே குப்பை மேடு இருக்கும். அவைகளை எடுத்துச் செல்ல வழிமுறைகள் கிடையாது.

என்னுடைய தொகுதியில் பாடியில் உள்ள மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் உலக வங்கியின் உதவியுடன் கட்டப்பட்ட வீடுகள். அங்குள்ள ரோடுகளை பராமரிக்கும் பொறுப்புகளை கார்ப்பொரேஷன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் 5 லட்சம் ரூபாயை அந்த நிறுவனம் கொடுக்க வேண்டும் என்று கார்ப்பொரேஷன் வலியுறுத்துகிறது. அங்கே ஒரு பக்கத்தில் குப்பை அப்படியே கொட்டப்பட்டு குவிந்து கிடக்கிறது. டிரையினேஜும் வேலை செய்யவில்லை. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கவனிக்க வேண்டும். ஸ்லம் போர்டினால் கட்டப்பட்ட குடியிருப்புகளிலும் இந்த நிலைமையே இருந்துக் கொண்டிருக்கிறது. மெட்ரோ தண்ணீர் கொடுக்க மறுக்கிறது. இதையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

சென்னை நகரத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள கிணற்றுத் தண்ணீர் வெகு விரைவிலே மிக மிக மோசமாக மாறும் நிலைமைக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன். ஆகவே குடிதண்ணீர் கொடுக்கின்ற பொறுப்புடைய மெட்ரோ போன்ற நிறுவனத்திற்கு அந்த குடியிருப்புகளை எவ்வளவு சீக்கிரத்தில் மாற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் மாற்றிக் கொடுத்தால் அவ்வளவு நல்லது. இன்னும் சொல்லப்போனால் குடியிருப்புகளைக் கட்டுகின்ற நேரத்திலேயே அது ஸ்லம் போர்டு கட்டுகின்ற வீடுகளானாலும் சரி, ஹவுசிங் போர்டு கட்டுகின்ற வீடுகளானாலும் சரி, குடிதண்ணீர், டிரையினேஜ், ரோடுகள், மின் இணைப்பு போன்ற வசதிகளைச் செய்துக் கொடுக்க, அந்தந்த நிறுவனங்களே, கார்ப்பொரேஷனோ மெட்ரோ நிறுவனமோ எடுத்துச் செய்தால்தான் அது சிறப்புடையதாக இருக்கும் என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

அதேமுறையில் விளக்குகள், ரோடுகள் என்று அந்தப் பிரச்னைகளையெல்லாம் நான் விரிவாகப் பேசுவதற்கு நேரமிருக்காது. ஆகவே இந்தப் பிரச்னைகளில் கொள்கை அடிப்



படையில் அரசு ஒரு முடிவை எடுக்க வேண்டும். அரசக்கு இது சம்பந்தமாக ஒரு கொள்கை இல்லாத காரணத்தால் அல்லது இதனை அமல் நடத்தாத காரணத்தால் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. வீடு கட்டுவதில் இன்னொரு பிரச்னையை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விருப்புகிறேன்.

பிராவிடண்ட் பண்ட் வசதி இருக்கிற ஊழியர்கள் முன் காலத்தில் எல்லாம் பிராவிடண்ட் பண்ட் தொழிலாளர்களால், அரசு ஊழியர்களால், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களால் போடப்பட்டு வந்த அந்தப் பணத்தைத் தான் கொடுத்துக் கொண்டு வந்தது, இப்போது மத்திய அரசு அந்தச் சட்டத்தைத் திருத்தி நிர்வாகங்கள் கொடுக்கக்கூடிய பங்கையும் சேர்த்து வீடு கட்டும் திட்டத்தை உருவாக்குவதற்கு அந்த வகையில் உதவி செய்கிறது ஹட்கோ நிறுவனம். அதற்காக அதிக வசதிகள் உள்ளன. அதேபோல வசூல் செய்வதிலும் கஷ்டமில்லை. அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் இத்தனை ஆண்டுகளுக்கு இவ்வளவு என்று மாதந்தோறும் வசூல் செய்ய வேண்டும். அந்த வகையில் செய்தால் தொழிற்சாலை அதிபர்களோ, அந்த நிறுவனத்தின் அதிபர்களோ அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்து உங்களுக்கு முறையாக பணமும் கிடைக்கும். அந்தத் துறையில் வீடு கட்டும் திட்டம் பெரிய அளவிற்கு முன்னேற்றம் அடையவில்லை என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இந்த நலிந்த பிரிவினருக்கு இன்னும் அதிகமாக வீடுகள் கட்டுவதற்கு ஹட்கோ நிறுவனத்தின் உதவியையும், மற்ற நிறுவனங்களின் உதவியையும் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நடத்திச் செல்கிற முறைகளைப் பற்றி, நிர்வாகத்தைப் பற்றியெல்லாம் நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஒரே ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றி மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். கோடிக்கணக்கான ரூபாய் இதிலே செலவழிக்கப்படுகிறது. அது முறையாக செலவழிக்கப்படுகிறதா? பக்கம் பக்கமாக அடிட் ரிப்போர்ட்டுகளை, ஒன்றல்ல, இரண்டல்ல மூன்று ஆடிட் ரிப்போர்ட்டுகளை எங்கள் கையிலே கொடுத்திருக்கிறீர்கள். தமிழ்நாடு ஹவுசிங் போர்டு 1961 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தினுடைய 124 பிரிவின்படி ஆடிட் கேட்கக்கூடிய எல்லா விவரங்களையும் கொடுக்க வேண்டும் 1975–76-லிருந்து 1982-ம் ஆண்டு வரையில் பல அதிகாரிகள் தேவையான ரெக்கார்டுகளை ஆடிட்டிலே கொடுக்கவில்லை. இதை ஆடிட் ரிப்போர்ட் கூறுகிறது. அந்த அதிகாரிகள் மீது நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் எக்சிகியூட்டிவ் என்ஜினியர்ஸ் மற்றும் சிலர், நான் எல்லோரையும் சொல்லவில்லை. முறையாக கணக்கு கொடுத்தவர்களும் இருக்கிறார்கள். அதனுடைய கன்சாலிடேட் ரிப்போர்ட் கொடுக்க முடியவில்லை. 12,726 ஆடிட் அப்ஜெக்ஷன்ஸ் வந்ததாக ரிப்போர்ட் கூறுகிறது. அது கிட்டத்தட்ட 15 கோடியே 98 லட்சம் ரூபாய் வரக்கூடிய கணக்கு. அந்தக் கணக்கிற்கு இன்னும் ஒரு இடத்தில் கூறப்படு

கிறது, உரிய பைல் கொடுக்கப்படவில்லை, ''மெஷர்மெண்ட் புத்தகம்'' கொடுக்கப்படவில்லை, ரெக்கார்டை வழங்க மறுக்கிறார்கள். அதனால் இந்தக் கணக்கை பரிசீலிக்க முடியவில்லை என்று ''ஆடிட் ரிப்போர்ட்'' கூறுகிறது. இதனுடைய விளைவாக கோடிக்கணக்கான ரூபாய் இதில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 15 கோடியே 98 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ''சிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்'' காலத்திலிருந்து ஒரு இடத்தில் 20 ஆண்டுகள் கணக்கு கூட இன்னும் கொடுக்கவில்லை. ஒருவேளை வெள்ளி விழா முடிந்ததற்குப் பிறகு கொடுப்பார்களோ என்னவோ தெரியவில்லை. இப்படி முறைகேடுகள் மலிந்திருக்கின்றன. அந்த முறைகேடுகளை தவிர்ப்பதற்கு இந்த அறிக்கையிலே எதுவும் சொல்லப்படவில்லை.

வீடு வழங்குவதில், வாடகை வசூல் செய்வதில் இருக்கிற குறைபாடுகளைச் சொன்னால் அவர்களுக்குக் கொடுத்தீர்களே, இவர்களுக்குக் கொடுத்தீர்களே என்ற முறையிலே லாவணி இந்தச் சபையிலே நடக்கும் என்பதால் அந்த விஷயத்திற்கு நான் போகவில்லை. முறையாக வீடுகளை விநியோகம் செய்வதில் ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்? அதனை முறையாக பதிவு செய்து, முறையாக முன்பணம் வாங்கி செய்யலாம். இதிலே லாட்டரி சீட்டு போல ஏற்பாடு தேவைதானா? ஏன் முறையாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: துணைத் தலைவர் அவர்களே, முறையாக லாட்டரி சீட்டு போல குலுக்கல் அடிப்படையில் நடத்தும்போதே தேவையில்லாத கூக்குரல்கள் எல்லாம் வருகின்றன. உறுப்பினர் அவர்கள் அன்புடனும், பாசத்துடனும் கேட்கிறார்கள். அவர்கள் சொல்கிற முறையில் செய்தால் நாங்கள் எங்கே போவது என்று எங்களுக்குத் தெரியாது.

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, மனு கொடுக்கிறவர்களுடைய சீனியாரிட்டி அடிப்படையில் கொடுக்க முடியும் என்பது எங்களுடைய கட்சியினுடைய கருத்து. நான் இப்போது வாதத்திற்கு மட்டும் இதைச் சொல்லவில்லை. இதை முறைப்படுத்தினால் நிச்சயமாக இது சாத்தியம், பொலிட்டிகல் கன்சிடரேசனில், உரிமை வழங்கப்படாதவர்கள் வீடுகளுக்குள்ளே நுழைந்து மாதக் கணக்கிலே, வருடக்கணக்கிலே தங்குகிறவர்களை உங்களால் அப்புறப்படுத்த முடியவில்லை. வாடகையைக் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களிடமிருந்து உங்களால் வாடகையை வசூலிக்க முடியவில்லை. போலிஸ் நிலையத்திலே கம்ப்ளெயின்ட் பண்ணினால், அதற்கு யாரேனும் ஒரு அரசியல் கட்சித் தலைவர் பக்கத்திலே வந்து நிற்கிறார். எனவே இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு முடியவில்லை என்றால், இது வெட்கக்கேடாகத் தான் இருக்கும் என்பதை மட்டும் நான் சொல்ல விருப்புகிறேன்.



இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகள், கான்ட்ராக்ட் மூலமாக முறையாகக் கட்டப்படாத காரணத்தாலே, என்னுடைய தொகுதியில் உள்ள திருமங்கலம் பகுதியில் உள்ள கிணறு உடைந்து அங்கே 3 உயிர்கள் பலியானதைப் பற்றி நான் பல தடவை அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டேன். அந்த குடும்பத்திற்கு ஏதேனும் நஷ்டஈடு கொடுக்கக் கூடாதா என்று கேட்டேன். சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் சட்டமன்றத்திலே ஒரு கேள்வி எழுப்பினேன். அந்தக் கேள்வி இதுவரையில் வரவில்லை. முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது கொடுக்க முடியுமா என்று கேட்டதற்கு, இதுவரையில் பதில் வரவில்லை. என்னுடைய தொகுதியில் உள்ள இந்த வீடு கட்டும் திட்டங்களை எல்லாம் பரிசீலனை செய்து, அதற்குத் தேவையான முறையிலே உள்ள ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டிக் கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

* திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரிய மானியக் கோரிக்கையில் ஒரு சில உணர்வுகளைச் சொல்லி, அரசினுடைய நல்லகாரியங்களுக்கு நல்லவர்கள் பாராட்ட வேண்டும் என்பதையும் செய்யவேண்டிய பணிகளை எடுத்துச் சொல்கின்ற வகையில் இந்த மானியக் கோரிக்கையினுடைய விவாதங்கள் அமையவேண்டுமென சொல்லி, இன்றைக்கு சிறப்பாகவும் செம்மையாகவும் வீட்டு வசதி வாரியமும், குடிசைப் பகுதி மாற்று வாரியமும் இணைந்து ஏழை எளியவர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் நல்ல பல பணிகளை, தங்களது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான், கடந்த காலங்களிலே ஒவ்வொரு நேரத்திலேயும், பாராட்டி இருக்கிறேன். அவைகளை மக்கள் அனுபவித்துச் சொல்லவும், மக்கள் பாராட்டவும், அந்தக் கருத்துக்களை எல்லாம் கேட்கக்கூடிய வாய்ப்பினை பெற்றவன். இன்றைக்கு அந்த மக்கள் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

முந்தைய ஆட்சிக் காலத்திலே எல்லாம் வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கீடு முறைகள், நேரடியாகவே ஒதுக்கப்பட்டு வந்த ஒரு முறையை மாற்றி, புரட்சித் தலைவர் அவர்கள் தான், குற்றச்சாட்டுகளுக்கும் முறைகேடுகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்ற அடிப்படையில், ஒரு புதிய முறையைக் கொண்டு வந்து, ஒவ்வொரு பகுதியிலேயும் வீடுகளைக் கட்டும் போது யார் யாருக்கு வீட்டு மனைகள் அல்லது வீடுகள் தேவைப்படுகிறதோ, தேவைப்படுகிறது என்று சொல்கிறார்களோ, அவர்கள் மனு செய்தால், அவர்களது மனுக்களை குலுக்கல் முறையிலே தேர்வு செய்து, எந்தவிதமான சிபாரிசும் இல்லாமல், எந்தவிதமான முறைகேடுகளுக்கும் வழியில்லாமல், அவர்களது அதிர்ஷ்டத்தின் பெயரால்—இங்கே கூட லாட்டரிச் சீட்டு என்று சொன்னார்களே

அந்த முறையில்—இன்றைக்கு மனைகளையும் வீடுகளையும் வழங்குகின்ற ஒரு புதிய முறையைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவர் என்பதை இங்கே உள்ள நண்பர்கள் எல்லாம் மறந்துவிட்டு, வீட்டு வசதி வாரிய-முறைகேடு என்றெல்லாம் சொன்னார்கள். அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆகவே புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு புதிய முறையை, ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் பயன்பெற வேண்டும் என்ற ஒரு புதிய முறையை நடைமுறைப்படுத்தியதன் வாயிலாக இன்றைக்கு வீட்டு வசதி வாரியம் நல்ல பல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. அதற்காக நான் அந்த வாரியத்தையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் குடிசைப் பகுதி மாற்று வாரியம். சென்னை மாநகரத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கும், நகர்ப்புறங்களை விட்டு வெளியே இருக்கின்ற மாவட்டத் தலைநகரங்களிலேயும் இன்றைக்கு விரிந்து செயலாற்றிக் கொண்டிருக்கிற குடிசைப் பகுதி மாற்று வாரியம் நல்ல பல பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அந்த வாரியத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசியவர்கள் எல்லாம் ஒரு விவரத்தை சொன்னார்கள். பத்திரிகை நிருபர்களுக்கு வீடுகளை ஒதுக்க வேண்டும் என்ற அந்த கோரிக்கையை நான் ஏற்கனவே அந்த பத்திரிகை நிருபர்களை எல்லாம் அழைத்து எனது தொகுதியிலே இருக்கின்ற தாடண்டர் நகர் பகுதியிலே வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாக கட்டிக்கொண்டு இருக்கிற ஏறக்குறைய 700 குடியிருப்புகளில் குறைந்தது 200 குடியிருப்புகளையாவது பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கவேண்டும் என்ற அந்த கோரிக்கையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு போய் வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்கள் அந்தப் பணியை நிறைவேற்றலாம். புதிதாக இடம் தேடவேண்டிய அவசியம் இல்லை. புதிதாக வீட்டு மனை கட்ட வேண்டிய அவசியமில்லை. கட்டி முடிக்கப்பட்ட தாடண்டர் பகுதியில் இன்றைக்கு அற்புதமாக இருக்கின்ற அந்த நிலத்தில் பத்திரிகை நிருபர்களுக்கு வசதியாக இருக்கின்ற—அவர்கள் எந்த நேரத்திலும் போய் வரக்கூடிய இடமாக விளங்கிக்கொண்டிருக்கிற தாடண்டர் நகர் பகுதியை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அந்தக் கோரிக்கையை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-30)

அதேபோல் இன்றைக்கு மற்ற பல்கலைக் கழக செனட்டிலும், சிண்டிகேட்டிலும் கூட சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அதிகமாக நிதி



ஒதுக்கீடு பெறுகின்ற வீட்டு வசதி வாரியத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் உறுப்பினர்களாக இடம் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எனக்கு முன்பாக பேசிய அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சிந்தன் அவர்கள் சொன்னதைப்போல தனியார்கள் லே அவுட் போட்டு அவர்கள் மனைகளை விற்பனை செய்கின்ற காரணத்தால் பல தொல்லைகள் வந்து விடுகிறது. அவர்கள் இன்றைக்கு எந்தவிதமான அப்ரூவ்டு லே அவுட்களாகப் பெறாமல் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முறையான அந்தப்பணத்தையும் செலுத்தாமல் அவர்கள் மனைகளை விற்பனை செய்கின்ற காரணத்தாலே அங்கே குடியேறுகின்ற மக்கள் எந்த விதமான அடிப்படை வசதிகளையும் பெறாமல் அவர்களுக்கு குடிநீர், கழிவு நீர் செல்கின்ற பாதை, சாலை வசதி, விளக்கு வசதி போன்ற வசதிகளை மாநகராட்சியால் செய்ய முடியாமல் போய்விடுகிறது. ஆகவேதான், தனியார்கள் ''லே அவுட்'' போடுவதை தடை செய்யவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழகத்திலே தனியார்கள் லே அவுட் போட்டு விற்பனை செய்வதை தடை செய்கின்ற வகையில் புதிய சட்ட திருத்தத்தை கொண்டு வரவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சென்னை மாநகரத்தில் நிறைய குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளிலெல்லாம் ஏழை எளியவர்கள், மீனவ சமுதாய நண்பர்கள், அரிஜன நண்பர்கள் என எல்லா தரப்பாரும் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் இன்றைக்கு வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்களையும், எங்களது தமிழகத்தினுடைய நாயகர் ஏழைகளுக்கு எப்போதும் உதவிக் கொண்டிருக்கிற இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக் கொள்வதெல்லாம் அந்தக் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை பராமரிப்பதற்காக 20 ரூபாய் என்கிற அந்த வாடகையை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். வாடகை அல்ல பராமரிப்புக்காக. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தக் குடியிருப்புகளை அங்கு குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கி, அந்தக் குடியிருப்புகளை மாநகராட்சி வசம் ஒப்படைத்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மாநகராட்சியே பராமரிக்கின்ற வகையில் ஒரு முன்மாதிரியான சட்டதிருத்தத்தை கொண்டு வரவேண்டுமென்று அன்போடு கேட்டுகொள்கிறேன். ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் ஆகியோருக்கு 20 ரூபாய் ஒன்றும் பெரிய தொகை இல்லையென்று நினைக்கலாம்; இருந்தாலும் அவர்களுக்கு மிகச் சிரமமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த ஏழை எளியவர்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் என்றைக்கும் உதவி செய்து கொண்டிருப்பவர்கள் என்பதை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நிரூபித்துக் காட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே அவர்களது மேலானபார்வைக்கு இந்தக் கோரிக்கையையும் இணைத்துக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் குடியிருப்பவர்கள் அன்–ஆதரைஸ்டு என்று அனுமதி பெறாமல் வசிப்பவர்கள். 30–4–85 க்கு முன்பாக இருப்பவர்களுக்கெல்லாம் அந்த வீட்டை சொந்தமாக்கித் தரவேண்டும் என்ற வாரியத்தின் தீர்மானம் முடிவு செய்து அது அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தை அனுமதித்து, அப்படி அனுமதியின்றி வசிப்பவர்கள் 800 ரூபாய் அபராதம் கட்டினால் அவர்களுக்கும் வீடுகளை பெயர் மாற்றம் செய்து வழங்கலாம் என்கின்ற அந்த வாரிய தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் ஒப்புதல் அளித்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல எனக்கு முன்பாக பேசியவர்கள்கூட சொன்னார்கள். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் பணியாளர்கள் நிரந்தரம் இல்லாமல் இருக்கின்றனர் என். எம். ஆர். என்று அழைக்கப்படுகின்ற அந்தப் பணியாளர்கள்—குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் நிரந்தரப்பணி இருக்கிறது. அந்த நிரந்தரப் பணிக்கு நிரந்தரம் இல்லாத ஆட்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது எல்லாம் அந்த நிலை இல்லாத பணியில் வேலை செய்து கொண்டு இருக்கிற என்.எம்.ஆர். பணியாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும். 7 ஆண்டுகளுக்கு மேலாக, பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு நாம் உதவி செய்கின்ற வகையில் வேறு எந்த வேலையும் தெரியாமல், வேறு வழி இல்லாமல் 7 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் பணியுரிந்து வருகின்ற அந்த ஏழை தொழிலாளர்களுக்கு உதவுகின்ற வகையில் ஒரு குறிப்பிட்ட வரையறையை வைத்து அவர்களுக்கு பணி பாதுகாப்பு செய்து நிரந்தரம் செய்யவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பல பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. கடுமையான வெள்ளம் வந்து பாதிக்கப்பட்ட அடையாறு கரையோரப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளாக இருக்கின்ற ஜோதி அம்மாள் நகர், சூரியா நகர், அன்னை சத்தியா நகர், கோட்டூர்புரத்தில் கட்டப்பட்டுள்ள தீப்பிடிக்காத வீடுகள் தாழ்வான பகுதியில் இருக்கின்ற அந்த குடிசைப் பகுதிகளை மேடான பகுதிக்கு மாற்றி அவர்களுக்கு நிரந்தரமான தீர்வை செய்து தரவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் முன்பு கோட்டூர்புரத்தில் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது நேரடியாக வந்து பார்த்துவிட்டு அதிகாரிகளிடம் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை விரைவாக செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்,





அதேபோல் கடந்த ஆண்டு திடீர் நகர், ஆற்றுமாநகர் கோதா மேடு பகுதியிலுள்ள குடிசைகள் கடுமையாக தீ விபத்தால் பாதிக்கப்பட்டது. இந்த சேதத்தை கேள்விபட்ட உடன் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்த குடிசைப் பகுதிக்குப் பதிலாக குடிசை மாற்று வாரியம் வாயிலாக நிரந்தர மாடி குடியிருப்புகளை கட்டித் தரப் படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு அந்தப் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்தப் பணியை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு ஒரு செய்தியைச் சொன்னார்கள், அட்கோ நிதி உதவி வழங்கப் பட்டும் அந்தப் பணி இன்னும் எம்.எம்.டி.ஏ. ஒப்புதல் வழங்க வில்லை என்று சொன்னார்கள். ஆகவே குடிசைப் பகுதி மாற்று வாரிய அதிகாரிகளும் எம்.எம்.டி.ஏ. அதிகாரிகளும் இணைந்து அதற்கான வரைபட அனுமதிகளை விரைவாக வழங்கி அந்தத் திட்டப் பணியை இந்த ஆண்டு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தொடங்குகின்ற வகையில் விரைவாக அந்தத் திட்டப் பணியை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு வாரியத்தால் ஏ.எஸ்.எஸ்.ஐ. என்ற ஒரு திட்டத்தின் கீழ் அவர்கள் 430 லட்சம் கேட்டு இருக்கிறார்கள். ஆனால் வழங்கப்பட்ட நிதியோ 70 லட்சம் தான். ஆகவே இந்த 70 லட்ச ரூபாய் என்பது நிச்சயமாக அந்தத் திட்டப் பணியை செம்மையாக நிறைவேற்ற போதாது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 430 லட்ச ரூபாய் இல்லை என்றாலும் கூட ஓரளவுக்கு 200 லட்சம் ரூபாயாவது ஒதுக்கித் தாருங்கள் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் 147 வட்டத்தில் அமைந்து இருக்கின்ற காமராஜ்புரம் என்ற இடத்தில் 'அட்கோ'வின் வாயிலாக அங்கே இருக்கின்ற 200 குடிசைப் பகுதிகளை எடுத்துக்கொண்டு பணி செய்யபடும் என்ற ஒரு திட்டம் இருந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை அந்தத் திட்டம் இன்றைக்கு நிறுத்திவைக்கப்பட்டு இருக்கிறது. வேளச்சேரி ஏரிக்கு அருகில் இருக்கிற காரணத்தால் காமராஜ் புரம் திட்டப் பகுதி நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அந்த வேளச்சேரி ஏரியை ஆழ்படுத்த நீர் பிடிப்பை குறைக்க இன்றைக்கு பொதுப் பணித் துறையின் மூலமாக 5 லட்சம் செலவில் திட்டத்தை நிறைவேற்றி பணியைத் துவக்க இருக்கிறது.

ஆகவே நான் வீட்டு வசதித் துறை செயலாளர் அவர்களையும் எம்.எம்.டி.ஏ. அதிகாரிகளையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்தத் திட்டத்தை விரைந்து செயலாற்றுங்கள், என்றும் அந்த திட்டம் தீட்டப்படுமானால்

அங்கே நீண்ட நாட்களாக வாழ்ந்து கொண்டு இருக்கிற மக்கள் பல்வேறு துன்பததிற்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதால அந்தத் திட்டதலை நிறைவேறற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எம்.எம்.டி.ஏ. வரைபடம் வழங்குவதில் சில நேரங்களில் வாரியத்துற்குகூட காலதாமதம் செய்கிறது. ஆகவே இதுபோன்ற வாரிய பணிகளுக்கு, ஏழை எளிய மக்களுககாக பயன்படுகிற அந்த சமுதாய பணிகளுக்காக அனுப்பி வைக்கப் படுகிற திட்டங்களுக்கு விரைந்து செயல்படவேண்டும் என்பதையும் நினைவுபடுத்துகிறேன்.

இன்றைக்கு குடிசைப் பகுதி மாற்று வாரியம் வாயிலாக 2 மேம்பாட்டுத் திட்டம் முடிந்து 3-வது மேம்பாட்டுத் திட்டம் இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே, 3-வது மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி எனது பகுதியில் இருக்கின்ற நான் ஏற்கனவே தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிற அந்த குடிசைப் பகுதிகளையும் இதில் இணைத்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன.

குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். இது போதாது. ரூ. 6 கோடி அளவில் உயர்த்தவேண்டும்.

*(பிற்பகல் 12—40)*

நல்ல பல பணிகளைச் செய்யவேண்டுமென்று சொல்லி, வீட்டுவசதி வாரியமும் சரி, குடிசைப் பகுதி மாற்று வாரியமும் சரி, இந்த இரண்டு வாரியங்களின் வாயிலாக புரட்சித் தலைவர் அவர்கள், ஏழைஎளிய நடுத்தர மக்கள் பலன் பெறவேண்டுமென் பதற்காக காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிற ர்கள்.

இங்கே கூட பல பேர்கள் சொன்னார்கள், முறைகேடுகள் நடை பெற்றிருக்கின்றன என்று. நான் ஒன்றைபேரவைத துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக கேட்டுக்கொள்வது மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவிட்டு இந்த வாரியத்தினுடைய நடவடிக் கைகளைக் குறித்து முழுமையான அளவில் ஒரு விசாரணையைச் செய்தால், யார் யாருக்கு கொடுக்கப்பட்டது, எப்படி முறை கேடுகள்நடந்திருக்கின்றன. என்னென்ன நியாயங்கள் வழங்கப்பட் டிருக்கின்றன, எந்த அரசு வழங்கியிருக்கிறது என்ற உண்மை வெளி வரும் ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுவ தெல்லாம், ஒரு விசாரணையை வையுங்கள், முழுமையான அறிக்கையை வையுங்கள். வீட்டுவசதி வாரியம் தோன்றிய திலிருந்து இது வரை ஒதுக்கப்பட்ட மனைகளும், வீடுகளும் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டன, எப்படி ஒதுக்கப்பட்டன, யாருடைய காலத்தில் ஒதுக்கப்பட்டன, நேர்மையாக, நேரடியாக ஏழைஎளிய மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்ற வரலாற்று உண்மைகள் எல்லாம் வெளிவரும்.





புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளியவர்களுக்கு மட்டு மல்லாமல், எல்லா தரப்பினருக்கும் பயன்கிடைக்கும்படி திட்டங் களைத் தீட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள் இன்றைக்கு குறை கூறிவருகிறார்கள்.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நீங்கள் எந்தவிதமான சங்கடமும் பட வேண்டாம், எந்தவிதமான அச்சமும் கொள்ள வேண்டாம். உண்மையில் இந்த அரசு. ஏழை எளியவர்களுடைய அரசு. ஏழைகளின் நம்பிக்கையைப் பெற்ற அரசு, ஏழைகளின் அன்பைப் பெற்ற அரசு என்று தெரிவித்துக்கொண்டு, புரட்சித் தலைவரைப் பாராட்டுங்கள், அவருக்கு பக்கபலமாக இருந்து உதவி செய்யுங்கள், குறைகள் இருந்தால் குறைகளைக் சொல்லுங்கள். குறைகளைச் சரி செய்வதில் புரட்சித் தலைவருக்கு இணையானவர்கள் இல்லை என்று சொல்லி விடை பெறுகிறேன்.

திரு. ஆ. நடராசன்: பாய்ண்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் ஒரு சவால் கொடுத்திருக்கிறார்கள். விசாரணைக் கமிஷன் வைத்தால் நாங்கள் தயாராக இருக் கிறோம். அவர் தயாரா ?

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியத்தின்கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன்

வீட்டுவசதி வாரியம் மக்களுக்கு வேண்டிய தேவைகளை செய்து தருவதை மைய நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ஏழை எளிய மக்கள், பாமர மக்கள் ஆகியவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கிறோம் என்று கூறுகிறது. ஆகவே வீட்டு மனைகளின் விலையைக் கட்டுப்படுத்த அரசு முயற்சி செய்து வருகிறது. அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில், தனிப் பட்டவர்களுக்கு ஏற்றவாறு வீடுகளைக் கட்டிக்கொள்ள தேவையான நிதி உதவிகளைச் செய்து தருவதில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியமும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி வாரியமும் ஏழை எளியவர்களின் வாழ்விற்காக, நிலங்களைக் கையகப்படுத்தி எல்லோருக்கும் வீட்டு மனைகளை ஒதுக்கி, அதிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

கிராமங்களை எடுத்துக்கொண்டால், நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம், மீனவர்களுக்கு வீட்டுவசதித் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம், ஆகிய திட்டங்கள் அந்தந்த துறைகளின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன.

குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டு, குடியிருப்புகள் அமைக்கப்பட்டு, குடிசைவாழ் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. குடிசைவாழ் மக்களின் குடியிருப்புகளை மேம்படுத்த கடன் அளிப்பது தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது.

கிராமங்களைப் பார்த்தோமேயானால் வீடுகள் இல்லாத ஏழைஎளிய மக்கள், ஆதிதிராவிட மக்கள் அதிகமாக உள்ளார்கள். மொத்தமாக எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் 40 சதவீத மக்கள் வசிக்கிறார்கள். கிராமங்களில் 40 சதவீத மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் அன்றாடக் கூலி வேலைக்குச் சென்று அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசால் எந்தவிதமான நன்மையும் கிடைக்க வழியில்லை.

காரணம் என்னவென்றால், நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திலும், தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்திலும் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 100 வீடுகள் என்ற முறையில்தான் கட்டப்பட்டு வருகின்றன. அந்த 100 வீடுகளும் ஒரே சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அந்த அளவிலே பார்த்தால்தான் ஒரு இலட்சத்து 86 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதற்கு செலவு 54 கோடி ரூபாய் என்று கூறுகிறார்கள். ஆனால் இதிலே, இப்போது ஏழை எளிய மக்கள் எவ்வளவு அல்லல் படுகிறார்கள், துன்பப்படுகிறார்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியுமா என்பது தான் எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

இங்கே பார்த்தால், அதிகமான திட்டங்கள் நகர்ப்புறங்களிலே இருக்கின்றன. அதிகமான மக்கள் கிராமப்புறங்களிலே இருக்கிறார்கள். கிராமப்புறத்திலிருந்து வந்த எங்களைப் போன்றவர்கள், கிராமப்புற ஆதி திராவிட மக்கள், ஏழை எளிய மக்களுக்காக நிலங்களை கையகப்படுத்தவேண்டும். கையகப்படுத்தி, வீட்டுமனை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அந்த வீட்டுமனை கொடுத்த பிறகு, அவர்களுக்கு கடன் உதவி அளிக்கவேண்டும். ஆனால், கடந்த ஆண்டை எடுத்துக்கொண்டால், கிராம வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் தமிழகத்தில் 104 உள்ளன. ஆனால், அந்த 104 கிராம வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களில் கடந்த ஆண்டில் எந்தவிதமான கடன்களும், ஏழை எளிய அரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை.



ஆனால் கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட கடன்கள் மொத்தமும் எடுத்துக் கொண்டால், சேலம் மாவட்டத்திற்கு 250 வீடுகள் தான். அதுவும், பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு ஒரு மாவட்டத்திற்கே 250 வீடுகள் என்றால், அதிலே என்ன செய்யமுடியும்? 4500 ரூபாய் கொடுத்துவிட்டு அதிலே என்ன வீடுகளை கட்டுவது என்பது தான் புரியவில்லை.

இங்கே ஒரு இடத்தில் கார் ஷெட் வைப்பது என்றால்கூட, சென்னையிலே 30 ஆயிரம் 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறார்கள். ஆனால் ஏழை எளிய மக்கள், அதாவது, மிகக் கேவலமாகச் சொல்லப்போனால், குடிசை கட்டுவதற்கு கூட இப்போது 5 ஆயிரம், 6 ஆயிரம் ஆகிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆகவே, ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப்படும் தொகை ரூ. 4500 மிகக் குறைவானதாகும். ஆகவே, அந்தத் திட்டம் கடந்த ஆண்டு நிறுத்திவைக்கப்பட்டது. அந்தத் தொகையை ரூ 10,000 ஆக உயர்த்தவேண்டும். இந்த ஆண்டு அந்தத் திட்டம் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் அந்தத் திட்டம் இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே ரூ. 26 கோடி ஒதுக்கியுள்ளார்கள். இதிலே 10 இலட்சம் வீடுகள் ஏழை எளிய மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கொடுப்பதாக உறுதி கூறியுள்ளீர்கள்.

ஆனால், இந்த 26 கோடி ரூபாயிலே எத்தனை வீடுகள் கட்ட முடியும் என்று புரியவில்லை. நிதிநிலை அறிக்கையினைப் பார்த்தால் எனக்கு திருப்தி அளிக்கவில்லை. அது முரண்பாடான ஒரு அறிக்கையாக இருக்கிறது. முதலிலே சொல்லிவிட்டு, பிறகு இதுபோல் செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

அதேபோல், நகரங்களை எடுத்துக்கொண்டால், ஏழை எளிய மக்கள் வசிக்கிறார்கள். 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறோம்' என்று சொல்கிறோம். ஆனால் ஏழை மக்களை நாம் பார்ப்பதே இல்லை. காரணம் என்னவென்றால், வீட்டு வசதியை எடுத்துக்கொண்டால், 1986-87—இல் 16,400 மனைகள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. செலவு 37 கோடியே 42 இலட்சம் ரூபாய். குடிசை மாற்று திட்டத்திற்கு 96 வீடுகள். குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு 1300 வீடுகள். அதிலே குறைந்த வருவாய் உள்ளவர்கள் என்பது 700 ரூபாயிலிருந்து 1500 ரூபாய் பெறுபவர்கள். அதே போல், நடுத்தர, உயர் வருவாய் உள்ளவர்களுக்கு 5016 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதிலே பார்த்தோமானால் 1500 ரூபாயிலிருந்து 2500 ரூபாய் வரை மாத வருமானம் உள்ளவர்களுக்கு, ரூ. 2500-க்கு மேல் 3500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்குத் தான் இந்த 5016 வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

அதே போல், அரசு அலுவலர் குடியிருப்புக்கும் 2788 வீடுகள் மொத்தமாக கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இது போன்ற சூழ்நிலையில் நம்முடைய அரசாங்கம் கீழே கிராமப் புறங்களைப் பார்த்தால் கிராமப்புறங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தேய்ந்து கொண்டே வருகின்றன.

கிராமப்புற மக்களைப் பார்த்தால், சென்னையிலிருக்கும் அண்ணா நகரிலும், ஆங்காங்கே புதிய நகரங்கள் தோற்றுவிக்கப் படுகின்றன. அங்கே தான் ஏழை எளிய கிராமப் பகுதி மக்கள் சென்னையில் வாழ்கிறார்கள்.

அவர்கள் இங்கே வந்து குடிபெயர்ந்து வீடு கட்டும் தொழி லாளியாகத் தான் இருக்கிறார்களே தவிர, அவர்களுடைய வாழ்வு மலர வில்லை. அந்த அளவிலே நிலங்களை பெற்று ஏழை மக்களுக்கு ஒரு நல்லத் திட்டத்தைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனை மேம்படுத்தும் திட்டப்படி 230 எக்டேர் நிலம் கையகப்படுத்த, 1986–87–ஆம் ஆண்டிலே உத்தேசிக்கப் பட்டுள்ளது. செலவு அதற்கு 150 இலட்சம் ஆகும். அதிலே மத்திய அரசும், மாநில அரசும் சம பங்காக எடுத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசு அதிக நிதி உதவி கொடுத்திருந்தாலும், அதை நல்லமுறையில் செலவு செய்வது மாநில அரசு தான். அந்த அளவில் மாநில அரசு நல்லமுறையில் செலவு செய்து, எல்லாவிதமான திட்டங்களையும் உடனடியாகச் செய்ய வேண்டுகிறேன்.

உலக வங்கி உதவித் திட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில்–மிக முக்கியமானது தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் ஆகும். சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், அரும்பாக்கம், வில்லிவாக்கம், மற்ற பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. இங்கே பர்சன்டேஜைக் கொடுத்து

(பிற்பகல் 12-50)

இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்–கிராமப் புறம் என்ற பிரிவினருக்கு 15 சதவீதமும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்–நகர்ப்புறம் என்ற பிரிவினருக்கு 15 சதவீதமும், குறைந்த வருவாய் பிரிவினருக்கு 25 சதவீதமும், மற்ற பிரிவின ருக்கு 45 சதவீதமும் என்ற முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று கொடுத்துள்ளார்கள். ஆகவே. அந்த முறையில் பார்த்தால் கிராமப்புற மக்களுக்கு அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும், நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுக்க வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,



கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலமாக. கடனாக 3,500 ரூபாயும், மானியமாக ஆயிரம் ரூபாயும், வீடு கட்டிக் கொள்பவர்களே 1,500 ரூபாய் போட்டும் செலவு செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதுபோன்ற திட்டத்தின் கீழ் எவ்வளவு வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள் என்று அறிக்கை வைத்தால் நலமாக இருக்கும்.

அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட முன்பணம் என்ற திட்டத்தின் கீழ் குடும்ப நலநிதி சிறப்புத் திட்டம் என்று அறிவித்து, வீடு கட்டக் கடன் பெற்ற அரசு ஊழியர்கள் இறந்து விட்டால் அவர்கள் வீடு கட்டுவதற்காக வாங்கிய அந்தக் கடனையும், அதற்கான வட்டியையும் ரத்து செய்து விடுவதாகக் கூறி யுள்ளீர்கள். ஆனால், இப்பொழுது ஓய்வு பெறுவதற்கு முன்பு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களும் இந்தத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கூறியிருக் கிறீர்கள். கடன் பெறும உறுப்பினர்களிடமிருந்து ஒரு தொகையை வசூல் செய்கிறார்கள். இப்படி மற்றவர்கள் கொடுக்கின்ற பணத்தைத்தான் நீங்கள் கொடுக்கிறீர்களே தவிர, அரசுப் பணத்திலிருந்து ஏதாவது நன்மை செய்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன் இப்படி, கடைத் தேங்காயை எடுத்து வழி பிள்ளையாருக்கு உடைப்பதைப் போன்றுதான் இந்தத் திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் சலுகை என்று இருந்தால் அது வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கான சிறப்பு வீட்டு வசதித் திட்டம் என்ற ஒரு திட்டம் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், வீட்டு வசதி வளர்ச்சி நிதிக் கழகம் மற்றும் வணிக வங்கிகள் ஆகியவைகளிலிருந்து கடன் பெற்றுக் கொடுப்பது என்று சொல்லியிருக்கிறீர்கள். எவ்வாறு நீங்கள் இவர்களிடமிருந்து கடனைப் பெறப் போகிறீகள்? நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால், இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இதிலே கடன் வாங்கிக் கொடுக்கப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இப்படிப் பார்த்தால் இந்த பத்து இலட்சம் வீடுகளைக் கட்டுவது என்பது இயலாத காரியமாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன். எனவே, இதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைக் கண்டுபிடித்து,— ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் ஆகியவர்கள் நிறையபேர் வழிவகை இல்லாமல், வீட்டு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்சள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை அண்ணா நகரில் ஒரு காம்ப்ளக்ஸ் கட்டுகிறீர்களே, அதற்கு ஆகின்ற அந்தப் பணத்தை எடுத்து கிராமப்புறங்களில் கட்ட வேண்டுமென்றால், பத்து

ஊர்களுக்குக் கட்டினாலும் கூட இதற்கு அது ஈடு இணையாக ஆகாது. இப்படி கிராமப்புறங்கள் சீரழிந்து வருகின்ற நிலையில் கிராமப்புறங்களைப்பற்றி கண்ணும் கருத்துமாக இருந்து அங்கே திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அவர்களுக்கு வீட்டு மனைகளையும் வழங்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள முடியும். இப்பொழுதெல்லாம் ஓடை புறம்போக்கு, ஏரி புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு போன்ற இடங்களில் கட்டுகிறார்கள். இரண்டு மூன்று மாதங்கள் கழித்த பிறகு அங்கிருந்து அவர்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த உதவியை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூரில் வீட்டு வசதி வாரிய வேலைகள் நடக்கின்றன. இதற்கு மாநில அரசும், மத்திய அரசும் சம பங்கினை ஒதுக்கியுள்ளன. அந்த வீட்டு வசதி வாரியத் திட்டத்தை மக்களுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டும். விண்ணப்பங்களை வாங்க வேண்டும்; முறையாகத் தகவல் கொடுத்து எல்லோரும் விண்ணப்பம் செய்யக்கூடிய அளவிற்கு வழிவகை செய்யவேண்டும். இதுவரையில் 85 ஏக்கர் நிலம் கையகப்படுத்தியாகி விட்டதாக அறிகிறேன். இன்னும் 150 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டுமென்று தெரிகிறது. உடனடியாக அந்த மீதி நிலத்தையும் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முறையாக, சிறிய நடுத்தர உயர்தர வீடுகளை உடனடியாக கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்று இருக்கிறது. 3,000 சதுர அடி நிலம் வாங்கியிருந்தால், 4,500 சதுர அடி வரையில்தான் கட்டவேண்டுமென்று விதிமுறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். 4,500 சதுர அடி நிலம் வாங்கியிருந்தால் 1,500 சதுர அடியில் முதல் மாடி, இன்னொரு 1,500 சதுர அடியிலே இரண்டாவது மாடி, இருப்பதாக அறிகிறேன். இப்பொழுதுள்ள விதிகளின்படி 3,000 சதுர அடி நிலம் இருந்தால் மேல் மாடிதான் கட்ட வேண்டும், அதற்கு மேற்கட்டக் கூடாது என்ற விதிமுறை இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அந்த விதியையும் மாற்றி சென்னைப் பெரு நகர மக்களுக்கு அந்தத் திட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு அவர்களுக்கு நல்ல முறையிலே இந்தத் திட்டத்தை அமல் படுத்த வேண்டும். ஆகவே பத்து இலட்சம் வீடுகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்குகிற திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.



ஆத்தூரில் செய்யப்பட வேண்டிய நில ஆர்ஜிதத்தைச் செய்து வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கின்றபொழுது நியாயமான முறையிலே, முரண்பாடு இல்லாத வகையிலே, லாட் சிஸ்டம் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு உதவியுடன் செய்யப்படும் திட்டத்தில் குற்றாலம், திருமங்கலம், பட்டுக்கோட்டை ஆகிய மூன்று நகரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதையும் சிறப்பாகச் செய்து, அந்தப் பகுதிகளில் நகர்ப்புற வீட்டு வசதி வளர்ச்சியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு முதல் அமைச்சர், இந்தியாவின் இணையற்ற மூத்த முதல் அமைச்சர், தமிழக மக்களால் மூன்றாம் முறையாக தேர்ந்தெடுக்கப்பெற்ற, வணக்கத்துக்குரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அரசின் சார்பாக மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மானியத்தின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன் வருகின்றேன்.

குருவிக்குக் கூடு உண்டு, புலிக்குக் குகை உண்டு, பாம்புக்கு புற்று உண்டு மனிதனுக்கு வீடு உண்டா என்ற கேள்வியை சுதந்திரம் அடைந்த இந்தியத் துணைக் கண்டத்தில் பல காலம் பலரும் கேட்டு, கேட்டு, அலுத்துப் போய் இருந்தார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றக்கூடிய வகையில், இந்த தலைவிதியை மாற்றி அமைக்கக்கூடிய வரப்பிரசாதமாக இந்த வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியங்கள் எல்லாம் அமைக்கப்பட்டன என்று சொல்கிறபொழுது, அது மிகையாகாது என்று நான் கருதுகின்றேன்.

அது மட்டுமல்ல, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், இந்த நாட்டிலே பிறக்கக்கூடிய ஒரு குடிமகனுக்கு முதலாவதாக உணவு கொடுத்து, உடை கொடுத்து புத்தகம் கொடுத்து, அவன் படித்து, வளர்ந்து, வாழ்வதற்கு இருப்பிடத்தையும் கொடுக்கக்கூடிய முறையில், பிறப்பு முதல் இறப்பு வரை அரசாங்கத்தின் அரவணைப்பில் இந்த நாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்ற இலட்சிய வேட்கையுடன் திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றுகின்றது என்பதை இந்த மன்றத்திலே சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

வீட்டு வசதித் துறையைப் பொறுத்தவரையிலும் எச்.ஐ.ஜி. என்றும் எம்.ஐ.ஜி. என்றும் எல்.ஐ.ஜி. என்றும் இன்னும் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாகப் பல்வேறு வகையிலேயும் வீட்டு வசதி கழகங்களையும் உருவாக்கி, இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற பல்வேறு ஆட்சிகளுக்கிடையே தமிழ் மாநிலம் ஒரு சிறப்பான இடத்தைப் பெறக்கூடிய வகையில் இந்த மானியத்தை நான் வரவேற்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே பேசுகின்ற பொழுது, பலபேர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். புரட்சித் தலைவர் கருணையால் நான் வெளிநாடுகளுக்குச் சென்றபொழுது, ஹாங்காங்கின் வீட்டு வசதி வாரியத்தைச் சென்று பார்த்தோம். அங்கே அதை எப்படி உருவாக்குகிறார்கள், பொது மக்களுக்கு எப்படி வழங்குகிறார்கள், அதற்குத் தந்த கடனை எப்படித் திருப்பி வாங்குகிறார்கள், எப்படிச் சொந்தமாக்குகிறார்கள் என்பதையெல்லாம் பார்க்கும்போது, ஏழத்தாழ அதே அமைப்பு முறையிலே இங்கு அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வரக்கூடிய வகையிலே, இந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் பார்க்கும்போது நான் பெருமைப்படுகிறேன்.

உலகத்திலே ஒரு தலைசிறந்த கட்டிடக் கலைஞனாக இந்தியன், குறிப்பாக, தமிழன் இருக்கிறான். உலகத்திலே தலைசிறந்தவன் என்ற பெயரைப் பெற்றிருக்கக்கூடியவன், வீடுகள் கட்டுவதிலே அவன் மிகப் பெரிய திறமை பெற்றவனாக இருக்கிறான், அப்படிப்பட்ட இந்த நேரத்தில் இங்கே வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் பல்வேறு வகையிலே, பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய நல்ல வகையில் இங்கே திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருவதைக் கண்டு உண்மையிலே நான் பெருமைப்படுகிறேன்.

இங்கே செய்ய வேண்டிய ஒன்று, நகரத்தை அபிவிருத்தி செய்வதை விட, கிராமப்புற வீட்டுவசதி வாரியங்களை, நாம் இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்கு இன்னும்கூட கூடுதல் பணத்தையும் நிலத்தையும் கொடுத்திருக்க வேண்டும். காரணம், இங்கே பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி, அதிலே பல இலட்சக்கணக்கான பேர்கள் குடி இருக்கின்ற பொழுது, இங்கே ஏற்கனவே ஃப்லோட்டிங் பாப்புலேஷன் அதிகம், இங்கே இருக்கக்கூடியர்களும் அதிகம். அதனால், போக்குவரத்து மின்சாரம், கழிவு நீர் அகற்றல் போன்ற எல்லாமே பிரச்னையாக இருக்கிறது. இதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கக் கூடிய வகையில், அதே நேரத்தில் கிராமம், நகரம் என்ற நிலை இல்லாமல், சிறு நகரம், பெரு நகரம் என்ற நிலைமை வர வேண்டுமென்கிற இந்த ஆட்சியின் இலட்சியத்திற்கு ஏற்ப திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முழுமையாக, கிராமங்களைப் பயன்படுத்துவதற்கு முன் வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அது மட்டுமல்ல, கிராமங்களிலே இன்றையதினம் வீடு கட்டுகின்ற பொழுது, இப்பொழுது எங்கெங்கோ அனுமதி வாங்குகிறார்கள். இங்கே நகரத்திலே, இப்படித்தான் கட்ட வேண்டுமென்ற அனுமதி எல்லாம் இருக்கிறது. கிராமத்திலே அப்படி இல்லை, ஆனால், தமிழகத்தில் எங்கு கட்டினாலும் இப்படித் தான் கட்ட வேண்டுமென்ற வரையறை நிச்சயமாக இருக்க வேண்டும். இனிமேல் நகரம் கிராமம் ஆகிவிடாது, ஆனால், கிராமம் நகரமாகும். ஓரிடத்திலே் குடிசை போட்டுவிட்டால், உடனடியாக, குடிநீர் தேவை, பாதை தேவை, மின்சாரம் தேவை, கழிவு நீர் அகற்றக்கூடிய வசதி தேவை என்றெல்லாம் கோரிக்கை வருகிறது. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முன்பாக, அவர்கள் குடிசை போடுவதற்கு முன்பாகவே வீட்டு வசதியை அமைப்பதற்கு முன்பாகவே, தனியார் அந்தப் பிரச்னையில் ஈடுபட்டாலும்கூட, இப்படித்தான் அமைத்தாக வேண்டும், இத்தனை வீடுகள் இங்கே கட்டுகிறோம் என்றால் அங்கே பள்ளிக்கூடத்திற்கும் இடம் வேண்டும், சமுதாய நலக் கூடத்திற்கும் இடம் வேண்டும்.

(பிற்பகல் 1-00)

போக்குவரத்து இடங்களில் நல்ல பாதை இருக்க வேண்டும், பார்க் இருக்க வேண்டும், அதைப் போன்ற பிற வசதிகள் எல்லாம் இருக்க வேண்டும். இந்த வசதிகள் எல்லாம் இல்லாவிட்டால் அனுமதிக்கமாட்டோம் என்று சொல்லுகின்ற சூழ்நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும். அபபடி ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தால்தான் எதிர்காலத்தில் பிரச்சனைகளுக்கு இடமில்லாமல் இருக்கும். அந்த வகையிலே இப்படிப் பட்ட 'மாடல் வில்லேஜ்' மாதிரி கிராமங்களை உருவாக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அரசு அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டிடத்தில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். எல்லா அலுவலகக் கட்டிடங்களும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலேயே இயங்க வேண்டும்.

அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள வாங்கிய கடனைக் கட்டியது போக மீதிக் கடனை ரத்து செய்து, அவர்களுடைய பரம்பரைக்கு கடன்சுமை இல்லாமல் செய்வது ஒரு சிறந்த திட்டம்; பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல. இங்கே பேசுகின்றபோது வேறு சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்வதற்கு முன்பு நான் இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாக இங்கே வரக் கூடியவர்கள் எல்லாம் சௌகரிய குமாரர்கள் அல்ல. ஒரு காலத்

திலே இராஜப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள்; மிராசுதாரர்கள் வந்தார்கள்; ஜமீந்தார்கள் வந்தார்கள்; 'கவம்' என்று சொல்லக்கூடியவர்கள் எல்லாம் இருந்தார்கள். ஆனால் இப்போது சட்டமன்ற உறுப்பினர்களாக வருகின்றவர்கள் எல்லாம் அப்படிப்பட்டவர்கள் அல்ல. ** **

குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

டாக்டர் கே. சமரசம்: இப்போது வருகின்றவர்கள் சௌகரிய குமாரர்கள் அல்ல என்பதற்காகக் குறிப்பிட்டேன். இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களாக வருகின்றவர்கள் மரியாதையோடு மானத்தோடு, கௌரவத்தோடு இருக்க, மக்கள் மத்தியிலே ஒரு உயர்ந்த நிலையை ஏற்படுத்த அவர்களுடைய தொகுதியிலே அல்லது அவர்கள் கேட்கின்ற இடத்திலே சொந்த வீடு கட்டிக் கொள்ள கடன் உதவி செய்ய வேண்டும். பின்னர் அவர்களுடைய மாத ஊதியத்திலிருந்து சுலபமான தவணைகளில் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம். சொந்த வீட்டில் இருந்தால் தான் அவர்கள் சமுதாயத்திலே மரியாதையோடு வாழ்க்கை நடத்த முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் வீடு கட்டிக் கொள்ள பஞ்சாப் மாநிலத்தில் 2 இலட்சம் ரூபாய் வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இங்கே அப்படி இல்லை என்றாலும் அவர்கள் ஒரு வீடு கட்டிக்கொள்ள கேட்கின்ற அளவுக்கு கடன் கொடுக்கலாம். வட்டியில்லாமல் கொடுப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அப்படிக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசும்போது சிலர் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். திரு. கக்கன் அவர்களுக்கு வீடு கொடுக்கவில்லையே என்று சொன்னார்கள். ஏற்கெனவே வீடு ஒதுக்க ஏற்பாடு செய்ததாகவும் சொன்னார்கள். கக்கன் அவர்கள் காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்திலே இருந்தவர்கள். அதற்கும் பின்னாலே வேறு ஒருவர் ஆட்சியில் இருந்தார்கள். 7½ ஆண்டு காலம் ஆட்சியில் இருந்தவர்கள் செய்யாமல், இப்போது செய்தீர்களா என்று கேள்வி கேட்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ரோட்டிலே போய்க்கொண்டிருந்த ஒருவன் திடீரென்று விழுந்து கிடக்கிறான். பலர் போகிறார்கள், வருகிறார்கள்; யாரும் அவனைப் பார்க்கவில்லை. ஆனால் ஒருவன் போய் தண்ணீர் தெளித்து, அவனை தூக்கி உட்கார வைத்தான். அதற்குப் பின்னாலே போன ஒருவன் அவனுக்கு தண்ணீர் கொடுத்தாயா

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



காப்பி கொடுத்தாயா என்றான். இன்னொருவன் பிரியாணி வாங்கிக்கொடு என்றான், ஒருவன் தோசை வாங்கிக் கொடு என்றான். அவன் கீழே கிடந்தபோது யாரும் கவனிக்கவில்லை; தண்ணீர் தெளித்து தூக்கி வைத்திருக்கிறவனைப் பார்த்து அதிகாரம் செலுத்தக் கூடிய வகையில் இப்படி செய், அப்படி செய் என்கிறார்கள். அதைப் போலத்தான் கக்கன் அவர்களுக்கு வீடு கொடுக்கவில்லையே என்று சொல்கிறவர்கள் நிலைமை இருக்கிறது. அவர்கள் இருந்த காலத்தில் செய்யாததை இப்போது செய்தீர்களா என்று கேட்கிறார்கள். (மணியடிக்கப் பட்டது.) நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, மருத்துவச் செலவும் வீடும் கொடுக்கப்படவிருக்கிறது என்பதைக் கூறி, முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி இந்த மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி கூறி, கிடைக்கின்ற நேரம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால் என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் சில கருத்துக்களைக் கூறி, முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய இராதாகிருஷ்ணன் நகரில் இன்றைக்கு குடிசைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பல பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கின்றன. போன ஆண்டிலேயே பல பிரச்சனைகள் பற்றி எடுத்துச் சொல்லியும் அவை இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதை என்னால் சுட்டிக் காட்ட முடியும். இன்றைக்கு குடிசை மாற்று வாரியத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்படுகிறது என்பதை நான் வரவேற்கிறேன். ஆனாலும் இன்றைக்கு உண்மையில் நடைபெறுகின்ற சம்பவங்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்தால் அது பற்றி பல முறை சொல்லியும் ஒன்றும் நடக்கவில்லை. அதை எப்படி சொல்வது என்று எனக்குப் புரியவில்லை.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற வ. உ. சி. நகர், அண்ணாநகர், ரங்கநாதபுரம், திலகர் நகர், இப்படி பல பகுதிகளில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளில் செய்யப்பட வேண்டிய பணிகள் பற்றி யார் யாரோ எடுத்துச் சொன்னதற்குப் பிறகு உடனடியாக குடிசை மாற்று வாரியத் தலைவர் நடவடிக்கை எடுத்தார். அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது பாதியிலே நின்று விட்டது. முழுமையாக அது முடிவு பெறவில்லை என்பதை என்னாலே சொல்ல முடியும் ரங்கநாதபுரம் வட்டாரத்தில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பார்க்கிற நேரத்தில் அவை இடிந்த நிலையில் எப்போது சாய்ந்துவிடுமோ என்று எண்ணுகின்ற வகையில் நிலைமை உருவாகி இருக்கிறது. இது பற்றி பலமுறை சொல்லப்பட்டாகி விட்டது. அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியம் என்று சொல்கிறோம். சென்னையைப் பொறுத்த வரையில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பார்த்தால் சாக்கடை நீர் வெளியே வருவதில்லை. தண்ணீர் இல்லை, ரோடுகள் இல்லை. இப்படி இருக்கிற சூழ்நிலையில் உடனடியாக மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் காரியங்கள் ஆற்றவில்லை, பிறகு ஏன் சட்ட மன்றத்திற்குப் போகிறார்கள், அன்றைக்கு வாக்கு கேட்பதற்கு முன்னாலே சொன்னார்களே என்று எங்கள் மீது குற்றச்சாட்டு சொல்கிற நிலைமை இருக்கிறது. ஏதோ கஜானா சாவியைக் கையிலே வைத்திருப்பது போல் நாங்கள்தான் உடனடியாகக் காரியம் ஆற்ற வேண்டும் என்று எண்ணுகின்ற நிலைமை மக்கள் மத்தியில் இருக்கிறது.

இன்னொன்றும் சொல்கிறார்கள். சில இடங்களைப் பொறுத்தவரையில் நகரமன்றமா, குடிசை மாற்று வாரியமா என்ற வகையிலே ஒரு சிக்கல் இருக்கிறது. அதாவது இரண்டு பெண்டாட்டிக்காரன் எப்படித் தவிப்பானோ அது போல் குடிசை மாற்று வாரியத்திலே இருப்பவர்கள், நகரமன்றத்தோடு பின்னிப் பிணைந்து கொண்டிருக்கிறார்கள். அது எங்கே எப்படி நடை பெறுகிறது என்பதைச் சொல்லியாக வேண்டும்.

அண்ணா நகர், பெயர் தான் அண்ணா என்று இருக்கிறது காங்கிரஸ் கட்சிக்குப் பின்னாலே ஆளுகின்ற பொறுப்புக்கு வந்தவர்கள் அத்தனை பேரும் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள். அதற்கு மூத்த தலைவர், ஆரம்ப கர்த்தாவாக இருந்து வித்திட்டவர் அண்ணா அவர்கள். அப்படிப்பட்ட அண்ணா அவர்களின் பெயரால் அண்ணாநகர் என்று இருக்கிறதே தவிர, அண்ணாவிற்குத் தலைவணங்குகிறோம் என்று சொல் கிறார்களே தவிர அண்ணாநகர் குடிசைப் பகுதி மக்களைக் கண்ணெடுத்துப் பார்க்கிறார்களா என்றால் பார்க்கவே மறுக் கிறார்கள். அங்கே சட்ட மன்ற உறுப்பினராக இருப்பவர்கள் தான் சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள்.

அடுத்து கடற்கரைப் பகுதியாக சில இடங்கள் அறிவிக்கப் பட்டு இருக்கின்றன. குப்பம் அண்ணாவின் பெயரால் இருக் கிறது. ஆனால் அங்கே சாய்ந்த வீடுகள், குப்பை மேடுகள் போன்றவைதான் அண்ணாநகரில் இருக்கின்றன. அதை எடுத்து நேர் செய்வதற்கு அங்கே ஆட்கள் இல்லாமல் தவிக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வ.உ.சி. பெயரிலும் நகர் இருக்கிறது. அங்கேயுள்ள நிலைமை பற்றி பல தடவை சொல்லப்பட்டு இதுவரையில் அங்கே தண்ணீர் வருவதேயில்லை. மலங்களும், சாக்கடை களும் சமையற்கூடத்தில் தேங்கி நிற்கிறது. அங்கே வாழ் கின்றவர்கள் மக்களா அல்லது மாக்களா என்பதைப் புரிந்து



கொள்ள முடியவில்லை. கடந்த முறை அங்கே காரியம் ஆற்றினார்கள். ஆனால் அது பாதியிலே நின்றுவிட்டது. அதைச் சொன்னால் விந்தையாக இருக்கிறது. இன்னொரு உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தோழமை என்ற காரணத்தால் தொண்டை அடைத்தாலும் உண்மை பீறிட்டுக் கொண்டு வருகிறது. அங்கே குப்பைகளை எடுப்பதே யில்லை. குப்பைகளை எடுப்பதற்காக ஒருவருக்குக் கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. யார் அந்த மனிதர் என்பதைவிட அங்கே கான்ட்ராக்ட் எப்படி விடப்பட்டது என்பதைத்தான் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் ஏழைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குப்பைகளை எடுப்பதேயில்லை. கான்ட்ராக்ட் விட்ட வகையில் ஒரு வீட்டுக்கு மூன்று ரூபாய் என்று 1,500 ரூபாய், 4,500 ரூபாய் என்று வருமானம் பெறு கிறார்கள். ஆனால் அங்கே குப்பை எடுப்பதற்கு நியமிக்கப் பட்டிருப்பவர்கள் 2 பேர். ஆளுக்கு 200 ரூபாய் வீதம் 400 ரூபாய் போக மீதியிருக்கிற 4,100 ரூபாயைத் தனிப்பட்ட நபர் அனுபவிக்கிறார் என்று சொன்னால் எதன் பெயரால் அனுபவிக் கிறார்? யார் அந்த நபர் என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளும் கட்சிக் காரர்கள் என்ற காரணத்தால் அந்த கான்ட்ராக்டை எடுத்துக் கொள்கிறார்கள்.

குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் திரு. செல்வம் அவர் களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். யார் கான்ட்ராக்ட் எடுக்கிறார்கள் என்பது பிரச்சினையில்லை. ஆனால் அங்கே யுள்ள நிலைமையைப் பார்க்கிறபோது சுத்தம் இல்லாமல் இருக்கிறது. முதலிலேயே 100, 100 வீடுகளாகப் பிரித்துக் கொடுக்கலாம் என்று ஒரு திட்டத்தைக் கொடுத்தோம். ஆனால் அங்கே இப்போது சரியாக குப்பை அகற்றப்படவில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புதுமனைக் குப்பத்திலே இருக்கின்ற மீனவர்கள் பட்டா கையிலே வைத்திருக் கிறார்கள். பட்டாவுக்குச் சொந்தக்காரர்களாக அவர்கள் இருந்தும் கூட அந்த வீடுகளைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியம் கையகப்படுத்தினது என்று சொல்கிறார்கள். அவர்களும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் குறுகிய வட்டாரத்திற்குள் சிறிய வீடுகளாகக் கட்டி அந்த வகையில் பல நூறு வீடுகளைக் கட்ட வேண்டும் என்று சொல் கிறார்கள், பட்டா வைத்து இருப்பவர்களை அதிகார பலத்தால் தூக்கி எறிந்து விட்டு அதற்குப் பிறகு காரியம் ஆற்றுவது சரியில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். தஞ்சை நகரத்திலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கையகப் படுத்தப்பட்ட இடங்களில் கல்லூரி ஆசிரியர்களும், அரசு அலுவலர்களும் வீடு கட்டியுள்ளார்கள். ஆகவே வீடு கட்டியுள்ள இடங்களை அப்படியே விட்டு விட்டு மற்ற காலியான இடங்களை மீண்டும் கையகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

(பிற்பகல் 1–10)

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி மானிய கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தத் துறையில் இன்றைக்கு கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், கிராமப்புற நில அபிவிருத்தித் திட்டம், வேலை வாய்ப்பு உறுதி திட்டம், வீட்டு வசதி பெறுகிற திட்டம், ஊரக மேம்பாடு திட்டம், மற்றும் ஊரக நிலமற்றோருக்கான திட்டங்கள் என்று பல திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மீனவர்களுக்காக, ஆதித்திராவிடர்களுக்காக நிறைவேற்றப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இன்றைக்கு கிராமப்புறத்தில் யூனியன் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. 3500 ரூபாய் கடனும் ஆயிரம் ரூபாய் மானியமும், 1,500 ரூபாயை யார் வீடு கட்டுகிறார்களோ அவர்களும் மொத்தம் 6,000 ரூபாயில் வீடு கட்டப்படுகின்றன. அதனால் கிராமப் புறத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள் 1,500 ரூபாய் போட முடியாத நிலையில் வீடு கட்ட முன்வருவதில்லை. ஆகவே அதையும் அரசே ஏற்று நடத்த வேண்டும். 1,500 ரூபாய்க்கு பதிலாக செங்கல், மரம், மணல் போன்ற பொருள்களை சேர்த்து வைத்துக் கொடுத்தால், அவர்கள் வீடு கட்ட முன் வருவார்கள். அது திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றவும் உதவும். அத்தோடு நான் கேட்டுக் கொள்வதெல்லாம் 6 ஆயிரம் ரூபாய் என்பதற்கு பதிலாக 10 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டும் திட்டம் என்று மாற்றி, அதையும் இந்தத் துறையின் மூலமாகவே கட்டிக் கொடுக்க வேண்டும். கட்டுவதையும் கான்டிராக்டில் விடாமல், வீட்டு சொந்தக்காரர்களையே நேரிடையாக வைத்து கட்ட வேண்டும். ஏனெனில் கான்டிராக்டில் விட்டு கட்டப்படும் வீடுகள் சிமெண்ட், செங்கல் முதலியவைகளை சரியாக உபயோகப்படுத்தாமல் கட்டப்படுவதால், கட்டி 6 மாத காலத்திலேயே மழை பெய்தால், அந்த வீட்டினுள்ளே குடும்பம் நடத்த முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அதைக் கவனிக்க வேண்டும்.

அதே போல தஞ்சை மாவட்டத்தில் முழுவதுமாக குடிசைப் பகுதி மக்கள் வாழக் கூடிய இடம் நிறைய இருக்கிறது. அது மிகவும் மோசமாக இருக்கிறது, ஒரு இடத்தில் தீப்பிடித்து விட்டால், அந்த தீ அணைப்பு வண்டி வருவதற்குள் பூராவும் சாம்பல் ஆகி விட்டன. இரண்டு தினங்களுக்கு முன்னால் கூட என்னுடைய தொகுதி கொருக்கையில் 10 வீடுகள் எரிந்து சாம்பல் ஆகி விட்டன. அத்தோடு தஞ்சை மாவட்டத்தில் கட்டப்படக்கூடிய வீடுகள் பூராவும் பல்வேறு துறைகளின் மூலமாக 6 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படுகின்றன. வீடுகள் கட்டப்படுகிறதே தவிர, சரியான முறையில் கட்டப்படுவதில்லை. ஒழுங்கான சிமெண்ட் கிடையாது. ஓடுகள், கதவுகள் சரியாக கிடையாது. மரம் போன்றவற்றை எல்லாம் போலியாக தாங்கி கான்டிராக்ட் மூலமாகக் கட்டப்படுவதால் அவைகள் கரமாக இருப்பதில்லை. ஆகவே பலவேறு துறைகளின் மூலமாக வட்டப்படுவதை நிறுத்தி, பத்தாயிரமாக தொகையை உயர்த்தி



நேரிடையாக அந்த வீட்டுச் சொந்தக்காரர்களை பயன்படுத்திக் கொண்டு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்காக சிறப்பு வீட்டு வசதி திட்டத்தின் கீழே இன்றைக்கு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த திட்டத்தில் பட்டுக்கோட்டையும், தென்காசியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நான் வரவேற்கிறேன். மன்னார்குடியில் கூட அப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் மிகப் பெரிய பள்ளத்தில் அவை கட்டப்பட்டிருக்கின்றன. அதனால் ஒரு மழை பெய்து விட்டால் கூட, 2 மாடி வரையில் தண்ணீர் வந்து நின்று விடுகிறது. ஆகவே கட்டுகின்ற துவக்கத்திலேயே பள்ளத்தை தூர்த்து கட்டினால்தான் ஜனங்கள் குடியிருக்க முடியும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல் அந்தப் பகுதியில் இருக்கிற அரசு ஊழியர்கள் டாக்டராக இருந்தாலும் சரி, என்ஜினீயராக இருந்தாலும் சரி, பல்வேறு துறைகளில் யாராக இருந்தாலும் சரி, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி போன்ற பகுதிகளில் அவ்வளவாக குடியிருப்பதில்லை. காரணம் வாடகை வீடு கிடைப்பதில்லை. தஞ்சைக்கு சென்று விடுகிறார்கள். இவையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக் கொண்டு திருத்துறைப்பூண்டியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஆயிரம் வீடுகளை கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சென்னையில் இன்றைக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு பராமரிப்பு கிடையாது. வீடுகள் கட்டியிருக்கிறீர்கள். அந்த வீடுகளையெல்லாம் பார்த்தால் மழை பெய்து தண்ணீர் அப்படியே நிற்கிறது. கட்டப்பட்ட வீடுகள் ஆறு மாதத்தில் பொல பொலவென்று கொட்ட ஆரம்பிக்கிறது. அதற்கு காரணம் கான்ட்ராக்ட் முறையில் விடு கட்டப்படுவதால் சரியான அளவில் சிமென்ட் போடப்படுவதில்லை. நிலைக்கதவு ஜன்னல் சரியாக போடப்படுவதில்லை. கட்டப்பட்ட வீடுகள் சேதமாகி இருக்கின்றன. அதனுடைய பாரமரிப்பிற்காக ஒரு தனி நிர்வாகத்தை உருவாக்கி அவற்றையெல்லாம் நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். இல்லாவிட்டால் குடி இருப்பவர்களுக்கே அதனைச் சொந்தமாக்க வேண்டும். இன்றைக்கு சென்னையில் 14 லட்சம் பேர்கள் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 30 லட்சம் வீடுகள் கட்டப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் வாழக் கூடிய இந்த 14 லட்சம் குடிசைவாசிகளுக்கும் எப்போது வீடு கட்டப் போகிறீர்கள்?

நேற்றைக்கு அந்தக் குடிசைப் பகுதிக்கு சென்றிருந்த போது தலைசிறந்த மாமேதை சிங்காரவடிவேல் பெயரால் சிங்கார வடிவேலர் நகர் என்று ஒரு இடத்தில் போட்டிருந்தது. அந்த இடத்தில் 200 குடிசைவாசிகள் ஆற்றங்கரைப் பகுதியில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரில் வாழக்கூடிய 14 லட்சம் குடிசைவாசிகளுக்கு உடனடியாக ஒரு திட்டத்தைப் போட்டு, தீ பிடித்தால் அதிலிருந்து அவர்களை பாதுகாக்கக் கூடிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் பத்திரிகை நிருபர்களுக்கு எந்தவிதமான சிபாரிசும் கிடையாது. ஆகவே தமிழகத்தினுடைய சர்க்கார் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் பத்திரிகை நிருபர்கள் தான் தேவைப் படுகிறது. அவர்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்றவற்றால் வீடுகள் கட்டிக் கொடுப்பது மக்களுக்கு முக்கியமாக தேவைப்படுகிற திட்டமாகும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இருக்கிற நிர்வாகத்தில் பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன. அந்தத் தவறுகளை களைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் தவறுகளைச் சொல்லுகிறபோது யாரோ ஒருவர் பெயரைச் சொல்லி அதனாலே சிக்கல் வரக்கூடாது. இருந்தாலும் வீடுவேண்டுமென்று மனு கொடுக்கிற போது அந்த வரிசை அடிப்படையில் வீடுகள் கொடுக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பிரச்னையெல்லாம் வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் நீக்கி வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்றவற்றால் கட்டக்கூடிய வீடுகளை தரமான வீடுகளாக கட்டி, மக்களுக்கு கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையினை அமைச்சர் அவர்கள் நம் முன்னாலே வைத்திருக்கிறார்கள். அவர்கள் கேட்டுள்ள தொகையை அனுமதிக்கக்கூடிய முறையிலே நானும் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக ஏழை மக்களுக்கு குடிசை வாசிகளுக்கு அவர்கள் சுகாதாரச் சூழ்நிலையில் வாழ்வதற்கு வீடு கட்டித்தரவேண்டுமென்ற கொள்கை மெத்தமும் வரவேற்கத் தக்கது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)





(பிற்பகல் 1–20)

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இதனை ஆட்சிக்கு வந்த பிறகு கொண்டு வந்தார்கள் என்பதை நாம் நன்றியோடு நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் ஆட்சிக்கு வந்த போது பேராதரவு தந்தவர்கள் குடிசைப்பகுதிகளில் வாழக்கூடிய மக்கள் என்ற காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர்கள் வாழ்ந்த வீடுகளுக்கு தீ வைக்கக்கூடிய ஒரு தீய நிலை பரவியிருந்த போது, அவர்கள் எரியக்கூடிய குடிசைகளில் வாழ்கிறார்கள் என்பதால் தான் இப்படி பழி வாங்குகிறீர்கள், எரியாத கூரைகள் போட்ட வீடுகளில் அவர்கள் வாழ வைக்கிறேன் என்று சூளுரையோடு இந்த நல்ல திட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள். அதைத் தொடர்ந்து டாக்டர் கலைஞர் அவர்கள் பல அடுக்கு மாடிக் கட்டடத்தில் அவர்களைக் குடியமர்த்த வழி வகை செய்தார். அதைத் தொடர்ந்து இன்றைய அரசும் அதை மேலும் வலிவுள்ளதாகவும் லட்சோபலட்ச மக்களுக்கு பயன்தரத் தக்க முறையிலேயும் விரிவுபடுத்தி அமுல்படுத்த முன்வந்திருக்கக் கூடிய திட்டத்தை நான் மனமாற வரவேற்கிறேன். 3 ஆண்டுகளிலே 30 லட்சம் மக்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு 30 லட்சம் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்ற அறிவிப்பைப் பற்றி அமைச்சர் அவர்கள் இன்னும் ஆழமாக வலியுறுத்திப் பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 3 ஆண்டுகளிலே 30 லட்சம் வீடுகளைக் கட்ட முடியுமா? என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. அதில் எத்தனை லட்சம் கட்ட முடியும் என்ற ஆராய்ச்சியிலே நான் இறங்குவதைவிட, அந்த லட்சியத்தை நான் வரவேற்கிறேன். 30 லட்சமும் கட்டி முடிக்காவிட்டாலும் கூட, சில லட்ச வீடுகளையாவது நீங்கள் அறிவித்த அந்தக் கொள்கையினுடைய அடிப்படையிலே முனைப்பாக இருந்து, கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படி வீட்டு வசதி ஏற்படுத்தக்கூடிய நிலையிலேயும் குறிப்பாக குடிசைவாசிகளுக்கு என்று தொடங்கிய திட்டம் படிப்படியாக நெசவாளர் பெருமக்களுக்கும், ஆசிரியர்களுக்கும் காவலர்களுக்கும் என்ற சமுதாயத்திலே உள்ள பல்வேறு பிரிவினருக்கும் விரிவுபடுத்தப்பட்ட ஒரு திட்டமாக இது வருவதை நான் வரவேற்கின்றேன்.

இப்படி நீங்கள் யோசிக்கும்போது, இந்த நாட்டிலே நலிந்தவர்களிலே மிகவும் மெலிந்தவர்களாக இருக்கக்கூடிய தொழிலாளர் பிரிவினர், நான் இந்த நாட்டிலே உள்ள பீடித் தொழிலாளர்களைக் குறிப்பிடுகிறேன். தொழிலாளர்கள் என்ற ஒரு தலைப்பிலே அவர்களையும் சொல்வதுகூட பொருந்துமா என்ற ஐய உணர்வு எனக்கு ஏற்படுகிறது. ஏன் என்றால் எந்தத் தொழிலில் இருப்பவர்களும், சங்க ரீதியாக அவர்கள் இணைந்து தங்களுடைய கோரிக்கைகளைப் பெறுவதற்கு வசதி வாய்ப்புகள்

இருந்து, அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு ஓய்வு ஊதியம் எல்லாம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கும் நேரத்தில் இன்று கூட இந்த நாட்டிலே பீடித் தொழிலாளர்களுக்காக இயற்றப்பட்ட சட்டங்கள் எல்லாம் குப்பைத் தொட்டியிலே வீசியெறிப்பட்ட நிலையில் அது அமுல்படுத்தப்படாத நிலையில் அவர்களுடைய வாழ்க்கை வசதிக்காக கொண்டுவரப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் ஒன்று கூட நிறைவேற்றப்படாத நிலையில் கவனிப்பாரற்று, கேட்பாரற்று ஊமையாக ஒடுங்கி இருக்கக்கூடிய தொழிலாளர்களாகத்தான் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பீடியைச் சுருட்டுகிறார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கையை வேறு யாரோ சுருட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நலிந்த பிரிவினரைப் பற்றி எண்ணக்கூடிய அரசு, லட்சோபலட்சமாக சென்னை பெருநகரத்திலேயும், வட ஆர்க்காடு மாவட்டத்திலேயும் சரி, கோவையிலேயும், நெல்லையிலேயும், இன்னும் திருச்சி போன்ற பெருநகரங்களிலேயும் கூட மிக அதிகமான எண்ணிக்கை உடையவர்களாக, ஆனால் தங்களைப் பற்றி இருக்கக்கூடிய குறைபாடுகளை சொல்லிக் காட்டுவதற்குக் கூட தெம்பும், திராணியுமற்றவர்களாக இருக்கக்கூடிய அத்தகைய தொழிலாளர்களுக்காக தனியாக ஒரு வீட்டு வசதி வாரியம், இந்த 30 லட்சம் வீடுகளிலே அவர்களுக்கு ஒதுக்கித் தருவதற்காக, நீங்கள் அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்களைப் பார்த்தால் தமிழ்நாட்டிலே இப்போது பரவலாக இந்த நல்ல பணி தொடர்ந்து நடைபெறுகிறது என்று தெரிகிறது. ஆனால் இதுவரையில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எப்படி பராமரிக்கப்படுகின்றன, அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதைப் பற்றியும், கொஞ்சம் அரசு அதிசமான கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் திடீரென்று இப்படி கட்டி முடிக்கப்பட்டு இருக்கக்கூடிய பகுதிகளுக்கு அமைச்சர்களோ, அல்லது அந்த வாரியத் தலைவர்களோ செல்லக்கூடிய ஒரு 'சடன் இன்ஸ்பெக்சன்' என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட நிலை எப்போதாவது நடக்கிறதா என்றால், அதைக் காண முடியவில்லை. அப்படி செல்லக்கூடிய முயற்சி இருக்குமானால் அது சிறு இடங்களில் கைகலப்பில் முடிந்துவிடக்கூடிய ஒரு துரதிருஷ்டவசமான சம்பவங்களையும் நாம் அண்மைக்காலமாக பார்த்திருக்கிறோம். ஏன் என்றால் இப்படி வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கு பல குமுறல்கள் இருக்கின்றன. தாங்கள் ஏதோ அந்த வீடுகளில் குடியமர்த்தப்பட்டோமே தவிர, அதற்குப் பிறகு தங்களுடைய குறைகளை எல்லாம் கவனிக்காத ஒரு முறையில் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும்கூட, அதைப் பற்றி யாரும் கவனிக்காமல் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறோம் என்ற ஒரு உணர்ச்சி அவர்களுக்கு மிகுந்த வேதனையையும் ஒரு கொந்தளிப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.



அப்படிப்பட்ட குடியமர்த்தப்பட்ட இடங்களில் வாழக்கூடிய மக்களுக்காக அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதிலே கூட அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே ஒரு விசித்திரமான நிலை இருக்கிறது. நாம் எல்லாம் கூடியிருக்கக்கூடிய இந்தச் சட்டமன்றம் இருக்கக்கூடிய இடம், அதற்கு வெளியிலே, இந்தத் தெருவின் ஓரத்திலே இருக்கக்கூடிய அந்தப் புல் தரை, அந்த புல் தரையை செப்பனிட்டு ஒரு நல்ல நந்தவனமாக மாற்றவேண்டும் என்றாலும் கூட, இன்று ஆட்சி செலுத்திக் கொண்டு இருக்கிற நமக்கு அதற்கு அதிகாரம் இல்லை.

எதிரிலே இருக்கக்கூடிய, வரிசையாக இருக்கக்கூடிய புல்லிலே கை வைக்க நமக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அதையொட்டி இருக்கக்கூடிய இந்தப் பகுதியிலே கை வைக்க நமக்கு அதிகாரமில்லை. இது மத்திய அரசாங்கத்துக்கும், மாநில அரசாங்கத்துக்கும்தான் இப்படிப்பட்ட ஒரு விசித்திர நிலை இருக்கிறது என்று சொன்னால் நீங்கள் கட்டியிருக்கக்கூடிய இந்த குடிசை மாற்று வாரிய வீடுகள், அது அமைந்திருக்கக்கூடிய பகுதிகளிலே மாநகராட்சியினுடைய அதிகாரம் செல்ல முடியவில்லை. மாநகராட்சியினுடைய குப்பையை அள்ளுகிறவர்கள் அதற்குப் பக்கம் வரையிலே, அதற்குள் ஒரு 10 அடி தூரத்திலே இருக்கக்கூடிய குப்பைகளை எடுக்கிறார்கள். ஆனால் அதற்கு ஒரு 10 அடிக்கு இந்தப் பக்கத்திலே குடியிருப்புகளில் உள்ளவர்களின் குப்பைகளை அள்ளுவதற்கு மறுக்கிறார்கள். கேட்டால் அது அவர்களுடைய காரியம், எங்களுக்கு அதிகாரம் இல்லை என்கிறார்கள். இப்படிப்பட்ட இரட்டை ஆட்சி முறை வீதிக்கு விதி பரவியிருக்கிறது. இந்த இரட்டை ஆட்சிமுறையினால் நன்மை விளையும் என்று சொன்னால் வரவேற்கலாம், ஆனால் இப்படிப்பட்ட குப்பை குவிகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் கொஞ்சம் தெளிவாக கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே டாக்டர் சமரசம் அவர்கள் பேசும்போது இனி கட்ட இருக்கக்கூடிய வீடுகளையெல்லாம் கிராமப்புறத்திலே கட்டுவது ஏற்புடையது என்று சொன்னார்கள். பலபேருக்கு சென்னை நகரத்திலே ஏதோ எல்லா வீடுகளும் செம்மையாக இருப்பதுபோலவும். ஆனால் கிராமங்களிலே நடக்க வேண்டிய அந்தப் பணிக்கான தொகையைக்கூட இந்தச் சிங்கார சென்னைக்காக ஒதுக்கி விடுகிறார்கள் என்றும் ஒரு தாபம் இருப்பதாக நான் அறிகிறேன். இவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக்கொள்வேன்; ஆங்கிலத்திலே சொல்லுவார்கள்:

Every city has got a slum.

ஆனால் அதைக் கொஞ்சம் மாற்றி சொல்வதானால் சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய Every street has got a slum.

என்று சொல்லத்தக்கமுறையிலே வீதியினுடைய ஒரு பகுதி செம்மையாக இருக்கிறது, அழகாக இருக்கிறது, ஆனால் அதனுடைய மறு பகுதி, புறப்பகுதியைப் பார்ப்பீர்களேயானால், பார்க்கவே முடியாத மனிதன் நடமாடவே முடியாத பகுதிகளாக இருக்கின்றன. அப்படிச் சொல்லும்போது என்னுடைய தொகுதியைப்பற்றியும் நான் தொட்டுப் பேசமுடியும். குறிப்பாக உலகத்திலே அழகு மிக்க மெரினா இருக்கிறது. அதையொட்டி இருக்கக்கூடிய, பக்கத்திலே போகக்கூடிய பக்கிங்ஹாம் கால்வாயை ஒட்டி இருக்கக்கூடிய பல பகுதிகளை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சுற்றிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வாழக்கூடிய வாழ்க்கை, வாழ்க்கைதானா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இப்படிகெனால் தெரு, வி. ஆர்.பிள்ளைத் தெரு, அனுமந்தபுரம், கஜபதிலாலா தெரு, முனுசாமி நகர், ராஜாஜி நகர், ராம் நகர், டாக்டர் நடேசன் ரோடு, வைக்கோல் செட்டித் தெரு, சுண்ணாம்புக்கார தெரு போன்ற இந்தப் பகுதிகள் எல்லாம் மிகவும் சுகாதார சூழ்நிலை கெட்ட நிலையிலே இருக்கின்றன. இவற்றை மாற்றி அமைப்பதற்கு அங்குள்ள குடிசைகளையெல்லாம் மாற்றி வீடு அமைத்து கொடுப்பதற்கு ஒரு நல்ல திட்டத்தை அமைச்சர் இங்கே கொண்டு வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அதைப்போல மிகவும் பாதிக்கப்பட்டபகுதிகளாக குமரக்குடி மக்கான், ராணி மேரி கல்லூரி தெரு, துலுக்காணம் தோட்டம், ரோட்டரி நகர், கபாலி நகர், சுதந்திர நகர், பக்குமஸ்தான் தர்க்க, தீர்த்த பாலீஸ்வரர் கோயில், ராஜா கிராமணி தோட்டம்' முத்தையா முதலி தெரு, செல்லம்மாள் தோட்டம், நல்லெண்ண முதலித் தெரு, ப்ராவிடன் பண்ட் ஆபீஸ் பின்புறப் பகுதி, திம்மராஜபுரம், ராஜாபேட்டை, ஜம்மி பில்டிங் போன்ற எத்தனையோ பகுதிகள் என்னுடைய தொகுதியை நான் தொட்டு பேசியிருக்கிறேன். ஒரு தொகுதியிலே இவ்வளவு இருக்கின்றன. இதற்கெல்லாம் விடிவு எப்போது ஏற்படுமென்று அங்குள்ள மக்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே பல பகுதிகளில் குடிசை மாற்று வாரியம் கட்டிடங்கள் கட்டவேண்டுமென்று விரும்பினால், அந்த அடிப்படை நிலம், அறநிலையங்களுக்கும் வக்ப் போர்டுக்கும் சொந்தமாக இருக்கின்றன என்ற ஒரு காரணத்தை சொல்லி மேற்கொண்டு அந்த இடங்களிலே கட்டிடம் கட்டுவதற்குரிய முயற்சியை மேற்கொள்ளாமலேயே விட்டு விடுகிறார்கள். நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன், இரண்டுமே அரசாங்கத்தினுடைய துறைகள் தான். அறநிலையத் துறையோடு வீட்டு வசதி வாரிய அமைச்சகம் இணைந்து இந்த மொத்த அவல நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மக்களுக்கு ஒரு விடிவு காண்பதற்காக ஒரு மொத்த மனப்பான்மையோடு அந்த நிலத்தை கையகப்படுத்தியோ, ஏற்கனவே கடந்த சட்டமன்றத் தொடரிலே பேசும்போதும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூட அறநிலையத்துக்குச் சொந்தமான இப்படிப்பட்ட நிலங்களில் வீடு கட்டிக்கொடுப்பதற்கான வசதிகளை செய்யும் என்று ஒரு அறிவிப்பு வெளியிட்டார்கள். அறிவிப்பு வெளியிட்டு இந்த ஓராண்டு காலத்திலே அதற்காக என்ன முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எத்தனை இடங்களிலே இப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் ஒரு ஏமாற்ற உணர்ச்சியே ஏற்படுகிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், அவர்கள் சிங்கப்பூருக்கு சென்று வந்திருக்கிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. உலகத்திற்கே ஒரு சிறந்த உதாரணத்தை அங்கே காணமுடியும். ஒரு 10 ஆண்டு காலத்திலே......



(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: தலைவர் அவர்களே, 10 ஆண்டு காலத்தில் அங்கே இருக்கக்கூடிய வீட்டுப் பிரச்சினைகளை எல்லாம் அவர்கள் மிகநல்ல முறையில் தீர்த்து இருக்கிறார்கள் என்பது மட்டும் அல்ல, இன்று யாராவது வீட்டுக்கு விண்ணப்பிக்க மாட்டார்களா என்று அரசு எதிர்ப் பார்க்கத் தக்க அளவுக்கு அவர்கள் இந்தப் பிரச்சினையை தீர்த்து இருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, யாராவது திருமண தம்பதிகள் அவர்கள் திருமணம் முடித்துவிட்டு சர்டிபிகேட்டை கொண்டு வந்து காட்டுவார்களானால், மறு நாளே அந்த தம்பதிகள் நல்வாழ்வு நடத்துவதற்கு ஒரு வீட்டை ஒதுக்கித் தரக்கூடிய அளவுக்கு ஒரு நல்ல சூழ்நிலை அங்கே ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் நாமோ இங்கே மாமன் மகளுக்கு வீடு தந்தோமா அல்லது மருமகனுக்கு வீடு தந்தோமா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருக்கிறோம். இவ்வளவு அவல நிலையில் நம்முடைய நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே நான் ஒரு கருத்தை வைக்க விரும்புகிறேன், நீங்கள் பரவலாக நாடு தழுவிய முறையில் எங்கெங்கே அந்த குடிசை மாற்று வாரிய வேலைகளை செய்யலாம் என்று யோசிப்பதை ஒரு ஐந்து ஆண்டு காலத்திற்கு ஒதுக்கி வைத்து விட்டு ஒரு கிராஷ் புரோகிராம் என்று சொல்லுகிறார்களே அப்படிப்பட்ட ஒரு நிலையில் சென்னையில் இருக்கக்கூடிய அத்தனை குடிசை வாழ் பகுதிகளையும் முதலாவதாக சீர்படுத்தி செம்மைபடுத்தி நாட்டுக்கு ஒரு நல்ல உதாரணமாக அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து இந்த தலை நகரத்தின் பிரச்சினையை தீர்ப்பதன் மூலமாக, தமிழ்நாட்டின் பிரச்சினையை அடுத்த அடுத்த ஆண்டுகளில் தீர்ப்பதற்கு தக்க ஒரு முனைப்பான திட்டத்தை நீங்கள் கொண்டு வந்து நிறைவேற்றுவீர்களானால் அது மெத்த நலன் பயக்கும் என்று கூறி நான் குறிப்பிட்டு இருக்கக்கூடிய எனது

தொகுதியினுடைய பகுதிகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை என்னோடு வந்து பார்த்து அங்கு வாழக் கூடிய மக்களின் அவல நிலையை கண்டு, அவர்கள்பால் இறக்கம் கொண்டு, அவருக்கு தரப்பட்டு இருக்கக்கூடிய அதிகாரத்தின் துணைக் கொண்டு, அந்த மக்களின் வாழ்க்கை மலர்வதற்கு துணை செய்யவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானத்தையே கூரையாகக் கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கிற லட்சக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகிற பெரு முயற்சியில் ஈடுபட்டு இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை, ஏழை எளிய நலிந்த மக்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலமும், மற்ற வீட்டு வசதி சங்கங்கள் மூலமும் வீடுகள் கட்டுகிற பணிக்காக உதவிகளை செய்து இருக்கிற இந்த நல்ல மானிய கோரிக்கையை இந்த நேரத்தில் வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

நகர அமைப்புச் சட்டம் என்பது இன்று நம்முடைய நாட்டில் எதிர்காலத்தில் வளர்ந்து வருகிற, தேவைக்கு இருக்கிற நிலப் பரப்பை சீராக்கி மக்களுக்கு வீட்டு வசதி மற்ற வசதிகள் ஏற்படுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டம் ஆகும். இதில் 10 சதவீதம் ரிசர்வேஷன் என்பது சட்டத்திலே இல்லாத ஒன்று ஆகும். இருந்தாலும் நம்முடைய தேவையை கருதி நம்முடைய துறை எக்ஸிகுயூட்டீவ் ஆர்டர் என்று சொல்லக்கூடிய உத்தரவின் மூலம் 10 சதவீத ரிசர்வேஷன் செய்யப்படவேண்டும் என்று வரையறுக்கப்பட்டு இருக்கிறது. அப்படி 10 சதவீத இடத்தை நாம் ஒதுக்கித் தரவில்லை என்றால் அதற்கு பதிலாக 1½ மடங்கு விலை கொடுத்துவிட்டால் ஈடு செய்யலாம் என்ற ஒரு சலுகையும் அதில் அளிக்கப்பட்டு இருக்கிறது.

ஆகவே நோக்கம் 10 சதவீத இடத்தை மட்டும் ஒதுக்குவது என்று இல்லாமல் முடிந்த இடத்தில் அதற்கான சலுகையையும் கொடுத்து விடலாம் என்ற வகையில் இருக்கிற உத்தரவின் மூலம் பலயிடங்களில் தேவையான ரிசர்வேஷன் பொதுக் காரியங் களுக்கு கிடைக்காமல் போவதும், பலயிடங்களில் ஒதுக்கீடு செய்யாத இடங்களில் பொது மக்களின் நிர்பந்தத்திற்கு ஆளாகிற நிலையும் இருக்கிறது. ஆகவே இதை பரிசீலித்து பொதுக் காரியங்களுக்கு இவ்வளவு இடம் வேண்டும் என்பதை டவுன் பிளானிங் அத்தாரட்டிஸ் அல்லது லோக்கல் பாடிஸ் அந்த நிர்வாகத்தினரே வரையறுத்துக் கொள்ளக்கூடிய ஒரு முறையை இந்தச் சட்டத்திலே தாங்கள் பரிந்துரை செய்து ஆக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டவுன் பிளானிங்கை பொறுத்தவரையில் இன்று கோவை நகரமும் அதன் சுற்றுப்புறமும் அதி வேகமாக வளர்ந்து கொண்டு வருகின்றன. இன்னும் 20, 30 ஆண்டுகளில் சென்னை நகரத்தை விட பரப்பளவில் மிஞ்சி விடுகிற அளவுக்கு மிக வேகமாக



வளர்ந்து கொண்டு இருக்கிற தொழில் நகரமாக கோவை நகரம் இருக்கிறது. சென்னையில் Madras Metropolitan Develcpment Authority-ஐ வைத்து நகர் புறத்தில் இருக்கிற பகுதிகளை எல்லாம் இந்த சட்டத்திற்குள் உட்படுத்தி முறையாக மக்களுக்கு ஏற்ற வகையில் எதிர்காலத் தேவையை கருதி இங்கே ஒரு நகர்ப்புற அமைப்பு அமைக்கப்பட்டு இருப்பது போல், கோவை புற நகர்ப் பகுதியிலும் Coimbatore Metropolitan ve வயின் Authority-ஐ அமைத்து அது வளர்ந்து வருகிற காரணத்தால் இதன் தேவையை நிறைவேற்றுகிற அளவுக்கு அந்தப் பகுதி களுக்கு நகர் அமைப்பு இருக்கவேண்டும். இல்லை என்றால் எதிர் காலத்தில் அங்கே ஏற்படக்கூடிய நெரிசலை நாம் சமாளிக்க முடியாமல் போய்விடும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே இன்று கோவைப் புறநகரில், தொண்டப் பாளையம், வீரகேரளம், தெலுங்குபாளையம், வடவள்ளி ஆகிய கிராமங்களில் பெரும்பாலான இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் நில ஆர்ஜிதத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த கிராமங்களில் பல தொழில் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், ஆசிரியர் பெருமக்கள் பல இடங்களில் பணியாற்றுகிறவர்கள் எல்லாம் மனைகளை, அங்கீகரிக்கப்பட்ட லே—அவுட்களிலுள்ள நிலங்களை வாங்கியிருக் கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சிம்சன் கம்பெனித் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 150 பேர் நிலங்களை வாங்கி, ஆர்ஜித நடவடிக்கையின் காரணமாக வீடு கட்டுகின்ற முயற்சி கடந்த நான்கு ஆண்டுகளாக தடைப்பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்ட நிதி இல்லை. அனைத்து நிலங்களிலும் வீடுகள் கட்டுவதற்குக் குறைந்தது. 10 ஆண்டுக் காலத்திற்கு முழு நிதியும் செலவிடப்படவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஏற்கனவே இந்தப் பகுதியிலிருக்கின்ற தொழிலாளர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க அந்த ஆர்ஜித நடவடிக்கைகளிலிருந்து 'அப்ரூவ்-லே-அவுட்'—க்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும் என்று கேட்டேன். அந்தக் கிராமங்களிலுள்ள தொழிலாளர்கள், ஆசிரியர் பெரு மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையாக இது இருக்கிறது. ஆகவே அப்ரூவ்ட்-லே-அவுட்டிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று இந்த வாய்ப்பில் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரத்தைச் சுற்றி இருக்கிற பகுதிகளில் எடுக்கப் பட்ட நிலங்களை வீட்டு மனைகளாக எடுத்து, வீடுகள் கட்டு வதற்காக ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்த்து, பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

கிராமப்புற வீட்டுவசதிச் சங்கம், தாலுக்கா அளவிலே ரூ. 6,000 கடன் கொடுத்து வந்தது. மக்கள் தாங்களே வீடுகளைக் கட்டிக் கொள்கின்ற முயற்சிக்கு கடனாகக் கொடுக்கப்படுகின்ற தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக ரூ. 10,000 கடன் கொடுத்து, ஏழை எளியவர்கள் கிராமப்புறச் சங்கத்தின் மூலம் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். வீட்டுவசதிச் சங்கங்கள் இன்று சில இடங்களில் இருக்கின்றன. 10,000, 15,000 மக்கட்தொகைக்கு ஒரு வீடு கட்டும் சங்கம் வைத்து அந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

வீட்டு வசதிகளைப் பொறுத்தவரையில் பதிவு செய்வதிலுள்ள தடையை நீக்கி, தேவையான நிதியுதவியைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய தலைவருக்கு விருப்பமான ஒன்று வக்கீல்களின் சங்கம். வழக்கறிஞர்கள் சங்கத்தினுடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டவர் நம்முடைய தலைவர் என்று குறிப்பிட விரும்புகிறேன். அந்த வழக்கறிஞர்கள் சங்கம் ஒரு முன்மாதிரியாக, தங்களுக்கான அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக்கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. நானும் அந்தச் சங்கத்தின் இயக்குநராக இருக்கிறேன். அந்த சங்கத்திற்காக 30 ஏக்கரா நிலத்தைக் கையகப்படுத்தி, அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. 'ஹட்கோ' நிறுவனத்திடம் அந்தச் சங்கம் நிதியைக் கேட்கிறது. அந்தச் சங்கத்திற்கு ப்ரையாரிட்டி கொடுத்து, முன் மாதிரியாக இருக்கக்கூடிய அந்தச் சங்கத்திற்கு முழு அளவில் நிதியை 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து பெற்றுத் தருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கோயம்புத்தூரில் தொழிலதிபர்கள், தொழில் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் தொழிலாளிகள், வீடுகள், கட்டிக் கொள்வதற்கு இடத்தை ஆர்ஜிதம் செய்யவும், நிதியைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். நிதி நிறுவனங்களின் உதவியோடு, தொழில் நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள், தாங்களே அந்த வீடுகளைக் கட்டிக்கொள்கின்ற முயற்சிகளுக்கு தாங்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் வீட்டுவசதித் துறையைப் பொறுத்தவரையிலும், நகர வளர்ச்சியின் நன்மைகளைக் கருதியும் பல்வேறு கருத்துக்களை இங்கே சொன்னார்கள். நான் என்னுடைய உரையை சுருக்கமாக சொல்லி, தமிழக அரசு எடுத்து வருகிற பல்வேறு திட்டங்களை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்றைக்கு பேசிய உறுப்பினர்களில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் மிகப் பெருந்தன்மையோடு 30 இலட்சம் வீடுகளை நம்முடைய தமிழக அரசு கட்டப் போகிறது. அது வரவேற்கத்தகுந்த ஒரு நல்ல காரியம் என்றும், அந்த வாய்ப்பு எப்படி இருக்குமோ என்ற ஒரு சந்தேகக் கண்ணோட்டத்தோடு, ஒரு நியாயத்தின் தன்மையோடு இங்கே சொன்னார்கள்.

(பிற்பகல் 1—40)

ஏற்கனவே நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்த நேரத்திலேயே இதே சந்தேகம் நாட்டிலே சில பேர்களுக்கு மட்டும் வந்தது. இப்போது 85 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு தருகின்ற, ஒரு காரியம் செய்கின்ற பல்வேறு நாடுகளிலே மக்கள் தொகையே 20 இலட்சம், 30 இலட்சம், 40 இலட்சம் என்று இருக்கிற ஒரு உலகத்திலே—85 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு தருகின்ற காரியத்தை இன்னும் சில மேலை நாட்டைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சந்தேகப்படுகிறார்கள். நேரிலே வந்து பார்த்து மனம் திறந்து பாராட்டுகிறார்கள்.

இன்றைக்கு தமிழக அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏழைகளுக்காக உதவுகின்ற தன்மையோடும், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கிறவர்களுக்கு ஆளுக்கு ஒரு வீடு தருகின்ற அந்த நல்ல தாய் உள்ளத்தோடும் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அந்தக் கொள்கையைச் சொல்லி இருக்கிறார்கள்.

இது நடைமுறைக்கு வருகிற ஆண்டிலே, இப்போது சொல்லி கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு இடையிலே நாங்கள் எடுத்து, கொள்கையின் அடிப்படையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 50 ஆயிரம் வீடுகளும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 40 ஆயிரம் வீடுகளும், அதனைப் போல கிராமப்புறத் திட்டத்தின்—ரூரல் டெவலப்மென்ட் ஸ்கீம்—இன் அடிப்படையில் 60 ஆயிரம் வீடுகளும், அதே போல் கடன் தந்து நாட்டுக்கு உதவுகின்ற தன்மையோடு 50 ஆயிரம் வீடுகளும், கிராமத்தில் இருக்கிற சில பேர் அரசினுடைய அதிகாரம் பெறாமலேயே, கிட்டத்தட்ட 10 ஆயிரம், 11 ஆயிரம் பேர் நாட்டிலே இருக்கின்ற 6 ஆயிரம் ரூபாய் திட்டத்தின் அடிப்படையில் யாரையும் கேட்காமல், அவர்களே அஸ்திவாரம் போட்டு இருக்கிறார்கள். அதையும் மனம் திறந்து அவர்களுடைய வேலையின் தன்மையைக் கருதி அந்த ஏற்பாட்டினைக் கணக்கில் கொண்டு பார்த்தால் இப்போது எடுத்த முடிவின் அடிப்படையில் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் வீடுகள் இந்த ஒரு மாதத்திலே அவ்வளவு

விரைவாக முடிக்கும் அந்தக் குறிப்பை பெற்று இருக்கிற ஒரு உண்மையான, நேர்மையான, அரசாக எதையும் செய்ய வேண்டியஅளவுக்கு, ஏழைகளுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிற அரசாக தி.மு.க அரசு என்பதை நிருபித்துக் காட்டி இருக்கிறது.

அதைப் போல இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், குறிப்பாக, இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் சில கருத்துக்களை ஆரம்பத்திலே சொன்னார்கள். அவர் சொன்ன அந்தக் கருத்திலே தான் என்னுடைய நேரம் எல்லாம் வீணாகி 1–3/4 மணிக்கு பேச வேண்டிய கால கட்டத்தில் நான் இருக்கிறேன்.

ஆனால், இரண்டு பக்கமும் பேசிய, நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும், ஒரு பொதுக் கருத்தினை ஒத்துக்கொண்டார்கள். என்னைப் பொறுத்த வரையில், சமுதாயத்தில் முழு நேரமாக, பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இருக்கிற யாருக்கும் வீடோ, நிலமோ தருவதில் தவறு ஒன்றும் இல்லை. அதைத் துணிந்து செய்து கொண்டே இருப்போம். இதிலே எங்கே பிரச்சினை வரும் என்றால் —அது இன்றைக்கு என்றில்லை, தொடர்ந்து கொண்டு இருக்கிற ஒரு வரலாறு. அப்படிப்பட்ட வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால், நான் வாதத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன், -இன்றைக்கு தமிழக அரசிலே பல அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் மனைகள் வழங்கப்பட்டது என்று சொன்னார்கள். அப்படிப் பார்த்தால் நாட்டிலே எந்த அதிகாரிக்கும் எந்தக் காரியமும் இந்த நாட்டிலே செய்யக் கூடாது. அந்த முடிவை எடுத்தால்தான்—மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் சொன்ன கருத்தின் உள்ளே இருக்கிற கருத்தை ஆராய்ந்து பார்த்தால் நாட்டிலே அதிகாரிகளுக்கு எதையும் கொடுக்கக்கூடாது: அரசியல்வாதிக்கு எதையும் கொடுக்கக்கூடாது.

அப்படிப் பார்த்தால், அது தவறு என்று சொல்கிற சட்டமன்ற உறுப்பினர் எதிரே இருக்கின்ற அவர்களும், இந்த நாட்டிலே பலர், இங்கே இருக்கிற காங்கிரஸ் இயக்கத்தினைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தை, கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், முஸ்லீம் லீக்கைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்: சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் ஆட்சியிலே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

அவர்களும், இந்த நாட்டிலே லைசென்சு வேண்டாம் என்று சொல்ல வேண்டும்: இன்டஸ்டிரி வேண்டாம் என்று சொல்ல வேண்டும், டிரான்ஸ்போர்ட் ஆதிக்கத்திலே இருக்கிற



பெர்மிட் வேண்டாம் என்று சொல்ல வேண்டும், அப்படிப்பட்ட அந்த முடிவை நாட்டிலே உள்ள எல்லா இயக்கங்களும் ஒன்றாகச் சேர்ந்து எடுத்தால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

அதுவே என்னுடைய பணிவான வேண்டுகோள், கொடுக்கின்ற வீடோ, அல்லது கொடுக்கின்ற இடமோ தனிப்பட்ட சலுகையாகத் தரக்கூடாது. நான் ஏற்கனவே விளக்கமாகச் சொன்னேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூட அப்படியே இல்லை என்று சொன்னார்கள், இருந்தாலும், வாதத்திற்காகச் சொல்கிறேன். அது இருப்பதில், கொடுப்பதில் தவறு இல்லை என்பதை ஆழமான கருத்தாகச் சொல்கிறேன். இதிலே ஏற்கனவே தவிர்க்க முடியாத சூழ்நிலையின் காரணமாக இந்தப் பேச்சு வந்ததிலே, இரண்டு பக்கமும் அடிப்படையான வாதத்திலே ஒத்துக்கொள்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினை இதோடு விட்டுவிடுகிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு அருமை சகோதரி, உறுப்பினர் வளர்மதி அவர்கள் தன்னுடைய தொகுதியில் பட்டினப் பாக்கம் பகுதியில் பழுது பார்க்கவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே 15 இலட்சம் ரூபாய் அதற்காக செலவழிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் அவுசிங் போர்டைப் பொறுத்த வரையில், எங்கேயாவது இடம் எடுத்து இருந்தால் அதற்கு போர்டு போடவேண்டும் என்ற நியாயமான கருத்தைச் சொன்னார். அதையும் ஏற்றுக் கொள்கிறோம்,

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள், எம். எம். டி. ஏ. போன்ற அங்கே இருக்கின்ற போர்டைப் பொறுத்த வரையில், ரியல் எஸ்டேட்கரார்கள் நம்முடைய தமிழகத்தில் அவர்களுடைய ஆதிக்கம் இருக்கிறது என்று சொன்னார்கள். இது சட்டப் பிரச்சினையாக இருக்கிறது. ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட் மூலமாக எந்தச் சொத்து யார் வாங்கினாலும் அவர்கள் உடனே பதிவு செய்வதற்கு இப்போதிருக்கிற சட்டத்தில் இடம் இருக்கிறது. ரிஜிஸ்திரார் மத்தியிலே அதற்கு மறுத்தால் நீதிமன்றத்திற்கு செல்லலாம்.

அதைப் போல், 'லேண்ட் அக்விசிஷன் ஆக்ட்' எல்லாம் சென்டிரல் ஆக்ட். மத்திய அரசின் மூலமாக மாற்ற வேண்டிய ஒரு சிக்கல் இருக்கிறது. தனிப்பட்ட ஒருவருடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு காரியமாக இருக்கும். இருந்தாலும் முடிந்த அளவுக்கு அதைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இன்றைக்கும், எம். எம். டி. ஏ. கூட சில இடங்களில் தனிப்பட்டவர்களிலே யாராவது நிலம் விற்பனை செய்தால் அங்கே ஒரு போர்டு போட்டு இருக்கிறது.

இந்தப் பகுதி எம். எம். டி. ஏ. அப்ரூவல் இல்லை என்ற அந்த அளவிற்கு நாங்களும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்குச் சென்னையைச் சுற்றியிருக்கின்ற சிலயிடங்களிலெல்லாம், எம். எம். டி. ஏ. வைச் சேர்ந்த, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைச் சேர்ந்த நாங்கள் அதை ஒரு போர்டு மூலமாக எழுதி, மக்களுக்காக, பாதுகாக்கின்ற தன்மையோடு இருக்கின்றோம்.

அதனைப்போல, மாண்புமிகு உறுப்பினர் செல்வராசன் அவர்களும், மாண்புமிகு சைதை சட்டமன்ற உறுப்பினர் துரைசாமி அவர்களும் வீட்டுவசதி வாரியத்தில் இருக்கின்ற என்.எம். ஆர் தகுதி பெற்ற வீட்டு வசதித் துறையைச் சேர்ந்த ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையைச் சொன்னார்கள். அதிலே நிச்சயமாக இந்த அரசு அந்த நியாயத்தினுடைய தன்மையை உணர்ந்து பரிசீலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள், சென்னையிலே குடிசைப் பகுதியைப் பொறுத்தவரையில் அதிலே உள்ள வாடகை, மற்றவைகளைச் சொல்லி, முடிந்தால் அவர்களுக்கே உரிமையைத் தர வேண்டும் என்று சொன்னார்கள். அந்த நியாயமான கருத்தை உண்மையிலேயே பரிசீலனை செய்ய வேண்டும். அப்பொழுது தான் மற்றக் குறைகளையெல்லாம் அரசின் மீதோ, நிர்வாகத்தின்மீதோ சொல்வதற்கு வாய்ப்பிருக்காது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத் அவர்கள் சிலயிடங்களுக்கெல்லாம் நான் செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கனவே, திருச்சி, சென்னை, சேலம், மன்னார்குடி, அதைப் போல குன்னூர் பகுதியிலே வீடு கட்டுகின்ற நேரத்திலேயும் சரி, திடீரென்று போகும் பொழுது அங்கே இருக்கின்ற நிலைமைகளை நேரடியாகச் சென்று பார்த்தேன்.

இன்றைக்கு நம்முடைய நாட்டிலே மட்டும் ஸ்லம் இல்லை. சிங்கப்பூர் சென்றிருக்கிறாரா என்று கேட்டார்கள். நான் அமெரிக்காவிற்குச் சென்ற பொழுது சிகாகோவிலே இதே போன்ற ஸ்லம்தான்—சிகாகோ ஸ்லம்தான் உலகத்திலேயே புகழ் பெற்றது. அப்படி, பெரிய பணக்கார நாட்டிலேயே இந்த ஸ்லமைப் பற்றி அவர்களே என்ன செய்வது என்று தெரியாத காலத்தில், நாம் வளர்ந்து வரும் நாடுகள்—வளர்ந்த நாடுகளிலே அப்படியிருக்கிறது. அதற்காக நான் அங்கேயும் ஸ்லம் இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை—முடிந்த அளவிற்கு நம்முடைய தமிழக அரசு எடுத்து அதைத் தீர்த்து அவர்களுக்கு உதவுகின்ற தன்மையோடு இப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறது.



இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள், ஹவுசிங் போர்டைச் சேர்ந்த அசோக் நகர் பகுதியில் இருக்கின்ற ஒரு இடத்தினை அதை யாரோ வேறு பெயரில் உபயோகப்படுத்துவதற்கான ஒரு முடிவை எடுத்திருப்பதாகச்சொன்னார்கள். அதற்கு இப்பொழுது அங்கே ஒரு கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ்—அதாவது வியாபார ஸ்தலமாக ஒரு கட்டிடம் கட்டுகின்ற ஒரு முடிவினை வீட்டுவசதி வாரியம் எடுத்திருக்கிறது.

அதனைப்போல, இங்கே பேசிய உறுப்பினர்கள் பல்வேறு நியாயமான கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். சொல்லாத கருத்துக்கள் அல்லது நாட்டுக்குத் தேவையான சில காரியங்களெல்லாம் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தோடு சில முடிவுகளையெல்லாம் நாங்கள் எடுத்திருக்கிறோம். அதை உங்கள் மத்தியிலே சொல்வதற்குப் பெருமையடைகின்றேன்.

முதலில் 1963 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியம் துவங்குகிற காலங்களில் மூன்று கோடி ரூபாய்தான் அப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கிட்டத்தட்ட 55 கோடி ரூபாய் இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே கடந்த ஆண்டு நம்முடைய ஹட்கோ நிறுவனத்திடமிருந்து 36 கோடி ரூபாய் பெற்றோம். இப்பொழுது 43 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம். நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தில் இரண்டாவது இடத்தில் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து அதிகக் கடன் பெறுகின்ற ஒரு மாநிலம் நம்முடைய தமிழகம்தான்.

அதைப்போல, நல்ல திட்டங்களைத் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு சில திட்டங்களை உங்கள் மத்தியிலே வைப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் அதன் பக்கத்திலே இருக்கின்ற இடங்களில் சில சிறிய நகரங்கள் நல்ல திட்டங்களோடு எல்லா வசதிகளோடும் உருவாக்குகின்ற திட்டத்தோடு சென்னையில் ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது, அந்த இடத்தின் பெயரை மட்டும் சொல்ல விரும்பவில்லை. இங்கே 750 ஏக்கர் அதற்கான ஒரு முடிவினை எடுத்திருக்கிறது.

கோவை பகுதியில் கணபதிபுரத்திலே 350 ஏக்கர்; திருச்சி நாவல்பட்டிலே ஏற்கனவே திட்டமிருந்தாலும் இரண்டாவது தடவையாக 450 ஏக்கர்; இப்படி எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல மதுரையிலே ஆலையூர்-கப்பலூர் பகுதியில் 550 ஏக்கர், இந்த நான்கு இடங்களிலும் நல்ல நகரம், புதுநகரங்களை உருவாக்குவதற்கு நம்முடைய வீட்டு வசதி வாரியம் இன்றைக்கு முடிவு செய்திருக்கிறது.

அதைப்போல, சென்னை நந்தனம் பகுதியில்-இங்கே கேள்வி நேரம் நடைபெறுகின்ற காலங்களில் சில உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். புது டெல்லியிலே ஏர் கண்டிஷன் எல்லாம் செய்து கமர்ஷியல் பகுதி கன்னாட்பிளேஸ் பகுதியில் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைகூடவேண்டுமென்று சொன்னார்கள். அதையெல்லாம் மனத்திற்கொண்டுதான், இன்றைக்கு சென்னை நந்தனத்தில் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் ரூபாய் ஐந்து கோடி செலவில் ஒரு அங்காடி வளாகம் அமைக்க அதற்காக வேலைகள் விரைவில் துவக்கப்படும். சென்னை டெய்லர்ஸ் ரோட்டில் பூந்தமல்லி நெடுஞ்சாலை பக்கத்திலே இருக்கின்ற இடத்தில் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் பத்து அல்லது 13 மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு அதற்கும் அயல் நாட்டுத் தமிழர்கள் மற்றவர்கள் கலந்து தங்குவதற்குகாக அந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

அதனைப்போல, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் பயன் பெறும் வகையில் முதற்கட்டமாக ஐம்பது வீடுகள்—கடந்த முறை பேசும்பொழுது சொன்னதை மனத்திற்கொண்டு, பெசன்ட் நகர் பகுதியிலேயும், அண்ணா நகரிலும் முதற்கட்டமாக மூன்று இலட்சம் ரூபாயிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வரையில் ஏன் என்றால் அவர்களெல்லாம் வெளிநாட்டிலே இருக்கின்ற, வசிக்கின்ற தமிழர்கள். அவர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று கருதி அவர்களுடைய விருப்பத்தினை மனதிலே கொண்டு மூன்று இலட்சத்திலிருந்து பத்து இலட்சம் ரூபாய் பெறுமான வீடுகளை, ஐம்பது வீடுகளைக் கட்டுவதற்கு முடிவு எடுத்திருக்கிறோம்.

அதைப்போல தமிழகத்தில் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் புதிய மாவட்டங்களை அறிவித்திருக்கின்ற காரணத்தினால் புதிய மாவட்டங்களின் தலைநகரங்களில் நில எடுப்பு வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. நிலங்கள் அதிகமாக எடுத்து, அங்கேயும் வீடு கட்டும் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க அரசு தயாராக இருக்கிறது.

(பிற்பகல் 1—50)

அதைப்போல, சின்ன, சின்ன குறைபாடுகள், வீட்டு வசதி வாரிய வீடுகளை வாங்கியவர்களுக்கு இருக்கின்றன என்று சொல்கிறார்கள். உதாரணமாக, தேவையில்லாமல், மாதம் ரூ. 60 மெயின்டெனன்ஸ் சார்ஜ் வாங்குகிறார்கள் என்ற குறைபாடு மக்கள் மத்தியிலே இருக்கிறது. இப்பொழுது 1—10—1986-லேயிருந்து, அந்தப் பராமரிப்புச் செலவினைச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லையென்று முடிவெடுத்து சொல்லியிருக்கிறோம்.



அதைப் போல, சாதாரண மக்களையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று சொன்னதை கவனத்திலே கொண்டு, இராமேஸ்வரத்தில் மாத்திரம் சுமை தூக்குவோருக்கு, 15 வீடுகள் கட்டுவதற்கான முன்னோடி ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். மாதம் ரூ. 250 வாங்கிக்கொள்ளலாம் என்பது அவர்களது நீண்டநாள் வேண்டுகோள். இராமேஸ்வரம் தீவிற்கு மாத்திரம் அப்படிப்பட்ட ஒரு முடிவு எடுத்திருக்கிறோம்.

அதைப் போல, ஒதுக்கீடுதாரர்களுக்கு இப்பொழுது என்ன குறை இருக்கிறது. எச்.ஐ.ஜி. வீட்டு உரிமதாரர்கள் என்ன சொல்கிறார்கள், எம்.ஐ.ஜி. வீட்டு உரிமதாரர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்பதற்காக, எச்.ஐ.ஜி. யிலே 10 அல்லது 20 பேர்களைச் சந்திப்பதற்கும், எம்.ஐ.ஜி.யிலே 10 அல்லது 20 பேர்களைச் சந்திப்பதற்கும், மதுரை, திருச்சி, சென்னை கோயம்புத்தூர் போன்ற ஒவ்வோரிடத்திலும் வாரியமே அல்லது அவர்களாகவே நேரிடையாகச் சந்தித்து, அவர்களுடைய குறைகளைச் சொல்கின்ற வாய்ப்பை, அந்தக் குறைகளை மாற்றுகின்ற வகையில், அவர்கள் கருத்தினைக் கேட்க, ஏற்றுக்கொள்ள, அரசு முடிவெடுத்திருக்கிறது.

அதைப் போல், வீடு வாங்கியவர்கள், ரூ-1 இலட்சம் மதிப்புள்ள வீட்டை வீட்டு வசதி வாரியத்திடமிருந்து வாங்கியிருந்தால், அவர்கள் நினைத்தால் ரூ. 5,000 கட்ட முடியவில்லை, ரூ. 10,000 கட்டமுடியவியலை, லாட்டரியில் விழுந்தால்கூட போய் கட்டினால், வாங்குவதற்கு அவர்கள் தயாராக இல்லை: அவர்கள் என்ன நிர்ணயித்திருக்கிறார்களோ அதைத்தான் மாதம் மாதம் வாங்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலே, எல்லா பணமும் வாங்குவதற்குத் தயாராக இருந்தாலும், இப்பொழுது இயலவில்லை என்பதால், வாங்கியவர்களுக்கு பாஸ் புத்தகம் கொடுத்து, எவ்வளவு பணம் அவர்கள் கட்டினாலும் அதை வாங்குகின்ற முறையிலே இப்பொழுது அரசு முடிவு எடுத்திருக்கிறது.

அதைப் போல, கணக்குகளை நவீனப்படுத்தும் முறையை ஒட்டி, கம்ப்யூட்டர் சிஸ்டம் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போல, ஹட்கோ நிறுவனமே, ஆண்டுக்கொரு முறை அல்லாமல் 3 மாதத்திற்கு ஒரு முறை வட்டி வாங்குகின்ற நிலை ஆரம்பத்திலேயிருந்தது. வீட்டு வசதி வாரியத்திடம் வீடு வாங்கியவர்களுக்கு, அந்த முறையை ஏற்கனவே அமுலாக்காத காரணத்தால், அந்த வட்டித் தொகை கூடியது. இப்பொழுது எடுத்த முடிவின் அடிப்படையில், ஆண்டுக்கு ஒரு முறை என்பதற்குப் பதிலாக, 3 மாதத்திற்கு ஒரு முறை வட்டி வாங்கப்படும், என்ற நிலையில், ரூ. 1000—க்கு ரூ. 35 வட்டி என்று குறைக்கப்படுகிறது. அப்படி அருமையான வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.

அதைப் போல குடியிருப்புகளில் நீர்க்கசிவுகள் ஏற்படுகின்றன என்ற புகார்களை எல்லாம் கேள்வி நேரத்திலே சொன்னார்கள். உதாரணமாக மறைமலை அடிகள் நகர், மணலி, பெசன்ட் நகர், கே. கே. நகர், நந்தனம், அண்ணா நகர் போன்ற இடங்களில் எல்லாம் அந்தக் குறைபாடுகளை வீட்டு வசதி வாரியம் நீக்கியிருக்கிறது.

கடந்த முறை ரமணி அவர்கள் பல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். தொகுதிக்கெல்லாம் வரவேண்டுமென்றுச் சொன்னார்கள். சொன்னபடி அன்றைக்கு நான் வாக்குறுதி கொடுத்த அடிப்படையில், 4,5 மாதங்களுக்கு முன்னால். கோவையிலே ரமணி அவர்கள் தொகுதிக்குச் சென்றேன்.

அதைப் போல, மாண்புமிகு நமது மரியாதைக்குரிய அப்துல் சமத் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு வரவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு செல்வராஜ் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு வரவேண்டுமென்று கேட்டார்கள். இன்றைக்கு யார் கேட்டார்களோ, அவர்களுக்கு முன்னுரிமை தந்து, அவர்கள் தொகுதிகளுக்கு வருகிறேன். மற்ற இடங்களுக்கு என்னுடைய காலத்தை வரையறுத்துக் கொண்டு பிறகு வருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

அதே போல, தொழிலாளர்களுக்கு அவர்கள் வீடுகளை உரிமை ஆக்க வேண்டுமென்ற கருத்தினை, கடந்த முறை ரமணி அவர்கள் சொன்னார்கள். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும்போது, இதற்கும் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாநில அரசை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. அந்த அடிப்படையில். 4,167 வீடுகள், அங்கு குடியிருக்கும் உண்மையான, தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்கு விலைக்குத் தருவதற்கு, இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. இந்த வகையில், வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட வசதிகளை இன்னும் செய்யவிருக்கிறோம். அதையெல்லாம் பின்னாலே சொல்கிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைப் பொறுத்த வரை கடந்த முறை சில திட்டங்கள் எல்லாம் வரும் என்று சொன்னேன். சொன்னதைச் செய்கின்ற அரசு இங்கே இருக்கிற காரணத்தால், நிச்சயமாகச் செய்து வருகின்றதை, செய்யப் போவதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1985 ஜூலை நவம்பர் திங்களில் உலக வங்கிக் குழு தமிழகத்திற்கு வந்தது, ரூ. 500. ரூ. 600 கோடிக்கு திட்டம் தருகின்ற ஒரு சூழ்நிலை இருப்பதாகத் தெரிவித்தோம். அதற்குத் தேவையான வகையில், 1986 ஏப்ரல் 3-வது வாரத்தில். உலக வங்கிக் குழு மீண்டும் சென்னைக்கு வர இருக்கிறது. 1986-ல், திட்ட மதிப்பீடுகள் அறிவிக்கப்பட்டு, 1987 மே திங்களில் பேச்சு வார்த்தைகள் முடிவுறும். 1986-87—ல் இத்திட்டம் துவங்கப்பட்டு, சென்னை மதுரை, கோவை மற்றும் திருச்சி, ஆகிய நகரங்களில் உள்ள





பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கும் மிகமிக அத்தியாவசியமான பெரிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றுவதற்கு அதிக நிதி உலக வங்கியிடமிருந்து பெறுவதற்கான அருமையான வாய்ப்பு தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது.

அதே போல, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம், கட்டிடம் கட்டுவோர், முறையாக மனு கொடுத்தால்; அனுமதி கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது என்று பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக, இப்பொழுது, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1–1–1986 முதல் கிரீன் சானல் என்ற அடிப்படையில், கட்டிடங்கள் கட்டுகின்றவர்கள் யாரும் குறிப்பிட்ட வகையான கட்டிடங்கள் கட்டுகின்ற தன்மை உடையவர்கள் மனுவைக் கொடுத்தால், 10 நாளில் கட்டிட அனுமதி வழங்கப்படும் முறையை இப்பொழுது கொண்டு வந்திருக்கிறோம்.

அந்தமுறை இப்போது 300 சதுர மீட்டர் பரப்புள்ள சிறப்புத் திட்டங்களுக்குக் கொண்டுவரப்படலாம் அந்த அடிப்படையில் இப்போது தொழிற்சாலைகள், பல்வேறு கல்வி நிறுவனங்கள், மற்றும் மதச்சார்புடைய கட்டிடங்களுக்கு இத்திட்டம் 1-4-86 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதைப்போன்று பொதுமக்கள் அங்கீகரிக்கப்பட்ட மனைகளை, கட்டிடங்களை வாங்குகின்றபோது அதனுடைய உண்மையான தகவல்களைத் தெரிந்துகொள்ள தகவல் மையம் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. யாரும் எந்த நேரத்தில் சந்தேகப்பட்டாலும், வாங்கலாமா கூடாதா, ஏதாவது பிரச்சனை இருக்கிறதா என்பதைப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஏமாறாமல் இருக்க உண்மையான தகவலைத் தெரிந்து வாங்குவதற்கு இது பயனுடையதாக இருக்கும். உண்மைத் தன்மையைத் தெரிந்து தனிப்பட்டவர்களிடமிருந்து சொத்துக்களை வாங்குவதற்கு இந்த வகையிலே தகவல் மையம் உதவி வருகிறது.

அதைப்போலவே 'என்ஃபோர்ஸ்மென்ட் செல்' ஒன்று வைத்திருக்கிறோம். கட்டிட விதிகளை மீறாமல், ஒழுங்காக நடைமுறைக்குக் கொண்டுவர, இந்த செல் இருக்கிறது.

அதைப்போல தன்னிறைவு மனைத்திட்டங்கள் இருக்கின்றன. 28,000–க்கு மேற்பட்ட மனைகளை பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் வாங்குகின்ற வகையில் 1986 இறுதிக்குள் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக 50,600 மக்கள் அடங்கிய குடிசைப் பகுதிகள் பயனடைவதாக இருக்கும்.

அதைப்போன்று நம்முடைய சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் 'ராபிட் ட்ரான்சிஸ்ட் சிஸ்டம்' இருக்கிறது. இரயில்வே துறையைப் பொறுத்தமட்டில் அது சென்னை கடற்கரையிலிருந்து மயிலாப்பூர் லஸ் வரையில் ஏறத்தாழ 8.45 கிலோமீட்டர் தூரம் வரையில் அமைந்திருக்கும். அதிலே 2.93 கிலோமீட்டர் தரை மட்டமாக இருக்கும். இந்த விவரங்களை எல்லாம் ஏற்கெனவே சொல்லியிருந்தாலும் அது என்னவாயிற்று என்று கடந்த வாரத்தில் ஒரு கேள்வியின் மூலம் கேட்டார்கள். டில்லியிலிருந்து நிதி வரவில்லையா என்ற சந்தேகத்தோடு கேட்டார்கள்.

திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்த அரசும் மத்திய அரசும் எப்படி முயற்சிகளை மேற்கொள்கின்றன என்பதை இங்கே விளக்க வேண்டும் நான்கு தினங்களுக்கு முன்னால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் காங்கிரஸ் இயக்க உறுப்பினர்களுக்கும் இடையே ஒரு பெரிய வாக்குவாதம் நடைபெற்றது. இந்த நாட்டிலே தொழில் வளர்ச்சிக்கு யார் உண்மையாக உழைக்கின்றார்கள் என்ற ஒரு நல்ல கருத்துப் பரிமாற்றம் இரண்டு பக்கத்திலிருந்தும் மாறி, மாறி நடைபெற்ற நிகழ்ச்சியை நான் அறிவேன். அப்போது மற்ற கட்சி உறுப்பினர்கள் எல்லாம் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இதிலேயிருந்து ஒரு உண்மை தெரிகிறது. யார் இந்த நாட்டுக்கு உண்மையாக உழைக்கிறார்கள், இந்த நாட்டு மக்களுக்கு உண்மையாக இருக்கிறார்கள் என்றால் காங்கிரஸ் இயக்கமும் அண்ணா தி. மு. க. கழகமும்தான். யாருக்கு நிதி தருவது, எங்கிருந்து நிதி பெறுவது, திட்டம் நின்றுபோவதற்கு டில்லி காரணமா அல்லது தமிழக அரசு காரணமா என்று வாக்குவாதம் நடைபெற்றது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அதைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருந்தார்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் பாராளுமன்றத்தில் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறது. எங்கள் கட்சி உறுப்பினர்கள் அங்கே பேசியிருக்கிறார்கள். இங்கே நடைபெற்ற விவாதத்தை பேசாமல் கவனித்துக்கொண்டிருந்ததால் எங்களுக்கு அதில் அக்கறையில்லை என்று பொருள் அல்ல. இன்னும் சொல்லப்போனால் நானே இந்த ராப்பிட் ட்ரான்சிஸ்ட் சிஸ்டத்திற்கு ஒதுக்கியத் தொகை போதாது, இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று பேசியிருக்கிறேன். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அக்கறை இல்லை என்ற உணர்வை ஏறபடுத்தக் கூடாது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். இப்போது எல்லோருக்கும் பசி என்ற உணர்வு எனக்கும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: தலைவரவர்களே, அன்று நான் கண்ணால் கண்ட உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது, சொன்னேன். அதைப்போல சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 'இன்னர் ரிங் ரோடு





(உள்வட்டச் சாலை) 17.7 கிலோமீட்டர் போட வேண்டும். இப்போது 14 கிலோமீட்டர் சலை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலை 1986—87 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, கொத்தவால் சாவடி பற்றி குறிப்பிட்டார்கள். 1986 ஆகஸ்ட் மாதத்தில் கட்டிட வேலை தொடங்கப்படும். 432 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

அதைப்போன்று கோயம்பேடு, ஆலந்தூர் மற்றும் மாதவரம் ஆகிய மூன்று இடங்களில் பஸ் ஸ்டாண்ட் டெர்மினல் கட்டுவதற்கான இடம் எல்லாம் எடுக்கப்பட்டுவிட்டது. அந்த வேலை இந்த ஆண்டில் தொடங்கப்படும்.

சாத்தான்காடு கிராமத்தில் 'அயர்ன் & ஸ்டீல் மார்க்கெட்' 200 ஏக்கர் பரப்பளவில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கிறது. 1986 ஜூன் முதல் சாலைகள், மற்றும் பாலங்கள் எல்லாம் அமைக்கப்படவிருக்கின்றன.

சென்னைப் பெருநகரைப் பொறுத்தவரையில் பல்வேறு நல்ல திட்டங்கள் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று குடிசைமாற்று வாரியத்தைப் பொறுத்தமட்டில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு அப்துல் சமத் அவர்கள் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் புதிய கட்டிடங்களைக் கட்டுவதைவிட ஏற்கெனவே இருப்பதை 'இம்ப்ரூவ்' செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அது வரவேற்கத்தக்க கருத்தாகும். நம்முடைய சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் நடப்பாண்டில் 'இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம்' என்ற அடிப்படையில் குடிசைவாசிகள் கடன் உதவி பெறுகின்ற வகையில் 447 இலட்சம் ரூபாய் 7 சதவீத வட்டியில் 5,591 குடும்பங்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. குடும்பம் ஒன்றுக்கு அதிக பட்சம் 8,000 ரூபாய், திருப்பிச் செலுத்தும் காலம் 20 ஆண்டுகள்; மாத தவணைகள் 67.

(பிற்பகல் 2—00)

வீடு கட்டும் திட்டத்தின் மூலம் சுயவேலை வாய்ப்பு அடிப்படையில் 51 ஆயிரம் நபர்கள் பயன் அடைவார்கள்.

மாஸ் ஹவுசிங் ஸ்கீம் அதாவது பெருமளவு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 43 நகரங்களிலும், சென்னையிலும் மொத்தம் 10 கோடியே 76 இலட்சம் ரூபாய்த் திட்ட மதிப்பீட்டில் 50 ஆயிரம்

குடும்பங்களுக்குக் கடன் உதவி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறது அரசு. கடன் தொகை 2,000 ரூபாய், வட்டி விதம் 7 சத விதம். திருப்பிச் செலுத்தும் காலம் 20 வருடம். மாதத் தவணை 17 ரூபாய்.

குடிசைமாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் பராமரிப்பு சரியாகச் செயல்படவில்லை என்று சொன்னார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளைப் பொறுத்த வரையில் செலவு மாதம் ரூ. 70. ஆனால் வாடகையாக வசூலிக்கப்படுவது சராசரியாக ரூ. 22. இப்படி நிதிப்பற்றாக்குறை என்பது எவ்வளவு கடுமையாக இருந்தாலும், எந்தப்பகுதியிலேனும் நியாயமான அடிப்படையில் குறைகள் இருந்தால் அவற்றைப் போக்குகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பெரம்பூர் பகுதியில் வியாசர்பாடி, எழும்பூரில் சந்தோஷ் நகர், பார்க்டவுனில் கேசவபிள்ளைபுரம், ராயபுரத்தில் ஈஸ்ட் சிமிட்ரி ரோடு, இராதாகிருஷ்ண நகரில் வ.உ.சி. நகர், புரசவாக்கம் பகுதியில் கவுதம நகர், அண்ணா நகரில் டி.பி. சத்திரம், மயிலாப்பூர் பகுதியில் நொச்சிக்குப்பம், டி. நகரில் இராமகிருஷ்ணபுரம், ஆயிரம்விளக்கில் ஜோத்தோட்டம், வில்லிவாக்கத்தில் திருமறை நகர், சைதாப்பேட்டையில் கோட்டூர்புரம் இன்னும் சில இடங்களில் எல்லாம் குறைபாடுகள் இருந்தது தெரிந்து அந்தக் குறைபாடுகளை உடனடியாக நீக்குவதற்குரிய வகையில் பல இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

குடிசைமாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் வாடகையாக மொத்தம் வரவேண்டியது 293 கோடியே 92 இலட்சம் ரூபாய். அதிலே வசூலானது 75 கோடியே 52 இலட்சம் ரூபாய் இருக்கும். இவ்வளவு கடுமையான நிலைமை இருப்பதன் காரணத்தால்தான் நிதிநிலைமையை பார்க்கிறபோது சில நேரங்களில் நாம் நினைத்ததைச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அடையாறு பக்கத்தில் ஆற்றோரத்தில் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் மொத்தம் 9. அதிலே உள்ள மொத்தக் குடும்பங்கள் 3,408. இதிலே 2,064 குடும்பங்களுக்கு மனைகளும், 1,344 குடும்பங்களுக்கு மாடி குடியிருப்புகளும் ஹட்கோ நிதியுதவியுடன் 230 இலட்சம் ரூபாய் செலவிட அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதிலே கோட்டூர்புரம் குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு பாதிக்கப்பட்டது 1,476. நிவாரணப் பணிக்காக 6 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. நிரந்தரப் பணிகளுக்காக 61.2 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இதை அவசியம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இயற்கையின் சீற்றத்தால், வெள்ளத்தால் அந்தப்பகுதிகள் பாதிக்கப்பட்ட காரணத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதைப்போல் நந்தனம் பகுதியில் சத்தியமூர்த்தி நகர் குடிசைப்பகுதி தீயினால் பாதிக்கப்பட்டபோது அதற்கும் 67 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டது. இந்த அளவுக்கு குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல அளவிற்கு நல்ல காரியங்களைச் செய்து வருகிறது.



திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3408 குடும்பங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். எந்தெந்தப்பகுதி என்பதைச் சொன்னால் உபயோகமாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைச் சொல்லி, அந்த நபர்களின் பெயர்களையும் சொன்னால் வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூவாயிரத்துச் சில்லரை குடியிருப்புகள் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் என்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே மாடி வீடு கட்டப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். கட்டப்படுகிற குடியிருப்புப் பகுதிகளின் பெயர்களையும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகிற பகுதிகளின் பெயர்களையும் சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே. அடையாறு ஆற்றோரப் பகுதி என்று தான் குறிப்பு இருக்கிறது. அந்தப் பெயர்களைப் பொறுத்தவரையில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரே கூட சொல்லலாம்.

திரு. சைதை. சா. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே. திடீர் நகர், கோதாமேடு, ஆற்றுமாநகர் போன்ற தீ பிடித்தப் பகுதிகளுக்குப் பதிலாக மாடி வீடு குடியிருப்புகள் கட்டுவதும், சூரியாநகர், சத்தியாநகர், ஜோதியம்மாள் நகர் போன்ற பகுதிகளும், கோட்டூர்புரம் கீழ் பகுதி வீடுகளும் ஆகிய இந்த மூன்றும் தான் அடங்குகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு பகுதிக்கு இத்தனை வீடு என்றுதான் அந்த அளவுக்குத்தான் குறிப்புகள் இருக்கின்றன. எனவே தெருவுக்குத் தெரு விளக்கம் தருவதற்கான வாய்ப்பு இல்லை.

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுகிற திட்டத்தைப் பொறுத்தவரையில் 1985–86 ஆண்டு 9 கோடி ரூபாய் என்று அறிவிப்பு செய்தோம். ஆனால் அதிக அரசு அலுவலர்கள் விரும்பி, வேண்டி கேட்டுக்கொண்டதற்கிணங்க இறுதிக் கட்டத்தில் 12 கோடி ரூபாய் கடந்த முறை செலவு செய்திருக்கிறோம். இப்போதும் 15 கோடி ரூபாய் என்று அறிவிப்பு செய்திருக்கிறோம். ஆகவே அரசின் செலவு கூடுகிறது என்றாலும்கூட அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக நாங்கள் உதவுகிற தன்மையோடு இருக்கிறோம். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து அரசு அலுவலர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டால் 6 மாதத்திற்குள் எது எப்படி இருந்தாலும் நிச்சயமாக அவர்களுக்கு முன்பணம் வழங்க முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதனைப் போல வீடு கட்ட முன் பணம் பெற்று அத்தவணை முழுவதையும் திருப்பிச் செலுத்துவதற்கு முன், ஒரு ஊழியர் இறந்து விட்டால், அந்தக் குடும்பத்திற்கு திடிரென்று ஒரு சோகமான சூழ்நிலை ஏற்படுகிற காரணத்தால், தாய் உள்ளம் கொண்ட அரசாக இருக்கிற காரணத்தால் நமது மாண்புமிகு

புரட்சித் தலைவர் அவர்கள், அதற்கென்று ஒரு குடும்ப நல நிதியை ஏற்பாடு செய்து அதன் மூலம், திடிரென்று யாராவது அரசு ஊழியர் வீடு கட்டுவதற்கு கடனைப் பெற்று இறந்து விட்டால், அவர்கள் செலுத்த வேண்டிய கடனையும், வட்டியையும் அவர்கள் செலுத்த வேண்டியது இல்லை. அந்த வீடு அவர்களுக்கே உரியதாக்கப்படும், அவர்களே எடுத்துக் கொள்ளலாம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதனைப் போல கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக கிராமப்பகுதியிலே கட்டப்படுகிற வீடுகளின் சூழ்நிலையைப் பற்றி எல்லாம் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். எங்கள் தொகுதியிலே பாதியிலேயே நிற்கிறதே, அதற்கு நிதி கிடைக்குமா என்றெல்லாம் கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்னுசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களும் கூட கடந்த முறை அதைப்பற்றிக் கேள்வி கேட்டார்கள் அந்த அடிப்படையில் தமிழகத்தில் கணக்கு எடுக்கப்பட்டு, 1,546 வீடுகள் அப்படி பாதிக்கப்பட்ட நிலைமையில் இருக்கின்றன என அறியப்பட்டு அப்படி ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள வீடுகளை கட்டி முடிக்க 24 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் கூடுதல் கடன் வழங்கப்படும் என்ற ஒரு முடிவை அரசு இப்போது எடுத்திருக்கிறது.

அடுத்து இங்கே பேசுகிறபோது எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி. போன்ற திட்டத்திற்கு போடப்படும் வட்டி கொஞ்சம் கூடுதலாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்காக இந்த அரசைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்து விலை வாசி உயர்ந்து வரும் இந்நாளில், இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் மட்டும்தான், எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி. குடியிருப்புகளுக்கு இது வரையில் 14 சதவீதமாக இருந்ததைக் குறைத்து இப்போது 12 1/2 சதவீதமாக வட்டி வசூலிக்கப்பட வேண்டும் என்ற முடிவை எடுத்திருக்கிறது. இதிலிருந்து எவ்வளவு கடுமையான நிலைமையில் இருந்தாலும் இந்த நாட்டிலே நடுத்தர வர்க்கத்திற்கு உதவுகின்ற தன்மையிலும், எல்.ஐ.ஜி. போன்ற குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் உதவுகின்ற தன்மையிலும் அந்த முடிவை இப்போது எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்துக் கொள்ளலாம்.

அதனைப் போல புதிய வீடுகளைக் கட்டுவதற்கு கட்டிடத்தின் உட்பரப்பு முன்பு 1,200 சதுர அடி என்று இருந்தது. அது போதாது என்று சொன்னார்கள். இப்போது அதை 2,400 சதுர அடியாக இருந்தாலும் 80 ஆயிரம் ரூபாய் கடன் அவர்களுக்கு கிடைக்கும். அதனைப் போல வளர்ந்து வரும் இந்திய துணைக் கண்டத்தில், நமது தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்னும் பல்வேறு இடங்களில வீடுகள் எல்லாம் 6 ஆயிரத்திற்கு, அதிகமாக சட்டப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதில்



கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் முதல் கட்டமாக, அந்த நகரத்தை ஒட்டியும் இருப்பவர்களுக்கு, 10 ஆயிரம் ரூபாய்க்கு அதிகப்படாமல் வீடு கட்ட கடன் வழங்க இந்த நிதி ஆண்டில் முடிவு எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் திருச்சி மதுரை கோவை போன்ற இடங்களில் முதல் கட்டமாக அந்த அறிவிப்பை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அதேபோல நகர்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் எல்லையைக் கூட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இப்போது இருக்கிற அடிப்படையில் ஒரு நகரத்தை ஒட்டி ஒரு கிலோ மீட்டருக்கு தள்ளி இருந்தாலே, அங்கே இருப்பவனுக்கு கடன் வாங்குவதற்கு வாய்ப்பு இல்லை என்று இருக்கிறது. அதை மாற்றி இப்போது நகரப் பஞ்சாயத்துக்கு ஒரு கிலோ மீட்டரிலிருந்து 3 கிலோ மீட்டரும், தாலுக்கா தலைமை இடத்தில் 2 கிலோ மீட்டரிலிருந்து 5 கிலோ மீட்டரும்' தேர்வு நிலையில் இருக்கும் முதல் நிலை நகராட்சியில் இருந்து 5 கிலோ மீட்டரிலிருந்து 8 கிலோ மீட்டர் வரையில் யார் வீடுகளைக் கட்டினாலும், அவர்கள் கடன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் இப்போது 8 கிலோ மீட்டர் வரையில் தான் ஒரு வரம்பு வைத்திருக்கிறோம். அதனை இப்போது 12 கிலோ மீட்டராக மாற்றி இருக்கிறோம். அந்த வகையில் ஆங்காங்கே உள்ள பல சங்கங்கள் மூலமாக பல வசதிகள் செய்யப்பட இருக்கின்றன.

இறுதியாக நகரமைப்பு துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1981 ஆம் ஆண்டு கணக்கின்படி 484 பெரிய நகரங்கள். அதிலே நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 98 நகராட்சிகள். 628 பேரூராட்சிகள். அந்த வகையில் பார்க்கிறபோது எங்களது நகரமைப்புத் துறையில் 112 உள்ளூர் திட்டமாகப் பிரித்திருக்கிறோம். 8 குறு நகர் அபிவிருத்தித் திட்டங்களாகப் பிரித்து, அந்த வகையில் 75 உள்ளூர் பகுதிகளுக்கு குடியிருப்புகளுக்கான மாஸ்டர் பிளான் என்ற வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது, வருகிற 1986-87 ஆம் ஆண்டில் மீதி இருக்கிற 44 உள்ளூர் திட்டப் பணிகளுக்கு திட்டம் தயாரிக்கப்படும் போது, 20 ஆண்டுகள் கழித்து ஒவ்வொரு நகரத்திலும் கூடுகிற மக்கள் தொகைக்கு ஏற்ப, அதனை ஒட்டி, 1986-87ல் தமிழகத்தைப் பொறுத்த வரையில் எல்லா நகராட்சிகளுக்கும் மாஸ்டர் பிளான் திட்டங்கள் தயாரிக்கும் பணியை தமிழக அரசு எடுத்து வருகிறது. இந்திய துணை கண்டத்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு எல்லா நகராட்சிகளுக்கும் 20 ஆண்டிற்குப் பிறகு, நாடு எப்படி இருக்கும் நகரம் எப்படி இருக்கும் என்று எதிர்பார்த்து, தயாரிக்கப்படும் மாஸ்டர் பிளான் திட்டங்கள் நம்முடைய தமிழ்நாட்டில் மட்டும் தான், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தயாரிக்க முடிவு எடுத்திருக்கிறோம்.

அதனைப் போல ரீஜினல் பிளான் என்ற திட்டத்தில் முதலில் இராமநாதபுரம் பகுதியை எடுத்திருக்கிறோம். அது பிறபடுத்தப்பட்ட பகுதி என்ற ஒரு காரணத்தினால், அது முதலிலே எடுக்கப்பட்டிருக்கிறது.

அதனைப் போல நம்முடைய தமிழகத்தில் அதிக சாலை விபத்து ஏற்படுகிறது. அதனைக் குறைக்க வேண்டும். காரில் வெகுதூரம்போகின்றவர்கள் எல்லாம் ஓய்வு எடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறோம். மற்றப் பகுதிகளில் எல்லாம் கூட அதனைச் செய்ய வேண்டும் என்று அந்த ஏற்பாட்டை இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் ஒரு முடிவை எடுத்திருக்கிறோம்.

(பிற்பகல் 2-10)

போக்குவரத்து வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்ய நெடுஞ்சாலை ஓரங்களில் தங்கும் விடுதிகள் அதாவது Roadside rest centres என்று முதல் கட்டமாக தமிழகத்தில் பத்து இடங்களில் ஏற்படுத்தப்படும். அந்த முடிவையடுத்து மாமண்டூர், உளுந்தூர்பேட்டை, கொட்டாம்பட்டி, கோவில்பட்டி, வள்ளியூர், சுங்குவார்சத்திரம், இராணிப்பேட்டை, ஒசூர், கருமத்தான்பட்டி ஓட்டன்சத்திரம் 1986–87ஆம் ஆண்டில் இந்தப் பத்து இடங்களில் போக்குவரத்து வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்ய இந்த நெடுஞ்சாலைகளில் செல்கிற வாகனங்களை நிறுத்தி ஓய்வு எடுத்துக்கொள்வதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல திருச்சி, சேலம், கோவை, மதுரை நகரங்களில் 'ட்ரக் டெர்மினல்ஸ்' அதாவது அங்கே ஒவ்வொரு இடத்திலும் குறைந்தது 30 ஏக்கர் எடுத்து 150 லாரிகள் நிறுத்துவதற்கு, ஒவ்வொரு இடத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவில் நல்ல வசதிகளோடு இப்படிப்பட்ட வசதிகள் செய்யப்படவிருக்கின்றன. அதாவது நிறுத்துமிடம் 100, கிடங்குகள் 50, பட்டறைகள் 2 இவை திருச்சி, சேலம், கோவை, மதுரை என்று ஒவ்வொரு இடத்திலும் தங்கும் ஓய்வு விடுதிகள் 200 பேர்களுக்கு, கடைகள் 10, உணவகம்—சைவம் 1, அசைவம் 1, பெட்ரோல், டீசல் நிலையம் 1, குளியல் அறைகள் 20, கழிப்பறைகள் ஒவ்வொரு பகுதிக்கு 10 எண்ணிக்கை வீதம் இரண்டு பகுதிகள், பொதுத் தொலைபேசி வசதிகள் 2, முதலுதவி நிலையம் 1. பாது காவலர் அலுவலகம் 1, மற்றைய வசதிகள் குடிதண்ணீர், கழிவு நீர், வேண்டிய மின்வசதி, அணுகுசாலை மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள், பொழுது போக்கு வசதிகள், திறந்த வெளியிடங்கள், விளையாட்டு வசதிகள், படிப்பகம் உள்பட அனைத்தையும் கொண்டிருக்கிற ஒரு அருமையான திட்டம் தீட்டப்பட்டு நம்முடைய துணைக்கண்டத்திலேயே நம்முடைய மாநிலத்தில்தான் இவ்வளவு பெரிய அளவில் வசதிகள் செய்யப்படவிருக்கின்றன. மற்ற மாநிலங்களில் இவை சிறிய அளவில் இருக்கின்றன.



அதேபோல கோவை, திருச்சி, சேலம் மற்றும் மேலூர் போன்ற இடங்களில் பூங்கா போன்ற விளையாட்டு இடங்களை அபிவிருத்தி செய்ய 23 லட்சம் ரூபாய் செலவு செய்ய இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை இந்த அரசு நல்ல முறையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர்கள் 24 பேர் இங்கே 74 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள், அவற்றையெல்லாம் முழுவதும் நான் படித்துப் பார்த்தேன். அவற்றில் 52 வெட்டுத் தீர்மானங்கள் அவர்களின் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் திட்டங்கள் வேண்டுமென்று கேட்கப்பட்டவை, மீதி 22 வெட்டுத் தீர்மானங்கள் கொள்கை ரீதியான கருத்துக்களைச் சொல்லியவை ஆகும். நியாயமான கருத்துக்களை அரசு நிச்சயமாக ஏற்று நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண். 33—வீட்டுவசதி

திருவாளர்கள் எஸ்.பி. மணவாளன், சு. பாலன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

திரு. பொ. உத்திராபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 31,91,74,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 40,02,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (4-4-1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.14 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

61. சென்னையிலுள்ள திருவாளர்கள் தண்டையார்பேட்டை சரக்கு ரயில் பெட்டிகள் இணைப்புத் தளம் பணியாளர் கூட்டுறவு சிற்றுண்டிச் சாலை செலுத்த வேண்டிய கூடுதல் மற்றும் மேல் வரி உள்ளடங்கிய வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 4-1-1986 ஆம் நாளிட்ட 4ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

62. வேளாண்மைத் துறையின் 3-9-1985ஆம் நாளிட்ட II/(2)/(AG)/5231/85 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 7-1-1986 ஆம் நாளிட்ட 48-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

63. தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிவிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

60. கோரிக்கை எண்கள் 33 மற்றும் 34—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

61. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (ஆறாவது பட்டியல்).



இணைப்பு-I

(80-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கொள்கை விளக்கக் குறிப்பு.

தமிழ்நாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி 1986-87
மானியக்கோரிக்கை எண் 33—வீட்டுவசதி

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களது திறனுக்கு ஏற்றதொரு குடியிருப்புகளை அமைத்துத் தருவதே அரசின் நீண்ட நாளைய வீட்டுவசதிக் கொள்கையாகும். இதற்கென, பல்வேறு பொதுத் துறை நிறுவனங்கள், வீடுகள் அல்லது மேம்படுத்தப்பட்ட மனைகளை ஏற்படுத்தித் தர ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது தவிர பல்வேறு சமூக நலப் பிரிவு மக்களையும் அவர்களாகவே வீடுகள் கட்டுமானத்தில் ஈடுபட பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற்றுத் தருவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் வீட்டினை ஏற்படுத்தித் தருவதை அரசாங்கமே நிறைவேற்ற இயலாது என்றாலும், இத் துறையில் பொது நிறுவனங்களை ஈடுபடுத்துவதன் மூலம், நடைமுறையில் வீடுகள் மற்றும் மனைகளின் பொதுவான விலை நிலையை தனியார் துறையிலும் கட்டுப்படுத்தலாம் என்று நம்பப் படுகிறது.

மேற்சொன்ன கொள்கையை நிறைவேற்றும் முகத்தான் கீழ்வரும் மிக முக்கியமான நடைமுறைகளை அரசு நிர்ணயித் துள்ளது:—

(அ) பல்வேறு வருமான வரம்பு உள்ளவர்கள் பயன் பெறும் வகையில், வீடுகளையும், மனைகளையும், "உடனடி விற்பனை" மற்றும் "தவணைமுறை விற்பனை" அடிப்படையில் ஏற்படுத்தித் தருவது.

(ஆ) மனைகளை மேம்படுத்தி அத்தியாவசியமான அடிப் படை வசதிகளுடன் கூடிய வீட்டு மனைகளை ஏற்படுத்துவது.

(இ) தனிப்பட்டவர்களே அவர்களுக்கு ஏற்றுவாறு வீடு களைக் கட்டிக் கொள்ளத் தேவையான நிதி உதவிகளை தக்க நிறுவனங்களிடமிருந்து பெற்று உதவுவது.

(உ) குடிசைப் பகுதிகளை அகற்றி, அப்பகுதிகளில் அடுக்கு குடியிருப்புகளை அமைத்து குடிசை வாழ் மக்களுக்கு மறு வாழ் வளிப்பது.

(ஊ) குடிசைப் பகுதி வாழ் மக்கள் தங்கள் குடியிருப்பு களை மேம்படுத்திக்கொள்ள மேம்பாட்டுக் கடனுதவி அளிப்பது.

(எ) நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்கள் வீடு கட்டிகொள்ளத் தேவை யான கடனுதவியை அளிக்கத் தக்க நிதி ஆதாரங்களுக்கு வழி வகை செய்து கொடுப்பது; மற்றும்

(ஏ) அரசு ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கென வீடுகளைக் கட்டுவது.

மேற்கூறப்பட்ட திட்டங்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கீழ்வரும் மூன்று பொது நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன:—

1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.
2. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.
3. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம்.

இவை தவிர, மாநிலத்தில் வேறுசில துறைகள் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. ஊரக மேம்பாட்டு திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோருக்கான திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறையும், மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம், காவலர் வீட்டுவசதித் திட்டம் மற்றும் ஆதி திராவிடர் வீட்டுவசதித் திட்டங்களை அந்தந்தத் துறைகளும் நிறைவேற்றுகின்றன.

வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு மாபெரும் வீட்டுவசதித் திட்டத்தை நிறைவேற்ற அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது. வரும் ஆண்டுகளில், வறுமைக் கோட்டில் உள்ள அனைத்து மக்களும் அரசு ஆதரவுடன் சொந்தமாக வீடுகளைப் பெற வேண்டும் என்பதே இத்திட்டக் குறிக்கோள் ஆகும். இத் திட்டம், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் துறைகள் மூலம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் ஒருமித்த மேற்பார்வையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டச் செயல்முறைகள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கான பல்வேறு செயல் முறைகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களையும், நிதி நிறுவன உதவிகளையும் கண்டறிய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அரசின் பொதுவான வினை முறைத்திறன், கொள்கை விளக்கக் குறிப்பின் பின் பகுதியில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிறுவனங்களின் செயல் திட்டங்கள் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் :

திட்டமிட்ட வீட்டுவசதித் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் பொருட்டு 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி, வாரியம் உருவாக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவில் தேவையான வசதிகளுடன், குறைந்த நடுத்தர மற்றும்



உயர் வருமானப் பிரிவினரான அனைத்து சமூகப் பிரிவினரும் வீடுகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் வீட்டு வசதி வாரிய செயல்முறை வகுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் செயல்பாடு, நகர்ப்புறத்தில் வீட்டுமனை தொடர்பான ஊக வாணிபத்தைக் குறைத்து, குறைந்த விலையில போதிய மனைகள் கிடைக்க உதவும் என்று நம்பப்படுகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அதன் துவக்க காலத்திலிருந்து 1985-86ஆம் நிதியாண்டு முடிய பல்வேறு வருமான வரம்பு அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் தகவல்களும் இணைப்பு I—ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1986-87ஆம் நிதியாண்டில் மொத்தம் 16,400 வீடுகள்/மனைகள் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளன. இதற்காகும் மொத்த செலவு ரூ. 3742.50 இலட்சம் அரசின் நிதி உதவி ரூ 1567.50 இலட்சமாகும். இதன் விவரங்கள் கீழ்வருமாறு:

| | குடியிருப்பு எண்ணிக்கை | 1986-87ஆம் ஆண்டின் ஒதுக்கீடு. | அரசின் நிதி உதவி. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் கீழ்) | 7,200 | 700.00 | 600.00 |
| 2. குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம் | 96 | 67.50 | 67.50 |
| 3. குறைந்த வருவாய்ப் பிரிவினர் | 1,300 | 300.00 | 100.00 |
| 4. நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் | 5,016 | 1875.00 | — |
| 5. அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் | 2,788 | 800.00 | 800.00 |
| மொத்தம் | 16,400 | | |

பல்வேறுபட்ட வருமான வரம்பினருக்கான திட்டங்கள்.

வீட்டுவசதித் திட்டங்கள் பல்வேறு வருவாய்த் தொகுதியினருக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

குறைந்த வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டம்.

இத் திட்டம், மாத வருமானம் ரூ. 701 முதல் 1,500 வரை பெறுபவர்கள் பயனடைய என உள்ளது. இத்திட்ட வீட்டின் உச்ச வரம்புச் செலவு ரூ. 30,000 ஆகும். வீட்டின் செலவினத்தில் 25 சதவீதம் உடனடியாக முன்பணமாகவும், மீதமுள்ள தொகை 13 ஆண்டுகளில் (பயன்தரும் காலமாக இரண்டு ஆண்டுகள் தவிர) மாதத் தவணைகளாக செலுத்தப்படல் வேண்டும். இத்திட்டத்தின் கீழான வட்டிவிகிதம் 9 சதவீதம். வீட்டு வசதி வாரியம், இத்திட்டத்தின் கீழ் 25,865 வீடுகளை ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவு வரை கட்டியுள்ளது. 1985-86-ஆம் நிதியாண்டின் பிப்ரவரி 1986 முடிய 2,251 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டிற்கான குறியீடாக 1,300 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசு தரப்பில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினர் வீட்டு வசதித் திட்டம்:

நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டுவசதி திட்டம், மாத வருமானம் ரூ. 1,501 முதல் 2,500 வரை உள்ளவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் முதல் பிரிவு வீட்டிற்கான விலை உச்சவரம்பு ரூ. 60,000 ஆகும். இரண்டாம் பிரிவு வீட்டிற்கான உச்சவரம்பு ரூ. 1 இலட்சம் ஆகும். மொத்தச் செலவினத்தில் 30 சதவீதம் முன் பணமாகவும், மீதமுள்ள தொகை 13 ஆண்டுகளில் மாதத் தவணைகளாக வசூலிக்கப்படுகிறது (பயன்தரும் காலமான இரண்டு ஆண்டுகள் சேர்க்கப்படாமல்). முதல் பிரிவிற்கு வட்டி 11 சதவீதம். இரண்டாம் பிரிவிற்கு வட்டி 12½ சதவீதம்.

உயர் வருவாய்த் தொகுதியினர் வீட்டுவசதித் திட்டம், மாத வருமானம் ரூ. 2,500-க்கு மேல் உள்ளவர்களுக்கானது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் தற்போதைய விலை உச்சவரம்புச் செலவு ரூ. 2,50,000 ஆகும். மொத்த செலவினத்தில் 30 சதவீதம் முன்பணமாகவும், மீதமுள்ள தொகை மாதத் தவணைகளாக 13 ஆண்டுகளில் (பயன்தரும் காலமான இரண்டு ஆண்டுகள் இணைக்கப்படாமல்) வசூலிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்கான வட்டி வீதம் 13½ சதவீதம்.

1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 20,081 வீடுகள் இவ்விரு திட்டங்களின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் 3,761 வீடுகள் 1986 பிப்ரவரி முடிய கட்டி



முடிக்கப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் 5,016 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு ரூ. 3,742.50 இலட்சம்.

நிலம் கையகப்படுத்துதல் மற்றும் வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம்.

நிலத்தின் விலைகளில் ஊக வாணிபத்தைத் தடுக்கும் பொருட்டும், நிலத்தின் விலையைக் குறைக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்துவரும் நகரங்களின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், நிலங்களைப் பெருமளவில் முன்னதாக கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். என்றாலும், பல்வேறு காரணங்களினால் நிலம் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து, நிலம் கையகப்படுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரும் கோரிக்கை மனுக்கள் பெறப்படுவதாலும், பல நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்து தற்காலிக தடைபெற்று விடுவதும் இத்திட்ட முன்னேற்றத்தில் சிறிது தாமதத்தை ஏற்படுத்துகிறது. 1986–87 ஆம் ஆண்டில் 230 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்தி மேம்படுத்த வீட்டு வசதி வாரியம் உத்தேசித்துள்ளது. 1986–87 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இப்பணிகளுக்கென ரூ. 150 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம்.

உலக வங்கி உதவி பெறும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் மிகவும் முக்கியமான திட்டம் தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டமாகும். இத்திட்டம், நிலத்தினை மேம்படுத்தவும், சாலைகள், குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட வீட்டு மனைகள் வழங்க உருவாக்கப்பட்டதாகும். இத்திட்டம், சென்னை மாநகரத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரின் வீட்டுப் பிரச்சினையைப் போக்க மிகவும் அதிக அளவில் உதவுகிறது. இத்திட்டத்திற்காகும் செலவினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மானியமாக அரசு அளிக்கிறது. இத்திட்டத்தில் பயனடைபவர்களிடமிருந்து பெறப்படும் வசூல் தொகை ஒரு 'சுழல் நிதிக்கு' போய்ச் சேரும். இத்தொகையிலிருந்து வருங்கால தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்களுக்கு நிதியுதவு அளிக்க இயலும்.

தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் சிறப்பு அம்சம் பல்வேறு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகும். இத் திட்டத்தின்கீழ், தொழிற்சாலை, வாணிபம் மற்றும் உயர் வருமானப் பிரிவினருக்கான மனைகள், இம்மனைகளை மேம்படுத்த ஆகும் செலவைவிட அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அவ்வாறு கிடைக்கும் அதிகத் தொகை, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு மானியத் தொகை வழங்க பயன்படுகிறது.

அதனால், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு அவர்கள் வாங்கும் சக்திக்கேற்ப வீட்டுமனை வழங்க முடிகிறது.

தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை, நில அளவு, திட்டச் செலவு முதலிய விவரங்களை அட்டவணை இரண்டில் காணலாம்.

இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டிலேயே 7,459 மனைகள் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—I

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றின் கீழ், தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில் ரூ. 763 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படுகிறது. திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவடைந்து விட்டன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—II

(அ) மொகப்பையர்.

இத்திட்டத்தின் கீழ், பணிவசதி பெற்ற குடியிருப்பு மனைகள் 4,172, குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான மனைகள் 1,275, நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான மனைகள் 152, உயர் வருவாய்த் தொகுதியினருக்கான மனைகள் 72 மற்றும் 86 தொழிற்சாலை மனைகள் ரூ. 909.85 இலட்சம் செலவில் மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் முடிவுறும் தருவாயிலுள்ளது.

(ஆ) மதுரவாயல்.

நெற்குன்றம் பகுதியில் போதிய நிலம் கையகப்படுத்த முடியாததால், நெற்குன்றம் தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்திற்கு மாற்றாக மதுரவாயல் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் மதுரவாயல் திட்டப்பகுதியில் கூட 25 ஹெக்டேர் நிலம் மட்டுமே கையகப்படுத்த முடிந்தது. இந்நிலத்தில் 1985–86 ஆம் ஆண்டு 400 மனைகளும், 1986–87 ஆம் ஆண்டு 1,196 மனைகளும் மேம்படுத்தப்படும்.

(இ) மணலி

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டினை செயற்படுத்த மதுரவாயலில் அதிக அளவு நிலம் கையகப்படுத்த முடியாமற்போனதால் மணலி திட்டம் ஒரு மாற்றுத் திட்டமாக உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு பணிவசதி பெற்ற 2,115 மனைகளும்



குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கு 692 மனைகளும், நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கு 178 மனைகளும், உயர் வருவாய்த் தொகுதியினருக்கு 68 மனைகளும் ரூ. 702.30 இலட்சம் செலவில் 100 ஏக்கர் நிலத்தில் மேம்படுத்தப்படும். 1985–86 ஆம் ஆண்டு 1,110 மனைகளும், 1986–87 ஆம் ஆண்டு 1,853 மனைகளும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் இரண்டின் கீழ் மேம்படுத்தப்படவுள்ளன.

வெளியூர்களில் குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் அகற்றுதல்.

அண்மைக் காலம் வரை சென்னை மாநகர எல்லைக்கு வெளியூர்ப் பகுதிகளில் குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் மாற்றும் திட்டம் வீட்டு வசதி வாரியத்தால் செயற்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 19,852 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சென்னை மாநகரத்தின் வெளியூர்ப்பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணி விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. வருங்காலத்தில் வெளியூர்களில் குடிசைப்பகுதி மாற்றும் பணியை வீட்டு வசதி வாரியம் செயற்படுத்தாது. நிலுவையிலுள்ள திட்டங்கள் சில தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் முடிக்கப்படவுள்ளன. 1986–87 ஆம் ஆண்டு ஈரோடு மற்றும் மதுரையில் 96 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு வரவு-செலவு திட்டத்தில் பல்வேறு நிலைகளில் நிலுவையிலுள்ள திட்டங்களை முடிக்கவும், ஏற்கெனவே 'அட்கோ' விடமிருந்து வாங்கின கடனை திருப்பிச் செலுத்துவதற்காகவும் ரூ. 67.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம்.

இத்திட்டம், சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணி புரியும் அரசு அலுவலர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டுவசதி வழங்க உருவாக்கப்பட்டுள்ளது, இத்திட்டத்தை அரசு சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும், வாரியம், கட்டி முடித்த வீடுகளைப் பேணி பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் அரசுக்கு சொந்தமாகும். 1985 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை வாரியம் 15,414 குடியிருப்புகளை கட்டி முடித்துள்ளது. 1986 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இறுதிவரை 1962 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 800 இலட்சம், 2,788 குடியிருப்புகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டுவசதித் திட்டங்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக (HUDCO) நிதியுதவி.

பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களுக்கென பல்வேறு வீட்டு வசதி நிறுவனங்கள் பெறும் கடனுதவியில் ''அட்கோ'' வின் பங்கு மிக முக்கியமானதும் கணிசமானதும் ஆகும், அட்கோ கடனுதவி

அரசு உத்திரவாதத்தின் (பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், மற்றும் இதை இணைக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாக) அடிப்படையிலும், வாரியச் சொத்துக்களை அடைமானம் வைப்பதன் மூலமும் பெறப்படுகிறது.

நிதி ஆதாரங்கள் பல்வேறு பிரிவினரிடையே கீழ்வரும் முறைப்படி பாகுபடுத்தப்படல் வேண்டும்:—

| பிரிவு. | நிதி ஒதுக்கீடு சதவீதம். |
|---|---|
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் கிராமப்புறம் (அடிப்படை வசதித் திட்டம் உட்பட). | 15 |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (அடிப்படை வசதித் திட்டம் உட்பட). நகர்ப்புறம் .. | 15 |
| குறைந்த வருவாய் பிரிவினர் .. .. | 25 |
| மற்ற பிரிவினர் .. .. .. | 45 |

வருமான வரம்பு, கட்டுமான உச்சவரம்பு. கடனுதவியைத் திருப்பிச் செலுத்துவதற்கான விதிமுறைகள் பிரிவுக்குப் பிரிவு மாறுபடும். ''அட்கோ'' நிறுவனத்தால் தற்போது பின்பற்றப்படும் விதிமுறைகள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின்கீழ் பயன்பெறும் தனி நபர்கள், கடனுதவியைத் திருப்பிச் செலுத்தப் பின்பற்றும் விதிமுறைகள், வீட்டுவசதி நிறுவனம் அட்கோ நிதியுதவியைத் திருப்பிச்செலுத்தும் விதிமுறைகளுக்குச் சமமாகவே இருக்கும் என்றாலும் பயனீட்டாளர் வீட்டுவசதி நிறுவனத்திற்கு சிறிது சேவைக் கட்டணத்தைக் கூடுதலாகக் கட்ட வேண்டிவரும்.

கீழ்வரும் பட்டியல், அட்கோ நிறுவனத்திடமிருந்து சில ஆண்டுகளில் பெறப்பட்ட நிதியுதவியைக் காட்டும்.

| வருடம். | கடனுதவி. | |
|---|---|---|
| | ஒதுக்கீடு. | பெறப்பட்டது. |
| | (ரூபாய் கோடியில்) | |
| (1) | (2) | (3) |
| 1980–81 .. .. .. | 11,9100 | 13.39 |
| 1981–82 .. .. .. | 13,9200 | 14.34 |
| 1982–83 .. .. .. | 23,5600 | 18.37 |
| 1983–84 .. .. .. | 2F,1500 | 22.15 |
| 1984–85 .. .. .. | 26,7500 | 30.25 |
| 1985–86 .. .. .. | 37,4500 | 38.69 |

1986–87 ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட திட்டங்களுக்கு அதிக அளவு 'அட்கோ' நிதியுதவியைப் பெற அரசு தீவிர முயற்சி மேற்கொள்ளும்.



எதிர்கால நோக்கம் (வினை முறைத்திறம்).

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட தன்னிறைவு வீட்டு மனைத்திட்டங்களை மற்ற நகர்ப்புறங்களிலும் செயல்படுத்துமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நடவடிக்கைகளை மாற்றி அமைப்பதே அரசின் எதிர்கால நோக்கமாகும். வாரியம் இம்முயற்சியில் எவ்வளவு தூரம் வெற்றி அடையும் என்பது இத்திட்டத்திற்காக நிலம் கிடைப்பதைப் பொறுத்தே அமையும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது அட்கோ நிறுவனத்திடமிருந்து ஒரு புதிய திட்டத்தின்கீழ் நேரிடையாக நிதிஉதவி (cash loans) பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால், வீட்டுவசதி வாரியம், வாரியத்தால் மனை ஒதுக்கீடு பெற்றவர்கள் தாங்களாகவே அம்மனையில் வீடுகளைக் கட்டிக்கொள்ள உதவி செய்ய இயலும். இதுவரை பல்வேறு நிறுவனங்களின்பால் வீடு கட்டக் கடனுதவியை நாடிச் செல்ல இயலாத பலரும் இதனால் பெரும் பயனடைய இயலும்.

தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தொழில் நிறுவனங்கள் அந்நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர கடன் 50 சதவீதம் ஆதரவுத் தொகை 25 சதவீதம் என்ற அளவில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஆரம்ப காலம் முதல் 1984–85 முடிய 1,322 வீடுகள் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென கட்டப்பட்டுள்ளன. இதற்கென கடனாக ரூ. 36.81 இலட்சமும் ஆதரவுத் தொகையாக ரூ 17.51 இலட்சமும் இதுவரை தனியார்துறை தொழில் நிறுவனங்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தின் ரூ. 5.53 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1985–86 ஆம் ஆண்டு 48 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டு மேலும் 20 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது இத்திட்டத்தினை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. தொழில் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென (தனியார் துறையின் திட்டம்) ஒரு புதிய மலிவு வீட்டுவசதித் திட்டம் மாநில அரசால் தொடங்கப்பட உள்ளது.

மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான மலிவு வீட்டு வசதித் திட்டம் (மத்திய அரசு நிதியுதவி)

(தொழிலாளர் துறை ஆணையர் மூலமாக நிறைவேற்றப்படும் திட்டம்).

தோட்டத் தொழில் நிறுவனங்கள் தனது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர இத்திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி அளிக்கிறது (கடன் 50 சதவீதம் ஆதரவுத் தொகை 37½ சதவீதம்).

இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 1984–85 முடிய 1,078 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கென கடனாக ரூ. 16.45 இலட்சமும் ஆதரவுத் தொகை ரூ. 11.85 இலட்சமும் இது வரை தோட்ட அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1986–87-ல் 74 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 4.62 இலட்சம் இவவாண்டின் வரவு–செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

1971 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை மாநகரில் மூன்று குறிப்பிடத் தக்க திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

(1) குடிசைகளை அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்.

(2) விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்.

(3) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்.

1983–84 ஆம் ஆண்டுவரை குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னை மாநகரத்தில் மட்டும் நடைபெற்றது. பின்பு, இவ்வாரியத்தின் பணிகளைக் கட்டம் கட்டமாக பிற நகர்ப்புற மையங்களுக்கு விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டது. தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னையைத் தவிர 43 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### குடிசைப் பகுதிகள் அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளைக் கட்டுதல்.

இத்திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதிகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு, அவைகளில் குடியிருக்கும் குடிசைவாசிகளுக்கென்று குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகள் வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போதுள்ள மிகக் குறைந்த வாடகை ரூ. 20 ஆகும். தகுதி வாய்ந்தவர்களுக்கு இக்குடியிருப்புகளை நீண்டகாலத் தவணை முறையில் அளிக்கலாம் என்று ஒருகொள்கை முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில், 7,170 குடியிருப்புகள் நீண்டகாலத் தவணை முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.



1984–85–ஆம் ஆண்டுவரை, சென்னை மாநகரிலும், ஈரோட்டிலும் ரூ. 4,169 இலட்சம் செலவில் 45,980 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சமீப ஆண்டுகளில் குடியிருப்பு கட்டும் திட்டத்திற்கு அரசு மானியம் மற்றும் ஆட்கோ கடன் உதவியும் பெறப்படுறது. 1984–85 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்' அட்கோவிடமிருந்து ரூ. 557 இலட்சம் கடனாகப் பெற்றுள்ளது.

1985–86–ஆம் ஆண்டில், 1,736 குடியிருப்புகள் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு, மார்ச் 1986 முடிய 512 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும். இதற்கென, அரசு மானியமாக ரூ. 150 இலட்சமும், அட்கோவிடமிருந்து கடனாக ரூ. 188 இலட்சமும் பெறப்பட்டுள்ளது.

1986–87 ஆம் ஆண்டில், 1250 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டத்திற்கான அரசு மானியம் ரூ. 175 இலட்சமாகும், தேவையான கூடுதல் நிதி, அட்கோவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும்,

### குறைந்த விலை வீட்டுவசதித் திட்டம்,

சமீப ஆண்டுகளில், குடியிருப்பின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இந்த பிரச்சினையிலிருந்து மீள்வதற்கென நலிந்த பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் வெளியூர்ப் பகுதிகளில் உள்ள குடிசைவாசிகளுக்கு, நன்கு திட்டமிடப்பட்டுள்ள வீட்டு மனைப் பிரிவு வசதி செய்யப்பட்ட பகுதிகளில் வீட்டு வசதியையும், அடிப்படை வசதிகளையும் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முடிந்தவரை உள்ளூரிலேயே கிடைக்கும் கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி, அதிகரித்துவரும் செலவைத் தடுத்து, குறைந்த செலவில் கட்டுவதற்கான தொழில் நுட்பத்தை மேற்கொள்ளப்பட உள்ளது இவ்வீடுகள், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப்போல், வாடகை முறையிலோ அல்லது நீண்ட காலத் தவணை முறையிலோ ஒதுக்கீடு செய்யப்படும்.

1985–86–ம் ஆண்டில், மதுரையில் பெரியார் நகரில், ரூபாய் 232 இலட்சம் செலவில் 2,010 வீடுகளை, நலிவுற்ற குடிசை வாசிகளுக்கு கட்டுவதற்கான இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம், 1986–87 ஆம் ஆண்டில் முடிவு பெறும். 1986-87 ஆம் ஆண்டில் மற்ற இடங்களில் சுமார் 10,000 வீடுகளை அளிப்பதற்கென, குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டங்களுக்கான செய்முறைகளை வகுத்து வருகிறது.

### தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம்.

குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கைவசமுள்ள சில காலி நிலங்களில், தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

1985–86 ஆம் ஆண்டில், ரூ. 86.49 இலட்சம் மதிப்பீட்டில் 1,842 மனைகள் மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கென அட்கோ நிறுவனம் ரூ. 40 இலட்சம் கடன் அளிக்க உள்ளது. இதில், 800 மனைகள் 1985-86 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. மேலும், மீதமுள்ள 1042 மனைகள் 1986–87 ஆம் ஆண்டில் முடிவுபெறும்.

### விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், குடிசைப்பகுதியென அறிவிக்கை செய்யப்பட்ட குடிசைப் பகுதிகளில், சாலைகள், பொதுக் குடிநீர் வசதி, தெரு விளக்குகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. 1984–85 ஆம் ஆண்டுவரை, 64,448 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் ரூ. 425 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1985–86ஆம் ஆண்டில், மேலும் 7250 குடும்பங்கள் ரூ. 70 இலட்சம் செலவில் பயனடைவார்கள். 1986–87 ஆம் ஆண்டில், 8,000 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ. 70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் கூடுதல் மேம்பாட்டுத் திட்டம் (மத்திய அரசு வழங்கும் தொகை)

1983–84 ஆம் ஆண்டு முதல், குடிசைப்பகுதி சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நகர்ப்புறப் பகுதிகளுக்கு உதவியளிக்க மைய அரசு முன்வந்துள்ளது. 1984–85 ஆம் ஆண்டு வரை, ரூ. 72.94 இலட்சம் வரப்பெற்று, ரூ. 56 இலட்சம் செலவில் 34,324 நபர்கள் பயனடைந்தனர். 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 17 இலட்சம் செலவில் 7255 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். 1985–86 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு இத்திட்டத்தை நிறுத்தி விட்டது.

### சென்னைப் பெருநகர் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் (உலக வங்கி நிதியுதவித் திட்டம்.)

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் முக்கியப் பகுதி குடிசைப் பகுதி மேம்படுத்தும் பணியாகும். இத்திட்டம், சுற்றுப்புற மேம்பாடு, நில உரிமை வழங்கல் மற்றும் குடிசைவாழ் குடும்பங்களின் வருமானத்திற்கேற்ப ரூ. 1,500 முதல் ரூ. 3,500 வரை மேம்பாட்டுக் கடன் வழங்குதல் முதலியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.



சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் பாகம் 1–ன் கீழ் ரூ. 403 இலட்சம் செலவில் 24,862 குடும்பத்தினர் பயனடையும் வகையில் மேம்பாட்டுப் பணியை மேற்கொண்டது 1977 ஆம் ஆண்டு தொடங்கிய இத்திட்டம் 1982ஆம் ஆண்டு முடிவடைந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் பாகம் 2-ன் கீழ், ரூ. 2,780 இலட்சம் செலவில் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டு முடிய ரூ. 1,416 இலட்சம் செலவில் 32,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

1985–86 ஆம் ஆண்டில், 10,000 குடும்பங்கள் பயனடைவதற்கென ரூ. 370 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

1984–85 ஆம் ஆண்டு வரை, வீடு கட்டுவதற்காக ரூ. 477 இலட்சம் கடன் வழங்கப்பட்டு, 25,146 குடும்பங்கள் பயனடைந்தனர்.

1985 ஆம் ஆண்டில், வீடு கட்டுவதற்காக, 2,350 குடும்பங்களுக்கு ரூ. 120 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம், பாகம் 2-ன் கீழ், இப்பணிக்கென ரூ. 130 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், சென்னைப் பெருநகரில் பெரும் வெள்ளம் ஏற்படும்போது குடிசைவாழ் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்காமலிருக்க சென்னை மாநகராட்சி சிறு வடிகால்களையும், பொதுப்பணித் துறை உட்புற வடிகால்களையும், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டித் தருகின்றன. 1984–85ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ் ரூ. 422 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியாலும், பொதுப்பணித் துறையினராலும் நிறைவேற்றப்படும் திட்டங்கள் முடிவடையும்போது தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கி வாழும் பெரும்பாலான குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இணைப்பு நான்கில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் இந்நாள் வரையிலான சாதனைகளையும் மற்றும் 1986–87ஆம் ஆண்டின் இலக்குகளையும் விளக்குகின்றது.

### கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்.

மாநிலம் முழுவதிலும் உள்ள 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான பிரதம கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் வாயிலாக இம்மாநிலத்தில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. பிரதான சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. 1–4–1983 முதல் கிராமப்புற வீட்டு வசதித்

திட்டத்தின் கீழ் கட்டித் தரப்படும் குடியிருப்பு ஒன்றின் உயர்ந்த பட்ச கட்டுமான மதிப்பு ரூ. 6,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் உயர்ந்தபட்ச கட்டுமான மதிப்பு பின்வரும் முறையில் அளிக்கப்படுகிறது :—

| | ஆதி திராவிடர்கள். ரூபாய். | மற்றவர்கள். ரூபாய். |
|---|---|---|
| 1. கடன் .. .. .. | 3,500 | 4,500 |
| 2. மூலதனத்தில் மான்யம் .. | 1,000 | .. |
| 3. பயன்பெறுவோர் செலுத்தும் தொகை .. .. .. | 1,500 | 1,500 |
| | 6,000 | 6,000 |

மலைப் பகுதிகளிலும் இராமேஸ்வரம் தீவிலும் கட்டப்படும் வீடுகளின் உயர்ந்தபட்ச கட்டுமான மதிப்பு ரூ. 7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தினால் மொத்தம் ரூ. 5,440 இலட்சம் கடனாக வழங்கப்பட்டு 1,86,523 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. இதில் 1,53,453 வீடுகள் ஆதி திராவிடர்களுக்காகவும் 33,070 வீடுகள் மற்றவர்களுக்காகவும், கட்டப்பட்டுள்ளன.

1984–85 ஆம் ஆண்டுவரை அரசு, கிராமப்புற வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக ஆதி திராவிடர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் கூட வீடு கட்டுவதற்குப் பண உதவி வழங்கி வந்தது. 1985–86 முதல் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம், சமூகநலத்துறையும் கிராமப்புற மேம்பாட்டுத் துறையும் செயல்படுத்திவரும் வேறு திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. எனவே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் வாயிலாக ஆதி திராவிடர் அல்லாத பிறருக்கு மட்டும் 25,000 வீடுகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1985–86 ஆம் ஆண்டில் ஏற்கனவே முடிக்கப்படாமல் உள்ள 8,680 வீடுகள் தவிர மேலும் 5,000 வீடுகள் கட்ட உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

1985–86 ஆம் நிதி ஆண்டில் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை ரூ. 536.05 இலட்சம் மாநிலத் தலைமைக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இக்காலக் கட்டத்தில் 11,359 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் மூலதன மற்றும் வட்டி மான்யம் வழங்குவதற்கென 1985–86 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 300 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



1986–87 ஆம் ஆண்டில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 5,000 வீடுகள் கட்டப்படும். இத்துடன், ஆயுள் காப்புறுதிக் கழகம் மற்றும் பொது காப்புறுதிக் கழகம் வழங்கும் ரூபாய் 300 இலட்சம் கடன் உதவியை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு அளித்து அதன் வாயிலாக மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி நகரங்களின் புற எல்லைப் பகுதிகளில் 3,000 வீடுகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது. இதன்கீழ் தனி நபர்களின் உச்சவரம்புத் தொகை ரூ. 10,000 மாக உயர்த்தப் பட்டுள்ளது.

### நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் நகர்ப்புறங்களிலுள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கும் கூட நிதி உதவி அளித்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுகிறது. பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருமான பிரிவினர் மற்றும் உயர்ந்த வருமான பிரிவினர் ஆகியோருக்கு ரூ. 10,000 முதல் ரூ. 80,000 வரை கடனாக வழங்குகின்றன. இத்தலைமைச் சங்கம் துவக்கப்பட்ட நாள் தொடங்கி பிரதான வீட்டுவசதி சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கியதன் வாயிலாக 1984–85 வரை 59,490 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. இதற்காக, தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூ. 16,671.35 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. 1985–86 ஆம் நிதி ஆண்டில் 1986 பிப்ரவரி மாதம் முடிய தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூபாய் 1,848.32 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. மேலும், 4,040 வீடுகள் கட்ட நிதியுதவி அளித்துள்ளது 1985-86 ஆம் ஆண்டு நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு ஆயுள் காப்புறுதிக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு ரூபாய் 13 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.

### அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட முன் பணம்.

அரசு ஊழியர்களுக்கு மனை வாங்கி வீடு கட்ட, முன்னரே வாங்கியுள்ள சொந்த மனையில் வீடு கட்ட, கட்டிய வீடு வாங்க மற்றும் வீட்டை விரிவுபடுத்த, மேம்படுத்த முன் பணம் வழங்கப் படுகிறது.

வீடுகட்ட முன் பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் மாநில அரசு ஊழியர்களுக்கு தற்போது பெருமக் கடன் ரூ. 1,75,000 வழங்கப்படுகிறது. இந்த உச்சவரம்புக்குட்பட்டு, வீட்டை விரிவு படுத்த மற்றும் மேம்படுத்த ரூ. 75,000 வரை கடன் பெறலாம்.

1985-86 ஆம் ஆண்டில் வீடு கட்ட முன் பணம் வழங்க ரூ. 1,280 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1986–87 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் வழங்க ரூ. 1,290 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

வீடு கட்ட முன்பணம்—குடும்ப நலநிதி சிறப்புத் திட்டம்.

வீடு கட்ட முன்பணம் வழங்க விதிகளின்படி, அரசு ஊழியர் வீடு கட்டுவதற்கு முன்பணம் பெற்று அக்கடனை முழுதும் திரும்ப செலுத்துவதற்கு முன் அகால மரணமேற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகையுடன் வட்டியும் சேர்த்து அரசுக்கு அவரது குடும்பத்தினர் செலுத்த வேண்டும். மேற்கண்ட விதியினை நடைமுறையில் அமுல்படுத்துவதால் பல குடும்பங்கள் மிகவும் அவதியுறுகின்றன. அவ்வாறு அவதியுறும் குடும்பங்களின் அவல நிலையைப் போக்க முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களுக்கென ஒரு தனி குடும்ப நலத் திட்டத்தை அரசு இப்போது ஆரம்பித்திருக்கிறது. வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர்களும், ஓய்வு பெறுவதற்கு முன்பு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்கள் மாதந்தோறும் செலுத்தும் கடன் தொகையில் ஒரு தனி விழுக்காடு தொகையினை மேற்கண்ட குடும்பநலநிதித் திட்டத்திற்கு தவணையாக செலுத்த வேண்டும். இத்திட்டம், வீடு கட்ட முன்பணம் பெற்ற அரசு ஊழியர் அகால மரணம் ஏற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்ய வழி வகை செய்கிறது. இதற்காகும் செலவினை அரசு ஊழியர் மாதந்தோறும் செலுத்தும் தொகையிலிருந்து ஈடு செய்யப்படும். இத்திட்டத்தை 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து அமுல் படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கான சிறப்பு வீட்டு வசதித் திட்டம்.

மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்காக பெரும் வீட்டுவசதித் திட்டம் ஒன்றைத் துவக்குவதுபற்றி அரசு அண்மையில் அறிவித்துள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அனைத்துக் குடும்பங்களும், அவர்களுக்கென்று சொந்தமாக ஒரு குடியிருப்பை உண்டாக்கிக் கொள்வதற்கு, அரசு உதவி புரிவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இப்பெரும் திட்டத்திற்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (HUDCO), வீட்டு வசதி வளர்ச்சி நிதிக் கழகம் (HDFC) மற்றும் வணிக வங்கிகள் (Commerci l B nks) போன்ற நிறுவனங்களின் நிதியுதவி பெருமளவில் தேவைப்படும். இதுவரை பெற்றதைவிட அதிக அளவில் கணிசமான ஒதுக்கீட்டினைப் பெற்று இத்திட்டத்தை செவ்வனே செயல்படுத்த இந்நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டுள்ளன.



இத்திட்டம் பல்வேறு முகமைகள் மற்றும் அரசுத் துறைகளால் செயல்படுத்தப்படும். மேலும் ஆதிதிராவிடர், மீனவர் மற்றும் நெசவாளர் போன்ற குறிப்பிட்ட வகையினருக்காக சம்மந்தப்பட்ட துறைகளால் திட்டப்பட்டு செயல்படுத்தப்படும். குறிப்பிட்ட திட்டங்கள் தவிர, வீட்டுவசதி சிக்கலை நான்கு விரிவான பிரிவுகளில் சமாளிப்பதே இத்திட்டத்தின் பரந்த வினைமுறைத் திறமாகும் (Broad Strategy).

(அ) குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் தற்போதிருக்கும் குடிசைப்பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சுற்றுப்புற சூழ்நிலையை மேம்படுத்தும் பொருட்டு கழிவுநீர், சாலைகள் மற்றும் பொது குடிநீர் வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்க முதலீடு செய்யப்படும். வீட்டுமனைகள் வரையறுக்கப்பட்டு குடிசைவாசிகளுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும். அம்மனைகளில் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காக வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கப்படும்.

(ஆ) நகர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீடுகள்.

நகராட்சி குடிசைப்பகுதிகளில் வசிப்பவர்கள் தவிர பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பல குடும்பங்கள் வேறெங்கிலும் வாடகை குடியிருப்புகளில் வசித்துவரலாம். அத்தகைய நபர்களுக்கு வீட்டு மனைகளாக வழங்கத்தக்க நிலங்களை தேர்ந்தெடுத்தல் அரசின் குறிக்கோளாகும். இந்த மனைகளை வீட்டுவசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மேம்படுத்தலாம். வீட்டுமனை வழங்கப்பட்டபின், அவர்கள் வீடு கட்டிக் கொள்ள கடனுதவி நீட்டிக்கப்படும்.

(இ) பெரிய நகரங்களின் புறநகர் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு வீட்டுவசதி.

பெரிய நகரங்களின் புறநகர்ப்பகுதிகளில் இருக்கும் பல ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக கடனுதவி அளிப்பதும் அரசின் நோக்கமாகும்.

கிராமிய வீட்டுவசதி.

மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர வீட்டுவசதி அளிப்பதில் பெரும் பகுதி கிராமப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும். கிராமப் பகுதிகளில் வேறுவகையான பிரிவினருக்கு உதவி அளிக்க வேண்டி வரும். வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள வீட்டுமனை இல்லாத ஏழை மக்களுக்கு தக்க நிலங்களை தேர்ந்தெடுத்து தேவை இருப்பின் கையகப்படுத்தி அவர்களுக்கு வீட்டுமனைகளாக வழங்குதல் அரசின் முதல் நோக்கமாகும். கிராமப்புறங்களில்

வீட்டுமனை வழங்கப்பட்டு நிதியின்மையினால் வீடுகட்ட முடியாத நிலையில் பலர் உள்ளனர். அவர்கள் வீடு கட்டிக் கொள்ள வசதி செய்து தரும் வகையில் அவர்களுக்கென்று மானியம் மற்றும் கடன் அடிப்படையில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். மற்றும் தொழில் நுட்ப அறிவுரை, கட்டுமானப் பணியை ஏற்க உள்ளூர் தச்சர்கள் மற்றும் கொத்தனார்கள் ஆகியோருக்கு பயிற்சி மற்றும் வீடுகட்டத் தேவையான கட்டிடப் பொருட்கள் விநியோகம் முதலிய உதவிகளை அரசு அளிக்கும். மற்றும் கிராமப் பகுதிகளில் வீட்டுமனையும் அதில் பெயருக்கு வீடு என்று உள்ளவர்களுக்கு அரசு உதவியளிக்க வேண்டிவரும். இத்தகைய வீடுகள் பெரும்பாலும், மிகவும் மோசமான நிலையில் இருக்கும். இத்தகைய வீடுகளை மேம்படுத்திக் கொள்ள அவர்களுக்கு கடன் மற்றும் மானியம் அடிப்படையில் உதவி நீட்டித்தல் அவசியமாகும்.

இத்திட்டங்களின் செயல்முறை, செயல்படுத்தும் முகமைகள் மற்றும் பல்வேறு திட்டங்களுக்கு எம்மாதியான நிதியுதவி அளிக்கப்பட வேண்டும் என்பவை வகுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் செவ்வனே செயல்பட 1986–87 ஆம் ஆண்டிலேயே முழு முயற்சிகள் எடுக்கப்படும்.



## இணைப்பு II

(80-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 34
### நகர்ப்புற வளர்ச்சி.

**தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி:**

மாநிலத்தில் உள்ள 48 மில்லியன் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியான 16 மில்லியன் மக்கள் நகர்ப்பகுதிகளில் வாழ்கின்றனர். இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டில் தான் மிக அதிகமாக 434 நகரமையங்கள் உள்ளன. இவைகள் 34 நகரக் கூட்டுத் தொகுதிகளாகவும், மற்றும் 211 நகர்ப் பகுதிகளாகவும் உள்ளன. இவைகளில் 21 நகரங்கள் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. சென்னைப் பெருநகரம் 3.4 மில்லியன் மக்கள் தொகையும், ஏனைய நான்கு பெருநகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் சேலம் 2.9 மில்லியன் மக்கள் தொகையினை கொண்டுள்ளன. இவ்வைந்து பெருநகரங்களில், நகரப் பகுதியில் வாழும் மக்களில் 40 சதவீதம் வாழ்கின்றனர். எனவே இவ்வைந்து பெருநகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு அடிப்படை வசதிகளை செய்திட தனிக்கவனம் செலுத்தி திட்டமிட வேண்டியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதின் மூலம் இவ்வைந்து பெரு நகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகையினை கட்டுப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புறங்களிலிருந்து பெரு நகரங்களை நோக்கி வரும் மக்களை கட்டுப்படுத்தி மாநிலம் முழுவதும் பரவலான வளர்ச்சிக்கு வழிகோலும்.

மண்டல வளர்ச்சி முனைகள் மற்றும் வளர்ச்சி மையங்களை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கையை உருவாக்கி மேற்படி நகர்ப்புற மையங்கள் வளர்ச்சியுறும் வகையில் திட்டமிடுதலும், முதலீடு செய்தலும் வேண்டும். இதற்காக மண்டலங்களளவிலும், நகரங்களளவிலும் பல்வேறு வகையான திட்டங்களை உருவாக்குதல் இன்றியமையாததாகிறது. இதே சமயத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படை வசதிகளின் வளர்ச்சிக்கு நிதியுதவியும் செய்வது அவசியமாகும். மேலும் நகரங்களில் வளர்ச்சிகளை ஒழுங்குபடுத்த வேண்டி கட்டுப்பாட்டு முறைகளை நிர்ணயித்து தக்க விதிகளின் மூலம் அவைகளை அமுலாக்குவதும் அவசியமாகிறது. சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்தவரை மேற்படி கடமைகளை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு நகர் ஊரமைப்பு இயக்ககமும் செய்து வருகின்றன.

**நகர்—ஊரமைப்பு இயக்ககம் (கொள்கையும் நோக்கமும்):**

நகரங்களின் திட்டமிட்ட சீரான வளர்ச்சி, தூய்மை மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் மக்கள் வாழ வகை செய்யும் நோக்கத்துடன் மாநிலத்திலுள்ள திட்டக் குழுமங்கள் நகர ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து அமுலாக்குவதற்கு வேண்டிய உதவிகள் புரிவதும், 1971 ஆம் ஆண்டின் நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தை நிர்வகிப்பதும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் கொள்கையும் நோக்கமுமாகும். இது தவிர, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், கிராமச் சட்டம் மற்றும் பொது சுகாதார சட்டத்தில் உள்ளபடி, தனியார் நிலங்களை வீடு மற்றும் தொழிற்சாலை உபயோகங்களுக்காக அபிவிருத்தி செய்வதற்குரிய தேவையான கட்டுப்பாடுகள், குடியிருப்பு பகுதிகள் தொழிற்சாலைக்கான பகுதிகள் ஆகியவற்றை நிர்ணயிப்பது, கட்டிட விதிகளின் மூலம் கட்டிடங்களை ஒழுங்குபடுத்தல் போன்ற அம்சங்களை நிர்வகிக்கும் பொறுப்பும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பிலுள்ளது.

**குறுகிய மற்றும் நீண்டகால செயல் திட்டங்கள்:**

மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து அமுலாக்குவதின் மூலம் 1971 ஆம் ஆண்டு நகர ஊரமைப்புச்சட்டத்தின் பெரும் நோக்கங்களை நிறைவேற்றலாம். அறிவிக்கப்பட்ட மண்டல திட்டப் பகுதிகளுக்கு மண்டல திட்டத்தில் வளர்ச்சி மையங்களின் வரிசை, (Hierarchy of settlements), பெரிய போக்குவரத்து தடங்கள், தொழில் மற்றும் விவசாயத்திற்கு உகந்த பகுதிகள் மற்றும் ஏனைய அபிவிருத்தி இனங்கள் இடம் பெறும். உள்ளூர் திட்டப்பகுதிகளுக்கு தயாரிக்கப்படும் முழுமைத் திட்டங்களில் நிலங்களை எவ்வாறு உபயோகிப்பது, பல்வேறு வகைப்பட்ட உபயோகங்களுக்கு நில ஒதுக்கீடு செய்தல், சீரான முறையில் போக்குவரத்து தடங்கள் அமைத்தல் மற்றும் விரிவான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்க வேண்டிய பகுதிகள் ஆகியன இடம் பெறும். தொழில் மற்றும் சுற்றுலா வளர்ச்சியடைந்து வரும் பகுதிகளான ஓசூர், மாமல்லபுரம், பல்லாவரம் நகர், நாவல்பட்டு, குறிச்சி போன்ற இடங்களுக்கு புதுநகர் அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நகரங்களின் அபிவிருத்தியடைந்து வரும் பகுதிகளுக்கும் அண்மையில் அபிவிருத்தியடைய சாத்தியக்கூறுகள் உள்ள குறிப்பிட்ட பகுதிகளுக்கும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இத்திட்டம் விரிவான முறையில் குடியிருப்புப் பகுதிகள், சாலைகள், விளையாட்டு மைதானங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் இதர உபயோகங்களுக்கான ஒதுக்கீடு களை விவரிக்கும்.





**முழுமைத் திட்டங்கள்:**

முழுமைத் திட்டங்கள், நகரம் மற்றும் அதன் அருகாமையிலுள்ள பகுதிகளில் சீரான முறையில் நகர நிலங்களை பயன்படுத்தும் வகையில பொதுவான நில உபயோக கொள்கையை உடையது. இத்திட்டம் நகரத்தில் குடியிருப்புப் பகுதியை விரிவாக்குதல், கடை, தொழில்கள் மற்றும் ஏனைய உபயோகங்களுக்காக பொருத்தமான இடங்களை ஒதுக்கீடு செய்வதுடன் மிகவும் உயர்ந்த விவசாய நிலங்கள் நகர அபிவிருத்தியால் பாதிக்கப்படாமலிருக்கவும் உறுதி செய்கின்றது.

இம் முழுமைத் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்தும்போது அவை நகரத்தின் பிற்கால வளர்ச்சி ஒழுங்கான முறையில் அமைய வழிகாட்டியாக அமைவதோடு, வேகமான நகர அபிவிருத்திகளால் காணப்படும் போக்குவரத்து நெரிசல், ஒருபுற வளர்ச்சி ஆகியவை களை தவிர்க்க உதவும்.

இதுவரையில் தயாரிக்கப்பட்டு அரசால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ள முழுமைத் திட்டங்கள் ஒரு பொதுவான நில உபயோக திட்டமாக மட்டுமே உள்ளன. மேற்கொண்டு அவற்றின் அடிப் படையில் இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட முழுமைத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. முழுமைத் திட்டத் தின் இரண்டாம் கட்டமாக, பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள், நூலகங்கள், அங்காடிகள் போன்றவற்றை அமைப்பதற் கான திட்டம் தயாரித்தல் மற்றும் முழுமைத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணியாக, போக்குவரத்து வசதிகள் அமைத்தல், அரசு அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு நிலங்களை தேர்வு செய்தல், குடிநீர் மற்றும் வடிகால்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தயாரித்தல் போன்றவை மேற்கொள்ளப்படும். இவ்வாறு செயற்திட்டங்களை தீட்டுவது, இத்திட்டங்களை செயல் படுத்தவிருக்கும் நிறுவனங்களுக்கு நிலஎடுப்பு செய்தல், கட்டுமான பணிகள், குழாய் மற்றும் வடிகால்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு உதவ வகை செய்யும். முதலில் இராமநாதபுரம் நகரத்தின் முழுமைத் திட்டத்தின் கீழ் மேற்கண்ட இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட செயல் திட்டங்கள் மேற் கொள்ளப்படும். தமிழ் நாட்டில் 112 உள்ளூர் திட்டப்பகுதி களும், 8 புதுநகர் பகுதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டு கால இறுதிவரை 76 உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கு முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள உள்ளூர் திட்டப் பகுதிகளுக் கும் 1986-87 ஆம் ஆண்டு காலகட்டத்தில் முழுமைத் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்படும்.

**விரிவு அபிவிருத்தி திட்டம்:**

நகர் ஊரமைப்பு இயக்குநரால் ஒப்புதல் ஒப்பளிக்கப்பட்டு 251 விரிவு வளர்ச்சித் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உள்ளூர் திட்ட குழுமங்கள் போதிய வருவாயை ஈட்டிக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதால் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் தேக்க நிலை உள்ளது. மேலும் 919 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தொடக்க நிலையில் அதாவது தற்போதைய நில உபயோகத்தைத் தெரிவிக்கும் வரைபடம் எண் 1 தயாரித்தல் நிலையில் உள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் 20 விரிவு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒப்புதலும், 20 திட்டங்களுக்கு முடிவான அங்கீகாரமும் அளிக்கப்படும்.

**மண்டலத் திட்டங்கள்:**

மண்டலத் திட்டம் தயாரிக்க வேண்டி, இம்மாநிலம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 8 மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1983 ஆம் ஆண்டில், மாவட்ட அளவில் மண்டலத் திட்டம் தயாரிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. அண்மையில் நிர்வாகப் பணியில் முன்னேற்றம் ஏற்பட சிறிய மாவட்டங்களை உருவாக்க அரசு முடிவு எடுத்து, மாவட்டங்களைப் பிரித்து வருவதுடன் மேற்கொண்டும் சில மாவட்டங்களை பிரிக்க இருப்பதால், மாவட்ட அளவிலான மண்டலத் திட்டங்களைத் தயாரிப்பது உசிதமாகுமா அல்லது பல மாவட்டங்களைக் கொண்ட ஒரு மண்டலத் தொகுதிக்கு மண்டலத் திட்டமே உகந்தது என்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. 1986-87 ஆம் ஆண்டில் இதற்கு ஒரு முடிவு காணப்படும். அம்முடிவின் அடிப்படையில், மண்டலத் திட்ட குழுமங்கள் நிறுவப்பட்டு மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மண்டலத் திட்டம் தயாரிக்கப்படும். இதற்காக ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிலப்பயன் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை பின்னணியாகக் கொண்டு, மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

**புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்:**

ஓசூர் நகரத்திற்கு புதுநகர் வளர்ச்சித் திட்டம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. 1985–86 ஆம் ஆண்டு காலத்தில் மாமல்லபுரம், மற்றும் மதுரை பல்கலைநகர் ஆகியவற்றிற்கு புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. இத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் குறிச்சி, நாவல்பட்டு ஆகிய நகரங்களுக்கு புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படும்.





**ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்.**

**மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்:**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் நகர்ப்புறங்களில் கிடைக்கும் அனைத்து வசதிகளையும், கிராமப்புற மக்களுக்கு அவ்வசதிகள் எளிதாகக் கிட்டும் வகையில் அமைக்க வழிசெய்யும் கொள்கைகளை அரசு இதுகாறும் பின்பற்றி வருகிறது. இக்கொள்கையின் அடிப்படையில் அரசு, ஆறாவது திட்ட காலத்தில் ஒரு லட்சம் மக்கட் தொகைக்கு குறைவாயுள்ள 28 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களைத் தேர்வு செய்து அவற்றில் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த ஒவ்வொரு நகரத்திற்கும் தலா அதிகபட்சக் கடன் தொகையாக ரூ. 80.00 இலட்சம் என நிர்ணயித்து இதனை மத்திய மற்றும் மாநில அரசுகள் சமபங்காக வழங்குகின்றன. இத் தகவல்கள் அடங்கிய பட்டியல் இணைப்பு V–ல் இணைக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மத்திய மாநில அரசுகள் இணைந்து ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் கட்டுதல், கடைப் பகுதிகள், அங்காடித் தொகுதிகள், குறைந்த செலவிலான துப்புரவு வசதிகள், வசதியுடன் கூடிய மனைப் பிரிவுகள் போன்றவற்றிற்காக, ரூ. 1,789.95 லட்சம் வழங்கியுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் ரூ. 313.44 லட்சம் மேலும் கடன் வழங்கி மீதமுள்ள பணிகளை நிறைவேற்ற நிதியுதவி செய்தன. ஒப்புதல் அளிக்கப்பட்ட 171 திட்டப் பணிகளில், 88 பணிகள் முடிக்கப் பெற்று பொது உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டு விட்டன. மீதமுள்ள திட்டப்பணிகளில் 23 திட்டப் பணிகள் இவ்வாண்டு மார்ச் மாதம் இறுதிக்குள் முடிக்கப் பெற்று விடும். இவை போக மீதமுள்ள பணிகள் 1986-87 ஆம் ஆண்டில் முடிக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் உதவியுடன் கூடிய சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டம், ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். குற்றாலம்-தென்காசித் தொகுதி, திருமங்கலம் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய மூன்று நகரங்களில் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டப் பணிகளுக்கான திட்ட அறிக்கையை அரசு மத்திய அரசிற்கு அனுப்பி வைத்துள்ளது.

இன்னும் சில நகரங்களைத் தேர்வு செய்யும் பணியும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்குவதில் புதிய வழிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு நகரத்திற்கும் மாநில அரசின் சமபங்கு உதவியுடன் சேர்த்து ரூ. 120 லட்சம் (மத்திய அரசு ரூ. 60 லட்சம்; மாநில அரசு ரூ. 60 லட்சம்) கடன் தொகை வழங்கப்பெறும். இத்தொகையில், ரூ. 12 லட்சம் குறிப்பாக குறைந்த செலவிலான துப்புரவு வசதிகளுக்காக ஒதுக்கப்படும். மாநில அரசு விரும்பினால் மேற்படி இச்செலவினத்திற்கு மேலும் 16 லட்சம் ரூபாயைச் செலவிடலாம். 1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டப் பணியினை மேற்கொள்ள மொத்தம் ரூ. 400 லட்சம் கோரப்பட்டுள்ளது.

மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டம்:

மாநில நகர்-ஊரமைப்பு வளர்ச்சி நிதி மூலம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வருமானம் தரும் ஆக்கப் பணிகளை மேற்கொள்ள மாநில அரசு தனது உதவிகளை தொடர்ந்து அளிக்கும். இத்திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் ரூ. 900 லட்சம் மதிப்பீட்டில் 172 திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 31–3–1985 வரை, ரூ. 744.28 லட்சம் பல்வேறு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மேற்படி திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக வழங்கப் பெற்றுள்ளது. 172 திட்டப் பணிகளில் 131 பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் உபயோகத்திற்கு கொண்டு வரப்பெற்றுள்ளன. 5 திட்டப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மீதமுள்ள 36 திட்டப் பணிகள் 1986-87 ஆம் ஆண்டில் முடிக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ், திட்டப்பணிகளை மேற்கொள்ள ரூ. 600 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி வாய்ப்பினை உள்ளடக்கியிருப்பதால், பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளது. 600-க்கு மேற்பட்ட பேரூராட்சிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 32 பேரூராட்சிகளில் இத்திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் திட்டப்பணிகளை மேற்கொள்ள ரூ. 163.00 லட்சம் கோரப்பட்டுள்ளது.

போக்குவரவு தொடர்பான ஆய்வுகள்:

இம்மாநிலத்தில் மக்கள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக சிறந்த போக்குவரத்து வசதிகள் இருந்தபோதிலும், எதிர்காலத்தில் மக்கள் பெருக்கத்தினை கருத்திற்கொண்டு தற்போது போக்குவரத்து அமைப்பில் உள்ள குறைகளையும், இடர்பாடுகளையும் ஆராய்வதின் மூலம், போக்குவரத்து வசதிகளை இன்னும் சிறப்பாக அமைத்துக் கொள்ள இயலும்.



இதற்காக போக்குவரத்துச் சேவைகள், இன்றைய போக்குவரத்து குறைபாடுகள் ஆகியவற்றை உன்னிப்பாக ஆராய வேண்டியுள்ளது. இவ்வாய்வுகளின் அடிப்படையில் உற்பத்தி மையங்களிலிருந்து விற்பனை மையங்களுக்கு பொருட்களை கொண்டு செல்ல சாலைகளை அபிவிருத்தி செய்தல், தொலைதூர கிராமப் பகுதிகளை பணிமையங்கள், நிர்வாக மையங்கள் இவற்றுடன் இணைத்தல் அகலப்பாதைகளை அமைத்தல் மற்றும் வாகன-நிறுத்த மையங்களை அமைத்தல் ஆகியவற்றிற்காக விரிவான திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளது. பேருந்துகள் மற்றும் பார உந்துகள் வசதிக்காக நெடுஞ்சாலைகளில் ஆங்காங்கே அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் மையங்களும் வாகன நிறுத்துமிடங்களும் தேவை என்பது தற்போது உணரப்படுகிறது. இதற்காக தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1986–87 ஆம் ஆண்டில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வான்வழி நிழற்படமும், நில அமைப்புப் பிம்பமும்:

வான்வழி நிழற்படம் மற்றும் துணைகோள் மூலமாக நில அமைப்பு பிம்பம் போன்ற நவீன தொழிற் நுட்பங்களைப் பயன்படுத்தி நில பயன்பாட்டு வரைப்படங்களை தயாரிக்கும் பணி ஏற்கனவே அறிமுகமாகி உள்ளது. (தமிழ் நாட்டில் அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள) தொலை உணர்வு மையத்தில் உள்ள நிபுணத்துவம், மற்றும் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு மேற்படி தொழிற் நுட்பத்தை மேலும் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நிதி கோரப்பட்டுள்ளது.

உள்ளூர் திட்ட கூட்டுக் குழுமங்கள்:

1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு 14 கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களை அமைத்துள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் கூட்டுக் குழுமத்திற்கு திட்டப்பணிகளை மேற்கொள்ள வழிசெய்யும் வகையில் தொழில் நுட்ப பணியாளர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:

சென்னை பெருநகர் என்பது, சென்னை மாநகரம் அதைச் சுற்றியுள்ள 4 நகராட்சிகள், 6 நகரியங்கள், 21 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் கொண்டதாகும். இதன் பரப்பளவு 1,167 சதுர கி.மீ. ஆகும். இப்பகுதியில் நீண்ட கால திட்டமைப்பு மற்றும் வளர்ச்சியின் பொறுப்பு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 இன் கீழ் உருவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 3

சென்னைப்பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கியக் கொள்கை குறிக்கோள்களாவன:—

1. சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியின் அடிப்படை வசதிக்கான திட்டக் கட்டிட அமைப்புகளுக்கு திட்டமிடல் மற்றும் பொருளாதார வளர்ச்சி.

2. சென்னைப் பெருநகர் பகுதிக்கான முதன்மைத் திட்டத்தையும் மற்றும் முதன்மை திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளையும் செயல்படுத்தல்.

3. பெருநகர் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்தல்.

கொள்கை குறிக்கோள்களை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. உருவமைப்பு திட்டத்தில் (Structure Plan) உள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்தல்;

2. முதன்மைத் திட்டத்தைச் செயல்படுத்தல் மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப்படுத்தல் அத்துடன் நில உபயோகப்பகுதி பிரிவு மற்றும் மறுப்பகுதிப் பிரிவு தொடர்ந்து செய்தல், விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் அனுமதியில்லாத வளர்ச்சிகளை கட்டுப்படுத்தல் உள்ளாட்சிகள் வழங்கிய திட்ட அனுமதிகளை மறுபார்வையிடல்;

3. வீட்டு வசதி, போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதிகளில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்க முக்கிய வளர்ச்சி நிதிக்கு உதவும் சென்னைப்பெருநகர் வளர்ச்சித் திட்டங்களுக்குத் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் உருவாக்குதல்;

4. வளர்ச்சிப் பணிக்கு முக்கியமாக உதவும் உருவமைப்பு மற்றும் முதன்மை திட்டங்கள் தற்போதைய நிலைக்கேற்றவாறு மாற்றியமைத்தல்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திட்டமிடும் மற்றும் வரன்முறைப்படுத்தும் நிறுவனமாக ஏற்படுத்தப்பட்ட போதிலும் கோயம்பேடு மொத்த அங்காடி, சாத்தாங்காடு எஃகு மற்றும் இரும்பு சாமான் மொத்த அங்காடி மற்றும் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் முடிவிடம் அமைத்தல் ஆகிய சில முக்கிய வளர்ச்சிப் பணிகளையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் எடுத்துச் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முக்கியாம்சங்கள் அவற்றின் முன்னேற்றங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன:—



1986 ஏப்ரல் 3]

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி:

சென்னை நகரின் மத்திய வணிகப்பகுதியில் உள்ள நெரிசலைக் குறைப்பதும், திட்டமிடப்பட்ட நவநாகரிக கட்டிடங்களில் துணி, உணவு தானியம் மற்றும் அழுகும் பொருட்களின் மொத்த வியாபாரம் செய்ய அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பது, நகருக்கு 15 கி.மீ. வெளியே கோயம்பேட்டில் உருவாக்க இருக்கும் மொத்த விற்பனை அங்காடித் திட்டத்தின் நோக்கமாகும். சுமார் 230 ஏக்கர் நிலத்தில் சுமார் 3,000 கடைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் தனியாருக்கு சொந்தமான 204 ஏக்கர் நிலத்தில் 160 ஏக்கர் இதுவரை கையகப்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்ட வேலைகளாக மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு முதலிய வேலைகள் முடிந்துள்ளன. சாலை அமைத்தல், வடிகால்கள் அமைத்தல், மண் நிரம்பும் பணி போன்ற வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இத்திட்டத்தின் மதிப்பீடாக ரூ. 432 இலட்சத்தில் இதுவரை ரூ. 333 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்தில் இருந்து அங்காடி வளாகத்திற்கு தேவையான தண்ணீர், கிடைக்க குழாய்கள் போடும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

நடப்பு நிதி ஆண்டு 1986–87-ல் சாலை அமைத்தல், வடிகால் தண்ணீர்க் குழாய் அமைத்தல் போன்ற பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேலும் முதற்கட்டமாக அழுகு பொருள் அங்காடிக்கான மேல் கட்டுமானப் பணி நடை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அழுகு பொருள் அங்காடி அமைக்கும் பணி 1989 அம் ஆண்டு முடிவுக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாவது திட்டத்தில் ரூ. 1,700 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டு 1986–87–ல் ரூ. 300 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புறநகர் பேருந்து மற்றும் சுமைவண்டிகள் நிலையங்கள்:

நகர்ப்புற வளர்ச்சிப் பணியின் ஒரு பகுதி நடவடிக்கையாக சென்னை மாநகரத்தின் வெளிப்புறத்தில் பேருந்து மற்றும் சுமை வண்டி நிலையங்கள் அமைக்கவும் நகரின் மத்தியப்பகுதியில் தற்போதுள்ள முடிவிடங்களை மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரத்தின் மத்தியப் பகுதியை நோக்கி குவியும் முக்கிய சாலைகளில் பேருந்து மற்றும் சுமை வண்டிகளின் போக்குவரத்தை தவிர்ப்பதின் மூலம் நகரத்தின் சாலைப் போக்குவரத்தைக் கணிசமாகக் குறைக்க உதவும். இதற்காக முக்கிய சாலைகளில் உள்வட்டச்சாலை சந்திக்கும் மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அம்மூன்று இடங்கள் ஆலந்தூர்

கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகும். இத்திட்டம் 205 ஏக்கர் பரப்பளவில் அமையும். ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து தேவையான வசதிகளை அந்த இடங்களுக்கு செய்து தருவதால் அவைகள் நவீன பேருந்து மற்றும் சுமை வண்டி நிலையங்களாக திறமையாக இயங்க முடியும். இந்த முடிவிடங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தி மேம்படுத்தும் பணி முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

இத்திட்டங்களுக்குத் தேவையான 205 ஏக்கர் நிலத்தில், 110 ஏக்கர் தனியார் நிலமாகும். 1986-87 ஆம் ஆண்டு 65 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்பேட்டில் இத்திட்டத்திற்கான வளர்ச்சிப் பணி ஆரம்பமாகிவிட்டது. இத்திட்டங்கள் ஏழாவது திட்ட முடிவிற்குள் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஏழாவது திட்டத்தில் இத்திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 300 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ.38 லட்சம் இத்திட்டங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. ரூ.200 லட்சம் மதிப்புள்ள வளர்ச்சிப் பணிகள் 1986-87 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அரசிடமிருந்து ரூ. 50 லட்சம் 1986-87 ஆம் நிதி ஆண்டு வரவு-செலவு திட்ட உதவியாக இருக்கும்.

எஃகு மற்றும் இரும்பு மொத்த அங்காடி —சாத்தங்காடு:

பெரும்பான்மையான இரும்பு மற்றும் எஃகு சாமான்கள் வியாபார நெருக்கடியான தொழில் மிகுந்த மத்தியப்பகுதியில் அமைந்துள்ளதால் தடையற்ற போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக உள்ளது. இத்திட்டம் SAIL TISCO மற்றும் IISCO போன்ற இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்களுக்கு நவீன கிடங்கு அமைக்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள இரும்பு மற்றும் எஃகு சாமான்கள் வியாபாரத்தை 750 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளில் மாற்றி அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்த அங்காடியின் மொத்த நிலப்பரப்பு 202 ஏக்கர். இத்திட்டம் நில அபிவிருத்தி பணியை மட்டும் சொண்டதாகும். சாலை அமைத்தல், வடிகால் அமைத்தல், தடுப்பு சுவர் அமைத்தல் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1986–87-ம்ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1,330 இலட்சமாகும். இத்திட்டத்திற்கு ஏழாவது திட்டத்தில் ரூ. 300 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டில் ரூ. 77 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1986-87ம் ஆண்டு வரவு செலவு மதிப்பீடு உதவி ரூ. 15 இலட்சம். மேலும் கூடுதல் செலவு மற்ற வருவாய் மூலம் சரி செய்து கொள்ளப்படும்



மணலி புதுநகரம்:

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மணலி தொழிற்பேட்டையில் பணிபுரியும் பலதரப்பட்ட வருவாயுள்ள தொழிலாளர்களின் வீட்டுவசதி தேவையை பூர்த்தி செய்வதாகும். இதுவரையிலும் சாலை, குடிநீர் வடிகால் மின்சார வசதிகளுடன் 210 ஏக்கர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 65 ஏக்கர் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய சுமார் 1,000 மனைகள் உருவாக்கப்படும். ஏழாவது திட்ட காலத்தில் 300 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்ய ரூ. 750 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 100 லட்சம் செலவழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87—ம் ஆண்டிற்கு இத்திட்டச் செலவு ரூ. 125 லட்சமாக இருக்கும் இதில் அரசின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு உதவி ரூ. 100 இலட்சமாகும். இதுவரையில் ஆயத்த நிலை வீடுகள் 1760-ம் துப்புரவு வசதிகளுடன் கூடிய மனைகள் 580-ம் கட்டப்பட்டுள்ளன. 164 மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

மறைமலைநகர் புதுநகரம்

மறைமலைநகர் திட்டத்தை அபிவிருத்தி செய்வதின் முக்கிய நோக்கம் மற்ற பகுதிகளிலிருந்து சென்னை மாநகரத்திற்கு குடிபெயர்ந்து வருவதை தடுப்பதேயாகும். இத்திட்ட முடிவில் இந்நகரை 1 லட்சம் மக்கள் தொகை கொண்டதாகவும் அனைத்து வசதிகளுடன் வணிகம் மற்றும் தொழிற்சாலை மனைகள் இத்திட்டப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித்தரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது வரையில் 200 ஏக்கர் பரப்பளவு நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் 463ம் துப்புரவு வசதிகளுடன் கூடிய மனைகள் 360ம் 1632 ஆயத்த நிலை வீடுகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே 456 ஏக்கர் நிலம் தொழிற் கூடங்களுக்காக அபிவிருத்தி செய்யப்பட்டு 36 தொழிற்கூட மனைகள் வழங்கப்பட்டுள்ளன. சிட்கோவின் 60 கூடங்களுடன் மேலும் 35 கூடங்களும் செயல்பட ஆரம்பித்துள்ளன. இத்திட்டத்திற்கு ஏழாவது திட்டத்தில் ரூ. 725 லட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 190 லட்சம் 1985-86ம் ஆண்டு இத்திட்டத்திற்கு செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87ம் ஆண்டு ரூ. 100 லட்சம் மதிப்பீடுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள அரசின் வரவு-செலவு திட்ட உதவி ரூ.75 லட்சம்.

மணலி மற்றும் மறை மலைநகர் திட்டப்பகுதிகளில் வீடுகள் கட்டும் திட்டம் உத்தேசிக்கப்படவில்லை. இனிமேல் அபிவிருத்தி செய்யப்பட்ட விட்டு மனைகள் மட்டும் தனிப்பட்டவர்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படும்.

சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1,

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் மலிவு விலை வீடுகள் மூலம் ஏராளமான நகர்ப்புற ஏழைகளின் முன்னேற்றத்திற்கு தீர்வு காண்பதாகும். இத்திட்டம் 1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் புட்டது. இத்திட்ட மூல மதிப்பீடு ரூ. 46.82 லட்சம். அதில் உலக வங்கியின் நிதியுதவி 21.60 லட்சம் ஆகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித்திட்டம் 1—ல் கீழ்க்காணும் திட்டங்கள் உள்ளள;

| | | (ரூபாய்) இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | தன்னிறைவு வீட்டு மனைத்திட்டம் .. | 9,33 |
| 2. | குடிசைப்பகுதி மேம்பாடு .. .. | 6,06 |
| 3. | சிறு தொழில் வளர்ச்சி .. .. | 2,85 |
| 4. | தாய்சேய் நலம் .. .. .. | 85 |
| 5. | குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் .. | 1,125 |
| 6. | சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாடு .. | 9,18 |
| 7. | பேருந்து போக்குவரத்து .. .. | 6,58 |
| 8. | தொழில்நுட்ப உதவி .. .. | 75 |
| | மொத்தம் .. | 4,682 |

இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ.5,780 லட்சம். இதில் ரூ.5042 லட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்கள் 1982-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம், கட்டுமானப் பொருட்கள் கிடைக்காமை, வேலையை முடிப்பதில் தவறிய ஒப்பந்தக்காரர்கள் போன்ற காரணங்களால் ஒரு பணி மனைத் திட்டமும், உள்வட்டச்சாலையின் சிறுபகுதி (1·5 கி.மீ.) மற்றும் ஒரு இரயில்வே மேம்பாலம் முடிக்கப்படமுடியவில்லை. உலக வங்கியின் நிதி உதவியான ரூ. 2,160 லட்சமும் ஏற்கனவே பெறப்பட்டுவிட்டது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள் மாநில நிதியுதவி கொண்டு முடிக்கப்பெறும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1இன் கீழ் ஒவ்வொரு திட்டத்திற்கும் செலவழித்துள்ள விபரங்கள் இணைப்பு VI—ல் கொடுக்கபட்டுள்ளன.



சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2.

இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-இல் ஏற்கனவே நகர்ப்புற பிரச்சனைக்கு மலிவு விலை மூலம் குறிப்பாக வீட்டுவசதியில் தீர்வுகாணும் முயற்சியில் அபிவிருத்தி மற்றும் மேலும் விரிவாக்கம் செய்வதாகும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரு. 7,390 லட்சம். இதில் உலக வங்கி 3,528 லட்சத்தை கடனாக வழங்கும். இத்திட்டம் 1981 ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் விவரங்கள்:—

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| அ. மனைகளும் பணிகளும்— | |
| பெரும்பாலும் பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினருக்கு 15,000 வீடுகள் (மொகப்பேர் நெற்குன்றம் ஆகிய இரண்டு இடங்களில் சுமார் 83,000 பேருக்கு). | 2,380 |
| ஆ. குடிசைப்பகுதி மேம்பாடு— | |
| சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ் 50,000 வீடுகளடங்கிய குடிசைப்பகுதி களை மேம்படுத்தல் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 1-இன் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட குடிசைப்பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கு வீட்டு அபிவிருத்தி கடன் வழங்கல் | .,780 |
| இ. போக்குவரத்து – | |
| 555 பேருந்துகள் விடுதல், 6 கிலோ மீட்டர் நீள உள்வட்டச் சாலை அமைத்தல், சென்னை —திருவள்ளூர் நெடுஞ்சாலையை மேம்படுத்தல் | 1,790 |
| ஈ. திடக்கழிவுப் பொருட்களைச் செம்மையாகப் பயன்படுத்தல்— | |
| கழிவுப் பொருட்களை மேம்படுத்துவதற்குச் சாதனமும் கட்டிடப் பணிகளும். | 310 |
| உ. தொழில் நுட்ப உதவி— | |
| முன்னுரிமை வழங்க வேண்டியதைக் கண்டறியவும், நீண்டகால முதலீடுகள் செய்வது குறித்து திட்டம் வகுக்கவும், நிறுவனத்தை வலுப்படுத்தவும் பயிற்சிஅளிக்கவும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், சென்னை மாநகராட்சி ஆகியவற்றுக்குதொழில் நுட்ப உதவியளித்தல் | 130 |
| மொத்தம் .. | 7,390 |

இத்திட்டத்தின் கீழ் பெற்றுள்ள முன்னேற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம்—

இக்கொள்கை விளக்கக்குறிப்பில் முற்பகுதியில் ஏற்கனவே கூறப்பட்டுள்ள தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன் பள்ளிகள், மருத்துவநல நிலையங்கள், சந்தைகள் போன்ற வசதிகள் போதுமான எண்ணிக்கையிலும் தொழிற்சாலைகளும் உருவாக்கப்படவுள்ளன. தன்னிறைவு வீட்டுமனைப்பகுதிகளில் வேலைவாய்ப்பை பெருக்கும் அளவில் சிறு தொழில்கள் ஏற்படுத்த மனைகள், தொழிற்கூடங்கள், இயந்திரங்கள் வாங்க கடன் உதவி போன்ற பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ. 100 லட்சம் 1985-86 ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் ரூ. 200 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மொகப்பேர் பகுதிகளில் இதை செயல்படுத்த ரூ. 478 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குடிசைப்பகுதி மேம்பாடு—

குடிசைப்பகுதி மேம்பாடுத் திட்டங்களில் அமைந்துள்ள முன்னேற்றங்கள் இக்கொள்கை குறிப்பில் முற்பகுதியில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர குடிசைபகுதிகளில் அடிப்படை வசதிகளில் முன்னேற்றம் செய்தல், சுமார் 188 பாலர் பள்ளிகள் கட்ட திட்டமிடப்பட்டு 175 பாலர் பள்ளிகள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. 4 பாலர் பள்ளிகள் கட்டப்பட்டு வருகின்றன.

பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வாழும் பகுதிகளை வெள்ள பாதிப்பு மற்றும் கழிவு நீர் தொல்லைகளிலிருந்து பாதுகாக்க கழிவுநீர் வடிகால் வசதிகளும் மற்றும் கழிவுநீர் உபவடிகால்களும், 480 லட்சம் செலவில் அமைக்க அல்லது சீர்படுத்தப்பட உள்ளது. மாம்பலம், நந்தனம், விருகம்பாக்கம், சாலிகிராமம் மற்றும் அரும்பாக்கம் பகுதிகளில் உள்ள வடிகால்கள் சீர்படுத்தப்படுகின்றன. சென்னை மாநகராட்சிப் பகுதியிலுள்ள சுமார் 19,000 குடும்பங்கள் பயனடையும் அளவில் கழிவுநீர் வடிகால்கள் பழுது பார்த்தல், தூர் நீக்குதல் மற்றும் உபவடிகால்கள் அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகள் செயல்பட்டு வருகின்றன.

சாலை மற்றும் பேருந்து போக்குவரத்துகள்.

555 பேருந்துகளுக்காக அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு மேற்கூடுகள் கட்டப்பட்டு சாலைகளில் விடப்பட்டுள்ளன. ஒரு பணிமனை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பாடி—லூக்காஸ் முதல் மாதவரம் வரை 6 கி.மீ. உள்வட்டச் சாலை அமைத்தல் மற்றும் 13.6 கி.மீ. சென்னை—திருவள்ளூர்



சாலையை பாடி லூக்காஸ் முதல் ஆவடி வரை அபிவிருத்தி செய்தல் ஒரு இரயில் பாதை மீது மேம்பாலம் ஒன்று கட்டுதல் ஆகிய திட்டங்கள் போக்குவரத்து திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான வேலைகள் முன்னேறி வருகின்றன.

திடக்கழிவு பொருள்களை செவ்வகையாக கையாளுதல்—

இத்திட்டம் சென்னை மாநகராட்சி கழிவு பொருள்களை சேகரித்து ஆவன செய்தல், பணிகளுக்கு தேவையான கருவிகளையும், வாகனங்களையும் வாங்குதல், ஒரு மாற்று நிலையம் அமைத்தல், 8 பணிமனைகளை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகளை ரூ. 1,61 இலட்சம் செலவில் நிறைவேற்றிட உதவும் நகராட்சி பணிகள் மற்றும் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாம் நிலை சாலைகள், நடைபாதைகள், கழிவுநீர் வடிகால்கள், தெரு விளக்குகள் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் ஆகிய பணிகளை நிறைவேற்றிட ரூ. 1,47 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது, தேவையான கருவிகள் வாங்குதல் மற்றும் ஒரு மாற்று நிலையம் முடிக்கப்பட்டுள்ளது. 2 வாகன பணிமனைகள் கட்டப்பட்டு வருகின்றன.

தொழில் நுட்ப உதவி—

இரண்டாவது சென்னை நகர் வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியான தொழில் நுட்ப உதவி துணைப் பிரிவில் பல ஆலோசனை ஆராய்ச்சிகள் 1985—86 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு 1986—87—ல் முடிவுற இருக்கிறது. அந்த ஆராய்ச்சி படிப்புகளில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் வளர்ச்சிக்காக மேற்கொண்டுள்ள பஸ் வழித்தடங்களைப் பற்றி விஞ்ஞான பூர்வ முறையில் படித்தல் என்ற ஆராய்ச்சிப் படிப்பு முக்கியமான தொன்றாகும். இது தவிர மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற நகரங்களின் நிதிநிலை ஆராய்ச்சியும் சாலை போக்குவரத்து பகுதியின் ஆராய்ச்சியும் குடிசைப் பகுதிகளைப் பற்றிய சர்வே ஆராய்ச்சியும் குறிப்பிடத்தக்கவைகளாகும். இதற்காக 1986—87 நிதியாண்டில் ரூ. 28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த துணைத் திட்டம் 1986-87 நிதியாண்டில் முடிவுறும்.

இரண்டாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் II—ன் கீழ் திருத்திய மதிப்பீடு ரூ. 7466 இலட்சம். இதில் ரூ. 4796 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31—1—86 முடிய ஏற்பட்டுள்ள பொருளாதார முன்னேற்றம் இணைப்பு VII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்

இவ்வரசு ஏற்கனவே மத்திய அரசிற்கு உலக வங்கியின் நிதியுதவிபெற இரண்டு திட்டங்களை அதாவது ரூ. 13,010 இலட்ச மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் பகுதியின் வளர்ச்சிக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 3, மற்றும் ரூ. 50,974

இலட்ச மதிப்பீட்டில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகரங்களின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தையும் அனுப்பியுள்ளது. இத்திட்டங்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியின் அளவு ஒரு குறிப்பிட்ட அளவே உள்ளதால் இந்த ஆண்டு திட்டங்களையும் உலக வங்கியின் நிதியுதவிபெற அனுப்ப இயலாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே இக்கருத்தினை கவனத்திற் கொண்டு மறு பரிசீலனை செய்து மேற்படி இரண்டு திட்டங்களையும் இணைத்து தமிழ்நாடு ''நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்'' ஒன்றை மேற்கூறிய 5 நகரங்களில் அபிவிருத்திக்கு தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 42,800 இலட்சமாகும். உலக வங்கிக்கு அனுப்பப்பட உள்ள திட்டம் இறுதியாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் உலக வங்கியால் நவம்பர் 1986–ல் மதிப்பிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ்வரும் பல்வேறு திட்டங்களின் பணிகள் 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்க முன் நடவடிக்கையாக இத்திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### சென்னை துரித இரயில் போக்குவத்து திட்டம்

சென்னை துரித இரயில் போக்குவரத்து திட்டம் சென்னை கடற்கரையிலிருந்து மைலாப்பூர் லஸ் வரை 8.45 கி.மீ. தூரம் இருக்கும். இதில் 2.93 கி.மீ. தூரம் தரைமட்டத்திலும் மீதியுள்ள 5.52 கி.மீ தூரம் 18 அடி உயர மேல் மட்டத்திலும் அமையும். ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி, இத்திட்டம் 1989–1990 ஆண்டிற்குள் முடிவடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான வேலை 1983–84 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இத்திட்ட அறிக்கையின்படி 1989-1990-ல் முடிவடைய வேண்டுமானால், ஆண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வருடமும் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசு 1985-86 ஆம் ஆண்டு வரை ரூ. 8 கோடி மட்டும் 1983-84 முதல் 1985-86 முடிய மூன்றாண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 4 கோடியை மட்டும் மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் குறித்த காலத்திற்குள் முடிவடைய வேண்டுமென்று இவ்வரசுஆர்வமாக உள்ளது. இவ்வரசு இரயில்வேக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்குத் தேவையான அரசு நிலங்களை இரயில்வேக்கு இனாமாக மாற்றம் செய்துள்ளது இருப்பினும் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதி போதுமானதாக இல்லை. இத்திட்டத்திற்கு அதிக நிதி கோருவது குறித்து மத்திய அரசுடன் உயர் மட்ட அளவில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

1986 ஏப்ரல் 3]

இணைப்பு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

| வரிசை எண். | விவரம். | குறைந்த வருவாய் பிரிவினருக்கான குடியிருப்பு. | நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கான குடியிருப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை— | | |
| | 1960-61 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் ஐந்தாண்டுத் திட்டம் முடிய (1979-80). | 12,974 | 8,164 |
| 2 | 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (1980-85). | 10,891 | 11,917 |
| 3 | 7 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் ஆண்டு கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை (1985-86). | 2,251 | 3,761 |
| 4 | 7 ஆம் ஐந்தாண்டுத் திட்ட குறியீடு. | 17,984 | 23.797 |

1. வாரியம்—சாதனை விவரம்.

| தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு. | குடிசைப் பகுதி மாற்றுக் குடியிருப்பு. | தொழிலாளர் மலிவு வாடகை குடியிருப்பு. | பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் குடியிருப்பு. | காவலர் குடியிருப்பு. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 10,731 | 14,956 | 2,494 | 9,046 | 657 | 59,022 |
| 4,733 | 4,576 | 636 | 21,656 | 2,479 | 56,888 |
| 1,962 | 240 | .. | 5,109 | .. | 13,323 |
| 6,125 | 2,332 | .. | 53,212 | .. | 1,03,450 |



1986 ஏப்ரல் 3]

இணைப்பு

சென்னைப் பெருநகர்

தமிழ்நாடு வீட்டு வசதி

| இடத்தின் பெயர். | முதலில் உள்ள திட்டத்தின்படி. நில அளவு (ஹெக்டேர்). | வீடுகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அரும்பாக்கம் .. | 34.20 | 2,304 | 184.20 |
| வில்லிவாக்கம் .. | 71.55 | 3,750 | 294.26 |
| கொடுங்கையூர் பகுதி 1 .. | 30.83 | 2,013 | 454.42 |
| கொடுங்கையூர் பகுதி 2 .. | 51.61 | 4,470 | |

[1986 ஏப்ரல் 3

II

வளர்ச்சித் திட்டம் 1.

வாரியம்—தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம்.

சாதனை.

| நில அளவு (ஹெக்டேர்). | வீடுகளின் எண்ணிக்கை. | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (5) | (6) | (7) |
| 34.20 | 2,334 | 200.00 |
| 715.5 | 3,751 | 459.91 |
| 30.83 | 2,013 | 857.31 |
| 51.61 | 4,105 | |

சென்னைப் பெருநகர்

| இடத்தின் பெயர். | முதலில் உள்ள திட்டத்தின்படி | | |
|---|---|---|---|
| | நில அளவு (ஹெக்டேர்). | வீடுகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) |
| மொகப்பேர் (கிழக்கு) .. மொகப்பேர் (மேற்கு).. | 123.50 | 10,230 | 1,271.60 |
| நெற்குன்றம் .. | 56.50 | 4,670 | 629.29 |
| மதுரவாயல் .. | .. | .. | .. |
| மணலி .. | .. | .. | .. |

வளர்ச்சித் திட்டம் 2.

| திருத்தி அமைத்த திட்டத்தின்படி. | | | சாதனை (பிப்ரவரி, 1986 முடிய). | | |
|---|---|---|---|---|---|
| நில அளவு (ஹெக்டேர்). | வீடுகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). | நில அளவு (ஹெக்டேர்.) | வீடுகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
| (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 74.49 | 5,082 | 803.45 | 74.49 | 5,062 | 765·28 |
| 74.13 | 5,673 | 920.98 | 74.13 | 5,469 | 769.84 |
| 64.00 | 4,760 | 999.12 | 25.83 | 2,048 | 350.00 |
| 41.89 | 3,053 | 702.30 | 41.89 | 2,950 | 520.00 |



இணைப்பு III.

திருத்தியமைக்கப்பட்ட அட்கோ விதிமுறைகள்.

| வகை. | அதிகப் பட்சத் தொகை. | வட்டி விகிதம். | திருப்பிச் செலுத்தும் காலம். | உதவியின் நிதி அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (மாதம் ரூ. 700–க்கும் குறைவாக)— | | | | |
| (அ) பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்-1 (தன்னிறைவு வீட்டுமனைகள் திட்டம்)— | | | | |
| (1) தன்னிறைவு வீட்டுமனைகள் திட்டம் (நிலம் நீங்கலாக) .. .. | 6,000 | 5 சதவீதம் | 22 | 6,000 |
| (2) இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் வீட்டு வசதித் திட்டம் | 6,000 | 5 சதவீதம் | 22 | 6,000 |
| (ஆ) பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (நகர்ப்புறம்)— | | | | |
| வீடுகட்டும் பிரிவு .. .. | 15,000 | 7 சதவீதம் | 22 | 90 சதவீதம். |
| (இ) குடிசைப் பகுதி முன்னேற்றம் — | | | | |
| (1) சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம் .. | 2,000 | 6 சதவீதம் | 20 | 1,000 |

## இணைப்பு III—தொடர்ச்சி.

| வகை. | அதிகப் பட்சத் தொகை. | வட்டி விகிதம் | திருப்பிச் செலுத்தும் காலம். | உதவியின் நிதி அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (ஈ) குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் நகரத்தின் உள்பகுதியில் வீடு கட்டும் பணி .. .. | 3,000 | 6 சதவீதம் | 20 | 3,000 |
| 2. குறைந்த வருவாய்த் தொகுதியினர் (மாத வருமானம் ரூ. 701 முதல் 1,500 வரை)— | | | | |
| குறைந்த வருவாய் தொகுதியினர்-1 . .. | 20,000 | 8.5 சதவீதம் | 15 | 85 சதவீதம். |
| குறைந்த வருவாய் தொகுதியினர்-2.. .. | 30,000 | 9 சதவீதம் | 15 | 85 சதவீதம் |
| 3. நடுத்தர வருவாய் தொகுதியினர் (மாத வருமானம் ரூ. 1,501 முதல் ரூ. 2,500 வரை)— | | | | |
| நடுத்தர வருவாய் தொகுதியினர் 1 .. | 60,000 | 11 சதவீதம் | 15 | 75 சதவீதம் |
| நடுத்தர வருவாய் தொகுதியினர் 2 .. | 1,00,000 | 12½ | 15 | 75 சதவீதம் |
| 4. உயர் வருவாய்த் தொகுதியினர் (மாத வருமானம் ரூ. 2,500க்கு மேல்)— | | | | |
| உயர் வருவாய் தொகுதியினர் வீடு/குடியிருப்பு | 2,50,000 | 13⅓ சதவீதம் | 15 | 60 சதவீதம் |
| 5. அடிப்படை சுகாதார வசதி— | | | | |
| தனி நபர் அல்லது சமுதாயம் .. | | 6 சதவீதம் (குறைந்த வருவாய் தொகுதியினர் 5 சதவீதம் மற்றவர்கள் 10 சதவீதம்.) | 12 | 50 சதவீதம் |
| 6. கிராமப்புற வீட்டு வசதி — | | | | |
| (அ) வீட்டு மனை இல்லாத தொழிலாளர்கள் | | | | |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்—1 .. | 6,000 | 6 சதவீதம் | 11 | 50 சதவீதம் |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்-2 .. | 10,000 | 7 சதவீதம் | 11 | 80 சதவீதம் |

## இணைப்பு IV.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.
சாதனை மற்றும் நிதி இலக்கு விவரங்கள்.

| திட்டத்தின் பெயர். | ஆரம்ப முதல் 1984–85 வரை | | 1985–86 | | 1986–87 | |
|---|---|---|---|---|---|---|
| | சாதனை இலக்கு. | நிதி இலக்கு (ரூ. இலட்சத்தில்) | சாதனை இலக்கு. | நிதி இலக்கு (இலட்சத்தில்) | சாதனை இலக்கு | நிதி இலக்கு. (இலட்சத்தில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| குடிசைப்பகுதி மாற்று திட்டம் (குடியிருப்புகள் கட்டுதல்) | 459.89 குடியிருப்புகள் | 4169.00 | 512 குடியிருப்புகள் | 150.00 | 1250 குடியிருப்புகள் | 175.00 |
| விரைவுபடுத்தப்பட்ட மேம் பாட்டுத் திட்டம் | 64448 குடும்பங்கள் | 425.00 | 7250 குடும்பங்கள் | 70.00 | 8000 | 70.00 |
| சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் | 32000 குடும்பங்கள் | 1416.00 | 10000 | 370.00 | 3500 | 130.00 |
| நகர்புற குடிசைப்பகுதிகளில் கூடுதல் மேம்பாட்டுத் திட்டம் (மைய அரசு வழங்கும் மானியம்) | 34324 குடும்பங்கள | 56.00 | 7255 | 17.00 | .. | .. |



## இணைப்பு V.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள்.

| பொருளாதார அறிக்கை, நகரம். | மதிப்பீட்டு தொகை. | மத்திய அரசும், மாநில அரசும் சமபங்கு அடிப்படையில் வழங்கிய மொத்த தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 உதகமண்டலம் .. .. .. | 78.99 | 78.98 |
| 2 கரூர்.. .. .. .. .. | 78.33 | 68.00 |
| 3 தர்மபுரி .. .. .. .. | 79.46 | 78.74 |
| 4 புதுக்கோட்டை .. .. .. | 66.54 | 61.54 |
| 5 திருச்செங்கோடு .. .. .. | 77.20 | 48.00 |
| 6 கோபிசெட்டிப்பாளையம் .. .. | 80.60 | 70.00 |
| 7 மன்னார்குடி .. .. .. | 63.06 | 53.50 |
| 8 மேட்டுப்பாளையம்.. .. .. | 66.00 | 61.00 |
| 9 செங்கல்பட்டு .. .. .. | 78.85 | 63.10 |
| 10 குன்னூர் .. .. .. .. | 118.80 | 46.00 |
| 11 தாராபுரம் .. .. .. | 75.60 | 75.60 |
| 12 பழனி .. .. .. | 46.40 | 46.40 |
| 13 ஆத்தூர் .. .. .. | 75.27 | 75.28 |
| 14 திருவண்ணாமலை .. .. .. | 81.19 | 74.00 |
| 15 நாமக்கல் .. .. .. | 78.48 | 52.00 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 16 உடுமலைப்பேட்டை .. .. | 77.59 | 72.75 |
| 17 கோவில்பட்டி .. .. .. | 81.59 | 68.00 |
| 18 ஆற்காடு, இராணிப்பேட்டை வாலாஜா பேட்டை கூட்டுத்தொகுதி | 103.87 | 74.00 |
| 19 பொள்ளாச்சி .. .. .. | 90.83 | 75.54 |
| 20 தேனி—அல்லி நகரம் .. .. | 85.65 | 66.00 |
| 21 ஓசூர் .. .. .. .. | 69.97 | 69.92 |
| 23 நாகப்பட்டினம் .. .. .. | 74.93 | 46.50 |
| 23 காரைககுடி .. .. .. | 51.00 | 20.00 |
| 24 கள்ளக்குறிச்சி .. .. .. | 80.00 | 38.00 |
| 25 பண்ருட்டி .. .. .. | 78.00 | 68.00 |
| 26 ஆரணி .. .. .. .. | 78.00 | 52.00 |
| 27 சிவகங்கை .. .. .. .. | 76,00 | 30.00 |
| 28 அரக்கோணம் .. .. .. | 85.58 | 33.00 |
| அரக்கோணம், ஆரணி, காரைக்குடி, சிவகங்கை, மேட்டுப் பாளையம், ஓசூர், கள்ளக்குறிச்சி, மன்னார்குடி முதலிய 8 நகரங்களில் மேற்கொள்ள விருக்கும் குறைந்த செலவின துப்புரவுத் திட்டத்திற்கு. | 177.40 | 124.10 |
| மொத்தம் .. | 2,355.18 | 1,789.95 |



## இணைப்பு—VI.

### சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்—தொடர்ச்சி.

### பொருளாதார நிலை 31—1—1986.

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். | முகவை. | திட்ட முடிவுகளின் செலவினம் | | 31-1-1986 முடிய செலவழிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு. | நடப்பு மதிப்பீடு. | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (அ) தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 932.88 | 1,517.22 | 1,393.52 |
| (ஆ) குடிசைப் பகுதி மேம்பாடு. | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | 606.00 | 509.25 | 390.33 |
| | சென்னை மாநகராட்சி .. | .. | 53.62 | 53.33 |
| இ. தொழில் வளர்ச்சி:— | | | | |
| (1) சிறு தொழிற்சாலை | சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் | 188.40 | 218.01 | 198.58 |
| 2) குடிசைத் தொழில் | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம். | 96.19 | 53.90 | 47.84 |

## இணைப்பு VII.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—2.

31—1—86 இல் பொருளாதார நிலை.

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். | முகவை. | ஆரம்ப மதிப்பீடு. | திட்டம் முடிய பெற தற்போதைய மதிப்பீடு. | 31-1-1986 முடிய செலவழிக்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம். | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம். | 1,800.93 | 2,365.00* | 1,195.87 |
| | தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம். | 477.13 | 477.13 | .. |
| 2. குடிசைப் பகுதி மேம்பாடு. | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம். | 2,587.30 | 2,110.91 | 1,654.49 |
| | சமூக நலத்துறை இயக்குநர் | 156.34 | 83.30 | 56.97 |
| | ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநர். | 38.50 | 38.50 | .. |



## இணைப்பு VII—தொடர்ச்சி.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் 2—தொடர்ச்சி,

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். | முகவை. | ஆரம்ப மதிப்பீடு. | திட்டம் முடிய பெற தற்போதைய மதிப்பீடு. | 31—1—1986 முடிய செல வழிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 3. போக்குவரத்து .. | நெடுஞ்சாலை மற்றும் ஊரக பணி இயக்குநர். | 532.10 | 666.00 | 416.66 |
| | பல்லவன் போக்குவரத்துக் கழகம். | 1,260.30 | 1,291.00 | 1,291.00 |
| 4. திடக்கழிவு பொருட்கள் கையாளுதல். | சென்னை மாநகராட்சி | 308.00 | 308.00 | 119.41 |
| 5. தொழில் நுட்ப உதவி | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். | 126,00 | 126.00 | 61.45 |
| | மொத்தம் .. | 7,386.70 | 7,465.84 | 4,795.85 |

* அடிப்படைக் கல்வி மற்றும் சுகாதார நிலையமும் சேர்ந்துள்ளது.

13465
V211,31 N86
N86-20-3